2809
XVI. A9 1

# மேல்நாட்டுத் தத்துவ வரலாறு

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை

16257

முதல் பாகம்

டி. எம். பி. மஹாதேவன்
பி. என். ஷண்முகசுந்தரம்

புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

# மேல்நாட்டுத் தத்துவ வரலாறு

# மேல்நாட்டுத் தத்துவ வரலாறு

## டேக்கார்ட் முதல் - காண்ட் வரை
(கி. பி. 1596 - 1804)

முதல் பாகம்

ஆக்கியோர் :

டி. எம். பி. மஹாதேவன், M.A., Ph.D.,
*தத்துவப் பேராசிரியர், பல்கலைக்கழகம், சென்னை.*

பி. என். ஷண்முகசுந்தரம், M.A., M.LITT.,
*தத்துவத் துணைப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.*

புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
135, பவழக்காரத் தெரு ··· சென்னை-1

முதல் பதிப்பு:
அக்டோபர் 1960
சென்னை, சாந்தி பிரசில்
அச்சிடப்பெற்றது.

விலை ரூபாய் நான்கு

# அணிந்துரை

இந்த ஆண்டில் தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக அமைக்கும் புது முயற்சி எழுந்தோங்கி உள்ளது. பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்கின்ற காட்சியைக் காணலாம். இடர்ப்பாடுகள் பல இருந்தாலும் இப்பெரு முயற்சியில் நாம் வெற்றிபெறுவது திண்ணம். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், "தமிழிலேயே கற்பிப்போம்" என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பலப்பல கலைகளிலும் பொதுத்துறைகளிலும் பல்வேறு நிலையங்களிலும் தொண்டு செய்வோர் கலைச் சொல்லாக்கத்தில் உழைத்த பெருஞ் சிறப்பு, இவற்றிற்கும் மேலாக மிகமிகக் குறைந்த காலத்தில் தங்கள் தங்கள் சிறப்புத் துறையில் நூல்களை எழுதித்தர முன்வந்த நூலாசிரியப் பெருந்தகைகளின் உறுதியுள்ளம், தொண்டுணர்ச்சி—இவற்றைக் கண்டபின் இத்திட்டத்தின் வெற்றியில் யாரே ஐயம் கொள்வீர்!

சிறப்பாக சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மற்றைய நூலாசிரியர்களும் எத்தனையோ நெருக்கடிகளிடையே, குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்களை எழுதித் தந்துள்ளனர். பதிப்பு நிலையங்களும் முழுமனதோடு ஒத்துழைத்ததன் பயனாக வெகு விரைவில் இந்நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல்களில் ஒன்றான **மேல்நாட்டுத் தத்துவ வரலாறு** என்ற இந்நூலை மாணவர்களும் ஆசியர்களும் தமிழ்மக்களும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்

பல பெரியோர்களும் நிலையங்களும் முன்னரே புதுக் கலைகளைப் பற்றிய நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டு வழிகாட்டியுள்ளார்கள். ஆயினும் கல்லூரியில் தமிழ் கல்விமொழியாகச் சிறந்து விளங்க வேண்டுமானால் இன்னும் எத்தனையோ நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும். எல்லோருடைய ஒத்துழைப்பாலும் விரைவில் மேலும் மேலும் பல நூல்கள் வெளிவரும் என்று உறுதியாக நம்புகிறோம்!

இந்த முயற்சியில் எத்தனையோ சிக்கல்கள் எழுந்தன. அவை களை வெற்றிகரமாகத் தீர்த்துவைக்க முயன்றுள்ளோம். கலைச் சொற்களை அமைப்பதிலும் சிறந்தவர்களைக்கொண்டு பாட நூல் களைத் தமிழ் மரபோ, கலை மரபோ, பொருள் தெளிவோ சிறிதும் பிறழாதபடி எழுதுவதிலும் மாணவர்களின் ஆங்கிலத் தரம் குன்றா மல் காப்பதிலும் அவர்கள் மேலும் தாம் கற்கும் பொருள்களைப் பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் கற்கத் தூண்டுவதிலும் உள்ள இடர்ப்பாடுகள் பல உள்ளன. எனவே, பல பெரியோர்கள் இம் முயற்சியைப்பற்றி ஐயம்கொண்டது வியப்பன்று. இத்தனைச் சிக்கல் களையும் ஒருவாறு தீர்த்துள்ளோம் என்றால், குடியரசு வாழ்வில் எழுந்த தமிழ் மக்கள் ஆர்வமும் எதற்கும் அஞ்சாத உறுதியும் முனைநேற்ற உழைப்புமே காரணமாகும்.

எத்தனையோ தடைகளையெல்லாம் வெற்றியுடன் கடந்த நம் தமிழ்அன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்கின்ற நிலையில் அவ்வன்னையை வாழ்த்துவோமாக; அவர் திருமுன்பு "மனமார உழைத்து வெற்றி காண்போம்" என்று உறுதி கொள்வோமாக. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!"

தமிழிற் பயிலும் மாணவர்கள் உலகமாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும். அதுவே தமிழ் அன்னையின் அருள் நோக்கம் ஆகும். கல்லூரித் தமிழ்க்குழு இத்துறையில் செய்துவரும் தொண்டினை இங்கே குறிப்பிடல் வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தினைச் சார்ந்த கல்லூரி ஒன்றிலேதான் இந்த முயற்சி இன்று எழுகிறது. அப் பல்கலைக்கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத் துழைப்பிற்கும் நம் மனங்கலந்த நன்றி உரித்தாகுக.

17-5-'60

**சி. சுப்பிரமணியம்,**
சென்னை நிதி-கல்வி அமைச்சர்.

# முகவுரை

தத்துவ ஆராய்ச்சியின் அடிப்படைகளைக் கற்பதற்கு மிகச் சிறந்த வழி, முற்காலத்தில் தத்துவச் சிக்கல்களுக்குத் தத்துவ ஞானிகள் என்ன விடைகள் அளித்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதே யாகும். அவர்களுள் பலர் திருப்திகரமான விடைகள் அளிக்கத்தவறி யிருக்கலாம். தத்துவ ஆராய்ச்சியின் தன்மையையும் போக்கையும் விளக்குவதில் ஏற்படும் வெற்றிகளைப் போலவே தோல்விகளும் பயனுடையனவாகும். இவ்வகையில்தான் தத்துவ ஆராய்ச்சியில் தத்துவ வரலாற்றுப் பயிற்சி பொருளுடையதாகிறது.

என்று மனிதனுடைய அறிவு தோன்றியதோ அன்றே தத்துவ ஆராய்ச்சியும் தோன்றியது. எவ்வளவு எளிய தொடக்க நிலையிலிருந்தாலும் பழங்காலத்திலிருந்தாலும் எந்தச் சமூகமும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடாமலில்லை. இவ்வகையில், உண்மையாகவே, மக்கள் அனைவரும்—அவர்கள் விரும்பினும் விரும்பாவிடினும்—தத்துவ அறிஞர்களாயிருக்கின்றனர். அவர்களுள் ஒருசிலர் இவ்வாராய்ச்சிக்குத் தங்கள் வாழ்க்கையில் முதலிடம் தருகின்றனர்; தங்களுடைய சமூகம், மரபுகள் இவற்றின் அடிப்படைத் தத்துவ ஆராய்ச்சியின் குவிமுனைகளாக இவர்கள் விளங்குகின்றனர். பொதுவழக்கில் இவர்களே தத்துவ அறிஞர்கள் எனப்படுவோர். இவர்கள் எண்ணிப்பார்த்து அமைத்த திட்டங்களைக் கற்பது மிகவும் பயனுடைய அனுபவமாகும்.

மேனாட்டுக்கு வெளியில் உண்மையான தத்துவ ஆராய்ச்சி இல்லை என்று மேனாட்டுத் தத்துவ வரலாற்று ஆசிரியர்கள் சிலர் நினைப்பது வியப்பாயிருக்கிறது. இந்தத் தவறான எண்ணம் அவர்கள் கீழ் நாடுகளின் தத்துவங்களைப் பற்றி அறியாமையால் எழுவதாகும். அதிருஷ்டவசமாக இந்தியப் பல்கலைக் கழகங்களில் மேனாட்டுத் தத்துவப் பயிற்சிக்குத் தகுந்த இடம் எக்காலத்திலும் இருந்துவந்துளது. சமீபகாலம் வரையில் நம்முடைய தத்துவப் பாடத் திட்டங்கள் அளவுக்கு மீறி மேனாட்டுத் தத்துவத்திற்கு இடம் தந்திருந்தன என்றும் சொல்லலாம். மேனாட்டினரும் கீழ்நாட்டினரும் சந்திக்கும் தத்துவ மாநாடுகளில் கீழ்நாட்டுத் தோழர்கள் மேனாட்டுத் தத்துவங்களில் எய்தியிருக்கும் புலமையைக் கண்டு மேனாட்டுத் தத்துவ அறிஞர்கள் வியப்படைகின்றனர். நம்நாடு விடுதலையடைந்தவுடன் மத்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா முதல் முதலாகச் செய்த காரியங்களுள் ஒன்று மேனாடு-கீழ்நாடு ஆகிய இருபெரும் பிரிவுகளிலும் நிகழ்ந்த தத்துவ ஆராய்ச்சிகளைப்பற்றி நூல் வெளியிட்டதாகும். மேனாட்டுத் தத்துவத்தைபற்றி எழுதினவர்களும் ஒருசிலர் நீங்கலாகப் பெரும்பாலும் இந்தியர்களேயாவர்.

நம்முடைய பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் இந்திய தத்துவத்திற்குச் சிறப்பிடம் தரவேண்டுமெனினும் மேனாட்டுத்தத்துவத்தையும் நாம் தொடர்ந்து படிக்க வேண்டும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயிற்சிமொழி தாய் மொழியாகவோ வட்டார மொழி

யாகவோ மாறிய பின்னரும் உலகச் சிந்தனைகள் யாவை என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இச்சிந்தனைகளை உருவாக்குவதில் மேனாட்டினர் பெருமபங்கு பற்றியுள்ளனர். இங்கிலையில்தான் ஐரோப்பியதத்துவ வரலாற்றைத் தமிழில் எழுத எங்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை நாங்கள் விரைந்து ஏற்றுள்ளோம். மூன்று ஆண்டு பி.ஏ. பட்டத்தேர்வுக்குப் பாடமாக அமைந்தவற்றுள் ஒன்று டேக்கார்ட் முதல் காண்ட் ஈருக உள்ள தத்துவ வரலாருகும். இந்நூல் இந்தப் பாடத்திற்கேற்ப அமைந்ததாகும். ஐரோப்பியதத்துவத்தின் இக்கால வரலாறு (Modern Period) டேக்கார்ட் முதல் தொடங்குகிறது. இக்கால ஐரோப்பிய அறிவு முதற் கொள்கைக்கு டேக்கார்ட் அடிகோலியவராவர். இக்கொள்கை ஸ்பினோஸா, லைப்னிட்ஸ் ஆகியோரால் வளர்ச்சியடைந்தது. இதற்கு எதிர் இயக்கமான புலன் நுகர்வுக் கொள்கையைச் சேர்ந்தோர் லாக், பார்க்லி, ஹ்யூம் ஆவர். இவ்விரு கொள்கைகளின் குறைபாடுகளை எடுத்துக் காட்டி ஆய்வுமுறைதத்துவத்தின் தேவையை வற்புறுத்திய பெருமை காண்ட் என்னும் தத்துவ அறிஞரைச் சேரும். இந்நூல், எழுதுவதற்காக எங்களுக்குத் தரப்பெற்ற வரலாற்றின் முதல் பகுதியாகும். இது ஐரோப்பிய அறிவுமுதற் கொள்கையினரான டேக்கார்ட் ஸ்பினோஸா, லைப்னிட்ஸ் ஆகியோரின் தத்துவ ஆராய்ச்சிகளை விளக்குகிறது. இரண்டாம் பகுதியில் பிரித்தானிய புலன் நுகர்வுக் கொள்கையினரான லாக், பார்க்லி, ஹ்யூம், ஆய்வு முறைதத்துவக் கொள்கையினரான காண்ட் ஆகியோரின் தத்துவ ஆராய்ச்சிகள் தரப்பெறும். டேக்கார்ட்டுக்கு முன்னிருந்த ஐரோப்பியதத்துவ வரலாறு சுருக்கமாக முனனுரையில் தரப்பெற்றுள்ளது. இவ்வெளியீட்டின் நோக்கம் நிறைவேறுவதுடன் தமிழ்வழங்கும் இடங்களில் உள்ள பொதுமக்களும் ஐரோப்பிய தத்துவ ஆராய்ச்சியைப் பற்றித் தெரிந்துகொள்ள இது உதவும் என நம்புகிறோம்.

இந்தப்பணியை எங்களுக்கு அளித்த கல்லூரித் தமிழ் குழுவினருக்கு எங்கள் நன்றி உரியதாகுக. இப்பணியைச் செய்வதற்கு இசைவு தந்த சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கு எங்கள் நன்றி. இந்நூலை எழுதும்போதும் அச்சாகும்போதும் திருத்துவதற்கு உதவி செய்த சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறை ரீடர், டாக்டர் வ. ஆ. தேவசேனபதி அவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். எடுத்துக்கொண்ட பொருள் இனிது விளங்குமாறு எழுத முயன்றுள்ளோம். ஆனல் இத்தகைய புதிய துறைகளில் பல குறைகள்—குறிப்பாகச் சொல்லாட்சிகளிலும் விளக்கும் முறையிலும்—நேரலாம். இவற்றை நீக்க அன்பர்களின் உதவியை வரவேற்கிறோம்.

சென்னை
12-10-'60

**டி. எம். பி. மஹாதேவன்**
**பி. என். ஷண்முகசுந்தரம்**

# பொருளடக்கம்


1. தோற்றுவாய் ... 1
2. டேக்கார்ட் ... 15
   நோக்கமும் முறையும் ... 18
   "உள்ளுகின்றேன் ஆகையால் உள்ளேன்" 24
   கடவுள் உண்மைக்குக் கூறப்படும் காரணங்கள் ... 28
   புற உலகம் ... 35
   உள்ளமும் சடமும் ... 39
   உள்ளமும் உடலும் .... 42
   உண்மையும் பிழையும் .... 45
   திறனுய்வு ... 47
   தறுவாய்க் கொள்கை ... 51

3. ஸ்பிநோஸா
   தோற்றுவாய் ... 54
   நோக்கம் ... 63
   முறை ... 69
   கடவுள் ... 75
   இயல்புகள் ... 85
   மாறு நிலைகள் ... 89

மனிதர்கள் இயற்கையின் பகுதிகள் ... 99

அறிவின் நிலைகளும் அறவியல் நிலைகளும் ... 103

அறவியல் .... 107

திறனாய்வு ... 111

4. லைப்னிட்ஸ்

தோற்றுவாய் ... 116

நோக்கமும் முறையும் ... 121

முழுமையும் பகுதியும் ... 123

மொனாடுக் கொள்கை ... 129

முன்னமைத்த பொருத்தம் ... 141

அளவையியல் நியதிகள் ... 147

அறிவளவை இயல் ... 155

இவ்வுலகமே இருக்கக்கூடிய அனைத்தினும் சிறந்தது ... 158

கடவுள் ... 163

திறனாய்வு ... 166

கலைச்சொல் அகராதி

ஆங்கிலம் - தமிழ் ... 171

தமிழ் - ஆங்கிலம் ... 183

இந்நூல் எழுதுவதற்கு உதவிய நூல்கள் ... 192

# 1

# தோற்றுவாய்

மேல்நாட்டு தத்துவ சாத்திரத்தின் வரலாறு, பண்டைக்காலம், இடைக்காலம், இக்காலம் என்னும் மூன்று கால வரையறைகளுக்குள் அமைகிறது. இங்கு நாம் கூறப்புகுவது காண்ட் (Kant) வரையுள்ள இக்காலத் தத்துவத்தைப் பற்றியதாகும். ஆனால் இக்காலத்து அறிஞர்களுடைய அறிவுரைகளின் உட்கருத்தைப் புரிந்துகொள்ளுவதற்குப் பண்டைக்கால, இடைக்கால தத்துவங்கள் பின்பற்றிய நெறியைப் பரவலாக (outline) நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது.

## பண்டைக்காலத் தத்துவம்

### (ANCIENT PHILOSOPHY)

பண்டைக்கால கிரேக்கர்கள் ஐரோப்பிய தத்துவ சாத்திரத்திற்கு வழி வகுத்தவர்களாவர். சின்ன ஆசியாவைச் (Asia Minor) சார்ந்த கிரேக்க குடியேற்ற நாடாகிய மைலீட்டஸில் தேல்ஸ் (Thales) என்னும் ஓர் அறிஞர் கி. மு. ஏழாம்-ஆறும் நூற்றூண்டுகளில் இருந்தார். அவரே மேனுட்டுத் தத்துவ சாத்திரத்தின் தந்தை எனக் கருதப்படுகின்றூர். அவர், தத்துவத்தின் மையமாகக் கருதப்படும், உள் பொருளின் அடிப்படைத் தன்மையாதென்னும் கேள்வியைப் பற்றிச் சிந்தித்து, அதற்குப் புராணக் கதைத் தொடர்பின்றி விடையளித்தார். இதுவே அவருடைய புகழுக்குக் காரணமாயிற்று. தேல்ஸ் (Thales), நீரே எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படைப் பொருளானதும் (stuff), அவை

கள் இருத்தலுக்கு அடிநிலையானதும் என்று கூறினர். தேல்ஸைப் பின்பற்றிய அனக்ஸிமாண்டர் (Anaximander) வேறு விதமான விடை அளித்தார். அவர் பொருள்களின் சத்து என்றுமுள, அழிவற்ற, எல்லையற்ற (infinite) பொருள்; வரம்பற்ற, இடத்தை நிரப்பக்கூடிய உயிருள்ள திரட்சியே (mass) எனக் கருதினர். மைலீசிய தத்துவக் கொள்கையைப் பின்பற்றிய அனக்ஸிமெனிஸ் (Anaximenes) (கி.மு. 588 - 527) என்னும் அறிஞர் முதல் நிலைப் பொருள் (primary substance) ஒன்றே என்றும் எல்லையற்றதும் என்றும் அனக்ஸிமாண்டர் கூறிய கருத்தை ஏற்றதோடு, அத்தகைய பொருள் காற்றே என்றும் முடிவு செய்தார்.

அடுத்து வந்த பெரிய கிரேக்க தத்துவ அறிஞர் பிதாகொரஸ் (Pythagoras) என்பவர், சாமோஸ் என்னும் தீவைச் சேர்ந்தவராவர். கி. மு. 532 அளவில் வாழ்ந்தவர். உள் பொருளின் (reality) அடிப்படையைப் பற்றிய கேள்வியில் பெரிதும் ஊக்கங்காட்டிய மைலீஸிய கொள்கையினரைப் போன்றல்லாமல், பிதாகொரஸ் உருவம் (form) அல்லது உறவு(relation) பற்றிய சிக்கலுக்கு முடிவு காண முற்பட்டார். இவர் எல்லாப் பொருள்களின் அடிப்படையை எண்ணில் (number) கண்டார். ஆகையால் கணித இயலே, உள்பொருளைக் கண்டறிய திறவுகோலாயது. பிதாகொரஸ் தத்துவ அறிஞராயிருந்ததுடன் அனுபூதிமானகவும் (mystic), சமயப்பற்றுள்ளவராகவுமிருந்தார். ஆன்மாக்களின் மறுபிறப்பைப் பற்றியும், அவரை, மொச்சை போன்ற முதிரை வகைகளை (Beans) உணவாகக் கொள்வதின் தீமையைப் பற்றியும் விளக்குகின்ற ஒரு சமயத்தை நிறுவினர்.

மைலீஸியர்கள் பொருள் (substance) பற்றிய ஆராய்ச்சியிலும், பிதாகொரஸைப் பின்பற்றியவர்கள் எண்களைப் பற்றிய கருத்துக்களிலும்ஈடுபட்டிருந்த சமயத்தில், முதன் முதலாக ஹெராக்கிளிட்டஸ் (Heraclitus) (கி. மு. 535-475) என்னும் அறிஞரே 'மாறுதல்' (change) என்பதைப் பற்றிச் சிந்தித்தார். அவர் கருத்துப்படி, நிலையான (stable) அல்லது மாருத உள்பொருள் ஒன்றும் இல்லை. 'மாறுதலே' பிரபஞ்சத்தின் உயிர்நிலை, நிலையுள்ள பொருள் ஒன்றுமே இல்லாதிருத்தலால், நிலையுள்ளதாகத் தோன்றுவது வெறுந்திரிபுக் காட்சியே. "ஆற்று நீர் இடையருது

ஓடிக்கொண்டே இருப்பதால் ஒரே ஆற்றில் இருமுறை இறங்க முடியாது" என்னும் கூற்றால் தம் கருத்தினை விளக்கினார். இடைவிடா மாறுதல் என்னும் கருத்தைத் தெளிவுபடுத்துவதற்காகத் தீயினை (Fire) மூலப்பொருளாகத் தேர்ந்தெடுத்தார். தீயினின்றே மற்றெவையும் தோன்றின என்பதே அவருடைய துணிபு.

ஹெராக்கிளிட்டஸ் கொள்கைக்கு எதிரான கொள்கையைக் கற்பித்தவர், பார்மெனிடீஸ் (Parmenides) (கி. மு. 450) என்பவராவர். இவர் இத்தாலிய நாட்டின் தென்பகுதியிலுள்ள எலியா என்னும் ஊரைச் சேர்ந்தவர். ஹெராக்கிளிட்டஸ் எல்லாப் பொருள்களும் மாறுகின்றன என்றார். ஆனால் பார்மெனிடீஸ் எதுவும் மாறுவதில்லை என்று இதற்கு நேர் எதிராகக் கூறினார். பார்மெனிடீஸின் கொள்கைப்படி எதுவும் 'இருந்தபடியே இருக்கின்றது' (being). 'இருந்தபடி இருப்பது' அல்லது உள் பொருள் (Reality) ஒரே தன்மையுடையது (homogeneous), தொடர்ச்சியுள்ளது (continuous) பாகுபாடற்ற திரட்சியாயுள்ளது (indeterminate mass), அறிவுள்ளது (endowed with reason), என்றுமுளது (eternal), மாறுதலற்றது (immutable). மாறுதலுறுதல் (becoming) உண்மையானதன்று. அது வெறும் தோற்றமே. புலனால் அறியப்படுவதும், பன்மையையும், மாறுதலையும் கொண்டதான உலகம் உண்மையானதன்று என்று கருதினார். பார்மெனிடீஸின் மாணவராகிய ஜீனோ (Zeno) (கி. மு. 490-430) தம் ஆசிரியரின் கொள்கையை முரண் நிலைத்தருக்க வாயிலாக (dialectical arguments) நிறுவ முயன்றார். மாறுதலில் நம்பிக்கை வைப்பது முரண்பாடுகளுக்கே (Paradoxes) வழிகோலுகின்றது என்பதைக் காண்பித்தார். பன்மையும், இயக்கமும் விளங்கத்தகாதவை. அவைகளை உண்மையென ஏற்றுக்கொள்ளுதல் முரண்பாடுகளுக்குள் சிக்குவதாகும்.

ஹெராக்கிளிட்டஸ், பார்மெனிடீஸ் இருவருக்கும் உடனடியாகப் பின் வந்தவர்களுடைய தலைமையான ஆராய்ச்சி 'மாறுதல்' என்பதை விளக்குவதாக இருந்தது. சிசிலியில் (கி. மு. 495) பிறந்த எம்பிடாக்கிளிஸ் (Empedocles), மூலப் பொருள்கள் நான்கு, அவ்வ நிலம், காற்று, தீ, நீர் என்று கூறினார். இவைகள் பிற பொருள்களிலிருந்து கிடைக்கப் பெறாதவை, மாறாதவை, அழிக்க

முடியாதவை. இவை சேர்வதனல் பொருள்கள் தோன்றுகின்றன; பிரிவதனல் பொருள்கள் அழிகின்றன என்று கூறினர். மேலும் அவர், 'சட ஆவி ஒரு நிலைக் கொள்கை' (Hylozoism) வகையில் எல்லாப் பொருள்களுக்கும் உள்ளப் பண்பு (psychic life) உள்ளதாகக் குறிப்பிட்டார். அனக்ஸகொரஸ் (Anexagoras) (கி. மு. 500-428) என்பவரும் 'மாறுதல்' என்பதை விளக்க முயன்றார். 'மாறுதல்' என்பது சார்புள்ளது, மூலப்பொருள்களின் கலவையினலும் பிரிவினலும் ஏற்படுவது. எனினும் முதல் நிலை (primary) மூலப்பொருள்கள் நான்கு மட்டுமல்ல, எண்ணிறந்தவையாகும். மூலப்பொருள்கள் சேருவதற்குக் காரணமான தொடக்க இயக்கத்தை விளக்குவது ஒரு அறிவுள்ள அடிப்படை; உலகை அமைக்கும் அறிவு (Nous). லூசிப்பஸ் (Leucippus), டிமாக்கிரட்டஸ் (Democritus) என்னும் அறிஞர்களால் நிறுவப்பட்ட அணுக் கொள்கை, எப்பொருளும் அணுக்களால் ஆக்கப்பட்டது என்றும், அணுக்களுக்கிடையே வெறுமையான இடம் இருக்கிறதென்றும், அணுக்கள் அழிக்கமுடியாதவை, எப்பொழுதும் இயக்கத்தில் உள்ளவை என்றும் பல்வேறு பொருள்களும் அணுக்களாலும் வெறுமையான இடங்களாலும் உண்டாகின்றன என்றும் உரைத்தது.

கிரீஸ் நாட்டில், சிறப்பாக ஆதன்ஸ் நகரத்தில் ஒரு புதிய இயக்கம் தோன்றிற்று. அவ்வியக்கம் தனிநிலையையும் (individualism), சுதந்திரப் பான்மையையும் (freedom) வற்புறுத்தியது: இவ்வியக்கத்தைத் தோற்றிப் பரவச் செய்தவர்கள் சோபிஸ்டுகள் (Sophists) என்பவராவர். ஊர் ஊராகச் சென்று, ஊதியம் பெற்றுக்கொண்டு, இளைஞர்களுக்குச் சிந்தனை முறையையும், பேச்சுக் கலையையும் கற்பித்து அவர்களை அரசியலில் வெற்றிகரமான வாழ்க்கைக்குப் பக்குவப் படுத்தினர். புறச்சார்புள்ள உண்மை (objective truth) எதுவுமில்லை என்பதே அவர்கள் கருத்து. "மனித வாழ்க்கையே யாவற்றிற்கும் அளவுகோல்" என்று புரோட்டாகொரஸ் (Protagoras) (கி. மு. 490) கூறினர். ஜியார்ஜியஸ் (Georgias) என்பவர் உள்பொருள் என்று சொல்லக்கூடியதொன்றுமில்லை, இருந்தாலும் அதனை அறிய முடியாது; மேலும் பொருள் இருந்து அறிய முடிந்தாலும் அறிந்ததைப் பிறருக்குத் தெரியப் படுத்தமுடியாது என்றுரைத்தார். இத்தகைய ஐயக்கொள்கை

யும், ஐயமும் பரவி இருந்த காலத்தில் சாக்கிரட்டீஸ் (Socrates) தோன்றினர். மேற்கூறிய தவருன கொள்கைகளினின்றும் விடுவித்து மக்கள் தெளிந்த அறிவு பெறச்செய்வது இவரது வாழ்க்கையின் குறிக்கோளாக அமைந்தது.

பண்டைய கிரேக்க நாட்டின் சிந்தனையாளர்களுள் ஸாக்கிரட்டீஸ் (Socrates), பிளேட்டோ (Plato), அரிஸ்டாட்டில் (Aristotle) ஆகிய மூவரும் தலைசிறந்தவராவர். ஸோபிஸ்டுகளின் கொள்கைகளை வெற்றிகரமாக எதிர்ப்பது ஆதன்ஸ் நகரைச் சேர்ந்த சாக்கிரட்டிஸின் முதன்மையான பணியாயிருந்தது. அவர் இளைஞர்களுக்குத் தத்துவ சாத்திரத்தைக் கற்பித்தார், ஆனல் பணத்திற்காக அன்று. அவர் இறையிலிக் கொள்கையினர் (atheist) என்றும் இளைஞர்களின் உள்ளத் தூய்மையைக் கெடுப்பவர் என்றும் ஆதன்ஸில் சிலர் இவர்மீது பொய்க்குற்றங்கள் சாட்டி, வழக்குத் தொடுத்து, மரண தண்டனைக்கு உள்ளாக்கினர். அவர் அதனை அஞ்சாமலும் யாதொரு வருத்தமின்றியும் ஏற்றுக்கொண்டார். சாக்கிரட்டிஸின் அறிவுரைகளை பிளேடடோ எழுதியுள்ள "உரையாடல்கள்" ("Dialogues") மூலம் அறிகின்ருேம். சாக்கிரட்டீஸ் தத்துவ சாத்திரத்தில் ஒரு திட்டத்தை வகுப்பதில் அக்கறை கொள்ளவில்லை. மாந்தருள்ளத்தில் உண்மையையும் (truth), அறத்தையும் (virtue) நாடும் ஆர்வத்தை எழச்செய்வதே அவருடைய முதன்மையான நோக்கமாக இருந்தது. அவர் கையாண்ட பயிற்சிமுறை நேரான உரையாடல் முறையேயாகும். அவர் ஒரு கருத்துப் பொருளின் (concept) பொதுவான வரையறையிலிருந்து (definition) தொடங்கி, கோவையான பல வினுக்களை எழுப்புவதன் மூலம், அவருடன் உரையாடலில் ஈடுபட்டவர்கள் உண்மையைக் கண்டறிய உதவிசெய்வார். ஸோபிஸ்டுகளின் கொள்கைக்கு மாருக, சாக்கிரட்டீஸ், அறிவு நாம் பெறக்கூடிய ஒன்றே (அதாவது, பெறமுடியாததன்று), அவ்வறிவு சாமானியமானதும் (general), இனங்களை விளக்குவதுமானதே (typical) அன்றி, தனிப்பட்டதாகவோ (particular) அல்லது ஒரோவொரு சமயத்தில் காணப்படுவதாகவோ (accidental) உள்ளதன்று எனக் கற்பித்தார். மேலும் இவ்வடிப்படையையே அறநெறியிலும் (morals) பயன்படுத்தி, அறிவே எல்லா நன்மைகளிலும் மேலானது என்றும் சரியான

எண்ணமே சரியான செயலுக்கு இன்றியமையாததென்றும் கூறினர்.

பிளேட்டோ (கி.மு. 427-347) ஸாக்கிரட்டீஸின் மாணவர்களுள் மிகச் சிறந்தவராவர். அவரே பண்டைய கிரேக்க நாட்டில் தத்துவ சாத்திரத்தை முறைப்படுத்தியமைத்த முதல் தத்துவ அறிஞராவர். அவர் யாவற்றிற்கும் முதலாக வற்புறுத்தியது புலக்காட்சியும் (sense perception), தனிப்பட்ட கருத்தும் (opinion) உண்மையான (genuine) அறிவினின்றும் வேறுபட்டவை என்பதாகும். புலனறிவு மாறுவதையும், தனிப்பட்டதையும்பற்றி நிகழ்கிறது. ஆனால் கருத்துப் பொருளால் எழும் அறிவு, பொதுமையானது. மாறாதது; பொருள்களின் இன்றியமையாத தன்மையைப் பற்றியது. ஆகவே பின்னதே உண்மையான அறிவாகும். பிளேட்டோவினால் 'எண்ணங்கள்' அல்லது 'கருத்துக்கள்' (Ideas) என வழங்கப்படுகிற 'பொதுமைகளே' (universals) உண்மையானவை; தனிப்பட்டவைகளோ (particulars) தோற்றப் பொருள்களே (appearances). இவைகள் கருததுக்களின் சாயல்களே (copies) ஆகும். 'கருத்துக்கள்' அல்லது மூலமாதிரிகள் (archetypes) எண்ணிலடங்காதவை. ஆயினும் இவை ஒழுங்குக்கு உட்பட்ட ஒரு உலகத்தை அமைக்கின்றன. இவ்வுலகின் சாயலே நடைமுறையில் நாம் காணும் உலகம்.

புறநிலைத் தோற்றப் பொருள்கள் தோற்றமும் அழிவும் உடையன. ஆனால் கருத்துக்கள் அல்லது எண்ணங்கள் என்றுமுள்ளவை. பொருள் உலகில் தான் சிக்கியிருப்பதை உணருகின்ற ஆன்மா தன்னுடைய உடலினின்றும் விலகிநின்று, எழில்பெற்ற கருத்துலகின் ஆழ்ந்த சிந்தனையின்மூலம் தூய அறிவே (pure reason) தன் இயல்பு என உணரவேண்டும். வாழ்க்கையின் முடிந்த பயனைப் பெற நல்ல முறையில் அமைக்கப்பெற்ற அரசு வேண்டும். பிளேட்டோ தாம் எழுதிய 'குடியரசு' (Republic)* என்னும்

* பிளேட்டோவின் நூல் ஆங்கிலத்தில் 'ரிப்பப்ளிக்' எனப்படும்; 'குடியரசு' என்னும் தலைப்பில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் 'குடியரசு' என்னும் சொல்லுக்கு இக்காலத்தில் வழங்கும் பொருள் பிளேட்டோவின் நூலுக்குப் பொருந்துவதன்று. எனவே நூற்பொருளுக்கு ஏற்ற சொல்லான 'அரசியல்' என்னும் தலைப்பே பொருந்தும்.

நூலில் உன்னத அரசியலைப்பற்றி விரிவாகக் கூறுகின்றார். அது ஒரு முழு நிறைவான அரசாட்சியைப்பற்றிய குறிக்கோளேயாகும்; இவ்வையத்துள்ளேயே இறைவன் ஆட்சியைக் காணவேண்டும் என்னும் நற்கனவாகும்.

ஐரோப்பிய தத்துவ வரலாற்றில் பொதுவாக ஒருவர் பிளேட்டோவின் கொள்கையையோ அல்லது அரிஸ்டாட்டிலின் கொள்கையையோ சார்ந்தவராக இருக்கவேண்டும் என்று கூறுவது வழக்கம். பிளேட்டோவே முதல் கருத்துக் கொள்கையினராயின் (Idealist) அரிஸ்டாட்டிலே முதல் காட்சிப்பொருள் கொள்கையினராவர் (Realist). பிளேட்டோவின் முதல் மாணவராகிய அரிஸ்டாட்டிலின் (கி. மு. 384-322) முக்கிய ஆராய்ச்சி கருத்துலகத்திற்கும் பொருளுலகத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துவதைப்பற்றியாகும். அரிஸ்டாட்டிலின் கருத்து யாதெனில் 'எண்ணங்கள்' அல்லது 'உருவங்கள்' (Ideas or forms) பொருள்களுக்கு அப்பாற்பட்டவையல்ல. அவைகள் கடந்த நிலையில் (transcendent) உள்ளவை அல்ல; ஆனால் அகனமர்ந்தவையே (immanent). மேலும் அவர் முக்கூற்று முறைக் கொள்கையை (theory of syllogism) வகுத்து அளவையியலுக்கு (logic) வழிகோலினர். அவர் ஓர் அடிப்படைத் தத்துவத் திட்டத்தை (system of metaphysics) இயற்றினர். அத்திட்டம் 'பொது அறிவைக் கொண்டு பிளேட்டோவின் திட்டத்தை எளிதாக்கப் பெற்றது' என வழங்கப்பட்டது. கடவுள் உலக நிகழ்ச்சிகளின் "இயங்காமல் இயங்கும்" காரணமாவர் என்றே அவர் கருதினர். மேலும் அறவியலில் "சீரிய இடைநிலைக் கொள்கை" (the doctrine of the golden mean)யைக் கற்பித்தார். அறம் (virtue) என்பது இரண்டு எதிரான நிலைகளுக்கு நடுவானதாகும். அவ்விரு எதிர்நிலைகளும் மறங்களே (vices).

அரிஸ்டாட்டிலுக்கும்பின் எபிக்யூரியர் (Epicureanism) கொள்கை, ஸ்டாயிக் கொள்கை (Stoicism) என்னும் இரண்டு எதிரான அற இயக்கங்கள் எழுந்தன. முன்னைய கொள்கையை நிறுவிய எபிக்யூரஸ் (Epicurus) என்பவர்: இன்பமே வாழ்க்கையின் குறிக்கோள் எனக் கருதினர். "இன்பமே வாழ்க்கையின் தொடக்கமும் முடிவும்" என்பது அவர் கூற்று. ஆனல் ஸ்டாயிக்குகள், 'அறம் ஒன்றேஅடையத்தக்க நன்மை (good); மறம் ஒன்றே தீமையானது.

இன்பத்தை செயலின் குறிக்கோளாகக் கொள்ளலாகாது; மனிதனை இன்பமுறச் செய்வது அறம் ஒன்றே' என்று கூறினர்

இவ்விரு அற இயக்கங்களைத்தவிர, சமயத் தத்துவத்தை அமைக்க பல முயற்சிகள் எழுந்தன. அவைகள் 'புதிய பிளேட்டோனியக் கொள்கை' (Neo-platonism) என்பதில் முடிவுற்றன. பிளாட்டினஸ் (Plotinus) (கி. மு 204-269) என்னும் அறிஞர் ஆன்மா ஒன்றே என்னும் கொள்கையைக் கற்பித்தார். அவ்வொன்று வரையறுக்கப்படாதது. மேலும் அதனைப்பற்றிய பேச்சைக் காட்டிலும் பேச்சின்மையிலேயே மிகுந்த உண்மை அடங்கி நிற்கின்றது. அறிவு (Nous) அவ்வொன்றின் சாயலே. அது ஒரு தெய்வீக அறிவு. அவ்வறிவுக்குக் கீழ்ப்பட்ட உலக ஆன்மாவே (world-soul) உயிருள்ள அனைத்துப் பொருள்களைப் படைக்கின்றது. நம்முடைய ஆன்மா இவ்வுலக ஆன்மாவின் ஒரு பகுதியே. நம் ஆன்மா தனது குறிக்கோளை அடைவதற்கு அந்த ஒன்றினோடு சேருவதற்காகத் தன்னுடைய புலன்மையை அறவே விலக்கி மாசுபடுத்தும் உடலின் கலப்பினின்றும் (contamination) விடுதலை பெறவேண்டும். பிளாட்டினஸ் கொள்கையில் கிரேக்க தத்துவ சாத்திரக் கருத்துக்களும் கீழ்நாட்டு தத்துவ சாத்திரக் கருத்துக்களும் இணைந்து நிற்பதை எளிதில் காணமுடிகின்றது.

## இடைக்காலத் தத்துவம்

### (MEDIAEVAL PHILOSOPHY)

ஐரோப்பாவில் ஏறத்தாழ கி. பி. 4-வது நூற்றுண்டிலிருந்து 14-வது நூற்றுண்டுவரை தத்துவ சாத்திரம் கிறித்தவ மதச் சபையின் (Church) ஆட்சிக்குட்பட்டிருந்தது. அப்பொழுது தத்துவத்தின் தலையாய பணி அறிவுக்குப் பொருத்தமான வாதங்களைக் கொண்டு கிறித்தவச் சபையின் நம்பிக்கைகளைப் பாதுகாப்பதாகவே இருந்தது. கிறித்தவ சமயக் கொள்கைகளைப் பரப்பவும் உறுதிப்படுத்தி நிலைநாட்டவும் கிறித்தவச் சபையைச் சேர்ந்த புகழ்பெற்ற அறிஞர்கள் முன் வந்தார்கள். அவர்களில் ஸெயிண்ட் அகஸ்டின் (St. Augustine) (கி. பி. 354-430) மிக்க திறமையுடன்

கிறித்தவத் தத்துவத்தை முறையாக விளக்கினர். அவருடைய முதன்மையான நோக்கம், கடவுளின் முழுமுதற்றன்மையையும் மாட்சியையையும் நிலைநாட்டி, இறைவனை விட்டுப் பிரிந்து நின்றால் அவரால் படைக்கப்பட்ட உயிர்களின் சிறுமையையும் விளக்குவதாகும். ஸெயிண்ட் அகஸ்டினைப் பின்பற்றி வந்த கிறித்தவ அறிஞர்கள் போப்பாண்டவர் ஆட்சியையும் (Papacy) கிறித்தவச் சபையின் இன்றியமையாமையை வற்புறுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டனர்.

## இக்காலத் தத்துவம்
### (MODERN PHILOSOPHY)

இடைக்காலம் முடிவுறுந் தறுவாயில் போப்பாண்டவர் ஆட்சி சீர்குலையலாயிற்று. மறுமலர்ச்சி இயக்கம் (Renaissance), சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) என்னும் இருபெரும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. பண்டைய கிரேக்க நூல்களைப் பயிலுவதில் புது ஊக்கம் ஏற்பட்டது. இயற்கை விஞ்ஞானங்களில் பல குறிப்பிடத் தகுந்த உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டன. நாட்டுப் பற்று மேலோங்கியது, அரசாங்கம் கிறித்தவச் சபையின் கருவியாக இருக்க மறுத்தது. ஆன்மீயத் துறையில் கிறித்தவச் சபையின் முதன்மையை ஏற்க மறுத்து உவிலிய நூலையும் (Bible) மனச்சான்றையுமே சமய நம்பிக்கையில் எழும் ஐயங்களைத் தீர்ப்பதற்குத் துணைகொள்ள வேண்டும் என்று கூறி, லூதர் (Luther) என்பவர் பிராடஸ்டன்ட் (protestant) இயக்கத்தைத் தோற்றுவித்தார். இவ்வாறு ஐரோப்பிய ததத்துவ வரலாற்றில் ஒரு புது யுகம் ஏற்படுவதற்கு வழிவகுக்கப்பட்டது.

இக்காலத் தத்துவ சாத்திரம் சிந்தனையை விழிப்படையச் செய்ததோடன்றி, அதிகாரத்திற்கும் (authority), மரபுக்கும் (tradition) எதிராகவும், எண்ணம், உணர்ச்சி, செயல் (thought, feeling and action) யாவற்றிலும் தன்னுரிமைக்காகவும் போராடி வெற்றிபெற்றது. இந்தத் தன்னுரிமை ஆர்வம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளிலும் தலையிட்டது. கிறித்தவச் சபையின் ஆட்சி ஒடுங்கி, அச்சபையே அரசாங்கத்துக்குட்பட்டது.

மக்களின் கருத்து இயற்கைக்கு அப்பாற்பட்டதைப்பற்றி அக்கரை கொள்வதை விடுத்து இயற்கையிலுள்ள பொருள்களைப் பற்றியே ஆராயத் தொடங்கியது. இடைக்காலத்தில் இறையியலே (Theology) எல்லாவற்றிற்கும் முதன்மையாகக் கருதப்பட்டது. (Queen of all sciences). ஆனால் இப்போது அதன் இடத்தை தத்துவ சாத்திரம் ஏற்றது. உண்மை, அதிகாரத்தினால் அடையப் படுவதன்று; காய்தல் உவத்தலில்லா ஆராய்ச்சியால் அடையப்படு வதேயாகும். அறிவு அறிவுக்காகவே அன்று; செயல் முறையில் பயன்படுத்துவதற்காக அறிவு மதிப்பளித்து விரும்பப்பட்டது. சமயத் துறையிலும் தமக்கும் இறைவனுக்கும் இடையே கிறித்தவச் சபை தலையிடுவதையும மக்கள் விரும்பவில்லை.

இக்காலத் தத்துவம் உண்மையைக் கண்டறிவதில் பிறிதின் சார்பற்று முன்னேறுகின்றது: மனித அறிவையே (reason) யாவற் றினும்சிறந்ததாகக் கருதுவதனால் அறிவு முதற்கொள்கைத்தன்மை யும் (rationalistic) அகப்புற இயல்புகளை இயற்கைக்கு அப்பாற் பட்டவைகளாலன்றி இயற்கை முறையிலே விளக்குவதால் இயற் கைக் கொள்கைத் தன்மையையும் (naturalistic), புதிய விஞ்ஞா னங்களோடு, சிறப்பாக புற உலகைப் பற்றிய விஞ்ஞானத்துடன், தொடர்புடையதாக இருப்பதால் விஞ்ஞானத் தன்மையும் (scientific) இக்காலத் தத்துவ சாத்திரம் பெற்றிருக்கிறது.

இக்காலத் தத்துவம் இடைக்காலத்திலெழுந்த புலமைக் கொள்கைக்கு (Scholasticism) எதிராக எழுந்த போதிலும், அத னுடன் முழுதும் தொடர்பற்று இருக்கமுடியவில்லை. ஸ்கொலாஸ் டிக் கொள்கையின் கருத்துக்களில், டேக்கார்ட் (Descartes) காலத் தில் பரவியிருந்த முதன்மையான கருத்து, பொருளைப் (substances) பற்றியதாகும். ஸ்கொலாஸ்டிக் கொள்கையினர் பொருள் ஒவ் வொன்றும் தனக்கே உரிய சத்தை (essence peculiar to itself) உடையது; எனவே இச் சத்தே அதன் அமைப்புக்குக் காரண மானதும், பிரிக்க முடியாததும், ஆனால் மற்றப் பண்புகளிலிருந்து பகுத்தறியக்கூடியதுமாக உள்ளது என்று கருதினர். மேலும் ஒவ்வொரு பொருளும் சில இன்றியமையாத இயல்புகளைப் (attributes) பெற்றிருக்கின்றன. அவைகளின்றி பொருள்கள் இருக்கவோ அறியப்படவோ முடியாது என்றும் கூறினர். ஆகவே

புலமைக் கொள்கையின் அடையாளங்கள் சில இக்காலத் தத்துவத்திலும் காணப்படுகின்றன. அக்கொள்கையைக் குறைகூறிய சில அறிஞர்களே அக் கொள்கையின் பல கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொண்டிருப்பதையும் காணலாம்

**பிரான்ஸிஸ் பேக்கன்** (Francis Bacon) (கி. பி. 1561-1626) இயற்கை விஞ்ஞானத்தையே எல்லா விஞ்ஞானங்களுக்கும் தாயகமாகக் கருதினர். வாழ்க்கை வளம் பெறுவதற்கு இயற்கையைப் பற்றிய அறிவினால் எழுந்த அனுபவம் தேவை. அதனை அடைய சரியான முறையைக் கையாண்டு இயற்கையைக் விளக்கத்தகுந்த விவரங்கள் சேகரிப்பதோடன்றி நம் மனத்திலும் விருப்பு வெறுப்புகள், ஆராய்ச்சிக்கு முன்னதாகக் கொள்ளும் முடிபுகள் (prejudice and preconceived notion) ஆகியவையின்றி இருக்கவேண்டும். இவைகள் நாம் இயற்கையை அறிவதற்குப் பெருந்தடைகளாக இருக்கின்றன. நம் நோக்கம் இயற்கையை விளக்குவதேயன்றி எதிர்பார்ப்பதன்று. தவறான அத்தகைய முன் எண்ணங்களைத் தீர்மானமாய் விலக்கவேண்டும்.

அவர் காலத்தில், உடன்பாட்டு நிகழ்ச்சிகளை எண்ணுகிற தொகுமுறை (enumerative inductive method) பரவி இருந்தது. அதில் அவர் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. எதிர்மறையான நிகழ்ச்சிகளை ஆராய்ந்த பின்னரே முடிவுக்கு வரவேண்டும் என்று பேக்கன் கருதினர். அவர் அனுபவத்தையே உண்மையான அறிவுக்கு உரைகல்லாகக் கொண்டும், இயற்கையைப் பல செய்க்காட்சி முறைகளால் (experimental methods) அறியவும் முயன்றதனால் அக்காலப் போக்கை நாம் அறிய முடிகின்றது. ஆனால் பகுமுறையின் (deductive method) தன்மையை அவர் சரிவர உணரவில்லை. இக்குறையிருந்த போதிலும் அவர் ஸ்கொலாஸ்டிக் கொள்கையை எதிர்த்தும், இயற்கைக் கொள்கை (Naturalism), மக்கண்மைக் கொள்கை (Humanism) இவற்றில் ஆர்வம் காட்டியும், புலன்சார் தொகு முறையைப் (*a posteriori* inductive method) பின்பற்றியும் புகழ் அடைந்தார்.

**தாமஸ் ஹாப்ஸ்** (Thomas Hobbes) (கி. பி. 1588-1679) அனுபவத்தையே அறிவுக்கு அடிப்படையாகக் கருதினர். புதிய விஞ்ஞானங்களிலும், கணித முறையிலும் அவர் ஆர்வம் காட்டினர்

அவைகளே உறுதியும், பொதுவான (universal) அறிவைக் கொடுக்கக்கூடிய தன்மையும் வாய்ந்தவை என்று கருதியதோடு முறையான ஒரு சடக் கொள்கையையும் (Materialism) தோற்று வித்தார்.

ஹாப்ஸ், காரணத்திலிருந்து காரியத்தையும், காரியத்தி லிருந்து காரணத்தையும் உணருவதைத் தத்துவ ஆராய்ச்சியாகக் கருதினார். இயக்கமே (motion) எல்லா மாறுதல்களுக்கும் காரணம் என்றும், இயக்கமே எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படை என்றும் கூறினார். அவர் பகுமுறை (deductive method) வாயி லாகத் தம் திட்டத்தை அமைத்தார். உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் மனித இயல்பு, உள்ளம் (mind), அதன் நிலைகள் ஆகியவற்றையும் இயக்கத்தினால் விளக்க முடியும். நாம் அறியக் கூடியவை உடல்சார்ந்த (corporeal) பொருள்களே. பொருள் (body) எனப்படுவது நம் சிந்தனையின் சார்பற்றது; குறிப்பிட்ட இடத்தில் இருப்பதே. உடல் சார்பற்ற பொருள் (incorporeal (substance) இருக்கமுடியாத முரணாகும். ஆனால் பொருள்களை நேராக அறிய முடியவில்லை. அவைகளின் பண்புகளையே அறி கின்றோம். புலன்-உட்பதிவுகளின வழியாக (sense-impression) அறிவு எழுகிறது. ஆனால் நாம் அறிவது இயல்புகளின் உட்பதிவு களே அன்றி (impressions of attributes), பொருள்களின் உண்மையான நிலை (impressions of substances) பற்றிய உட் பதிவுகள் அல்ல.

நம் அறிவு புலனுணர்ச்சியையே சார்ந்து இருப்பதால் ஆன் மாக்கள் அல்லது ஆவிகள் (souls or spirits) என்பவை இருந்தாலும் அவற்றை அறியமுடியாது. கடவுளைப்பற்றியும் நாம் எண்ணமுடி யாது. இருப்பவை எல்லாம் உடல்சார்ந்தே (corporeal) இருப்பதால், கடவுளும் அவ்வகையிலேயே இருக்க வேண்டும்.

ஹாப்ஸின் அடிப்படைத் தத்துவம் (metaphysics) இயக்கத் தையே ஆதாரமாகக் கொண்டிருப்பதால் உள்ளத்தையும் (mind), அவர், மூளையில் உள்ள அசைவு அல்லது தலையினுள் இருக்கின்ற ஒரு நுண்ணிய பொருளாகக் கருதுகின்றார். சில சமயங்களில் உள்ள நிகழ்ச்சிகளைத் தோற்றங்கள் என்று தாழ்த்திக் கூறுகிறார்.

அவர், 'மாறுதல்' இயக்கத்தினால் ஏற்படுவதே என்னும் கோட்

பாட்டைப் பயன்படுத்தி எல்லா நிகழ்ச்சிகளையும் விளக்க முடியாத தினால் அவருடைய சடக்கொள்கை ஏற்க முடியாததாகிறது. எனினும் சடக்கொள்கையின் குறையை நாம் அறிய அவர் உதவு கின்றார்.

## அறிவு முதற் கொள்கையும் அனுபவ வழிக்கொள்கையும்

### (RATIONALISM AND EMPIRICISM)

இக்காலத் தத்துவத்தில் அறிவு முதற்கொள்கை (Rationalism) அனுபவ வழிக்கொள்கை (Empiricism) என்னும்இரு பெரும் பிரிவு கள் எழுகின்றன. முன்னையது அறிவையும் (ratio or reason); பின்னையது புலன் நுகர்ச்சியையும் (experience), பிறப்பிடமாகவும் (source), குறிக்கோளாகவும்(norm)கொண்டுள்ளன. மேலும், அறிவு முதற்கொள்கையில் பின்வரும் நாலு கூறுகளைக் காணலாகும். (1) உண்மையான அறிவு (valid knowledge) பொதுவானதும் (universal), கட்டாயமானதுமான (necessary) தீர்மானங்களால் (judgments) ஆக்கப்பட்டது; சிந்தனையின் குறிக்கோள் அளவையிய லாக ஒன்றுக்கொன்று உறவு கொண்டுள்ள பல தீர்மானங்களடங் கிய ஓர் அறிவுத் திட்டத்தை (system of knowledge) ஏற்படுத்துவ தாகும். (2) உறுதியான (certain) அறிவை அடைய முடியும். (3) உண்மையான அறிவு புலக்காட்சியால் எழாமல், அறிவு (reason) அல்லது சிந்தனையையே அடிப்படையாகக் கொண்டெழுவதால், புலச்சார்பற்ற உண்மைகள் (*a priori* truths) என்பது பெறப்படும். (4) உடன் பிறந்த எண்ணங்கள் அதாவது புலன்வழி எழாத என் ணங்கள் (innate ideas) உண்டு. புலன் நுகர்ச்சிக் கொள்கைப்படி பின்வரும் நாலு கூறுகளைக் காணலாகும்; (1) அறிவு (knowledge) புலச்சார்புற்று இருப்பதனால் ஒரு பொறி அமைப்புத் தன்மையை (mechanical construction) பெற்றுள்ளது என்று கருதப்படுகின்றது. (2) உண்மையாக இருக்கக்கூடும் என்று நம்பத்தகுந்த ஆனால் அறுதியிட்டுக் கூறமுடியாத அறிவை (probable knowledge) அடைய

முடிகிறது. (3) அனுபவத்திலேயே அறிவு வளர்வதனால் அறிவு புலன் சார்புற்றது. (*a posteriori*). (4) உடன் பிறந்த எண்ணங்கள் இல்லை.

சுருங்கக் கூறின், அறிவு முதற்கொள்கை, சிறப்பாக அறிவையும், புலன்வழி நுகர்ச்சிக் கொள்கை சிறப்பாக அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளவை. எனினும் அறிவு முதற் கொள்கை புலன் நுகர்ச்சியை முழுவதும் ஒதுக்கவோ, அல்லது புலன் நுகர்ச்சிக் கொள்கை அறிவை (reason) முழுவதும் ஒதுக்கவோ முற்படவில்லை. ஒன்றினை ஒன்று ஓரளவுக்கு ஏற்றுக்கொள்வதையே காண்கின்றோம். எனவே ஒருவர் அறிவுக்கு (knowledge) எதனைப்பொதுவாக மூலமாகக்கருதுகின்றனரோ அதனைக்கொண்டு அவர் அறிவு முதற் கொள்கையினர், அல்லது புலன் நுகர்ச்சிக் கொள்கையினர் எனத் துணியலாம். டேக்கார்ட் (Descartes) ஸ்பினோஸா (Spinoza), லைப்னிட்ஸ்(Leibniz) ஆகியவர்கள் அறிவுமுதற் கொள்கையினராகவும், லாக் (Locke) பார்க்லி (Berkeley) ஹியூம் (Hume) ஆகியோரைப் புலன் நுகர்ச்சிக் கொள்கையினராகவும் கொள்ளலாம். பொதுவாக அறிவு முதற் கொள்கையினர் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலியோரின் அறிவு முறையைப் பின் பற்றிய வழித்தோன்றலாவர். புலன் நுகர்ச்சி வழிக்கொள்கையினர் பெயருண்மைக் கொள்கையைப் (Nominalism) பின்பற்றிய வழித்தோன்றலாவர் எனினும் இவர்கள் எப்பொழுதும் கொள்கை பிறழாது இருந்ததாகக் கூறமுடியாது. இவ்விரு பிரிவுகளாகிய அறிவுமுதற் கொள்கையையும் அனுபவப் புலன் நுகர்ச்சிக் கொள்கையையும் பிற்காலத்தில் காண்ட் (Kant) என்னும் ஜெர்மானிய நாட்டு தத்துவ அறிஞர் இணைக்க முயன்றார்.



டேக்கார்ட்

# 2

# டேக்கார்ட்

## (கி. பி. 1596-1650)

இடைக்காலத் தத்துவத்தில் (Mediaeval Philosophy) எழுந்த ஸ்கொலாஸ்டிக் (Scholastic) கொள்கையின் கருத்துக்களுக்கும், முறைக்கும் (method) எதிர்ப்பு பேக்கனுடன் (Bacon) தொடங்கிற்று. அவர் இயற்கை விஞ்ஞானத்தையே (natural science) மற்றெல்லாவற்றிற்கும் தாயகமாய்க் கருதினர். தொகுப்பு வழிமுறைக்கு (inductive method) முக்கியத்துவத்தையும் அளித்தார். பகுப்பு வழிமுறைக்கு (deductive method) சிறப்பு அளித்த ஹாப்ஸ் (Hobbes) ஓரளவுக்கு விஞ்ஞான நோக்கத்தை ஒப்புக் கொண்ட போதிலும், இயற்கையைப் பற்றி அவர்கருத்து சடக்கொள்கையை (Materialism)த் தழுவியே விளங்கிற்று, ஆகவே அதில் அனுபவத்திற்கும், நனவு நிலைக்கும் (consciousness) சிறிதளவே இடந்தரப் பட்டது.டேக்கார்ட்டின் தத்துவ சாத்திரத்தில் புலமைக் கொள்கையுடன் ஏற்பட்ட நெடுநாளைய போராட்டம் ஒரு வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பயனுக ஒரு புதிய இயக்கம் தோன்றியது. அதை நிறுவுவதற்குத் தேவையான மேதையையும் டேக்கார்ட் பெற்றிருந்தார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அறிஞர், டேக்கார்ட் இக்காலத் தத்துவத்தை திட்டமாகத் தோற்றுவித்தவர். அவருக்கு "இக்காலத் தத்துவத்தின் தந்தை" (Father of Modern Philosophy) என்னும் பெயர் வழங்குகிறது. தத்துவசாத்திரம் அவருடைய எழுத்தில் புதியதாக மலர்கின்றது. அவர் தத்துவத்திற்கு ஒரு புதிய தொடக்கத்தை ஏற்படுத்த விரும்பியதோடன்றி அதற்காக ஒரு புதிய முறையையும் (method) அமைத்தார். தகுந்த முறையின்மையினுலேயே தத்துவம் தன்னுடைய சரியான பாதையில்செல்லவில்லைஎன்பதே அவருடைய கருத்து. மேலும் இப்புதிய முறையைப் பயன் படுத்தி, தொடர்ச்சியான சான்றுகளையும் சிறந்த கோட்பாடுகளையும் கொண்ட ஒரு திட்டத்தை (system)யும் வகுத்தார். இத்திட்டம் இக்காலத்து அறிஞர்களுக்குப் பல சிக்கல்களையும், ஓரளவுக்கு அவைகளை தீர்க்

கும் வழிகளையும், முடிவுகளையும் எய்துகின்ற பண்போடமைந்தது.

டேக்கார்ட் இம்முயற்சியில் இதற்கு முன் நடந்தவைகளிலிருந்து தனிப்பட்ட முறையில் தாமாகவே சிந்தித்து முடிவு செய்யத் தீர்மானித்தார். இப்பண்பில் அவர் மாறுதல் காலத்திய (transition period) அறிவுலகில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுத்திய அறிஞர்களான பேக்கன், ஹாப்ஸுடன் ஒத்திருக்கின்றார். மேலும் இக்காலத்தத்துவத்திலும் உள்ள பல சிக்கல்களையும் திட்டமாக முறைப்படுத்தி அல்லது வரையறை செய்து கூறினார். அவைகளில் முக்கியமானவை: 1. கணித முறையை தத்துவத்தில் கையாளுவது, 2. கருத்துக் கொள்கையின் அடிப்படையாகக் கருதப்படுவதும் என்றும் உளதுமான ஆன்மா அல்லது உள்ளத்தின் முதன்மையை வற்புறுத்துவது. 3. உள்ளத்திற்கும் உடலுக்கும், ஆன்மாவிற்கும், சடத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் தத்துவத்திற்கும் உள்ள உறவு முறைகளை விளக்குவது.

இச்சிக்கல்களுக்கு டேக்கார்ட் அளித்த முடிவுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல வெனினும், இச்சிக்கல்களை முறைப்படுத்தி அமைத்ததற்காகவே, அவருக்குத் தற்காலத் தத்துவத்தின் தந்தையென்ற பெயர் வழங்குகிறது.

## வாழ்க்கை வரலாறு

## (BIOGRAPHY)

இக்காலத்து ஐரோப்பிய தத்துவசாத்திரத்தின் தந்தையெனக் கருதப்படும் டேக்கார்ட் கி.பி. 1596-ம் ஆண்டில் லா ஹெ, துரெய்ன் (La Haye, Touraine) என்னும் ஊரில் ஒருகண்ணியமான குடும்பத்தில் பிறந்தார்; அவர் பிறந்த சில நாட்கள் கழித்து அவரது அன்னை என்புருக்கி நோயினால் இறந்தார். டேக்கார்ட்டின் உடல் நலமும் சரிவர அமையவில்லை. எனினும் அவருடைய தந்தையின் உன்னிப்பான பார்வையில் வளர்ந்து வந்தார். சிறுவயதிலேயே மற்ற பிள்ளைகளுடன் சேராமல், தனித்துச் சிந்தனையில் ஆழ்ந்துவிடும் தன்மை பெற்றிருந்ததால் அவர் தந்தை நகைப்புடன் அவரை "என் சிறு தத்துவ அறிஞர்" என்று அழைப்பார்.

டேக்கார்ட் அவருடைய எட்டாவது வயதில் லாப்ளெஷ் (La Fleche) என்னும் ஊரில் ஜெஸூயிட் (Jesuit) பள்ளியில் சேர்ந்தார். உடல் நலக்குறைவினல் ஆசிரியர்கள் அவருக்குச் சில வசதிகள் அளித்து அவர் மனவளர்ச்சிக்கு ஊக்கமளித்தனர். காலையில் படுக்கையிலேயே மிகுந்த நேரம் இருந்து தம் பாடங்களை மட்டுமேயன்றி பல்வேறு பொருள்களைப் பற்றியும் ஆழ்ந்துசிந்திப்பார். பண்டைய மொழிகள், ஸ்கொலாஸ்டிக் தத்துவம், கணித இயல், இவைகளைப் பள்ளியில் கற்றார். இவற்றுள் கணித இயலில் அவர் விரும்பிய உறுதித் தன்மையும், தெளிவையும் கண்டார். பள்ளிப்படிப்பிற்குப் பிறகு தாமே கண்டு பிடிக்கக் கூடியவற்றிலும் உலகமாகிய சிறந்த புத்தகத்திலிருந்து அறியக்கூடிய விஞ்ஞானத்திலும் அக்கரை கொண்டார். பள்ளிப் படிப்பிற்கு பிறகு புவாட்டியே (Poitiers) பல்கலைக்கழகத்தில்பயின்று பட்டம்பெற்றார். அதன்பின் பாரிஸூக்குச் சென்று அங்கு மர்ஸென் (Marsenne) என்பவருடன் இரண்டு ஆண்டுகள் கணிதம் பயின்றார்.

டேக்கார்ட் பிறநாடுகளைப் பார்ப்பதில் ஈடுபட்டுப் பலதிற மக்களுடனும், பல சூழ்நிலைகளிலும் பழகினர். பிறகு 1617-ல் நெதர்லாண்டில் ராணுவத்தில் சேர்ந்தார். ராணுவத்தில் பணிபுரிந்த போது ஊதியம் பெற்றுக்கொள்ள இசையாததினல் சில கடமைகளில் விலக்கு அளிக்கப்பெற்றார். ராணுவத்திலிருந்தபோதும் மனவளர்ச்சி அடைவதில் அவர் ஆர்வம் குறையவில்லை. ராணுவத்தை ஒரு பயிற்சிப் பள்ளியாகவேயன்றி ஒரு ·போர்க்கருவியாக அவர் கருதவில்லை. ஓய்வுள்ளபோது தனித்துச் சென்று ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுவார். கணித இயலில் உள்ள உறுதியையும்,தெளிவையும் எவ்வாறு தத்துவத்தில்அடையமுடியும்என்பதை அறிவதையே முதன்மையாகக் கருதினர். அடிக்கடி இச்சிக்கலுக்கு விளக்கம் அளிக்குமாறு இறைவனைத் தொழுவார். அவருடைய வேண்டுகோள் நிறைவேறினல் லொரெட்டோ (Loretto) என்னும் ஊரில் உள்ள கோயிலுக்குப் போவதாக நேர்ந்துகொண்டார்.

1621 ஆம் ஆண்டில் ராணுவத்தினின்று விலகிப் பிறநாடுகளுச் செல்வதிலும் கல்வியிலும் ஈடுபட்டிருந்து பிறகு 1625-ல் பாரிஸூக்குச் சென்று விஞ்ஞான ஆர்வமுள்ள அவருடைய நண்பர்களுடன் மூன்று ஆண்டுகள் கழித்தார். பின்னர் தனிமையை

விரும்பி ஹாலண்டு நாட்டுக்குச் சென்று தனித்து வாழ்ந்தார். இவருடைய நூல்கள் பெரும்பாலும் அக்காலத்தில்தான் வெளிவந்தன. இவர் பௌதிகம், உடலியல் (Physiology), கணிதம் முதலிய துறைகளில் அரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்.

தத்துவத்தில் மிக்க ஆர்வங்கொண்ட ஸ்வீடன் தேசத்து அரசி கிருஸ்தினு டேக்கார்ட்டைத் தம் ஆசிரியராகக் கொள்ளுவதற்காக அவருக்கு அழைப்பு விடுத்தார். பல ஆண்டுகளாக கிருஸ்தினுவின் ஆவலை நிறைவேற்ருமலிருந்த டேக்கார்ட் 1649ல் அழைப்பிற்கு இணங்கி, ஸ்டாக்ஹோமுக்குச் சென்ருர். ஆனல் அவ்வூரின் தட்பவெட்ப நிலை தாங்க முடியாமல் அவர் நோய் வாய்ப்பட்டு 1650ல் காலமானர்.

டேக்கார்ட் இயற்றிய நூல்களில் முக்கியமானவை:

1. முறைபற்றிய உரைகள் (Discourse on Method)
2. தத்துவஞான அடிப்படைகள் (Principles of Philosophy)
8. முதல் தத்துவச் சிந்தனைகள் (Meditations on First Principles)
4. மனவெழுச்சிகளின் இயல்புகள் (Treatise on the Passions of the Soul)

## நோக்கமும் முறையும்

### (AIM AND METHOD)

"மனிதனல் அறியக்கூடியதும், வாழ்க்கைக்கு இயைந்ததும், உடல் நலத்தைப் பேணவும், பல கலைகளையும் கண்டறியவும் தேவையான அறிவைத் தன்னுள் கொண்ட முழு அறிவு" எனத் தத்துவ சாத்திரத்தின் இயல்பை டேக்கார்ட் விளக்குகின்ருர். தத்துவத்திற்கு நனவு நிலைபற்றிய தீர்மானமான பாதையை வகுத்ததோடன்றி, தெளிவையும், தனித்தன்மையும் பெற்ற கருத்துக்களை அளிக்கவல்ல முறையையும் ஏற்படுத்தி பயன்தரக்கூடிய ஒரு குறிக்கோளையும் அளித்தார். "மனித அறிவுக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் (programme) மாத்திரம் அளிப்பது அவர் நோக்கமன்று; ஆனல் கணித சாத்திரத்

தைப் போன்று உறுதிபெற்ற ஒரு கொள்கையையும் அமைப்பதே யாகும்''.

புற உலகு பற்றிய அவருடைய கருத்துக்கள், இக்காலத்துச் சிறந்த இயற்கை விஞ்ஞானிகளின் கருத்துக்களோடு பெரிதும் ஒத்திருக்கின்றன. உடலின் செயல் முறைகளும் உள்ளக் கிளர்ச்சிகளும் உட்பட இயற்கையில் நிகழும் எவையும் இயந்திர நிகழ்ச்சி போன்று விளக்கப்பட வேண்டும். தொன்று தொட்டு புகழுடன் விளங்குகின்ற ஆன்மக்கொள்கையினருடைய அடிப்படைத் தத்துவங்களை உண்மையாகக் கொள்வதோடு அவைகளைப் புதிய விஞ்ஞானிகளின் தேவைகளுக்குப் பொருத்தவும் டேகார்ட் முயல்கின்றார். சுருங்கக் கூறின், அவருடைய முக்கிய நோக்கம், பொருள்களின் இயந்திரத் தன்மையையும், கடவுள், ஆன்மா, தன்னுரிமைபற்றிய கருத்துக்களையும் இயைபுறச் செய்வதேயாம்.

டேக்கார்ட் தத்துவ சாத்திரத்தை ஒரு மரத்திற்கு ஒப்பிடுகின்றார். அடிப்படைத் தத்துவம் (metaphysics) அம்மரத்தின் வேர்; பௌதிகம்(physics) அதனுடைய அடிமரம். மற்றெல்லா விஞ்ஞானங்களும் [மருத்துவம் (medicine) பொறி இயல் (mechanics) அறவியல் (ethics) இம்மூன்று வகைக்குள் அடங்கும்] அதன்மேல் வளரும் கிளைகள் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் அற நூலே (science of morals) மற்றெல்லா விஞ்ஞான சாத்திரங்களுடனும் தொடர்புற்றிருப்பதால் அதனை யாவற்றிற்கும் உயர்ந்ததாகவும் முழுமை பெற்றதாகவும், அறிவின் இறுதிநிலையாகவும் கருதினார்.

## முறை

## (METHOD)

வாழ்க்கையைப்பற்றி இதுகாறும் அறியப்பட்ட உண்மைகளைப் பற்றி டேக்கார்ட் முதலில் சிந்திக்கத் தொடங்கினார். அதன் பயனாக அவர் சில முடிவுகளைக் கண்டார். அவையாவன: விஞ்ஞானம், சட்டம், மருத்துவம், தத்துவம் முதலியவை ஏமாற்றத்தைத்தருகின்றன. அறிவாளிகள் பலதிறப்பட்ட கருத்துக் கொண்டுளர். தத்துவ சாத்திரத்திலும் ஒரு கொள்கையாவது இன்றளவு விவாதத்திற்கு

உட்படாமல் முடிவாக இல்லே. ஒன்றுபடுத்தக்கூடியதும் உறுதியும் கொண்ட ஒரு அடிப்படை அவசியமாகின்றது. மாருததாயும் மறுக்கமுடியாததாயும் உள்ள ஒன்றை அடையப் பெற்ருல், இது வரை உண்மை என்று கருதப்பட்ட அனைத்தையும் விடுத்துப் புதிதாக ஒரு திட்டம் அமைக்க முடியும். அதற்கான வழியாதெனில், தற்போது பரவியுள்ள கொள்கைகளை ஒதுக்கி ஐயம் ஒரு சிறிதுமின்றி, தன்னைப்பற்றியும், தன் எண்ணங்களைப் பற்றியும், தெளிவும் உறுதியும் உள்ள அறிவைத் தேட வேண்டும். கணித உறுதிபோல் சான்றுகள் உள்ள உண்மைகளைக் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடு தொடங்க வேண்டும். அத்தகைய உண்மைகளை இதுவரையில் தத்துவ மரபில் வந்துள்ள கொள்கையில் கண்டு பிடிக்க முயலுவது வீண். ஏனெனில் நாம் அதனின்று பெறுவது வேறுபட்ட கருத்துக்களின் திரட்சியே.

பழமையான பல கருத்துக்களை ஏற்றுக் கொள்வதைவிட நாம் உலகமாகிய இப்பெரும் புத்தகத்தைப் படிக்க வேண்டும். "பிளேடோ, அரிஸ்டாடில் முதலியோரின் எல்லா அறிவு முறையைக் கற்றும் நாமாகவே ஒரு சொற்ருெடரைப் பற்றிச் சரியான முடிவு கூற இயலாவிட்டால் நாம் தத்துவ அறிஞர் ஆகமாட்டோம்." பிறர் கருத்துக்களை அறிவது விஞ்ஞானமன்று; வரலாறே. ஒவ்வொரு மனிதனும் தானே சிந்தித்துத் தெளிவுறல் வேண்டும். அப்படியானல் தெளிவும் உறுதியும் கொண்ட அறிவை அறியும் முயற்சியை எவ்விதம் தொடங்க வேண்டும்? அதற்காக எம்முறையைக் கையாள வேண்டும்?

உண்மையைக் கண்டறியும் இப்பெரும் பயணத்தில் பலமுறைகள் கையாளப் பட்டிருப்பதைக் காண்கின்ரும். ஒவ்வொரு முயற்சியும் முன்னைய முயற்சிகளைவிட உண்மைகளிலும் அவ்வுண்மைகளை அடைந்த முறைகளிலும் முன்னேறி இருப்பதாகவே உரிமை கொண்டாடுவதைத் தத்துவசாத்திரத்தின் வரலாறு வெளிப்படுத்துகின்றது. மேலும் தத்துவ சாத்திரத்தின் வளர்ச்சி அது கையாளும் முறையின் முன்னேற்றத்தோடு இணைந்தும், அதனை அடிப்படையாகக் கொண்டும் நிகழ்கிறது.

இக்காலத் தத்துவ சாத்திரம், அறிவுபெற மனித உள்ளத்தின் ஆற்றலையே நம்பித் தொடங்குகிறது. எனினும் அவ்வறிவை எம்

முறையில், எவ்வளவில் அடையமுடியும் என்பதே இப்போதைய சிக்கல். ஆகவே இம் 'முறைச் சிக்கல்' தத்துவ வளர்ச்சிக்கு அச்சாணியாகத் திகழ்ந்தது. இக்காலத் தத்துவ அறிஞர்கள், ஒருவர் மற்றவர் கருத்துக்களையும் முடிவுகளையும் புரிந்து கொள்வதோ அல்லது தமக்குள் ஏற்பட்ட மாறுபாட்டை அறிவதோ மிகக் கடினமாக உளது. இதற்குக் காரணம் அவர்கள் கையாண்ட தத்துவ முறைகளின் வேறுபாட்டின் விளைவேயாகும்.

இடைக்கால முடிவுக்குப்பின் இரு பெரும் இயக்கங்கள் தத்துவ சாத்திரத்தில் தோன்றின. ஒன்று இடைக்காலத்துக் கொள்கைகளை அழித்த ஐயக் கொள்கையைத் (Scepticism) தொடர்ந்து எழுந்த கார்ட்டீஸிய (Cartesian) இயக்கமும், மற்றொன்று, பதினெட்டாம் நூற்றாண்டில் ஐயக் கொள்கைக்குப் பின்னெழுந்த கான்டியன் (Kantian) இயக்கமுமாகும். இவ்விரண்டும் பொதுவாக தத்துவ முறையை ஆதாரமாகக் கொண்டெழுந்தவை எனினும், இம் முறைச் சிக்கலை நேர்முகமாய், தனிப்பட்ட வகையில் சிந்தித்தவர் டேக்கார்ட்டே. மேலும்அவர் சரியான முறையினால்தான் உறுதியான அறிவை அடையமுடியும் எனக் கருதினார். கணித இயலில் பின்பற்றப்படும் முறையே அவர் மனத்தைக் கவர்ந்தது. ஆகவே, தானே விளங்கும் (self-evident) உண்மைகளைக் கொண்டு இன்னும் அறியாத உண்மைகளை அடையும் பொருட்டு இம்முறையைப் பயன்படுத்த முயன்றார். கணித இயலையே தம்முடைய தத்துவ முறைக்கு ஒரு முன் மாதிரியாகக்(model) கொண்டு, கணிதத்தில் காணும் உறுதி வாய்ந்த ஒரு தனித் திட்டத்தை வகுத்தார்.

வேபர் (Weber) எழுதிய "தத்துவத்தின் வரலாற்றில்" "டேக்கார்ட் வடிவ இயற்கணிதத்தினிடம் சார்புள்ள **தத்துவ அறிஞர்** என்பதைவிட, தத்துவத்தில் சார்புள்ள **வடிவ இயற்கணித அறிஞர்**" * எனக் குறிப்பிடுகின்றார். வடிவக் கணித முறையை தத்துவத்தில் கையாளுவதே டேக்கார்ட்டின் அவா. இதனை அவர் இயற்றிய "முறைபற்றிய உரை" (Discourse on Method) என்னும் நூல் ஐயத்திற்கிடமின்றி தெளிவுறுத்துகின்றது. " உறுதி

---

* Weber: *History of Philosophy*, p. 243.

யும், மெய்ப்பிக்கத்தக்க சான்றும் பெற்றுள்ள கணித சாத்திரத்தில் உவகையடைகின்றேன்"* என்று எழுதியுள்ளார்.

பிரிட்டானிய நாடுகளில் தோன்றிய புலன் நுகர்ச்சி கொள்கையினர்க்கு (Empiricists) மாருக, டேக்கார்ட் கணிதத்தையே தம்முடைய தத்துவ முறைக்கு முன்மாதிரியாகக் கொண்டார். "அளவை இயலைப் (Logic) படியுங்கள். கணித இயலை அறிவதன் மூலம் அதன் விதிகளைப் (rules) பயிலுங்கள்" † எனக் கூறுகின்ருர். கணித முறை நாம் நம்முடைய அறிவுமுறையில் (reasoning) கையாளவேண்டிய வழியைப் பற்றிய குறிப்பைத் தருகின்றது. கணித அறிஞர்களால் தாம் உறுதியானவையாகவும் தாமாகவே விளங்குவனவுமாகவும் உள்ள, உண்மைகளைக் கண்டுபிடிக்க முடிகின்றது. "இரண்டும் இரண்டும் சேர்ந்து நான்கு ஆகிறது" என்னும் உண்மையையும், "முக்கோணத்திலுள்ள மூன்று கோணங்களும் சேர்ந்து இருநேர் கோணத்தின் எண்ணிக்கைக்கு சமமாகிறது" என்னும் உண்மையையையும் விவாதமின்றி ஒப்புக்கொள்ளுகின்ருேம். அத்தகைய உண்மைகள் தத்துவத்தில் கணடுபிடிக்கப்பட்டால், தத்துவத்தில் நிறைந்துள்ள பலவிதப் பூசல்களும் விவாதங்களும் முடிவுபெறும்

கணித சாத்திரம், பின்பற்றும் அத்தகைய முறையாது? கணிதம் தற்புல உண்மைகள் (axioms) அல்லது தாமாகவே விளங்கும் உண்மைகளிலிருந்து தொடங்கிப் படிப்படியாக மற்ற உண்மைகளை உய்த்துணர்கின்றது. இம்முறையைத் தத்துவத்தில் கையாண்டு பல தற்புல உண்மைகளையும், அவற்றின் வழியாக வேறு பல உண்மைகளையும் அறியவேண்டும். அதற்குத் துணையாக டேக்கார்ட் நான்கு விதிகளையும் அமைத்தார்.

(1) எதையும் (ஐயமின்றி) தெளிவாக அறிவதற்குமுன் உண்மை என்று கொள்ளாதிருத்தல்.

(2) விசாரணைக்குட்படுத்தப்பட்ட கடினமான சிக்கல்களை முடிந்த அளவில் பல பகுதிகளாகப் பிரித்தல்.

(3) மிக எளிய பொருள்களிலிருந்து தொடங்கிப் படிப்படியாகக் கடினமானவைகளை அடைதல்.

---

* Descartes : *Discourse on Method.*

† F. Thilly : *A History of Philosophy.* p. 272.

(4) ஒவ்வொரு முயற்சியிலும், எதையும் தவிர்க்கவில்லை என உறுதி கொள்ளல்.

தத்துவ சாத்திரம் சென்று கொண்டிருக்கும் தவருன திசையிலிருந்து அதைத் திருப்பக் கணித முறையினுல்தான் இயலும். மேலும் கணிதமுறை, எளிய தன்மையையும் தெளிவையும் (clearness), தனிப்பட்ட தன்மையையும் (distinctness) பண்புகளாகப் பெற்றிருக்கின்றது. கணிதமுறையின் உறுதித்தன்மை உள்ளுணர்வினுல் (intuition) அறியப்படுவதாகும். டேக்கார்ட் தத்துவ சாத்திரத்தில் இந்த உள்ளுணர்வு முறையில் பெரிதும் நம்பிக்கை வைத்திருந்தார். ஆனுல் சில சமயங்களில் உள்ளுணர்வை விவேகம் அல்லது புரிந்து கொள்ளல் என்றும் கூறுகின்ருர். அவர் தம்முடைய முறையினுல் தவருன அனுமானம் அடையமுடியாது என "ரெகுலே"வில் ('Regulae') அறிவிக்கின்ருர். அவர்முறை பகுப்புத்தன்மை (deductive method) பெற்றிருப்பினும் அதனை முக்கூற்றுமுறை (syllogistic method) எனக் கொள்ளலாகாது. நம் அறிவு உள்ளுணர்விலைன்றி முக்கூற்று முறையினுல் வளர்வதன்று என எண்ணுகின்ருர். எனவே அவருடைய கருத்து முக்கூற்று முறையின்றிப் பிறிதொரு முறையிலும் நம் அறிவு வளர்வதில்லை எனக் கருதிய ஸ்கொலாஸ்டிக் கொள்கையின் அடிப்படைக் கருத்தைத் தீவிரமாக எதிர்த்திருக்கின்றது: ஆகவே "பகுப்பு முறை ஒருவகையான சிறப்பு அறிவின் பிறப்பிடம் அன்று. ஆனுல் அது உள்ளுணர்வு தன் எல்லைக்குப் புறத்தே உள்ளவைகளை தன்னுள் ஈர்க்கத் தன்னையே விரிவடையச் செய்யும் வழி."* உள்ளுணர்வு உண்மையை அடையும் பொருட்டு உள்ளத்தினின்றெழும் ஆற்றல். அது ஒழுக்க விதிகள் கருதுகின்ற உள்ளுணர்வின் ஒரு சிறப்புப் பண்பன்று. உள்ளுணர்வு ஒரு இயற்கையான வழியாக (process) இருப்பதால், ஒருபொழுதும் தவருனஅனுமானத்தை அடையாது என்பதே அவருடைய துணிவு. ஆனுல் நம் கவனத்தை உறுதித் தன்மை பெற்ற, உண்மையான அறிவைக்கொடுக்கக்கூடிய பொருள்களைப் பற்றியே செலுத்த வேண்டும்.

---

*N. K. Smith : *Studies in Cartesian Philosophy*, p. 33.

## "உள்ளுகின்றேன் ஆகையால் உள்ளேன்"
## (COGITO ERGO SUM)

இக்கால தத்துவத்தில் டேக்கார்ட் ஒரு சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். தத்துவ சாத்திரம் தொகுத்து அறிவதைவிடப் பகுத்து அறிவதையே முதற்பணியாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே தத்துவத்திற்குத் தொடக்கத்தைத் தருவதோடு தானகவே விளங்கும் ஓர் அடிப்படையை (principle) கண்டுபிடிக்க முற்பட்டார். கணித முறையினுல் தத்துவ சாத்திரம் பயனுள்ளதாக முடியும். அதற்குத் தானகவே விளங்கும் (self-evident) ஓர் அடிப்படையிலிருந்து தொடங்க வேண்டும். அது (1) ஐயுற முடியாத உண்மையாகவும், (2) உள்ளுணர்வால் அறியப்படுவதாகவும் (3) நடைமுறையில் இருக்கின்ற ஒன்றைக் குறிப்பதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய உண்மையை அடைய ஒவ்வொன்றையும் முறையாக ஐயமிடுவதிலிருந்து தொடங்குகிருர். தானகவே விளங்கும் எதுவும் ஐயத்திற்கு அப்பாற்பட்டதே. ஆகவே டேக்கார்ட், ஐயத்திற்குள்ளாகாத உண்மையைக் கணடுபிடிக்க முயன்ருர். தாம் அறிந்துள்ள கருத்துக்களில் பல, எண்ணிப்பார்க்கின், மரபின் வழியாகக் கிடைக்கப் பெற்றவையே. அவை பெரும்பாலும் ஏமாற்றத்தை விளைவிக்கின்றன. மேலும் நம் புலன்களையும், உடலையும், அதன் செயல்களையும் நம்புவதற்கில்லை. டேக்கார்ட் எவற்றையும் ஐயத்திற்குட்படுத்துத் தீர்மானித்தார். ஆகையால், ஐயமே யாவற்றிற்கும் தொடக்க நிலை. ஒவ்வொரு நம்பிக்கையையும் எண்ணிப்பார்க்கின் ஐயுற இயலாதது ஒன்றும் இல்லை. ஆனல் முடிவில் அவர் ஒரு நிலையைக் காண்கின்ருர். அதை அவரால் ஐயுற முடியவில்லை. தான் ஐயுறுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகிறது. அதாவது ஐயமிடுபவர் தாம் ஐயுறுகின்ற நிலையில் இருக்கின்ருர் என்பது ஐயுறமுடியாத உண்மையாகிறது. கனவிற்கும், ஏமாற்றமுறுவதற்கும் அறிவுடைப் பொருள் ஒன்று இருந்தே தீரவேண்டும். நனவு நிலையில் உள்ள ஐயமே சிந்திக்கின்ற ஒன்று இருப்பதை மெய்ப்பிக்கின்றது. ஐயமுறும் வன்மையுள்ள, அதாவது சிந்தனைச் சக்தியுள்ள ஒரு பொருள் இருத்தல் வேண்டும். இது ஓர் அடிப்படையான,

உண்மை. இதைத்தான் உள்ளம் அல்லது ஆன்மாவென்று குறிப்பிடுகின்றோம். ஆன்மாவின் இருத்தல் தன்மையே எல்லா அனுபவத்திலும் உறுதியானது. ஏனெனில், இதுவே எல்லாவற்றிற்கும் அடிப்படையானதும், அறிவினால் அறியக்கூடியதுமான உண்மையாகிறது. இதனையே டேக்கார்ட், தம்முடைய முதல் தற்புல உண்மையாக (axiom) முறைப்படுத்தி யமைத்தார். இதுவே தத்துவ வரலாற்றில் மிகப் புகழடைந்த, "உள்ளுகிறேன் ஆகையால் உள்ளேன்" (நான் எண்ணுகிறேன், ஆகையால் எண்ணுகிற நான் இருக்கின்றேன்) என்னும் கருத்தாகும்.

மேற்கூறப்பட்டுள்ள கூற்றிலிருந்து "நான் ஏமாற்றப்படினும் நான் இருக்கின்றேன்" அல்லது "நான் உள்ளுகின்றேன், ஆகையால் உள்ளேன்" என்பதின் உறுதித்தன்மை, ஐயத்தின் உறுதித் தன்மையிலிருந்து அனுமானமாகக் கொள்ளப்பட்டது என்று முடிவு செய்யலாகாது. ஏனெனில் அது, சிந்திக்கின்ற எதுவும் இருக்கின்றது என்னும் தொடக்கக் கூற்றிலிருந்து (major premise) வந்ததன்று. ஆனால் அது தூய உள்ளுணர்வான உறுதித்தன்மை பெற்றது. உள்ளத்தின் இருத்தல் தன்மை (existence) யாவற்றினும் உறுதியானது, தெளிவானது. அது மற்றெல்லா சான்றுகளையும்விடச் சாலச் சிறந்தது. உள்ளம் அல்லது ஆன்மா இருத்தலின் உண்மை அடிப்படையாக, தானே விளங்கும் உண்மையாக, மிகத் தெளிவாகவும் தனிப்பட்ட முறையிலும் உணர்ந்தறியப்படுவதால் நாம் அதனை உண்மையாகக் கொள்ளவேண்டும். "நனவு நிலைக்குத் தெளிவாகவும் தனித்தன்மையுள்ளதாகவும் திகழும் ஒவ்வொன்றும் உண்மையே" என்னும் உறுதியை அவர் தம் தத்துவத்தில் பல்வேறு சிக்கல்களில் கையாண்டிருப்பதைக் காண்கின்றோம். உள்ளுணர்வின் மூலம் உறுதியானது "தெளிவு" உள்ளதென்றும், கருக்காகத் (precisely) தீர்மானிக்கப்பட்டது "தனித் தன்மை" பெற்றதாகவும் கருதுகின்றார். இவ்வகையில் நம் உள்ளத்தில் எழும் எண்ணங்கள் உடன்பிறந்தவை அல்லது இயல்பாய் அமைந்துள்ளவை (innate). இதனையே அறிவின் அளவுக் கருவியாக (criterion) டேக்கார்ட் கொள்கின்றார். அதாவது மறுக்கவும், எதிர்க்கவும் முடியாத தெளிவுடனும், தனித் தன்மையுடனும் நனவு நிலையில் எழும் எவையும் உண்மை. அவர் கருத்தின்படி அது ஒன்றே உண்மையான அறிவு,

உண்மையை வெளிப்படுத்துவதில் அறிவின் உள்ளார்ந்த இயல்பில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தார், அதனையே முடிவான தீர்ப் பாகவும் கருதுகின்றார். இம்மனப்பான்மையில், அவர் ஓர் அறிவு முதற்கொள்கையினராகின்றார்.

எல்லா வல்லமை பெற்றவனாலும் நான் இருத்தல் என்பதில் என்னை ஏமாற்ற முடியாது. நான் ஏமாற்றப்படுவதற்கும் ஏமாற்ற முறும் "நான்" இருந்தாக வேண்டும். நான் ஐயமுறும் அல்லது ஏமாற்றமுறும் சமயத்தில் இல்லாமல் இருப்பது நிகழ்வதன்று. இக் கருத்தை டேக்கார்ட் "முறையான ஐயத்தின்" (methodical doubt) வழித் தொடங்கி "ஐயமிடும் நான் இருக்கின்றேன்" என்னும் உறு தியான ஓர் உண்மையாக நிலைநாட்டினார். ஐயமுறும் பொருட்டே ஐயுறல் வேண்டும் என்ற வகையில் அவர் ஐயுறவில்லை. "அவரு டைய ஐயக் கொள்கை, தீவிரமாயிருப்பினும், தற்காலிகமானது; (provisional); உறுதியானதும் தானே பெறக்கூடியதுமான அறிவை உண்டாக்குவதை நோக்கமாக உடையது."* இவ்வகையில் அவர் கிறித்தவச் சபையைச் (Church) சார்ந்த தத்துவ அறிஞர்களுடனும், ஐயக்கொள்கையினரெனக் கருதப்படுவோருடனும் வேறுபடுகின் றார். டேக்கார்டிற்கு முன்னர் 'ஐயுறும் முறை'யைக் கையாண்டனர் சிலர். ஆனால் அவர்கள் ஐயத்தினின்று வெளியேறுவதில் வெற்றி பெறவில்லை. உண்மையைத் தேடுவதில் சோர்வுற்றனர். ஆகவே ஐயத் தையே முடிவாகக் கொண்டனர். "டேக்கார்ட் மேற்கொண்ட ஐயம் அடையமுடியாததைத் துறந்த உள்ள நிலையில் எழுந்ததன்று; அது ஒரு காட்சிப் பொருள் (percept) கொள்கை (doctrine) அன்று; தத் துவத்தின் தொடக்க நிலை; அதன் முடிவன்று; உண்மையை அறிய விரும்புவோரின் முறையான கருவி."† இது பேக்கனின் ஐயத்தை விட விரிவாகவும், முழு நிறைவானதாயும் (thorough) உள்ளது. டேக்கார்ட் முன்பாகவே எய்தப்பெற்ற அறிவின் உறுதித் தன் மையைப் (certitude) பற்றியே வாதமிட்டாரேயன்றி அறிவை அடையமுடியுமா என்பதைப்பற்றி அன்று. அறிவை அடைய முடி யும் என்பதைப்பற்றி அவரைவிட அழுத்தமாகத் திருப்தியடைந்த

---

*Weber and Perry: *History of Philosophy*, p. 245.

†Falkenberg: *History of Philosophy*, p. 91.

வர் வேறொருவருமிலர். அவர் ஒரு அறிவு முதற்கொள்கையினர், ஐயக் கொள்கையினரல்லர்.

டேக்கார்ட்டிற்கு ஐயம் ஒரு நெறிமுறையாக உளது. குறிப்பிட்ட உண்மையைக் கண்டறிந்த உடனே இம்முறையைக் கைவிட விழைகின்றார். ஐயத்தில் தொடங்கினாலும் இறுதியில் ஒரு மேன்மை பொருந்திய, பயனுள்ள நேர்நிலையான (positive) கோட்பாட்டை அளிப்பதால், அவர் இக்கால அறிவுக் கொள்கையின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.

"நான் எண்ணுகின்றேன்" (*cogito*) என்பது டேக்கார்ட்டின் அடிப்படைத் தத்துவத்தின் (metaphysics) ஆதாரமாக இருப்பதால் முதன்மை பெற்றதாய்த் திகழ்கின்றது. "யூக்கிளிட், வடிவக் கணிதத்தின் எளிய பண்புகளை உள்ளுணர்வாய் அறிய ஒரு வழியை வகுத்தார். ஆனால் தத்துவம் இப்பொழுதுதான் அதனுடைய யூக்கிளிடை டேக்கார்ட்டில் கண்டது" என கீலிங் (Keeling) எழுதுகின்றார்.*

டேக்கார்ட் தம்முடைய தருக்க முறையை ஸெயிண்ட் அகஸ்டின் வழியாகப் பெற்றாலும் அதனைப் பிறர் ஏற்றுக்கொள்ளக்கூடிய கவர்ச்சிகரமான, நுட்பமான முறையில் உருவாக்கினார். டேக்கார்ட்டின் தத்துவத்தின் வெற்றி, பெரிதும் இத்தகைய உயர்தர விதியினால் ஏற்பட்டதாகும். எனினும் டேக்கார்ட்டின் மேற்கோள் வாசகம் (motto) ஒரு அனுமானமன்று; அவ்விதம் கருதவும் அவர் விரும்பவில்லை. அதனை அனுமானமாகக் கொண்டால் அது ஒன்றினை யொன்று பற்றல் (*Petitio prinipii*) என்னும் போலியாக முடியும். ஏனெனில் அதனுடைய முடிவும் (Conclusion) தொடக்கக் கூற்றும் ஒரே தன்மையடைகின்றன. ஆனால், அது ஓர் எளிய பகுப்பு வழித் தீர்மானம் (analytical judgment), தானே விளங்கும் சொற்றொடர்.

"நான் எண்ணுகின்றேன்" என்னும் நம்பிக்கை அனுமானத்தினால் அடையப்பெற்ற விளைவன்று. "ஆகையால்" (*ergo*) என்னும் சொல் தவறான கருத்திற்கு ஏதுவாய் நிற்கின்றது. டேக்கார்ட் "நான் எண்ணுகிறேன், ஆகையால் நான் இருக்கின்றேன்" என

---

*Keeling: *Descartes*, p. 91.

உறுதியாகக் கூறும்பொழுது அவர் விவாதிக்கவில்லை. உள்ள நிகழ்ச்சியால்: நேராகப் (direct) புரிந்து கொண்ட உண்மையை உரைக்கின்றார். "ஆகையால்" என்னும் சொல் நனவு நிலைக்கும், இருத்தலுக்கும் உள்ள இன்றியமையாத உறவைக் குறிப்பிடுகின்றது; எந்தவிதப் பகுப்பு முறையையும் குறிப்பிடவில்லை. உள்ளுணர்வு சிந்திக்கின்ற பொருளின் தீர்மானமான பண்புகளைத் தெரியப்படுத்தாவிடினும், அப்பொருள் இருத்தலின் உண்மையைப் பற்றி உறுதிப்படுத்த முடியும்.

## கடவுள் உண்மைக்குக் கூறப்படும் காரணங்கள்

### (PROOFS FOR THE EXISTENCE OF GOD)

டேக்கார்ட், ஆன்மா அல்லது உள்ளம் என்னும் பொருள் இருக்கின்றது என்று தீர்மானித்த பிறகு புறப்பொருள்களின் உண்மையைப்பற்றி சிந்திக்க முற்படுகின்றார். நாம் நம்முடைய எண்ணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சில எண்ணங்கள் அனுபவத்தில் அறியப்படுவையாகவும் (acquired ideas) சில உடன் பிறந்தவையாகவும் (innate), மேலும் சில நம்மால்புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டவையாயும் இருப்பதைக் காண்கிறோம். உடன் பிறந்த எண்ணங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தனவாகவே டேக்கார்ட் கருதுகின்றார். கடவுளைப்பற்றிய எண்ணம் (idea of God) உடன் பிறந்தது, தெளிவானது. ஆனால் கடவுளைப்பற்றிய **எண்ணம்** பெற்றிருப்பது ஒன்று, கடவுள் **இருக்கின்றார்,** என உரைப்பது வேறு. ஆகவே டேக்கார்ட் கடவுளைப் பற்றிய எண்ணம் உண்மையிலேயே இருக்கின்ற ஒன்றைப்பற்றியதா என கண்டுபிடிக்க முயலுகின்றார். 'கடவுள் இருக்கின்றார்' என்னும் எண்ணம் உண்மைப் பொருளைக் குறிக்கின்றது என்பதை மெய்ப்பிக்க மூன்று காரணங்கள் தருகின்றார்.

1. முதல் காரணம் (proof), காரண - காரிய அடிப்படையை (principle of causality) ஆதாரமாகக் கொண்டது. இவ்வுலகில் நிகழும் எல்லாக்காரியங்களுக்கும் காரணம் இருந்தே தீரவேண்டும்.

காரணமின்றிக் காரியமில்லை. இஃது உள்ளுணர்வினால் அறியப்படும் ஒரு தற்புல உண்மை. நான் கடவுளைப்பற்றித் தெளிவான (clear), தனித்தன்மை (distinct) யுள்ள எண்ணத்தை பெற்றிருக்கின்றேன். அதாவது, "அவர் இருக்கின்ற ஒரு பொருள்; எல்லா குணங்களையும் உயர்ந்த அளவிலும் குறைவின்றியும் பெற்றிருக்கின்றார் என்பதாம்." என்னுள் இவ்வெண்ணம் இருப்பதற்கு ஒரு காரணம் இருந்தே தீரவேண்டும். ஏனெனில் இல்பொருளிலிருந்து தோன்றக்கூடியது ஒன்றுமில்லை (Nothing can come out of nothing). அக்காரணம் வினைவின் அளவிற்குக் குறையாத அளவில் உண்மை பெற்றிருக்கவேண்டும். மிகுந்த அளவில் நிறைவைக் கொண்டது தன்னைவிட குறைந்த அளவில் நிறைவைக்கொண்டதின் வினைவாகவோ, அதனைச்சார்ந்தோ இருக்கமுடியாது. எனவே, கடவுளைப்பற்றிய எண்ணம் என்னுள் எழுவதற்கு நானே காரணமாக இருக்க முடியாது. ஏனெனில் நான் எல்லையுள்ள (finite) நிறைவில்லாத (imperfect) தன்மை பெற்றிருக்கின்றேன். ஆனால் கடவுளைப் பற்றிய அவ்வெண்ணம், நிறைவான (perfect), எல்லையற்ற (infinite) பொருளைப்பற்றியது. ஆகவே அவ்வெண்ணம் நிறைவுள்ளதான அல்லது பூரணமான ஒன்றால் உண்டாக்கப்பட்டதே.

நான் என்னை எவ்வளவு தெளிவுடன் உணர்கின்றேனோ அவ்விதமே கடவுளை அறிகின்றேன். கடவுளைப்பற்றிய எண்ணம் என்னுள் இருப்பதற்கு நிறைவையும், இருத்தல் தன்மையும் கொண்ட கடவுளே (Being, God) காரணம். மேலும் அவ்வெண்ணம் உடன் பிறந்ததாக இருத்தலால் சர்வ வல்லமையுமுள்ள அவரால்தான் ஏற்படுத்தி இருக்கமுடியும். ஆகவே கடவுள் இல்லையானால், அவரைப் பற்றிய எண்ணம் நான் பெற்றிருக்கவே முடியாது.

இக் காரணத்தைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். நிறைவுள்ள ஒன்றைப்பற்றிய எண்ணத்திற்குச் சரியாக உண்மையாகவே கடவுள் இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எவ்வாறெனின் சிறிதளவு வெண்மை நிறத்திலிருந்து முழுவெண்மை நிறத்தை ஊகிப்பதுபோல், நிறைவில்லாத பொருள்களிலிருந்து நிறைவுள்ள பொருளின் எண்ணத்தை அடையலாம் என்று இவர்கள் கருதுகின்றனர் ஆனால் டேக்கார்ட் இக் கருத்தினை ஆதரிக்கவில்லை. ஏனெனில் நாம் நிறைவில்லாதவர்கள் என அறிவதற்கு, நிறைவுள்ளதோடு

ஒப்பிட்டுப் பார்த்தால்தான் முடியும். ஆகவே இது நிறைவுள்ள ஒன்றின் இன்றியமையாமையைக் குறிப்பிடுகின்றது. "ஐயத்தினின்றும் உண்மையையும் குறைவினின்றும் நிறைவையும் உய்த்துணர வேண்டியதாகின்றது." (Doubt implies a standard of truth, imperfection a standard of perfection).*

2. இரண்டாவது காரணம், "நான் இருக்கின்றேன்" என்னும் உண்மையிலிருந்து (அதாவது, தன் இருப்பிலிருந்து) கடவுள் இருப்பதை உணர்த்துகின்றது. நான் இருப்பதற்கு நானே காரணமாக இருக்கமுடியாது. அவ்விதமிருப்பின், நான் என்னை எல்லாவகையிலும் நிறைவுள்ளவனாகவும் அழிவில்லாதவனாகவும் செய்துகொண்டிருப்பேன். அது நிகழக்கூடியதன்று. என்னுடைய பெற்றோர்களையும் நான் இருப்பதற்கு முழுக்காரணமாகக்கருதமுடியவில்லை. ஏனெனில் அவர்களாலும் என்னை நிறைவும் அழிவின்மையும் கொண்ட ஒருவனைப் படைக்க முடியவில்லை. மேலும் என் பெற்றோர்களையே முழுக் காரணமாகக் கொண்டால், அவர்களுக்குக் காரணம் அவர்களுடைய பெற்றோர், இவ்வாறு தொடர்ந்து சென்று முடிவில் யாவருக்கும் ஒரு முதற்காரணம் இருக்கவேண்டும் என்னும் முடிவே ஏற்படும். அக்காரணம் கடவுளே. ஆகவே கடவுள் இருந்தே தீர வேண்டும். கடவுளைப்பற்றி என்னுள் உறைகின்ற எண்ணத்திற்கு மட்டுமன்றி நான் இருப்பதற்கும் அவரே காரணம். இதுவே டேக்கார்ட்டின் பிரபஞ்சயியல்பான காரணம் (cosmological proof) என வழங்கப்படுகிறது.

3. மூன்றாவதாக டேக்கார்ட் அளிக்கும் காரணம், மிக முக்கியமாகக் கருதப்படும் உண்மையியல் காரணம் (ontological proof). இதனால் டேக்கார்ட் சிலரால் புகழப்பட்டார், சிலரால் குறைகூறப்பட்டார். இது கடவுள் எண்ணத்திலிருந்துதான் தொடங்குகின்றது. மற்றெல்லா காரணங்களையும் விட தலையாயது. எடுத்துக் காட்டாக நாம் ஒரு முக்கோணத்தைச் சிந்திப்போமானால், அதனுடைய இயல்பை உற்றுநோக்குமிடத்து, அதனுடைய தன்மைகளையெல்லாம் உய்த்துணர்கின்றோம். அவைகளில் ஒன்று, மூன்று கோணங்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு நேர்கோணங்களுக்குச் சமமானது என்பதாகும். அவ்விதமே, கடவுளைப்பற்றிய எண்ணத்தி

* F. Thilly : *A History of Philosophy*, p. 277.

லிருந்தே அவருடைய இருத்தல் பண்பை உய்த்துணர்கின்றோம் நாம் கடவுளை நிறைவுடைய ஒன்றாகக் கருதுகின்றோம். நிறைவுடைமை இருத்தலைத் தன்னுள் அடக்கியதே. அவ்விதம் நிறைவுடைய ஒன்றாகக் கருதுங்கால் அவருடைய இருத்தலைப்பற்றி எண்ணாமல் அதே நேரத்தில் நிறைவுள்ள ஒன்றாக அவரைக் கருதுவது, மேற் குறிப்பிட்டுள்ள தன்மையின்றி மற்றவைகளைப் பெற்றுள்ள ஒரு முக் கோணத்தைக் கருதுவதைப்போன்றது. கடவுள் நிறைவானவர் என நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆகவே வல்லமை, நன்மை, அறிவு, இருத்தல் உட்பட எல்லாக் குணங்களும் நிறைவுடைமைக்கு உரியனவே. இருத்தல் தன்மையின்றேல் அவர் பூரணமானவ ராகார். ஆகவே கடவுளின் இருத்தல் தன்மை நிச்சயமானது. இதுவே டேக்கார்ட்டின் புகழ்பெற்ற உண்மையியல் காரணம்.

இந்தக் காரணம் முன் கூறப்பட்டவைகளைச் சார்ந்தே இருக் கின்றது. இதுவும் மற்றவைகளைபபோலவே, கடவுள் எண்ணம் மனித உள்ளத்தின் வெறும் கற்பனை அன்று; ஆனால் தவிர்க்க முடி யாமல் கட்டாயமாக ஏற்கவேண்டிய ஒன்றாகிறது என்பதை வற் புறுத்துகின்றது.

டேக்கார்ட்டின் இக்காரணம் ஆன்ஸெல்மின் உண்மையியல் காரணத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் டேக்கார்ட், ஆன்ஸெல்மின் (Anselm) கருத்தை மாற்றியமைத்து அதன் குறையை நீக்கினார். ஆன்ஸெல்ம் உள்ளம் தன்னுள் தோற்று விக்கும் தற்போக்கான (arbitrary) எண்ணம் அதனுடன் இருத்தலை யும் உடன் கொள்ளுகிறது எனக்கருதினார். இது உண்மையெனில், ஆன்ஸெல்ம் கருத்துப்படி, ஒரு கற்பனை உலகை, அல்லது நிறை வுள்ள தீவை (Utopia, imaginary island) ப்பற்றிய எண்ணம் மனதில் எழின், அவ்வெண்ணம் ஏற்பட்டதாலேயே அத்தீவு இருந்தே தீரவேண்டும். ஆனால் இம்முடிவு அறிவுக்கு ஏற்புடைத்தன்று. ஏனெனில் அவ்வெண்ணம் நம்மனத்தில் தோன்றியதனாலேயே, அதற்குச் சரியாக புறஉலகில் அது சுட்டுகிற பொருள் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளமுடியாது.

எனவே டேக்கார்ட் மனத்தில் எழும் எல்லாவித எண்ணங் களுக்கும் புறஉலகில் இருத்தல் தன்மை இருக்கத் தேவையில்லை என்கிறார். ஆனால் அளவை இயல் முறைப்படி, கட்டாயமாக எழும்

எண்ணங்களுக்கு (logical and necessary ideas) மட்டுமே, இருத்தல் தன்மை இன்றியமையாததாகத் துணியப் படுகின்றது என்று முடிவு செய்தார். கடவுளைப்பற்றிய எண்ணம் அத்தகைய மேலான ஒரு எண்ணம். ஆகவே கடவுளின் இருத்தல், கடவுள் எண்ணத்தோடு தொடர்புற்றது. டேக்கார்ட் தம்முடைய கருத்தைத் தெளிவாக விளக்குவதன்மூலம் ஆன்செல்முக்கு எதிராக எழுந்த பல குற்றச் சாட்டுகளிலிருந்து தப்பினர். ஆன்செல்ம் உள்ளத்தில் உறையும் ஒவ்வொரு எண்ணத்திற்கும் இருத்தல் தன்மை இயற்கையான தவிர்க்க முடியாத பண்பு எனக்கருதியதனல் பல குற்றச் சாட்டுகளுக்குள்ளானர். டேக்கார்டின் கடவுள் எண்ணம் ஒரு நிறைவுள்ள தீவு, கற்பனை உலகு போன்ற, தற்போக்கான (arbitrary) எண்ணம் அன்று. நாம் குறைவுள்ளவர்கள் என்னும் எண்ணத்திலிருந்தே குறைவிலா நிறைவாகிய கடவுளைப் பற்றிய எண்ணம் கட்டாயமாகப் பெறப்படும். நம்முடைய இருத்தலைப் பற்றிய எண்ணம் கட்டாயமாகப் பெறப்படும். நம்முடைய இருத்தலின் உண்மையிலேயே கடவுள் எண்ணம் தானகவே புலப்படுகின்றது. இவ்வாறு விளக்கிச் செல்வதால் டேக்கார்ட் முற்கூறிய இருகாரணங்களிலுள்ள குற்றம் குறைகளை தீர்த்ததோடு ஆன்செல்மின் கூற்றையும் திருத்தி யமைத்தார்.

ஆனல் கடவுளின் இருத்தல் தன்மையை மெய்ப்பித்தலில், உண்மையியல் வாதமும் (ontological argument) குறைபாடுடையதாகவே கருதப்படுகின்றது. யாவற்றினும் நிறைவுள்ள ஒன்றினைப் பற்றிய எண்ணம் எப்படி உள்ளத்தில் எழுகிறது என்பது ஒன்று. ஆனல் அத்தகைய ஒன்றை இருப்பதாக உறுதிசெய்வது அதனினும் வேறு. உண்மையியல் காரணத்தில் நாம் எண்ணத்திலிருந்து இருத்தலைப் பெறுகிறோம். பிற்காலத்தில் இமான்னுவல் காண்ட் உண்மையியல் காரணமும் ஒரு எண்ணத்தினின்று மற்றொரு எண்ணத்தையே தருவதன்றி எண்ணத்திலிருந்து இருத்தலைப்பயவாது என்ற முடிவுக்கு வருகிறார்.

டேக்கார்ட், கடவுளின் இருத்தலை மெய்ப்பிக்கும் முயற்சியில் கடவுளுடைய பண்புகளைப் பற்றிய தம் கருத்துக்களையும் அறிவிக்கின்றார். கடவுளைப் பற்றிய எண்ணம் ஒரு உடன் பிறந்த எண்ணம்; அதற்குக் காரணமும் அவரேயாவர். நம் இருத்தலுக்

கும் அவரே காரணமாகவும், மூலமாதிரியாகவுமுளர். கடவுள் தம் உருவில் அல்லது சாயலில் மனிதனைப் படைத்தார். தொழிலாளி தன் அறிகுறியைத் தான் செய்த பொருளில் பொறிப்பது போல கடவுளும் தம்மைப்பற்றிய எண்ணத்தை மனித உள்ளத்தில் வைத்தார். கடவுள் இல்லையானால் நாம் இந்நிலையையோ அவரைப்பற்றிய எண்ணத்தையோ பெற்றிருக்கமுடியாது.

கடவுள் எல்லாம் அறிந்தவர், எல்லா வல்லமையும் பெற்றவர், முழுநிறைவானவர் (absolutely perfect). அவருடைய பிறிதின் சார்பற்ற நிலையிலிருந்து (absoluteness) அவர் தற்சார்புடையவர் என்பதையும் தம் இருத்தலுக்கு வேறெந்தப் பொருளும் தேவையில்லாத முழுமுதல் என்பதையும் உணருகின்றோம். அவருடைய நிறைவுடைமை (perfection) யிலிருந்து அவருடைய முழு அறியும் தன்மையும் எல்லா வல்லமையும் எல்லா நன்மைகளுமாகிய பண்புகளையும் பெற்றவர் என்பதை உடன்பாட்டு முறையில் அறிகின்றோம். மேலும் சில எதிர்மறையான பண்புகளையும் உணருகிறோம். கடவுள் உடல்சார்ந்த பொருளல்லர். அவர் நம்மைப்போன்று புலன்களால் அறிபவர் அல்லர். அவர் அறிவையும் (intellect) இயற்றி நிலையையும் (will) பெற்றுள்ளார் எனினும் அவை நம்மிடம் இருப்பவை போன்றவை அல்ல. அவர் பாவமாகிய தீமையை இயற்றுபவரல்லர். ஏனெனில் பாவம் அவருடைய இருத்தலுக்கு எதிர் மறையானது. உயர்வற உயர் நலமுடையவர் அவர் என்பதிலிருந்து (Perfect Goodness) அவர் ஏமாற்றுபவர் அல்லர் என்பதையும் உணருகின்றோம். கடவுளால் ஒரு பொருள் இவ்வகையில் படைக்கப்பட்டது, ஆகவே அது நல்லது என்று ஏற்றுக்கொள்வது முறையானது. ஆனால் அப்பொருள் நல்லது ஆகையால் கடவுள் அமைத்தார் என்பது ஏற்புடைத்தன்று. மேலும் டேக்கார்ட், இறைவழி வெளிப்பாட்டுடன் (Divine Revelation) முரண்பாடு கொள்ளாத அளவுக்கு அறிவை ஏற்றுக்கொள்ளலாம் எனக் கருதினர்.

கடவுள் இவ்வுலகுக்கு அப்பாற்பட்டிருக்கின்றார்; ஆயினும் இவ்வுலகை அதற்குப் புறம்பாக இருந்தே செயல் படுத்துகிறார். கடவுளைப்பற்றி டேக்கார்ட் கொண்ட கருத்திற்கும் சமயப்பற்றுள்

ளவர்கள் தெய்வத்தைப்பற்றி கொண்டுள்ள கருத்திற்கும் வேறு பாடுள்ளது. பெரும்பாலும் அவர்கள், கடவுளை வழிபாட்டுக்குரிய ஒரு வரம்புள்ள பொருளாக (finite being) எண்ணுகின்றனர். ஆனல் டேக்கார்ட், கடவுளைத் தொடர்புடைய (continuous), யாவற்றையும் தன்னுள் அடக்கி (all-embracing) இருக்கின்ற சேர்க்கை (unity of existence) யாகக் கருதுகிருர். உண்மையான பொருள் ஒவ்வொன்றும் அதனுள் இருக்கவேண்டியதே. டேக்கார்ட் இக் கருத்தினின்று மேலும் தெளிவான எண்ணத்தை வெளியிடுகின்ருர். அதாவது கடவுள் பிறிதின் சார்பற்ற பொருள் எனக் கூறுகின்ருர். கடவுள் தம்மிருத்தலுக்குத் தாமே காரணமாவர் (self-caused); எல்லாக் கருத்துக்களின் உண்மையும் கடவுளின் இருத்தலிலும், இயல்பிலும் இருந்து கிடைக்கப்பெற வேண்டியதே. நம் உள்ளம் தொடர்புள்ளது, ஓரே தன்மையுள்ளது என்பதைக் கடவுளின் மெய்ம்மையே நிர்ணயிக்கின்றது. கடவுளே விஞ்ஞான தத்துவ அறிவை அளிப்பவராவர்.

## திறனுய்வு
## (CRITICISM)

1. கடவுளைப்பற்றிய எண்ணத்தை மெய்ப்பிக்க டேக்கார்ட் கையாளும் முறை சிலரால் போற்றப்படவில்லை. கடவுள் பற்றிய எண்ணம் தெளிவாகவும், தனித் தன்மையுடன் விளங்குவதால் உண்மை என ஒப்புக்கொள்கிருேம். ஆனல் கடவுள் மெய்யுடையவர் என்பதிலிருந்துதான், அப்பண்புகள் அவர் இருத்தலை அறிவிக்கின்றன என முடிவுசெய்கிருேம். இது ஒன்றினை ஒன்று பற்றல் (petitio principii) என்னும் அளவையியல் குற்றத்தின்பாற் படும்.

2. கடவுள் எண்ணம் உடன்பிறந்த ஒன்று (innate idea) என்பது இக்காலத்து உளவியலறிஞர்களுக்கு உடன்பாடன்று. அனுபவ வழிக்கொள்கையினரான (empiricism) லாக் கடவுளைப்பற்றிய எண்ணம் உடன்பிறந்த எண்ணமாக இருக்கமுடியா தெனக் கூறு

கின்றார். மனித இனத்தைச் சேர்ந்த அனைவரிடத்திலுமே கடவுளைப் பற்றிய எண்ணம் இருப்பதாகக் கொண்டாலும் அவ்வெண்ணம் உடன் பிறந்த ஒன்றாகக் கொள்ளமுடியாது. ஏனெனில் நெருப்பு, சூரியன், வெப்பம், முதலியவைகளைப் பற்றிய எண்ணங்கள் இவ் வையம் முழுவதும் அறியப் பெற்றிருப்பினும் அவை உடன் பிறந்த எண்ணமாகா.

3. கடவுள் நிறைவுள்ளவர் என்பதையும் இக்கால உளவியல் அறிஞர்கள் சிலர் ஏற்க மறுக்கின்றனர். கடவுளைப்பற்றிய எண்ணம் அச்சத்தினால் எழுவது. கடவுள் நிறைவுள்ளவர் என்ற எண்ணம் உயர்ந்து செல்லும் நாகரிகத்தின் விளைவாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

## புற உலகம்

## (THE EXTERNAL WORLD)

புற உலகத்தின் இயல்பைப்பற்றி விளக்க டேக்கார்ட் முதலில் அதன் உண்மையிலிருந்து தொடங்குகின்றார். நாம் பல உணர்ச்சிகள் நம்முள் எழுவதை அறிகின்றோம். அவைகளை உடலுள் எழும் பல இயற்கையான நிகழ்ச்சிகளாகவே கருதுகின்றோம். ஆனால் அவை பெரும்பாலும் நம்மை ஏமாற்றுவதால், அவைகளுக்கு நம் உடலே காரணமாகக் கருதமுடியவில்லை. அவைகளுக்கு கடவுளே காரணம் எனத்துணியவும் முடியாது. அவ்வாறு அவைகளுக்குக் கடவுள் காரணமாயிருப்பின், நாம் அவ்வுண்மையினை அறியாமல் இருப்பதனால் கடவுளால் ஏமாற்றப்படுகின்றவர்களாவோம். ஆனால் கடவுள் அத்தகையவரல்லர். ஆகவே வேறு காரணம் உள்ளதா என்று எண்ணிப் பார்க்குமிடத்து, பொருள்கள் அல்லது புற உலகமே நம் உணர்சிகளுக்குக் காரணம் என்னும் உண்மை புலப்படுகின்றது.

புற உலகத்தைப்பற்றிய நம் அறிவு பல எண்ணங்களால் ஆக்கப்பெற்றது. அவற்றுள் சில தெளிவுள்ளனவாயும் சில தெளி

வற்றனவாயும் உள. பொதுவாக நாம் பொருள்களுக்குச் சாட்டும் பண்புகள் நம்முடைய நனவு நிலையைச் சார்ந்தவையே. சடப் பொருளின் சடத்தன்மை, அதன் நிலையில் பல மாறுபாடுகள் நிகழ்ந்தும் அதே பொருளாக இருப்பதைக் குறிக்கின்றது. டேக்கார்ட் இந்த அடிப்படையைக்கொண்டு, பொருளின் பல மாறுபாடுகளிலும் அதனைச் சார்ந்துள்ள ஒரே இயல்பு இடத்திற்குரிய பரப்புடைமைதான் என்று எண்ணுகின்றார். மேலும் சடத்தின் பரப்புடைமையைப் பற்றியும் இயக்கத்தைப் பற்றியுமே (extension & motion) தெளிவும் தனித்தன்மையும் உள்ள எண்ணங்களைக் காண்கின்றார்.

புற உலகத்தின் தன்மையைத் திர்மானிப்பதில், டேக்கார்ட், அக்காலத்தில்அதனைப்பற்றி விஞ்ஞானிகள் கூறிவந்தகருத்தினையே ஒப்புக்கொண்டார். அதன்படி சடமானது நிறம், ஒலி, சுவை முதலிய வழிநிலைப் பண்புகள் (secondary qualities) இல்லாத வெற்று நிலைப் பொருளே (stuff).

ஆகவே டேக்கார்ட் சடத்தின் இன்றியமையாத இயல்பு பரப்புடைமை அல்லது இடத்தை நிரப்பும் பண்பு என முடிவு செய்கின்றார். சடம் இருப்பதற்கு உருவமும் (figure), இயக்கமும் (motion) அவசியமாகா. ஆனால் பரப்புடைமையின்றி சடம் இருப்பதாக எண்ண முடியாததனால், பரப்புடைமையே சடத்திற்கு இன்றியமையாத இயல்பாக வரையறை செய்கிறார். "மூன்று அளவில் அதாவது அகல நீள உயரங்களில் அடங்கிய பரப்புடைமையே (extension in three dimensions) சடத்தின் தனிப்பட்ட இயல்பாகும்.—மற்றவையனைத்தும் உண்மையில்லாதனவும் தோற்றநிலை அல்லது போலி எனவும் கூறத்தக்கவை. மேலும் வழிநிலைப்பண்புகள் (secondary qualities)* பொருள்களின் உண்மையான பண்புகளை விளக்குவன அல்ல என்பதே அவர் கண்ட முடிவு.

"பொருள் (substance) சத்து (essence) கருத்துநிலை (conception) யாவும் ஒரே தன்மையுடையன." ஆகவே பொருளின்

---

*Keeling: *Descartes*, p. 131.

கருத்துநிலைக்கு (conception) முக்கியமில்லாதது அதன் இருத்தலுக்கும் முக்கியமன்று. அவர் சடம், இடத்திற்கு (space) சமமானது எனக் கூறவில்லை. ஆனால் பரப்புடைமை சடத்திற்கு இன்றியமையாதது" எனக்கருதுகின்றார். சடம் ஓரேதன்மையுடையது. ஏனெனில் அதனுள் உள்ளார்ந்த வரையறைவுகளோ (inner determination) அல்லது பண்பு வேறுபாடுகளோ இல்லை. பரப்புடைமையும் இடமும் முற்றொருமை வாய்ந்தன (identical). பரப்புடைமை, நீளம், அகலம், கனம் (பருமன்-thickness) இவைகளைக் குறிக்கின்றது. ஒவ்வொரு பொருளும் எல்லையுள்ள (வரம்புள்ள) இட அளவு (spatial magnitude) உடையது. ஆகவே வெற்றிடமே (vacuum) இல்லை. எங்கெங்கு இடம் உள்ளதோ அங்கு பொருளும் இருக்கின்றது. இடம் முடிவற்ற பகுப்புடையது (infinitely divisible). இடம் மேலும் பகுக்க முடியாத (முடிவான) பாகங்களால் ஆக்கப்பட்டதன்று. ஆகவே அணுக்களும் இல்லை. பொருளின் "மிகச்சிறியபாகமும் மேலும் பகுக்கக்கூடியதே. அவைகள் அணுக்கள் அல்ல." ஆனால் அவை இக்காலத்தில் நாம் கருதும் "கார்பஸில்ஸ்" அல்லது மூலக் கூறுகள் (molecules) எனலாம். பரப்புடைமையும் முடிவற்றது. சட உலகமும் வரம்பற்றது.".

இயற்கை வரம்பின்றியிருப்பின், சடப்பொருள்களைப்பற்றி எங்ஙனம் பன்மையில் கூறஇயலும்? நாம் உருவங்கள் அல்லது பொருள்களின் பன்மைக்கும் தனிநிலைக்கும் (plurality and individuality) ஆதாரங்காட்டுவதோடு, அவைகளின் இடமாற்றத்தையும் நிலைமாற்றத்தையும் விளக்கவேண்டும். டேக்கார்ட், அதனை விளக்கத்தக்க அடிப்படையை இயக்கத்தில் (motion) காண்கின்றார். பொருள்களின் பலவாந்தன்மைக்கும் (multiplicity), வேறுபாட்டிற்கும் (difference) இயக்கமே காரணம். பொருள்களின் அமைப்பிலுள்ள வேறுபாடுகளும் வெளியினின்று வந்து உட்புகுத்தப்பட்டனவே. இயக்கம் பரப்புடைமையினின்று உய்த்துணர இயலாதது. அவ்வாறெனின் இயக்கம் எதனின்று கிடைக்கப் பெறுகின்றது? "டேக்கார்ட் உள்ளத்தின் நனவு நிலையில் நிகழ்கின்ற செயலினின்று காலத்தைப் (time) பெறுவது போன்று

இயக்கத்தையும் பெற்றிருக்கலாம். ஆனல் அத்தகைய வழி அவர் மனத்தைக் கவரவில்லை.''

ஆகவே அதற்குக் கடவுளைத்தவிர வேறுகாரணம் இருக்க முடியாது என்கிறூர் டேக்கார்ட். இயக்கம் கடவுளின் இயல்பினின்று உய்த்துணரப்படுகின்றதேயாகும். இயற்கையில் இயங்கும் எல்லா இயக்கத்திற்கும் மூலாதாரம் (ultimate source) கடவுளே. அவர் முழுமையும் மாறுமையும் உள்ளவராதலின் இயற்கையில் உட்புகுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ள இயக்கத்தின் அளவு (quantity) நிலையாயுள்ளது (constant). இதில், நாம் ''ஆற்றலின் அழிவின்மைக் கொள்கை அல்லது நியதி (Law of conservation of energy) யின் கருவூலத்தைக் காண்கிறும். பொருள்கள் தாமாக இயக்கத்தை ஆக்கவோ அல்லது அழிக்கவோ (நிறுத்தவோ) முடியாது; எனவே அதனை மிகுதியாக்கவோ குறைக்கவோ முடியாது. ஆகவே இயக்கமும் இயக்கமின்மையும் (motion and rest) ஒரே அளவில் உள்ளன.

பௌதிக உலகம் (physical world) செயலற்ற, உயிரற்ற, இயக்கமில்லாத ஒரு மாபெரும் பொறி அல்லது இயந்திரம போன்றது. அது முற்றிலும் கணித அல்லது பொறித்துறை வாயிலாகவே விளக்கப்பட வேண்டும்.

சடம், பரப்புடையது என்னும் கருத்திலிருந்து தோன்றும் விளைவுகளில் நாம் முன்னமேயே அறிந்தவை :

1. சடம் பரப்புடைமை அல்லது இடம் ஆதலின் வெற்றிடம் எங்கும் இருக்க முடியாது.

2. பரப்புடைமை அல்லது இடம் முடிவில்லாத பகுப்பையும் பரப்புடைமையும் கொண்டது. ஆகையால் சடமும் முடிவற்ற பகுப்பையும் வரம்பின்மையையும் கொண்டுளது.

3. இடமும் முடிவற்ற பகுப்புடையதனல் அணுக்கள் இருக்க முடியாது. ஏனெனில் அவை சிறிதளவேனும் பரப்புடைமை பெற்றிருப்பதனல் இடத்தின் பரப்புடைமைக்கு ஒரு எல்லையை (limit) விளைவிக்கின்றன.

---

*Keeling *Descartes* p. 134

4. பரப்புடைமையில் பலவகை இல்லாதிருத்தலால் சடத்திலும் பலவகையில்லை. சடம் ஒரே தன்மை யுடையது.

5. சடத்தின் இயல்பு பரப்புடைமையே ஆதலின், சடம் செயலற்று இருக்கின்றது; இயக்கம், கடவுளால் அதனுள் உட்புகுத்தப்பட்டதே.

டேக்கார்ட்டின் கருத்துப்படி சட உலகம் இயற்கையில் இயக்கமில்லாதது. புறஉலகம் ஒரு இயந்திரத்தைப் (machine) போன்றது. அதனைப் பொறியியல் வாயிலாகவே முழுவதும் விளக்கிவிடலாம். "எனக்குச் சடத்தையும் (matter) இயக்கத்தையும் (motion) அளியுங்கள். நான் ஒரு பிரபஞ்சத்தை (universe) அமைக்கின்றேன்" எனக் கூறுகின்றார். "இயற்கையினின்று மனிதத்தன்மையும் நீக்கப்படுவதோடன்றி ஆன்மிகத் தன்மையும் நீக்கப்பட்டு, உள்ளத்திற்கு (mind) நேர் எதிராகவும் சடம் கருதப்படுகின்றது."*

## உள்ளமும் சடமும்
## (MIND AND MATTER)

டேக்கார்ட் புற உலகத்தின் தன்மையை விளக்கிய பின்னர், பொருள்களின் உறவுமுறையைத் தெளிவுறுத்த முற்பட்டார். அதற்காக அவர், புலமைக் கொள்கையினர் சிறப்பாகக் கையாண்ட சொற்களாகிய "பொருள்" (substance) "இயல்பு" (attribute), "மாறுநிலை" (mode) முதலியவைகளைப் பயன்படுத்தினர். புறச் சார்பின்றி, தன்னுரிமையில் இருக்கின்றதே பொருள். அத்தகைய பொருள் அதாவது பரம்பொருள் (Absolute or Independent Substance), ஒன்றுதான் இருக்கின்றது, "பொருள்" என்ற சொல்லுக்குரிய முழுத்தகுதியையும் பெற்றவர் கடவுள் (God) தாம். ஆகவே கடவுள் ஒருவரே பிறிதின் சார்பின்றித் தன்னுரிமையில் விளங்குபவர். சடமும் (matter), உள்ளமும் (mind) சார்புள்ள பொருள்களாகும் (relative or dependent substance). சடமும் உள்ளமும் கடவுளைச் சார்ந்தே உள்ளன. இவ்விரண்டினையும் அவைகளின் "இயல்புகளின்" (attributes) மூலம் அறிகின்றோம். பொருளின்

*N. K. Smith: *Studies in Cartesian philosophy*: p. 12.

இன்றியமையாத பண்பு, "இயல்பாகக்" கருதப்படுகின்றது. ஏனெனில் பொருள் இயல்பின்றி இருக்கவும் முடியாது, இருப்பதாக எண்ணவும் முடியாது. சடத்தின் இயல்பு பரப்புடைமை (extension), உள்ளத்தின் இயல்பு எண்ணம் அல்லது சிந்தனை (thought). இயல்புகள் பல வழிகளாலும் அல்லது மாறுபாடுகளாலும் வெளிப்படலாம். இவைகளே "மாறுநிலைகள்" (modes) என வழங்கப்படுகின்றன. எண்ணத்தின் மாறுநிலைகள் புலனுணர்ச்சி (sensation), கற்பனை (imagination); பரப்புடைமையின் மாறுநிலைகள் உருவம் (figure), இயக்கம் (motion). மாறுநிலைகள் இன்றி இயல்பை அறியலாம்: ஆனால் இயல்பு இன்றி மாறுநிலைகளை அறியமுடியாது. பரப்புடைமையின்றி உருவத்தையும் இயக்கத்தையும், சிந்தனையின்றி புலனுணர்வையும் கற்பனையும் அறிய முடியாது. ஆனால் பரப்புடைமையையும் சிந்தனையையும் அவைகளின் மாறுநிலைகளை இன்றி அறியலாம். கடவுள் மாறுதல்களுக்கு (changes) உட்படாததினால் அவருக்கு மாறுநிலைகள் இல்லை. பொருள் தன்னுடைய இயல்பை மாற்ற முடியாது. எனினும் மாறுநிலைகளை மாற்றமுடியும். சடத்தின் இயல்பாகிய பரப்புடைமை எப்பொழுதும் ஒரே உருவத்தில் இருக்க வேண்டிய தேவையில்லை. உள்ளத்தின் இயல்பான சிந்தனையும் ஒரே வகையில் எழவேண்டிய கட்டாயமில்லை.



உண்மையான பொருள் ஒன்றுதான் இருக்கின்றது. அப்பொருள் கடவுளே. தன்னிருப்புக்கும் விளக்கத்திற்கும் பிறிதின் சார்பற்றுள்ளதே பொருள் என வறையறுக்கப்பட்டிருப்பதால் கடவுள் ஒருவரையே உண்மைப் பொருளாகக் கொள்ளமுடியும். ஆனால் உள்ளமும் சடமும் ஓரளவிற்குப் பொருள்களாகக் கருதப்படுகின்றன. அவை இரண்டும் "சார்புள்ள பொருள்கள்" (relative substances). இவ்விரண்டும் மேலான பொருள்களாகிய கடவுளைச்சார்ந்திருப்பினும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டுள்ளன. சடம் உள்ளத்தைச் சார்ந்தோ உள்ளம் சடத்தைச் சார்ந்தோ இருக்கவில்லை.

உள்ளமும் சடமும் முற்றிலும் எதிர்மாறானவை. அவைகளின் இயல்புகள் தனியாயும் வெவ்வேறானவையாகவும் இருக்கின்றன. சடப்பொருளின் இன்றியமையாத இயல்பு பரப்புடைமை; மேலும் சடம்செயலற்றது (passive); உள்ளத்தின் இயல்பு சிந்திப்பது (எண்ணல்),செய்நிலை(active)உள்ளது,தடையில்லாதது(free).ஆகையால் இவ்விரு பொருள்களும் ஒன்றுக்கொன்று எதிர்நிலையாக உள்ளன. உள்ளம் என்பது சடம் அல்லாத மற்ற யாவும்; சடம் என்பது உள்ளம் அல்லாத மற்ற யாவும் எனக் கொள்ளப்படுகின்றன. இவ்விருபொருள்களும் வெவ்வேறாக இருப்பதோடன்றி ஒன்றின் இயல்பு மற்றொன்றின் இயல்புக்கு எதிர்மறையாகவும் தோன்றுகின்றது. உள்ளம் சடத்தின் இயல்புக்கு எதிர்மறையானது. சடம் உள்ளத்தின் இயல்புக்கு எதிர்மறையானது (negation). சடமும் உள்ளமும் முற்றிலும் எதிரான (opposite) பண்புகளை உடையதால் ஒன்றின் இயல்பை மற்றொன்று மறுக்கிறது.

உள்ளத்திற்குப் பரப்புடைமை யில்லை. சடத்தினால் சிந்திக்க இயலாது. ஆகையால் நேரான காரண காரிய முறைச் செயற்பாடு (direct causal interaction) நிகழமுடியாது. உள்ளத்தின் விளைவுகளும் பௌதிக விளைவுகளும் முற்றிலும் வெவ்வேறானவை. பௌதிக விளைவின் காரணங்கள் பௌதிகத் தன்மையுடயவையே அன்றி உள்ள இயல்பற்றவை உள்ளத்தின் விளைவுகளின் காரணங்கள் எப்பொழுதும் உள்ள இயல்புள்ளவையே. பௌதிக இயல்பற்றவை. ஆகவே உள்ளத்தையும் சடத்தையும் பற்றி டேக்கார்ட்

மேற்கொண்ட கொள்கை ஒரு முழுநிறைவான இருமைக் கொள்கையே. இருமைக் கொள்கை இதைக்காட்டிலும் தீவிர நிலையை எய்த முடியாது. இயற்கை இயந்திரத் தன்மையுடையதாக இருப்பதனல், அதனை விஞ்ஞான முறையிலேயே விளக்கவேண்டும் என்னும் அவாவே இதற்குக் காரணமாக இருக்கலாம். மேலும் இது சடத்திற்கும் உள்ளத்திற்கும் உள்ள பெரும் வேற்றுமையை அறிவிப்பதோடன்றி இவ்விரண்டையும் ஒரே தன்மையுடையவை என ஹாப்ஸ் கருதி, சடத்தன்மைக்கே உள்ளத்தையும் உள்ளாக்கியது தவறு என்பதைப் புலப்படுத்துகின்றது. உள்ளத்தைப் பற்றிய சடவாதக் கொள்கையின் கருத்திற்கு டேக்கார்ட்டின் இருமைக் கொள்கை தீர்மானமாக மறுப்பு உரைத்தது.

இவ்விருமைக் கொள்கை, அக்காலத்தில் பரவியிருந்த சடக் கொள்கையின் உள்ளத்தைப் பற்றிய கருத்தினை தவிர்க்க உதவியது. ஆனலும் உள்ளம் வேறு சடம் வேறு, இவை ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை எனப் பிரிப்பது ஒரு தீர்க்க முடியாத பிரச்சினை அல்லது சிக்கலையே விளைவிக்கின்றது.

## உள்ளமும் உடலும்
## (MIND AND BODY)

டேக்கார்ட் இருமைக் கொள்கையில் ஆர்வங் கொண்டதின் காரணம் இயற்கையின் நிகழ்ச்சிகளைப் பொறியியல் அடிப்படை மூலமாக விளக்கமுடியும் என்ற திட நம்பிக்கையே. மேலும், இது உயிருள்ளவற்றிற்கும் உயிரற்றவைக்கும் உள்ள பிரிவினை நீக்கும் என்ற உறுதியும் அவருக்கிருந்தது. இயற்கை நிகழ்ச்சிகளை (natural phenomena) விளக்குவதில் உள்ளத்தைக் கொண்டுவர அவர் விரும்பவில்லை. "உளவியல் ஒரு தனிப்பட்ட அறிவியல் (science)' உயிரியலோடு (Biology) உறவில்லாதது." மனித உடல் விலங்குகளின் உடலைப்போன்ற ஒரு பொறி அல்லது இயந்திரம். உடலின் செயல் முறைகளைப் பொருத்தவரையில் இவ்விரண்டிற்கும் வேற்றுமையில்லை. உயிருள்ள பொருள்களின் எல்லாச்செயல்களையும்

இயந்திரத்தன்மையான செயல்களாக விளக்கவேண்டும். மனித உடலின் செயல்பண்புகள் (functions) மிகவும் சிக்கலான யந்திரத்தின் தன்மைகளைப் போன்றவையே. உயிருள்ள உடலுக்கும் உயிரற்ற சடத்திற்கும் வேறு எத்தகைய இன்றியமையாத வேற்றுமையும் இல்லை.

ஆனால் மனிதனின் செயல்களைச் சடம், அசைவு இவ்விரண்டினால் மட்டும் முற்றிலும் விளக்க முடியாது. ஏனெனில் அவைகளை விளக்க உள்ளத்தின் தன்மையையும் கருதவேண்டியிருக்கிறது. உள்ளம் அதன் உடலோடு கொண்டுள்ள உறவும் மற்ற உடல்களோடு கொண்டுள்ள உறவும் வேறானது. "நான் என் உடல் அசையவேண்டும் என்று விரும்புகின்றபோது என் கால்கள் அசைகின்றன. ஆனால் வேறொருவர் கால்கள் அசையவேண்டும் என்று விரும்பும்பொழுது அவை அசைவதில்லை." இவ்வேற்றுமை எதனை உணர்த்துகின்றது? என் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒன்றினையொன்று செயல்படுத்தும் திறமை இல்லையென்றால் நான் விரும்பும்போது என் உடல் அசைவதை விளக்கமுடியாது. உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள இத்தொடர்பு உள்ளுணர்வால் அறியப்படுவது. மனித உடலின் உறுப்புக்கள் மிக்க சிக்கலுள்ளனவாகவும் பல பண்புகளையுடையன வாயும் பலதிறப்பட்ட கார்பஸில்களையும் (corpuscle) கொண்டவையாகவும் இருக்கின்றன. உயிரற்ற சடத்தின் பண்புகளை விளக்கும் அடிப்படைகளே உயிருள்ள உடலின்செயல்களையும் விளக்குகின்றன. இயற்கையில் எவ்விதநோக்கமும் (purpose) இல்லை. பௌதிக உடலின் (physical body) செயல் முறைகளை விளக்குவதற்கு எவ்வித நோக்க அடிப்படையும் (teleological principle) தேவையில்லை. அவை உடலினால் மட்டுமோ, அல்லது உள்ளத்தினால் மட்டுமோ அன்றி உடலும் உள்ளமும் உள்ள ஒன்றினை யொன்று செயல் படுத்துவதால் எழுகின்றனவையே ("இதனை ஒரு கப்பலுக்கும் அதன் தலைவனுக்கும் உள்ள தொடர்பைப் போன்றதாக எண்ணலாகாது"*). மனிதன் வெறும் உள்ளமோ அல்லது உடலோ அல்லன்.

* *Thilly, A History of Philosophy*: p. 283.

உள்ளமும் உடலும் ஒன்று சேர்ந்து பொருட்டன்மை வாய்ந்த ஒரு சேர்க்கை (unity). இச்சேர்க்கை, எண்ணமும் பரப்புடைமையும் மனித உடலில் சேர்ந்திருக்க முடிவதனால் எழுவது. "ஆனால் இச் சேர்க்கை, எண்ணமும் பரப்புடமையும் ஒன்றுசேர்ந்து பொருளின் அமைப்பினால் விளைந்ததே (unity of composition). அவைகளின் இயல்புகளின் சேர்க்கையால் (unity of Nature) எழுந்ததன்று. இச் சேர்க்கை இரண்டு பொருள்களின் வெறும் கலப்பிற்கு (mixture) ஒப்பிடக் கூடியதன்று."*

அவ்வாறு உடலும் உள்ளமும் ஒன்றினை யொன்று செயல் படுத்தும் போது, உள்ள நிலை அதைத் தொடர்ந்து உடலில் மாறு தல் ஏற்பட ஒரு "தறுவாய்" (occasion) ஆக அமைகின்றது. அவ்விதமே உடலின்நிலை உள்ளத்தில் ஏற்படும் பல மாறுதல்களுக் கும் "தறுவாய்களாக" விளங்குகின்றது. இச்செயல்கள் அனுபவத் தில் நிகழ்வதைக்காண்கிறோம். புலக்காட்சி (sense perception) நினைவாற்றல், மனவெழுச்சி, உணர்ச்சிகள், இயற்றி நிலைகள், பழக் கங்கள் ஏற்படுதல் ஆகிய இவற்றிலெல்லாம் உள்ளம் உடலையும் உடல் உள்ளத்தையும் செயல்படுத்துவதைக் காண்கிறோம். டேக் கார்ட்டே 1. புலக்காட்சி (sense perception) 2. இயற்றி நிலை (volition) 3. உணர்ச்சிகளும் வல்லுணர்ச்சிகளும் (feelings and passions), இவைகளில் குறிப்பாக உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள தொடர்பை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கின்றது எனக் கூறுகின்றார்.

புலக்காட்சியில் நாம் உணரும் பொருள்களின் நிறம், சுவை போன்ற வழிநிலைப் பண்புகள் (secondary qualities) பொருள்களை யும் சார்ந்தவை அல்ல; உள்ளத்தையும் சார்ந்தவை அல்ல. ஏனெ னில் பொருள்களின் இன்றியமையாத இயல்பு பரப்புடைமை, உள் ளத்தின் இயல்பு சிந்தனையே. ஆகவே புலனுணர்ச்சிகள் உள்ளத் தில் எழுவதற்கு உள்ளம் உடலோடு கொண்டுள்ள உறவே கார ணம். புலனுணர்ச்சியில் உடல் நேர்முகமான காரண காரிய முறை யில் உள்ளத்தை உறுத்தாவிடினும், உள்ளம் அவ்வுணர்ச்சியைப்

* Thilly, *A History of Philosophy*: p. 283

பெறுவதற்கு ஒரு தறுவாயை அளிக்கின்றது. இயற்றி நிலையில் உள்ளம் உடலை இயக்குவதை நம்முடைய அனுபவத்தில் காண்கிறோம். உணர்ச்சிகளும் மனவெழுச்சிகளும் இம்முடிவையே வலியுறுத்துகின்றன. உடலுக்கும் உள்ளத்திற்குமிடையே உறவு உள்ளதினாலேயே நாம் அறிவின் மூலமாகப் பசியை அறிவதோடு நம் வயிற்றிலும் (உடலிலும்) உணர்கின்றோம்.

ஆனால் உள்ளமும் உடலும் வெவ்வேறு இயல்புடையன. அங்ஙனமாயின் இவ்விரண்டும் ஒன்றினை ஒன்று எவ்வாறு செயல்படுத்த (interact) முடியும்? மனித உடலில் இக்கூட்டுறவிற்கு டேக்கார்ட் ஒரு புதிய விளக்கத்தைத் தருகின்றார். மூளையில் இருக்கின்ற பினியல் சுரப்பி (pineal gland) உள்ளத்திற்கு இருப்பிடம் என்கிறார் (seat of the soul). புலனால் அறியப்படும் பொருள்களால் விலங்கியல் ஆற்றல்களில் (in the animal spirits) அசைவுகள் ஏற்படுத்தப்பட்டுப் பினியல் சுரப்பிக்குச் செலுத்தப்படுகின்றன. இவ்விதமே புலனுணர்ச்சிகள் எழுகின்றன. உள்ளமும் பினியல் சுரப்பியைப் பலவகைகளில் இயக்க முடியும். ஆகவே உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள உறவுமுறை காரண காரிய நியதியிலும் பினியல் சுரப்பி மூலமாயும் நிகழ்கின்றது.

ஆனால் உடலும் உள்ளமும்பற்றிய இவ்விருமைக் கொள்கையே இங்குத் தடையாக நிற்கின்றது. உள்ளம் சடத்தை இயக்க முடியாதென்பது உண்மையாயின், சடத்தன்மை வாய்ந்த பினியல் சுரப்பியைமட்டும் அது எங்ஙனம் இயக்க முடியும்?

## உண்மையும் பிழையும்

### (TRUTH AND ERROR)

டேக்கார்ட் ஒரு முறையான அறிவியலளவைக் கொள்கையை (Epistemology) அமைக்க எண்ணாமல், உண்மையை அறியும் பொருட்டுஒரு தகுந்த முறையைக் கண்டுபிடிப்பதிலேயே நோக்கங் கொண்டிருந்தார். ஆகையால் பல அறிவளவை இயல் சிக்கல்களைப் பற்றி மிகுதியாக ஒன்றும் கூறவில்லை.

தெளிவும் தனித்தன்மையும் உள்ள எண்ணங்களையே உண்மையாக டேக்கார்ட் கருதினர். அவ்வெண்ணங்களின் உண்மைக்கு எல்லா வல்லமையும் உண்மையும் நிறைந்துள்ள கடவுளே அடிப்படைக் காரணம் என்று கருதினர். அங்ஙனமாயின் பிழைகள் (errors) எவ்விதம் நிகழ்கின்றன என்பதை அறிய வேண்டாவா ?

உண்மையினின்று பிழையைப் பகுத்தறியும் நம் திறமை வரம்பிற்கு உட்பட்டதாகவே அமைந்திருக்கிறது. பிழை நிகழ ஒத்தியங்குகின்ற காரணங்கள் இரண்டு உண்டு. அவை (1) அறிவுத் திறனும் (faculty of cognition) (2) தேர்ந்தெடுப்பதும் (election); அல்லது இவற்றைவேறுவகையாகக் கூறின், (1) புரிந்து கொள்ளுதலும் (understanding) (2) இயற்றி நிலையும் (will) எனலாம். புரிந்துக்கொள்வதால்மட்டும் ஒன்றை ஏற்கவோ மறுக்கவோ முடியாது. ஆனல் அதைப்பற்றி ஒரு தீர்மானம் (judgment) செய்ய முடியாதெனினும் அதைப்பற்றி எண்ணங்களை அறிய முற்படலாம். இவ்வெண்ணங்களில் பிழையில்லை. இயற்றி நிலையையும் தனியே, பிழைக்குக் காரணமாகக் கருத முடியாது. இயற்றிநிலை கட்டுப்பாடற்றது (free or perfect). தெளிவுடனும் தனித்தன்மையுடனும் விளங்காத பொருள்களைப்பற்றி தீர்மானிக்காமலிருக்கத் தவறுவதே பிழை எழக் காரணமாயிருக்கின்றது. அளவிற்குட்பட்ட புரிந்துகொள்ளும் திறனைக் கட்டுப்பாடற்ற இயற்றி நிலையோடு சேர்க்கும்போது பிழை நிகழ்கின்றது. உண்மைக்குப் பதிலாகப் பிழையும் நன்மைக்கு பதிலாகத் தீமையும் ஏற்படுகின்றன.

## உடன்பிறந்த எண்ணங்கள்
## (INNATE IDEAS)

உண்மை அறிவு புலனுணர்ச்சியால் எழுவதாக டேக்கார்ட் கருதவில்லை. அடிப்படையான கருத்துக்கள், கோட்பாடுகள் இவற்றிலிருந்து அறிவாய்வினல் (reasoning) அது கிடைக்கப்பெறுகின்றது என்றும் அது உடன் பிறந்தது (innate) என்றும் கருதினர். உடன் பிறந்த எண்ணங்கள் நிகழ்ச்சியில் அல்லது சிந்தனை

யில் வெளியாகின்றன என்று எண்ணினர். அறிவுக்கு இயற்கை யான சில மேல்வரிச்சட்டங்கள் (norms) உண்டு. ஆனால் அவை எவ்வாறு இருக்கின்றன என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே, அவர் சில சமயங்களில் உடன்பிறந்த அறிவு (innate knowledge) ஆன்மா தன்னுள்ளே காண்பதென்றும் உள்ளத்தில் உட்பதிவுகளாக நிகழும் எண்ணங்கள் என்றும் அனுபவ நிகழ்ச்சி யில் ஆன்மா உண்டாக்குவது என்றும் வெவ்வேறான விளக்கங்கள் அளிக்க முயலுகின்றார். பிற்காலத்தில் தோன்றிய லாக் (Locke) என்னும் அறிஞர் உடன் பிறந்த எண்ணங்கள் உண்டு என்ற கருத் தினை அறவே மறுக்கின்றார்.

## திறனாய்வு
### (CRITICAL ESTIMATE)

டேக்கார்ட், யாவற்றையும் ஐயப்படுவதிலிருந்து தொடங்கி, தெளிவும் தனித்தன்மையும் உள்ள எண்ணங்களையே உண்மை என ஏற்கவேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் இந்த முறையைத் தம்முடைய தத்துவத்தில் முழுதும் கையாளாது இடை யிலேயே கைவிட்டார். அவ்விதம் ஐயத்திற்கு உட்படுத்தாமலே ஒப்புக் கொண்ட சில நம்பிக்கைகளைப் பயன்படுத்தித் தம்முடைய திட்டத்தை அமைத்தார். அவைகளைப் பற்றி இங்கு ஆராய்வோம்:

(1) முதலாவதாகக் காரண காரியத்தொடர்பு (causal relation) அளவை முறையில் சரியானதா என்பதைப் பற்றி அவர் ஐயமுற வில்லை. காரணமின்றிக் காரியமில்லை என்ற அடிப்படையை ஒரு தற்புல உண்மையாகவே அவர் ஏற்றுக் கொண்டார். இவ்வடிப் படை செயல் முறைக்குப் பயன் உள்ளதாக இருப்பதால், பொருள் களின் நிகழ்நிலை இயல்புகளை (actual nature) வெளிப்படுத்தத் தகுதி பெற்றுள்ளதாகவே நம்பினர். மேலும் அதனை ஐயுறுமலே ஏற்றுக் கொள்வதோடன்றி கடவுளின் இருத்தலை மெய்ப்பிக்கவும் அதைப் பயன்படுத்தினர். பிற்காலத்தில் டேவிட் ஹ்யூம் (David Hume) என்னும் தத்துவ அறிஞர் காரிய காரண அடிப்படையை அளவை

முறையில் சரியானதாக ஏற்க மறுத்து, காரண காரியத் தொடர்புப் பழக்கத்தினுல் (habit) அது எழுவது என முடிவு செய்தார்.

ஆனல் டேக்கார்ட் காரண காரிய முறையைத்தற்புல உண்மையாகக் கொண்டதினுல்,காரணகாரிய உறவுக்கும் (causal connection) அளவியலாகப் பெறப்படுவதற்கும் அல்லது உய்த்துணரப்படுவதற்கும் (logical implication) உள்ள வேற்றுமையைத் தெளிவுறுத்தவில்லே. முக்கோணத்தின் மூன்று கோணங்களும் சேர்ந்து இரண்டு நேர்கோணத்தின் எண்ணிக்கைக்குச் சமமாகிறது என்னும் உண்மை, அளவையியலாக அனுமானத்தில் (inference) அறியப்படுவது. ஆனல் காரணகாரிய உறவு அத்தகையதன்று. நெருப்பு வெப்பத்தை அளிக்கின்றது என்னும் உண்மை அனுபவ வாயிலாக உணரப்படுகின்றது. மேலும் அளவையியலாக உணர்த்தப்படும் உண்மைகள் காலத்தின் (time) சார்பின்றி இருக்கின்றன. ஆனல் காரண காரிய உறவில் காலம் இருப்பதாக முன்கூட்டியே கொள்ளப்படுகின்றது (time is presupposed).

(2) காட்சியில் புறப் பொருள்கள் பிரதி செய்யப்படுகின்றன என்னும் கொள்கை (Representationist view of perception) டேக்கார்ட்டினுல், ஐயத்திற்கு உட்படுத்தப்படாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக் கொள்கைபடி புலக் காட்சியில் (Sense perception) உள்ளம் உடனடியாகப் புறப் பொருளே உணர்வதில்லே. ஆனல் அப் பொருளால் நம்முள் எழும் எண்ணங்களேயே அறிகின்ருேம். இவ் வெண்ணங்கள் பொருள்களின் உள்ள நகல்களே(mental duplicates). மேலும் இவை பொருள்களின் தன்மையைப் பிரதி செய்கின்றன.

டேக்கார்ட்டின் தத்துவம் காட்சியில் புறப் பொருள்கள் பிரதி செய்யப்படுகின்றன என்னும் கொள்கையை ஏற்றுக் கொள்கிறது. உள்ளம் தன்னேயும் தன் எண்ணங்களேயுமே நேர்முகமாக உணர்கின்றது. பொருள் அல்லது புறவுலகம் உள்ளதாயின், அதனே அனுமான வாயிலாகவே அறியமுடியும். கடவுளின் இருத்தலேயும் நாம் நேர்முகமாக அறிவதில்லே. அவரைப் பற்றிய எண்ணத்தையே நேர்முகமாக அறிகின்ருேமேயன்றி அவரையே அன்று.

டேக்கார்ட் காட்சியில் புறப் பொருள்கள் பிரதி செய்யப்படுகின்றன என்னும் கொள்கையை ஒப்புக் கொள்வதற்குக் காரணம்,

அக்காலத்து விஞ்ஞானிகள் பொருள்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தினுல் இருக்கலாம். பொருள்கள் இயக்கத்தின் பாறபட்ட சிறு துணுக்குகளின் சேர்க்கை. ஆனல் பொருள்கள் நம் புலனுணர்ச்சிக்கு நிறம் (colour) நாற்றம் (smell), சுவை (taste) முதலிய பண்புகளுடன் தோன்றுகின்றன. அங்ஙனமாயின் பொருள்களின் உண்மை நிலைக்கும் அவைகளின் தோற்ற நிலைக்கும் உள்ள ஒற்றுமையை எவ்வாறு விளக்குவது ? இதனை விளக்க, டேக்கார்ட், இக்கொள்கையின் மூலமாக எளிதான வழியைக் கண்டுபிடித்தார். பொருள்கள் தோற்றமளிக்கும் முறையில் இல்லை. நாம் பொருளின் பிரதியை உணருகின்றோமே யன்றி பொருளையேயன்று (object in itself), நிறம், சுவை முதலிய பண்புகள் பொருளைச் சார்ந்தவையல்ல, அவைகள் புலன்களால் நம்முள் எழுப்பப்பெறும் தெளிவில்லாத எண்ணங்களே.

டேக்கார்ட் இக்கொள்கையை ஒப்புக்கொள்வதால் பல தீராத எதிர்ப்புக்களுக்கு உள்ளானர். (1) முதலாவதாக இக் கொள்கை அனுபவத்திற்கு மாருக உள்ளது. நாம் பொருளையே நேர்முகமாக அறிகின்றோம். அதன் பிரதியை அல்ல. ஆகவே இக்கொள்கை அகக் காட்சிதரும் சான்றுக்கு (introspective evidence) பொருந்தவில்லை. (2) மேலும் இக் கொள்கையே குறைபாடுகளைக்கொண்டதாக உள்ளது. பொருள்களை எண்ணமே தெரியப்படுத்துகின்றன என்று கருதுவதால், பொருள்களை எண்ணம் அல்லது புலன் உணர்வு நிலைக்குக் கொண்டு வருவதாகின்றது. இதனுல் அறிவைப் பற்றிய ஆராய்ச்சியே தீராத சிக்கலாகின்றது. (3) மேலும் அக் கொள்கையைத் தகுதி உள்ளதாக ஒப்புக்கொண்ட போதிலும் அது டேக்கார்ட்டின் கொள்கைக்கு ஏற்புடைத்தன்று. இக் கொள்கைப்படி புறப்பொருள்கள் உள்ளத்தில் உட்பதிவுகளை (impressions) ஏற்படுத்துகின்றன. இவ்வுட் பதிவுகள் பொருள்களைத் (objects) தெரிவிக்கின்றன. இதுவே அக்கொள்கையின் அடிப்படை: ஆனல் டேக்கார்ட்டின் இருமைக் கொள்கை அத்தகைய நிகழ்ச்சிக்கு இடந்தரவில்லை. ஏனெனில் உள்ளத்திற்கும் சடத்திற்கும் இடையே காரண காரிய உறவு ஏற்பட முடியாது என அவர் முன்னமேயே கூறியிருக்கின்ருர். ஒரு சடப் பொருள்மற்ருெரு சடப்பொரு

ளுடனே காரணகாரியத் தொடர்பு கொள்ள முடியும். ஆகவே டேக்கார்ட் பிரதி செய்யும் கொள்கையை எவ்வாறு ஏற்க முடியும்? அவர் கருத்தைப் பொருத்தமுள்ளதாகக் கொள்ள வேண்டுமானால் உள்ளம் புலனுணர்வைத் தன்னுள் இருந்தே எழுப்புவதாகக் கொள்ள வேண்டும். ஆனால் இக்கருத்தைப் 'பிரதி செய்தல் கொள்கையினர்' ஏற்க மறுக்கின்றனர்.

பிரதி செய்யும் கொள்கை நம்முடைய எண்ணங்கள் புறப் பொருளுக்கு ஒத்திருந்தால் அல்லது உண்மையான பிரதியாக இருந் தால், புலன் அறிவு ஏற்புடைத்து எனக் கருதுகின்றது. நம் எண் ணங்களைப் புலனுணர்ச்சியில் அறிகின்ற பொருளோடு ஒப்பிட்டுப் பார்த்தே உண்மை அறிவு பெறுகின்றோம். ஆனால் இது டேக்கார்ட் டின் அறிவளவை இயலுக்கு (epistemology) பொருந்தவில்லை. ஏனெனில்,அவர் கருத்துப்படி வழிநிலைப் பண்புகளாகிய (secondary qualities) நிறம், சுவை இவைகளையெல்லாம், நம் புலன்கள் பொருள் களின்மேல் ஏற்றுகின்றன (super imposed). இவ்வழிநிலைப்பண்புகள் சடப்பொருள்களைக் குறிக்கவில்லை.நம் புலனுணர்வு தெரிவிப்பது பொருள்களின் தோற்ற நிலையையன்றி உண்மை நிலையையன்று. ஆனால் பிரதிசெய்யும் கொள்கையினர் புலனுணர்வில் பொருள் களின் உண்மை நிலையையே அவைகளினுடைய பண்புகளின் பிரதி கள்மூலமாக அறிகின்றோம் எனக் கருதுகின்றனர். ஆகவே டேக் கார்ட் ஏற்றுக்கொண்ட இப்பிரதிக்கொள்கை குறைபாடுகளை உடையதோடன்றி, அவருடைய திட்டத்திற்கும் பொருந்தாததா கும். எனினும் டேக்கார்ட் இக்கொள்கையை ஏற்றுக்கொண்டதின் காரணம் அவருடைய இருமைக்கொள்கையின் சிக்கலைத் தவிர்க்க வேண்டும் என்ற ஆர்வமே. ஆனால் அதன் பயன் சிக்கல்கள் தீர்க்கப்பெருமல் மிகுதியானதேயாகும்.

(3) ஐய முறையைக் கையாளாமல் ஏற்றுக்கொண்ட வேருரு கருத்து பொருள்களைப் பற்றியதாகும். 'பிறிதின் சார்பற்று இருப் பதே பொருள் (Substance)' என்ற ஸ்கொலாஸ்டிக் கருத்தினையே டேக்கார்ட் மேற்கொண்டார்.

அதனைப் பயன்படுத்தியே 'சடம் பரப்புடைமை உடையது, உள்ளம் சிந்தனை உடையது' என்னும் புதிய கருத்தினையும் பெற்

னர். ஆனால் பொருள் பிறிதின் சார்பற்று இருப்பதாயின் உள்ளத்தையும் சடத்தையும் எவ்வாறு பொருள்களாகக் கருத முடியும்? அவைகள் ஒன்றுக்கொன்று வேருக இருப்பினும் இரண்டும் கடவுளைச் சார்ந்தே இருப்பவையன்றோ?

## தறுவாய்க் கொள்கை
## (OCCASIONALISM)

டேக்கார்ட்டின் ஆழ்ந்த கருத்துக்கள் அறிஞர்கள் பலருடைய கவனத்தைக் கவர்ந்தன. சிலர் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றினர். அதன் பயனுக ஹாலண்டு நாட்டில் ஒரு திட்டம் எழுந்ததெனினும் அதன் வளர்ச்சி சிறப்பாகப் பிரான்ஸ் நாட்டிலேதான் விளங்கிற்று. அவ்விதம் டேக்கார்ட்டைப் பின்பற்றியவருள் கெலிங்க்ஸ் (Geulincx), மால்ப்ரான்ஷ் (Malebranche) என்பவர் புகழ் பெற்றவர்.

அவர்கள் உள்ளமும் உடலும் ஒன்றினை ஒன்று செயல்படுத்துகின்றது என்னும் டேக்கார்ட்டின் கருத்தை முழுதும் ஏற்கவில்லை. அத்தகைய உறவுமுறை நிகழமுடியாதென்பதே அவர்கள் துணிபு. உள்ளமும் உடலும் எதிர்நிலையான இயல்புகள் பெற்றிருப்பதே அதனைத் தெளிவுறுத்துகின்றது எனக் கருதினர்.

உள்ளமும் உடலும பற்றிய சிக்கலைத் தீர்க்கவே கெலிங்க்ஸ் ஒரு புதிய விளக்கம் தந்தார். அதுவே தறுவாய்க் கொள்கை (Occasionalism) என வழங்கப்படுகின்றது. உள்ளமும் உடலும் ஒன்றினை ஒன்று செயல்படுத்த முடியாதது.

என்னுடைய கை அசைய வேண்டும் என்று நான் விரும்பும்பொழுது என் கை அசைகின்றது. என்னுடைய இயற்றி நிலை (volition) ஒரு தறுவாயாக (occasion) அமைகின்றதேயன்றி நிமித்த காரணம் (efficient cause) அன்று. இவ்வகையிலேயே, அசைவிலிருக்கும் பொருள் (moving body) மற்றொரு பொருளைத் தாக்கினல், பின்னது இயக்கத்திற்குள்ளாகின்றது. வரம்புள்ள பொருள்கள், உள்ளங்கள் (ஆன்மாக்கள்-souls), இவையெல்லாம் கடவுள் தலையிடுவதற்குத் தறுவாய்களாய் அமைகின்றன. உடலில் மாறுதல் நிகழ்வது மனித

உள்ளத்தின் ஆற்றலினல் அன்று. அது கடவுனின் நேரான செயலே. இயற்றி நிலையின் செயலால் உடலில் அசைவு உண்டாக வில்லை. ஆனல் இயற்றி நிலை நிகழும் **தறுவாயில்** கடவுள் தலையிட்டு அதற்குத் தக்கவாறு உடலின் போக்கை மாற்றி அமைக்கின்ருர். ஆகையால் வேறுபட்ட தன்மையுள்ள உடல், உள்ளம் இவ்விரு பொருள்களுக்கிடையே எந்த நேரானத் தொடர்பும் தேவையில்லை. எனவே நம் இயற்றி நிலைகள் தறுவாய்க் காரணங்கள் (occasional causes) ஆகின்றன. நம் அசைவுகளுக்குக் கடவுளே நிமித்த காரண மாவர் (efficient cause).

சடத்திற்கு இயக்கத்தையும் பல விதிகளையும் வகுக்கும் கட வுள் என்னுடைய இயற்றிநிலையை உண்டாக்குவதோடு, இயற்றி நிலையும் அசைவும் ஒன்றற்கொன்று பொருந்தும் வகையில் இவற்றை அமைக்கின்ருர். எவ்வாறெனின் குறிப்பிட்ட நேரத்தில் இரண்டு கடியாரங்கள் ஒரே நேரத்தைக் காண்பிப்பது ஒன்று மற் ெறான்றைச் செயற்படுத்துவதாலன்று. இவை இரண்டும் ஒருவரா லேயே அமைக்கப்பட்டவையாகும். இதைக்காட்டிலும் பொருத்த மான வேெருரு எடுத்துக்காட்டையும் கெலிங்க்ஸ் அளிக்கின்ருர். நான் ஒரு நாணயத்திற்குப் (coin) பதிலாக உணவும் உடையும் பெறுவது, அந்த நாணயத்தின் இயற்கையான திறமையால் அன்று, அதன் மதிப்பு மனித சமூக அமைப்பினல் ஏற்படுத்தப்பட்டதா லாகும். இவ்வகையில், சடத்தின் இயக்கம் புலனுணர்ச்சிகளையும் எண்ணங்களையும் எழுப்பவில்லை, இவை தெய்வீக அமைப்பினல் எழுகின்றன.

மால்ப்ரான்ஷ் எல்லாக் காரணகாரிய நிகழ்ச்சிகளுக்கும் கடவுள் ஒருவரையே காரணமாகக் கருதி "தறுவாய்க் கொள்கையை" நிறைவு செய்ய முற்படுகின்ருர். உள்ளத்தில் தொடர்ந்து எழும் பல நிலைகளும் பொருள்களில் எழும் பல நிலைகளும் கடவுளால் உண்டாக்கப்பட்டவையே. கடவுள் முழு நிறைவானவர், எல்லா வல்லமையும் பெற்றவர். எல்லா நிகழ்ச்சிகளும் கடவுளின் இயற்றி நிலையால் ஆளப் பெறுபவையாகும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் தெய் வீக இயற்றி நிலையின் விளைவாகும். எனவே கடவுள் ஒருவரே எவற்றிற்கும் உண்மையான காரணமாவர்.

"கடவுள் என்னுள்ளே செயலாற்றுகின்றார் (God acts in me). நாம் உள்ளங்கள் அல்லோம். அவைகளின் மாறு நிலைகளே. மாறு நிலைகளை அகற்றினால் கடவுள் ஒருவரே இருக்கின்றார்" என்று கெலிங்க்ஸ் கூறினார். ஆனால், மால்ப்ரான்ஷ் கடவுள் என்னுள்ளே சிந்திக்கின்றார் (God thinks in me) என்றும் பொருள்களுக்கு இடம் (space) இருப்பிடமாய் இருப்பதுபோல் கடவுள் ஆன்மாக் களின் இருப்பிடம் (abode) என்றும் கருதினார். மால்ப்ரான்ஷின் கருத்து ஒரு வகையான அனைத்திறைக் கொள்கைத்தன்மை (pantheistic) பெற்றுள்ளதாகவும் ஸ்பினோஸாவின் அனைத்தீறைக் கொள்கைக்கு வழி வகுப்பதாகவும் கருதப்படுகின்றது. தறு வாய்க் கொள்கையைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். இக்கொள்கை ஒரு தாற்காலிகமான முடிவு அல்லது நிலையே. அது அச்சிக்கலின் அடிப்படையைப் பற்றி ஆராயவில்லை. இக்கொள்கை இச்சிக்க லுக்கு முடிவுகாண கடவுளின் முழு வல்லமையையே அடிப்படையா கக் கொள்ளுகிறது. இதனால் இச்சிக்கலின் தன்மையை இக்கொள் கையினர் ஒரு சிறிதே உணர்ந்தவராகின்றனர். தத்துவ முறையில் முழு விளக்கம் காணாது கடவுளின் வல்லமை என்னும் கருத்தை ஏற்று அவர்கள் கூறும் விளக்கம் தத்துவ நிறைவுடைய தன்று, மேலெழுந்தவாறாக விளக்கம் அமைந்துளது. ஆகையால் சிலர் தறு வாய்க் கொள்கையினருடைய விளக்கம் அறிவுமுறைக்குப் பொருந் தவில்லை, ஆனால் அது அவர்களுடைய தெய்வப்பற்றினையே சுட்டு கிறது என்றும் அது தத்துவ விளக்கமாகாது இறையியல் விளக் கமே என்றும் குறை கூறினர்.

உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள உறவு முறையைப்பற்றி தறுவாய்க் கொள்கையை விடப் பொருத்தமான விளக்கம் பிற்கா லத்தில் ஸ்பினோஸா (Spinoza) என்னும் தத்துவ அறிஞரால் தரப் பட்டது.

# 3

# ஸ்பினேஸா

## (SPINOZA)

## (1632 - 1677)

## தோற்றுவாய்

### (INTRODUCTION)

மறுமலர்ச்சி காலத்திற்குப் பின் தோன்றிய தத்துவ அறிஞர் களுள் ஸ்பினேஸா முன்னணியில் நிற்பவராவர். எனினும் அவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் அவர் பெருமையை உணரவில்லை. பதி னெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த லெஸ்ஸிங் (Lessing), கொயதே (Goethe), போன்ற அறிஞர்கள் அவரைப் பாராட்டத் தொடங்கிய பின்னரே அவர் தத்துவ ஆராய்ச்சிக்குச் செய்த அருந்தொண்டின் சிறப்பு விளங்குவதாயிற்று. கார்ட்டீஸிய தத்துவத்தை ஒருமைக் கொள்கையின் சார்பில் அளவை முறைப்படி தொடர்ந்து விரித்துச் சென்றவர் இவர் ஒருவரேயாவர். கார்ட்டீஸிய தத்துவத்தில் இவ் வாறு தோய்ந்திருந்ததோடு, பண்டைக்கால இடைக்காலஅறிஞர் கள் பலருடைய நூல்களையும் நேர்முகமாகவோ அன்றி வேறு நூல் களில் இவை பற்றி வரும் செய்திகளைக் கொண்டோ இவர் நன் குணர்ந்திருந்தார். பல்வேறு சமய தத்துவக் கொள்கைகளை உணர்ந் திருந்த அவர், தம் பேராற்றலால் தனிப்பட்ட முறையில் ஒரு திட் டத்தை வகுத்தார். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றுண்டுகளில் தோன்றிய தத்துவ அறிஞர்கள் ஸ்பினேஸாவின் திட்டத்தால் பெரு நன்மை அடைந்திருக்கின்றனர்.

ஸ்பினேஸாவைப் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப் படுவதை நாம் காண்கின்றோம். அவர் ஒரு இறையில்கொள்கை யினர் என்றும் சமய விரோதி என்றும் யூதர், கிறித்தவர், இரு சாராராலும் வெறுக்கப்பட்டார். கொலெரெஸ் (Colerus) என்னும்



ஸ்பினோஸா

அறிஞர் ஸ்பினோஸாவின் நூல்களை "வெறுக்கத்தக்க நூல்கள்" என்றும் "பொய்களும் தெய்வத்தைப் பற்றிய பழிப்புரைகளும் அன்றி வேறில்லை" என்றும் "இதுகாறும் உலகம் கண்டறியாத கேடு விளைவிக்கும் இறையில் கொள்கை" என்றும் குறைகூறுகின்றனர். ஸ்பினோஸாவைப் பற்றி மிகவும் தவறான எண்ணங்கள் பரவியிருந்ததற்குச் சான்றாகப் பின்வரும் கூற்றைக்காண்க-'மனிதர்களுக்கும் கடவுளுக்கும் உரியனவற்றைப் பறிப்பதற்காகச் சாத்தான் கூலிக்கு வைத்திருக்கும் பலருள் திருச்சபைக்கும் அரசுக்கும் தொல்லை கொடுக்கப் பிறந்த அந்தப் போலி ஆளைவிட (ஸ்பினோஸாவைவிட) வேறு யாரேனும் மிகுந்த சுறுசுறுப்பாயிருந்திருக்கக் கூடுமா என்பது ஐயத்திற்கிடமானது."*

இதற்கு மாறாகச் சிலர் அவரைப் புதுமை உணர்வூட்டும் கவியுள்ளம் பெற்றவராகவும் அனுபூதிமானாகவும் அறிவராகவும் தண்ணளிமிக்க மென்மை வாழ்வு வாழ்ந்தவராகவும் புகழ்கின்றனர். மேலும் அவருடைய தத்துவம் சமயத்தை அடிப்படையாகக்கொண்டது என்று கருதினர். ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த புதுமை உணர்வூட்டும் கொள்கையினர் (Romanticists) அவரைப் பற்றி "ஓர் ஒதுக்கப்பட்ட புனிதர்" என்றும் "கடவுள் வெறி உள்ளவர்" என்றும் குறிப்பிடுகின்றனர். பவிலியான்ஸ்கிராக்ட் (pavilioensgracht) என்னும் ஊரில் அவர் வசித்த இல்லத்தைப் பற்றி, ரெனன் (Renan) என்னும் அறிஞர் "அங்கிருந்து கடவுளை வெகு அருகில் கண்டிருக்கலாம்" என்று உரைக்கின்றார். பிற திட்டங்களைக் காட்டிலும் ஸ்பினோஸாவின் திட்டம் பலவாறாகவும் தவறாகவும் விளக்கப்பட்டது. அது முற்றிலும் ஒன்றுக்கொன்று வேறாகவும் முரணானதுமான கருத்துக்களைக் கொண்டதாகக் கூறப்படுகிறது. அனைத்திறைக் கொள்கையும் (Pantheism) இறையில் கொள்கையும் (Atheism) கருத்துக் கொள்கையும் (Idealism) அனுபவவழிக் கொள்கையும் (Empiricism) பெயருண்மைக் கொள்கையும் (Nominalism) காட்சிப் பொருள் கொள்கையும் (Realism) கடவுள் சார்பற்ற இயற்

* See L. Roth: *Spinoza*, p. 15.

கைக் கொள்கையும் (Non-theisitic Naturalism) இயற்கையிகந்த கொள்கையும் (Super-naturalism) அல்லது பிரபஞ்சமில் கொள்கை (acosmism) இவையாவும் ஸ்பிநோஸாவின் திட்டத்தில் உள்ளடங்கி இருப்பனவாகக் கருதப்படுகின்றன.*

இதற்குக் காரணம் ஸ்பிநோஸாவின் திட்டம் ஒரே தன்மை பெற்றில்லாதிருப்பதேயாகும். அது, எந்த நோக்கமும் அளவையிய லாக முடிவுக்குக் கொண்டுவரப்படாத, பல முரணான கருத்துக் களின் தொகுப்பு என்று கூறலாம். அவருடைய திட்டத்தின் பல பகுதிகள், எல்லையுள்ள பொருள்கள் (finite individuals) மாறுநிலை கள் (modes) அல்லது கடவுளின் இயல்புகள் (accidents of the Absolute substance) என்றும் "வரையறைவு செய்வதெல்லாம் இன்மை செய்வதாகும்", (All determination is negation) என்ற அடிப்படையின் மூலம் எல்லையுள்ளவைகளுக்கு இடமில்லாத அள வுக்கு எல்லையற்றதை வற்புறுத்தியும் அல்லது இயற்கையையும் மனிதனையும் மற்றுமுள்ள எல்லா தனிப்பட்ட பொருள்களையும் உண்மை யில்லாதவையாகவும் திரிபுக் காட்சி நிலைக்கும கொண்டு வருகின்றன. ஆனால் (அதே சமயத்தில்) அவருடைய திட்டத்தின் வேறு பல பகுதிகள் தனிப்பட்டவைகள் உண்மையானவை என்றும் கடவுளும் இயற்கையும் முற்றொருமை உடையவை யென்றும் கரு துவதால் எல்லையற்ற பொருளுக்கு இடமில்லாத அளவுக்கு எல்லை யுள்ள பொருள்களுக்கே சார்பற்ற இருத்தல் நிலையையும் அளிக் கின்றன; அல்லது கடவுளை (எல்லையற்ற பொருளை) எல்லையுள்ள பொருள்களின் தொகுதி என்ற நிலைக்குக் கொண்டு வருகின்றன. ஆகவே அவருடைய திட்டத்தில் காணப்படுகின்ற பல்வேறு கருத் துக்கள், அவர் திண்ணமாக ஒரு அனைத்திறை அல்லது இறையில் கொள்கையினர் என்றோ இயற்கைக் கொள்கையினர் அல்லது இயற்கையிகந்த கொள்கையினர் என்றோ அல்லது பெயருண்மைக் கொள்கையினர் அல்லது காட்சிப் பொருள் கொள்கையினர் என்றோ முடிவு கட்ட இடமளிக்கவில்லை.

எனினும் நாம் ஸ்பிநோஸாவின் தத்துவத்தைப் புரிந்துகொள்ள சில உதவிகள் கிடைக்கின்றன. முதலாவதாகத் தம்முடைய "அறிவு

*Caird: *Spinoza*, p. 2.

வளர்ச்சி பற்றிய கட்டுரை" (Treatise concerning the improvement of understanding) என்னும் நூலின் முன்னுரையில் தம்முடைய ஆன்மீக வாழ்க்கையின் தொடக்கத்தையும் வளர்ச்சியையும் குறிப்பிடுகின்றார். அதிலிருந்து நாம் அவருடைய தத்துவத்திட்டத்தின் நோக்கத்தையும் தொடக்கத்தையும் பற்றி அறிய முடிகின்றது. இரண்டாவதாக அவர் இளமையில் தத்துவக் கல்வி பயின்றதைப் பற்றி நேர்முகமாகவும் மறைமுகமாகவும் செய்திகள் கிடைக்கின்றன. அவருடைய கூற்றிலிருந்தும் நூல்களின் வாயிலாகவும், மற்ற வழிகளிலும் அவர் கற்ற நூல்களைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் அவர் வளர்ந்த அறிவுச் சூழ்நிலையைப் பற்றியும் ஓரளவுக்கு அறிய முடிகின்றது. கடைசியாக, அவருடைய 'அறவியல்' (Ethics) என்னும் நூலில் முடிவாகவும் முறைப்படித்தியும் விளங்குகின்ற கருத்துக்கள் எவ்வாறு இதற்கு முன்னர் எழுதப்பட்ட நூல்களில் படிப்படியாக வளர்ந்திருக்கின்றன என்பதைப்பற்றியும் அறியமுடிகின்றது. இத்தகைய வேறுபட்ட மூலங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற குறிப்புக்கள் ஸ்பினோஸாவின் தத்துவத்தையும் அதில் தோற்றமளிக்கும் தெளிவின்மை, முரண்கள் இவைகளின் விளக்கங்களையும் சரியான முறையில் புரிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன.

ஸ்பினோஸாவின் திட்டம் இறையியல் கொள்கையையே அறிவிக்கின்றது என்றும் சமயத்தையே அடிப்படையாகக் கொண்டது என்றும் உள்ள இவ்விரு முரணான தீர்ப்புகளும் அவருடைய திட்டத்தைச் சரியாக புரிந்துகொள்ளத் தேவையான இன்றியமையாத கருத்துக்களையே குறிக்கின்றன: பழையமரபையொட்டிய இறையியல் நோக்கப்படி அவர் சமயப் புறக்கணிப்பு மனப்பான்மை உடையவர் என்பது ஐயமின்றி விளங்குகின்றது. அவர் கிறித்தவர்களின் கொள்கையின் 'உயிர்களோடு உறவு கொள்ளும் கடவுட் கொள்கையையும்' (Personal God) உலகம் ஒரு நோக்கத்திற்கு உட்பட்டு இயங்குவதையும் இயற்றி நிலையின் தன்னுரிமையையும் அறவே மறுத்தார். அவருடைய கொள்கை முழுமையான இயற்கைக் கொள்கையை ஒத்திருக்கின்றது. அக்கொள்கை கடவுளையும் பௌதிகப் பிரபஞ்சத்தின் கட்டாயமான

விதிகளையும் (necessary laws of the physical universe) ஒருமைப் பாடுடையனவாகவே கருதுகின்றது. ஆனால் ஸ்பினேஸா சமயத்தைப்பற்றிய தகுதியுள்ள ஒரே கருத்தினை உறுதிப்படுத்துவதுடன், மற்றைய பொதுவான கருத்துக்களை, அவைகளின் இயல்பினாலேயே சமயப் பற்றற்றவை எனக் கருதி எதிர்க்கின்றார். கடவுளே அவருடைய தத்துவத்தின் முதலும் முடிவுமாவர். அவருடைய தத்துவம், கருத்தளவில் மட்டும் நிற்பதன்று, செயல் முறைப் பண்பையும் பெற்றது; வாழவும் உய்யவும் வழிகாட்டும் தத்துவமாகும். இதனை அவருடைய புகழ்பெற்ற அறவியல் (Ethics) என்னும் நூலின் தலைப்பே உணர்த்துகின்றது. "ஒருவர் தத்துவ அறிஞராவதற்கு, முதலில் ஸ்பினேஸாவின் கொள்கையினராக வேண்டும்" (To become a philosopher, one must first become a Spinozist) என்று ஹேகல் என்னும் தத்துவ அறிஞர் கூறுகிறார்.

ஸ்பினேஸாவின் வாழ்க்கை தத்துவ வரலாற்றில் இணையில்லாதது. அவர் ஓர் அறிவு முதற்கொள்கையினர் என்று யூதர்களால் ஒதுக்கப்பட்டார். அவர் யூதராதலின் உலகத்தாரால் ஒதுக்கப்பட்டார். ஸ்பினேஸாவைப் போன்று இதுவரை அத்தகைய தனிமை வாழ்க்கை நடத்தியவர் யாருமே இல்லை. எனினும் அத்தகைய தனிமை அவருடைய ஒப்பற்ற தத்துவதிட்டத்தை அமைக்கத் தேவையாக இருந்தது.*

16வது நூற்றாண்டில் நிகழ்ந்த சமய ஒறுப்பு நீதி மன்றத்தின் (inquisition) தீர்ப்பின் பயனாக ஸ்பெயின், போர்த்துகீஸ் நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு ஆம்ஸ்டர்டாமில் (Amsterdam) குடியேறிய ஒரு யூத குடும்பத்தில் கி. பி. 1632ம் ஆண்டில் ஸ்பினேஸா தோன்றினார். செல்வாக்குள்ள அவருடைய பெற்றோர் போர்த்துகீசிய யூதர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்.

சிறுவயதில் ஸ்பினேஸா, அக்கால முறைக்கேற்ப, ஹிப்ரு மொழியில் விவிலிய நூல் (Bible), டால்மட் (Talmud), சமயம், தத்துவம் பற்றிய யூத நூல்களையும் முறையாகக் கற்றார். பண்டைய யூதக் கொள்கைகளில் மனநிறைவு கொள்ளாததினால் அவர்

---

*Thomas & Thomas: *Living Biographies of Great philosophers* p. 97.

உள்ளம் புறக் கட்டுப்பாடற்ற தத்துவ ஆராய்ச்சியில் நாட்டங் கொண்டது. மேலும் தம் அறிவு விரிவடைய விரும்பிக் கணிதம் இயற்கை விஞ்ஞானம், மனிதஇயல் (Humanities) முதலியவைகளி லும் தேர்ச்சி பெற்ருர். தத்துவ சாத்திரத்தில் புலமையும் கட்டுப் பாடற்ற சிந்தனையாளர் (Free thinker) என்ற புகழும் பெற்ற மருத்துவர் வான் எண்டி (Van Ende) என்னும் அறிஞரிடம் லத்தீன் மொழி பயின்ருர். அம்மொழி வாயிலாகப் பண்டைக்கால, இடைக் கால, இக்கால ஆசிரியர்களின் நூல்களையும் கற்ருர். டேக்கார்ட்டின் நூல்களில் பெரிதும் ஆர்வங்கொண்டார்.

ஸ்பிநோஸாவின் கொள்கை மரபுக்குமாருனது என்ற செய்தி யூத சமயக் குழு (Synagogue)வின் முதியோர்களுக்கு எட்டிற்று. அவர்கள் ஸ்பிநோஸாவை வரவழைத்துக் கேள்விகள் கேட்டனர். அவருடைய விடைகளால் அவர் கொள்கை 'பயங்கரமானது' என்று உறுதியடைந்தனர். பின்னர், அவருடைய கொள்கைகளைக் கைவிட்டு மீண்டும் மரபின் வழி வந்த கொள்கைகளை அவர் ஏற்றுக் கொள்ளும்படி முயற்சி செய்தனர். அதில் வெற்றி பெருததினுல், ஸ்பிநோஸா தம் கொள்கைகளை வெளியிடாமல், வெளித்தோற்றத் திற்கு மரபின் வழிவந்த கொள்கைகளையே ஒப்புக்கொள்ளுவது போல் இருப்பின், ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அளிப்பதாக உறுதி கூறினர். ஆனல் ஸ்பிநோஸா அதற்கு இணங்க மறுக்கவே, அவர், அக்குழுவினரால், 1656 ஆண்டு ஜூலை மாதம் 27ந்தேதி, யூதர்கள் குழுவினின்றும் விலக்கப்பட்டார். அன்று முதல் ஒருவரும் அவருடன் உரையாடவோ அவருக்கு உதவி அளிக் கவோ அவருக்கருகில் வரவோ அவரால் கூறப்பட்ட அல்லது எழுதப்பட்டவைகளைப் படிக்கவோ கூடாதென ஆணை பிறந்தது. யூதர்கள் தங்களுடைய சமயக்கோட்பாடுகளுக்கு எதிராகச் சென்ற எவரையும் தங்களுக்கு வஞ்சகம் செய்பவர்களாகவே கருதினர். ஆனல் ஸ்பிநோஸாவோ அக்கால யூதர்களின் கோட்பாடுகளைத் தாம் எதிர்க்கத் தவறினல் உண்மைக்கு (Truth) வஞ்சமிழைப்ப தாகவே கருதினர். இதன் பயனுகவே அவருடைய 24 வயதில் தம் இனத்தோரிடமிருந்து விலக்கப்பட்டார். சமய வெறிகொண்ட இளைஞன் ஒருவன் ஒருமுறை அவரைக் கொல்லவும் முயன்ருன்.

இவ்வாறு யூத சமயத்தினின்றும் விலக்கப்பட்ட பின்னர் ஸ்பிநோஸாவின் தந்தை அவரைத் தம் மகனைக் கருத மறுத்தார். அவருடைய தந்தை இறந்தபின் அவருடைய தமக்கை ஸ்பிநோஸாவுக்குப் பிறப்புரிமையாகச் சேரவேண்டிய பொருளைக் கவர முயன்றார். ஆனால் ஸ்பிநோஸா வழக்குத் தொடுத்து, வெற்றி பெற்று பிறகு தாம் அடைந்த பொருளனைத்தையும் தம் தமக்கைக்கே கொடுத்துவிட்டார். இது ஸ்பிநோஸா பொருளுக்காக போராடவில்லை, நேர்மையை நிலைநாட்டவே போராடினார் என்பதைக் காட்டுகிறது.

பின்னர் ஆம்ஸ்டர்டாம் என்னும் ஊருக்கு வெளியில் சமூக வாழ்க்கையில் கலவாமல் ஸ்பிநோஸா தனித்து வாழலானார். 'பருக்' (Baruch) என்றிருந்த தம் பெயரை 'பெனிடிக்ட்' (Benedict) 'அருள் பெற்ற' என்று இலத்தீன் மொழிக்கு மாற்றிக் கொண்டார். கண்ணாடி வில்லைகளைச் சாணைபிடிப்பதை வயிற்றுப் பிழைப்பிற்காகவும் தத்துவ ஆராய்ச்சியைத் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகவும் மேற்கொண்டார். 1661ம் ஆண்டில் லெய்டனுக்கு (Leyden) அருகிலுள்ள ரைன்ஸ்பர்க் (Rhynsburg) என்னும் நகரத்திற்குக் குடியேறினார். இங்கே, வெளியில் மிகுதியாகச் செல்லாமல் தனிமையில் வாழ்ந்துவந்தார். முதலில் அவர் விவிலிய நூலைப்பற்றிய பழமையான விளக்கத்தைத் தாக்கி, 'சமயம் பற்றிய உரை' (Treatise on Religion) என்னும் இறையியல் நூல் எழுதினார். பிறகு, பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் கடவுட் கொள்கையைக் கைவிட்டு எப்படி புதிய ஏற்பாட்டில் இரக்கமுள்ள கடவுளைப்பற்றி பேசப் பெறுகிறதோ அப்படியே ஸ்பிநோஸா அறவியல் என்னும் தம் நூலில் இரக்கமுள்ள கடவுட் கொள்கைக்கு இடம் தருகிறார்.

சிறிய உடலும் கரிய நிறமும் கரிய சுருண்ட மயிரும் நீண்டு கருத்த புருவங்களும் என்புருக்கி நோயினால் கண்களிலிருந்து வீசிய நலமற்ற பளபளப்பும் அமைந்த அவர் புறத்தோற்றம் கவர்ச்சியானதன்று. தம் உடைகளில் அவர் அக்கரை கொள்ளவில்லை. 'மட்டமான பொருளுக்கு விலையுயர்ந்த உறை தேவையில்லை' என்று அவர் கூறுவதுண்டு. ஸ்பிநோஸா எளிய வாழ்க்கையையே விரும்பினார். எனினும் அவருடைய மேதைத் தன்மையை உணர்ந்த சிலரின் வற்

புறுத்தலுக்கு இணங்கி ஹேக் (Hague) என்னும் ஊருக்கு அருகில் உள்ள ஊர்பெர்க்குக்குச் (Voorburg) சென்று (1673—1665) வசித்தார். பிறகு ஹேக்குக்குக்கே சென்று (1670) அங்கேயே தம் வாழ் நாள் முழுதும் இருந்தார். ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த புதிது புனைபவராயிருந்த வான் ஷர்னஸ், (Von Tschirnaus) பிரிட்டிஷ் ராயல் சொஸைட்டி (British Royal Society) யின் செயலாளர் ஓல்டன் பெர்க் (Oldenberg), டச்சு நாட்டு விஞ்ஞானி ஹியுஜென் (Huygens), தத்துவ அறிஞரான லைப்னிஸ், ஆம்ஸ்டர்டாம் நகரத்தைச் சேர்ந்த செல்வமிகுந்த வணிகர் சைமன் டி விரிஸ் (Simon de Vries) முதலியோர், ஸ்பினோஸாவைக் கண்டு தம்பாராட்டுதலையும் வணக்கத்தையும் தெரிவித்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர். அவர்கள் ஸ்பினோஸாவின் புகழைப் பரப்பவும் அவருடைய வருமையைத் தீர்க்கவும் பெரிதும் முயன்றனர். ஆனால் அவர்கள் வெற்றி பெறவில்லை. சைமன் டி வ்ரிஸ் ஸ்பினோஸாவுக்கு அன்பளிப்பாக 1000 பிளாரின்கள் அளிக்க முன் வந்த போது அவர் அதனை ஏற்கவில்லை. பின்னர் அச்செல்வந்தர் தம் பொருள்கள் முழுவதும் ஸ்பினோஸோவின் பெயருக்கே இறுதி விருப்பப் பத்திரம் எழுத விரும்பிய பொழுது ஸ்பினோஸா அதனையும் மறுத்து, முறையாகச்சேரவேண்டியவருக்கே அளிக்குமாறு அச்செல்வந்தரின் விருப்பத்தை மாற்றியமைக்க முயன்றார். கடைசியாக, அப்பெருந்தகையின் மறைவுக்குப்பின் அவர் விருப்பப்படி 500 பிளாரின், வருடந்தோறும் உதவிச் சம்பளம் (Pension) ஆக அளிக்க அவருடைய வாரிசுதாரர் முன் வந்த பொழுதும் அத்தொகை அதிகம் என்று கருதி 300க்கு மேல் ஏற்க மறுத்தார்.

பிறகு பிரஞ்சு நாட்டு மன்னர் லூயி (Louis XIV) ஸ்பினோஸா தம்முடைய அடுத்த நூலை அவர் பெயருக்குப் அன்புரிமையாக்கினல், உதவிச் சம்பளம் அளிப்பதாக முன் வந்த போது ஸ்பினோஸா தாம் உண்மையாகப் பாராட்ட முடியாத ஒருவரை முகமனுக அல்லது வஞ்சப்புகழ்ச்சியாக ஏதும் செய்ய விருபவில்லை என்று கூறி, மன்னரின் விருப்பத்திற்கு இணங்கவில்லை.

இவையனைத்திற்கும் மேலாக 1673-ல் ஹைடல்பர்க் பல்கலைக் கழகத்திலிருந்து ஓர் அழைப்பு வந்தது. மரபின் வழிவந்த சமயக்

கொள்கைகளைப் பழிக்காமல் இருந்தால், மற்றப்படி தத்துவத்தில் எல்லா உரிமைகளையும் அளிப்பதாக உறுதி கூறி, தத்துவ சாத்திரத்தில் பேராசிரியப் பதவியை ஏற்குமாறு இவர் அழைக்கப்பட்டார். ஆனால் பிறர் கட்டுப்பாடுகளுக்கு அடங்காத நம்பிக்கைகளையும் எண்ணங்களையும் கொள்ளும் தன்னுரிமையைப் பெரிதும் மதித்த ஸ்பினோஸா, உண்மையைத் தாம் கண்ட வகையில் கூறி பட்டினி இருப்பதையே மேலாகக் கருதி இணங்க இயலாதென நன்றிதெரிவித்து அவ்வழைப்பை ஏற்க மறுத்தார் இதனால் அவருடைய தன்னுரிமைப் பற்று புலப்படுகின்றது.

ஸ்பினோஸாவின் ஆழ்ந்த அறிவும் நடத்தையின் மேம்பாடும் பலருடைய மனத்தைக் கவர்ந்தன. மேலும் அவர் தம்முடைய எளிய வாழ்க்கையினாலும் தன் நலமின்மையினாலும் உண்மையின் ஆர்வத்தினாலும் தத்துவ அறிஞர்கள் பெற்றிருக்கவேண்டிய சிறந்த பண்புகளை விளக்கும் வகையில் வாழ்ந்தார். கண்ணாடி வில்லைகளைச் சாணைபிடிக்கும்போது எழும் தூசு உட்புகுந்ததாலும், வேலை மிகுதியால் ஏற்பட்ட களைப்பாலும் என்புருக்கி நோய் அவரைப் பற்றி இருந்தது. 1677-ம் ஆண்டு மாரிக்காலம் நலிவுற்றிருந்த அவர் உடலைப் பின்னும் சீர் கேடாக்கியது. இளவயதான நாற்பத்தியைந்தாம் ஆண்டில் (1677) அவர் காலமானார்.

ஸ்பினோஸாவின் வாழ்நாளிலே இரண்டு நூல்களே வெளியிடப்பட்டன. ஒன்று அவரை ஆசிரியர் என்று அறிவித்து வெளியிடப்பட்ட நூல்; "டேக்கார்ட்டின் தத்துவத்தின் அடிப்படைகள் (Principles of Descartes' Philosophy) என்னும் பெயருடையது; மற்றொன்று ஆசிரியர் பெயர் அறிவிக்காமலேயே வெளியிடப்பட்ட நூல்—'இறைஇயல்—அரசியல் உரை' (Theological political treatise). அவர் வாழ்நாளுக்குப் பின் வெளியிடப்பட்டவையில் சிறப்பானவை:

அறவியல் - Ethics
சிறிய கட்டுரை - Short Treatise
அறிவு வளர்ச்சி - On the improvement of understanding
அரசியல் கட்டுரை - Political treatise
எபிரேய மொழி இலக்கணம் - Hebrew Grammar

## நோக்கம்

### (AIM AND OUTLOOK)

ஸ்பினோஸா, டேக்கார்ட்டையும் லைப்னிட்ஸையும் போன்று புதிதாக ஒரு திட்டம் வகுப்பதைவிட உள்ளவைகளை முறைப்படுத்துவதையே முதன்மையாகக் கருதினார் என்று பால்கென்பெர்க் (Falckenberg) என்னும் தத்துவ வரலாற்று நூலாசிரியர் கூறுகிறார்.* ஸ்பினோஸாவின் முடிபு வந்தூக்கலினால் (inspiration) விளைந்ததன்று. அது முறையாகவும் முழுமையாகவும் முடிவுவரை சிந்திப்பதையும் அடிப்படையாகக் கொண்டது.

டேக்கார்ட்டின் அடிப்படைக் கருத்துக்களை மேற்கொண்டே ஸ்பினோஸா அளவையியல் முறையில் தம் திட்டத்தை அமைத்தார். எனினும் அவைகளை ஸ்பினோஸா வற்புறுத்தியும் சிற்சிலவிடங்களில் மாற்றியும் தழுவியும் தம் திட்டத்தை உருவாக்குகின்றார். அவற்றில் மூன்று இணைக்கருத்துக்கள் அவருடைய மனத்தைக் கவர்ந்ததோடன்றி, அவரைச் சிந்திக்கவும் தூண்டின. அவை,

(1) மனித உள்ளம் தானே தன்னுடைய தூய அல்லது சார்பற்ற சிந்தனைமூலம் உண்மையைப் பெறமுடியும் என்பதில் அறிவு முதற் கொள்கையினர் கொண்டிருந்த நம்பிக்கையும் கணித முறையில் கொண்டிருந்த உறுதியும்

(2) பொருள் (substance) பற்றிய கருத்தும் அதனுடன் பரப்புடைமை (extension), சிந்தனை (thought) பற்றிய இருமைக் கொள்கையும்

(3) பொறியியல் தன்மையை அடிப்படையாகக் கொள்வதும் அத்துடன் சடமும் (matter) உள்ளமும் (mind) ஒன்றினை ஒன்று செயல்படுத்தும் திறமையற்றன என்பனவுமாம்.

ஸ்பினோஸா நோக்கத்திலும் (aim), முறையிலும் (Method) டேக்கார்ட்டையே பின்பற்றுகிறார். டேக்கார்ட் அக்கறைகொண்ட அதே சிக்கல்களில் தாமும் ஆர்வம் காட்டியதோடன்றி, அவைகளை மேலும் பொருத்தமாகவும் முறையாகவும் தீர்க்க முற்பட்டார்.

---

*Falckenberg : *History of Philosophy*, p. 10.

டேக்கார்ட் கடவுளையும் இயற்கையையும் உள்ளத்தையும் உடலையும் தீர்மானமாக வேறுபடுத்திப் பேசினார். சிந்தனை உள்ளத்தின் இயல்பு என்றும் பரப்புடைமை பொருளின் இயல்பு என்றும் கூறினார். எனினும் கடவுள் ஒருவரே சார்பற்ற பொருள் என்றும் பொருள் என்று கூறப்படும் மற்ற யாவும் அவரைச் சார்ந்தே உள்ளவை என்றும் அறிவித்தார். இவ்வாறு டேக்கார்ட், இவ்வுலகை இரண்டு வேறுபட்ட பொருள்களாக வகுத்ததோடு, அவ்விரண்டு பொருள்களினின்றும் தனிப்பட்டவராகவே கடவுளைக் கருதியதால் அவருடைய அறிவுமுதற்கொள்கையைப் பின்பற்றிய சிலர் கடவுளை இவ்வுலகத்தினின்றும் அப்புறப்படுத்தி, இவ்வுலகோடு நெருங்கிய உறவின்றி தொலைவிலிருந்து நோக்குபவர் என்னும் நிலைக்குக் கொண்டு வந்தனர். இவ்வாறு கடவுளை உலகினின்றும் பிரிந்திருப்பதாகக் கருதுவது இரண்டு வழிகளில் கேடுள்ளதாகிறது. முதலாவதாகக் கடவுளை உள்ளீடு ஒன்றுமில்லாத வெறும் எண்ணமாகவும் ஆகவே தேவையில்லாதவராகவும் செய்தது. இரண்டாவதாகப் பல பொருள்கள் நிறைந்த இவ்வுலகத்தைப்பற்றிய முடிவான, ஒருமைப்பாடுடைய விளக்கத்தை அளிக்க முடியாமற் செய்தது. இதற்கு எதிராகக் கடவுளுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பை ஸ்பிநோஸா வற்புறுத்தினார். முடிவாக உண்மை என்று கொள்ளக்கூடியது கடவுளே. கடவுளோடு, பொருள்கள் என்று பொதுவாக நாம் கூறுவனவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவை தனித்து நிற்க இயலாமல் மங்கி மறைகின்றன.

இக்கருத்தினை ஸ்பிநோஸா அளவையியல் பொருத்தத்துடன் விளக்குவதில் ஈடுபட்டார். தான் இருப்பதற்கோ, அறியப் படவோ, பிறிதின் சார்பற்று இருப்பதே பொருள் என்று கருதப் பட்டால் கடவுள் ஒருவரே அத்தகைய பொருள். ஏனெனில் மற்ற யாவும் அவரைச் சார்ந்தே உள்ளவை. அவருக்குப் புறம்பாக ஒரு பொருளும் இருக்க இயலாது. ஆகவே, சிந்தனையும் பரப்புடைமையும் தனிப்பட்ட பொருள்களின் இயல்புகள் அல்ல. அவைகளும் கடவுளில் அடங்குபவையே. அவை இரண்டும் பிறிதின் சார்பற்ற ஒரே பொருளான கடவுளின் இயல்புகள் ஆகும். இப் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் அப்பொருளைச் சார்ந்தே இருக்-

கின்றன. கடவுளே எல்லாப் பண்புகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் காரணமாவர், எல்லாவற்றையும் தம்முள் கொண்டிருப்பவர். எப்பொருளும் இருப்பதற்கும் அவரே அடிப்படைக் காரணமாவர். அவர் ஒருவரே சிந்தனையும், பரப்புடைமையும் உள்ள பொருள். இவ்விளக்கத்தின் பயனாகப் பொருள்பற்றிய இருமைக் கொள்கை (Dualism of substances) மறைந்தது எனினும் இயல்புகளைப்பற்றிய இருமைக் கொள்கை (Dualism of attributes) நீடிக்கிறது. உள்ள நிகழ்ச்சிகள், பௌதிக நிகழ்ச்சிகள்பற்றிய இவ்விரு இயல்புகள் ஒன்றினையொன்று செயல்படுத்தும் திறமையற்றன. இவ்விரு வகைப்பட்ட தொடர்ச்சியான நிகழ்ச்சிகளும் ஒன்றினையொன்று குறுக்கிடாமல் இணைந்தே செல்கின்றன. (The two series are parallel to each other and never intersect). உள்ள நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது பௌதிக நிகழ்ச்சிகளும், பௌதிக நிகழ்ச்சிகளுடன் உள்ள நிகழ்ச்சிகளும் இணைந்தே நிகழ்கின்றன. அவைகள் நிகழும் முறையும், நிகழ்ச்சி வரிசையில் ஒன்றுக்கொன்றுள்ள உறவும், இவ்விருவகை நிகழ்ச்சிகளிலும் ஒரே தன்மையுடையன. "இருமைக் கொள்கை (Dualism), ஒருமைக்கொள்கைக்கும் (Monism) கடவுட்கொள்கை (Theism) அனைத்திறைக் கொள்கைக்கும் (Pantheism) ஒன்றினை ஒன்று செயல்படுத்துவது (Interaction) இணைநிலைக் கொள்கைக்கும் (Parallelism) வழி வகுக்கின்றன.*

ஸ்பிநோஸாவின் தத்துவத்தின் மையமான கருத்து, பொருள்களின் ஒருமைப்பாட்டை (unity of things) ஏற்றுக்கொள்வதோடு, அதனை அறிவுமுறைத் தேவையாக (intellectual necessity) மட்டுமன்றி உணர்ச்சிக்கும் சமயத்திற்கும் தேவையானதென்று உணர்த்துவதாகும்.

அவர் கருத்துப்படி தத்துவத்தின் முடிவு, புறநிலைத் தோற்ற உலகின் நிலையற்ற காட்சிகளைத் தவிர்த்து, நாம் உள் பொருளோடு (Reality) முற்றொருமை கொண்டு பேரின்பம் அடைவதே. எல்லையுள்ள பொருள்களை உண்மைப் பொருள்களாகக் கொண்டு அவற்றினின்றும் கடவுள் உண்டு என்று ஐயுறக்கூடிய முடிவுக்கு

*Thilly: *History of Philosophy*, p. 293.

வருவது சரியன்று. எல்லையுள்ள பொருள்களை ஐயப்படக்கூடியன. இவை நிலைத்திருக்க முடியாதவை என்பதனாலேயே அவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள நிலையான ஒரு முழுமையை உய்த்துணர வேண்டியிருக்கிறது. ஆகையால் தத்துவ ஆராய்ச்சியில் எல்லையுள்ள பொருள்களைத் தொடக்க நிலையாகக் கொள்ளக் கூடாது. சிறிதும் ஐயத்திற்கு இடமின்றியுள்ள ஒன்றாகிய உண்மைப் பொருளை முதலாகக் கொண்டு எல்லையுள்ள பொருள்களை வருவித்துக் கொள்ள வேண்டும்.

ஸ்பினோஸாவின் கருத்துக்களை சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் முதலில் நாம் அவருடைய நோக்கம், முறை இவை யாவை என அறியவேண்டும். ஸ்பினோஸா ஒழுக்கத்தை முதன்மையாகக் கொள்பவர். ஒழுக்கத்தின் வாயிலாகவே தத்துவ முடிவுகளைக் காண்கிறார்.

(1) ஸ்பினோஸாவின் நோக்கம் பயனுள்ளதும் மாறாததும் எல்லோராலும் அடையக் கூடியதுமான நன்மையைக் கண்டறிவதேயாகும். இவ்வுலகில் காணப்படும் அனைத்தும் முடிவுள்ளவைகளாகவும் (finite), ஒன்றுக்கொன்று முடிவில்லாத தொடர்புடையவையாகவும் உள. எல்லையுள்ள இவ்வுலகைப் பற்றிய மாறுங்கருத்துக்களில் ஸ்பினோஸா மனநிறைவு அடையவில்லை. தன்னையே தெரியப்படுத்திக் கொள்ளக்கூடிய நன்மை ஏதாவது உண்டா? பிறவற்றிற்கு இடங்கொடாது இந்த நன்மை உள்ளத்தை முழுவதும் கவரக்கூடியதாயிருக்கிறதா? தன்னைத் தேடுவதிலும் அடைவதிலுமே தொடர்ந்து, மேலான, முடிவற்ற இன்பத்தைத் தரக்கூடியது ஏதாகிலும் உண்டா? என்னும் தத்துவ ஆராய்ச்சியை ஸ்பினோஸா மேற்கொண்டார். மேலும் அத்தகைய இன்பம் அழியாததாக இருப்பதுடன், அனைவரும் அடையக் கூடியதாக இருக்கவேண்டும் என்று கருதினார். அத்தகைய இன்பம் செல்வம், புகழ், புலனின்பம் முதலியவைகளால் அடைய முடியாதெனத் தெளிவாக உணர்ந்தார். ஏனெனில் இவை யாவும் நிலையானவையல்ல, அழிவுடையன. இவைகளை விரும்பினால் இவைகள் மூலம் நாமடையும் இன்பமும் அழிவுடையதேயாகும். இவையன்றி நாம் அழிவில்லாத முடிவில்லாத, துன்பத்தின் கலப்பில்லாத பொருளிடம் பற்றுக்

கொண்டால் நம்முடைய இன்பமும் அத்தன்மைகளையே பெறும். ஆகவே அப்பொருளையே நாம் விரும்ப வேண்டும். அதனை அடையவே நம் முழு ஆற்றலுடன் முயற்சி செய்யவேண்டும் என்று எண்ணினர். அவருடைய அறவியல் நோக்கத்தை அவருடைய நூல்களின் தலைப்புக்களிலிருந்தே அறிகின்றோம். அவர் இயற்றிய நூல்களுள் தலையானதற்கு விளக்கமாகவே 'அறவியல்' என்னும் பெயர் வழங்கினர். ஆனால் அந்நூலைப் படிக்கும்பொழுது, செயல் முறையில் எழும் சிக்கல்களுக்குச் சிறிதளவே இடம் தரப்பெறுவதாகத் தோன்றுகிறது. அவர் கூறும் வரையறைகள், தற்புல உண்மைகள் மனித வாழ்க்கைக்குத் தொடர்பற்றவையாகத் தோன்றுகின்றன. எனவே அந்நூலைப் படிக்கும்போது அதற்கும் ஒழுக்கத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்னும் எண்ணமே முதல் முதலாகத் தோன்றுகிறது. ஆனால் நாம் அவருடைய திட்டத்தைப் பாராட்ட வேண்டுமானல் அவருடைய நோக்கத்தின் தனித்தன்மையை உணர்ந்து கொள்ளுவது கட்டாயமாகிறது. ஒழுக்கம் என்பது மனித இனத்திற்கு மட்டுமே உரியதன்று. ஒழுக்கம் என்னும் பொதுமையின் ஒரு பகுதியே மனிதனின் நடத்தை அல்லது ஒழுக்கம். இயற்கையின் ஒரு பகுதியே மனிதன். ஆகவே மனிதனைப் புரிந்து கொள்வதற்கு, முதலில் நாம் இயற்கையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஸ்பிநோஸா, மனிதனுக்கு ஏற்றதான நன்மையைக் கண்டுபிடிக்கும் நோக்கம் உடையவராயிருந்தார். ஆனால் அவர் கருதும் "நன்மை", நம் நன்மையைப் பற்றியோ அல்லது மனித இனத்தை மட்டும் பற்றியோ இராமல் விரிந்த பொருளுடையதாகிறது.'

(2) மனிதர்களாகிய நாம் நம்முடைய குறுகிய நோக்குடனே யாவற்றையும் காண்கின்றோம். இயற்கையிலுள்ள மற்ற யாவும் நம்முடைய நன்மைக்காகவே படைக்கப்பட்டிருப்பதாகவே எண்ணுகின்றோம். இத்தகைய மனப்பான்மையை ஸ்பிநோஸா எதிர்த்து விஞ்ஞான நோக்கத்தின் தேவையை விளக்குகின்றார். ஸ்பிநோஸாவின் தத்துவத்தின் முதல் பண்பு அறவியல் குறிக்கோளானல், இரண்டாவது பண்பு விஞ்ஞான நோக்காகும். இவ்விரண்டு பண்புகளும் அதாவது விஞ்ஞான நோக்கும், அறவியல் கூறும் உறுதிப்

பொருள்களில் ஆர்வமும் அவருடைய தத்துவத்தின் தனிக் கவர்ச்சிக்குக் காரணமாகும்.

(3) மூன்றுவது பண்பு, அவருடைய தொகுப்பு நோக்கமாகும். அவருடைய அறிவியல் திட்டத்திலும், அடிப்படைத் தத்துவத்திலும் 'முழுமை' பற்றிய எண்ணம் (idea of the whole) சிறப்பாக ஆட்சி புரிகின்றது. அவருடைய இறையியல்-அரசியல் உரையில் (Theological-political treatise) உண்மையான இன்பமும் பேரின்பமும் நல்லதை அனுபவிப்பதையே பொறுத்ததாகின்றதல்லாமல் தான் ஒருவன் மட்டுமே அதனை அனுபவிப்பது என்னும் தற்பெருமையிலன்று; பிறர் அடையாத நன்மைகளைத்தான் அடைந்ததினுல் தானே மிகுந்த இன்பமுடையவன் என்று நினைப்பவன் உண்மையான பேரின்பம் என்ன என்பதனை உணராதவனுகிருன் என்று குறிப்பிடுகிருர். இறுதியில் எல்லாம் ஒருமைப்பாடு உடையது என்பதே ஸ்பினேஸாவின் திட்டத்தின் மையக் கருத்து. 'முழுமை' என்பதின் ஒருமைப்பாடு அளவையியலின் உண்மை எது என்று கண்டறிவதற்கும் அறவியலில் நிலையான உறுதியான நன்மையைத் தெரிந்து கொள்வதற்கும் மேல்வரிச் சட்டமாகிறது.

(4) நான்காவது பண்பு, ஸ்பினேஸாவின் தத்துவம் தொடக்கத்திலிருந்து இறுதிவரையில் சமயத் தன்மையைப் பெற்றிருப்பதாகும். ஆனல், இதனல் ஸ்பினேஸாவின் தத்துவத்தை ஒரு சமயமாகக் கொள்ளலாகாது. லிக்டன்பர்க் (Lichtenberg) அதனை வருங்கால சமயம் என்று குறிப்பிட்டது பொருந்தாதது. லியான் ராத் (Leon Roth) ஸ்பினேஸாவின் தத்துவம், "நோக்கத்தில் அறிவியலாகவும் முறையில் விஞ்ஞானமாகவும் அமைந்துளது. ஒருமைப்பாடு என்னும் கருத்தின் விளக்கமாக உளது. சமயத்துடன் இணைத்துப் பேசப்பெற்றுளது"* என்று கூறுகின்ருர்.

*L. Roth: *Spinoza*, p. 54.

## முறை

## (METHOD)

ஸ்பினோஸா, டேக்கார்ட் கருதியது போலவே, தத்துவத்தின் குறிக்கோள் நிறைவான அறிவை அடைவதே ஆகும் என்றும் அதனை தெளிவானதும் தனித்தன்மையுள்ளதுமான சிந்தனையாலேயே அடைய முடியும் என்றும் கருதினர். மேலும் அவர் டேக்கார்ட்டின் வடிவ கணித முறையையே (Geometrical method) தம்முடைய தத்துவத்தில் கையாளுகின்றார். அதன் பயனாக இயற்கைக் கொள்கைக்கு உயர்வு அளிக்கப்பட்டிருப்பதையும் காண்கின்றோம். எனினும் அவர்,புற உலகைப்பற்றி அறிவதில் டேக்கார்ட்கையாண்டபகு முறையை ஏற்க மறுத்தார். அவருடைய திட்டத்தில் “இருமைக் கொள்கை (Dualism) ஒருமை கொள்கைக்கும் (Monism), கடவுட் கொள்கை (Theism) அனைத்திறைக் கொள்கைக்கும் (Pantheism), ஒன்றினை ஒன்று செயல் படுத்துகிறது என்னும் கொள்கை (Interactionism) இணைநிலைக் கொள்கைக்கும் (Parallelism) வழிவகுப்பதைக் காண்கின்றோம்” என்று கூறப்பட்டதை மீண்டும் நினைவு கொள்வோம்.

ஸ்பினோஸாவும் தெளிவும் தனித்தன்மையும் பெற்றுள்ள எண்ணங்களே உண்மையானவை என்றும் தெளிவில்லாத எண்ணங்கள் பற்றுக் குறையானவை அல்லது தவறானவை என்றும் கருதினர். அறிவாராய்ச்சி தொடர்ச்சியான வாக்கியங்கள் (chains of propostions) மூலமாக நடைபெறுகிறது. மேலும் உள்ளுணர்வில் யாவற்றிற்கும் உயர்ந்த உறுதியைக் காண்கின்றது. எனினும் தெளிவும் தனித்தன்மையும் பெற்ற எண்ணங்களின் உண்மைக்கு கடவுள் பிணையமாக நிற்பவர் (Guarantor) என்றும் நம் உள்ளத்தைப் பற்றிய எண்ணம் கடவுளைப் பற்றிய எண்ணத்தைக் காட்டிலும் மிகுதியாக உடனடியாக அறியப்படுகின்றது என்றுகருதாமல் கடவுளைப் பற்றிய எண்ணமே நாம் பெற்றுள்ள எல்லாவற்றிலும் உறுதியானதென்றும் மற்றவையெல்லாம், முடிந்தவரையில் அதனின்று கிடைக்கப் பெறவேண்டியவை அல்லது கடவுள் சார்பாகவாவது கருதப் படவேண்டியனவையே என்று ஸ்பினோஸா கூறுகின்றார்.

அவருடைய நூல்களில் தலையானதான 'அறவியல்' என்பது வடிவ கணிதத்தைப் பற்றிய உரை போன்று எழுதப்பட்டிருக்கின்றது. அது, வரையறைகள் (definitions), தற்புல உண்மைகள் (axioms) முற்கோள்கள் (அடிப்படை விதிகள்) (postulates) முதலியவைகளுடன் தொடங்கிப் பல தொடர்ந்த தேற்றங்கள் (theorems) மூலமாக நடைபெறுகின்றது. இவற்றுடன் குறிப்புகளும் (notes-scholia) சேர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் வடிவ கணிதம் பயிலுபவர் எவ்வாறு கோடுகள் (lines), தளங்கள் (planes), கோணங்கள் (angles) ஆகியவற்றைக் கருதுகிறார்களோ, அவ்வாறே இவர், கொள்கையிலும் செயல் முறையிலும் உலகத்தையும் மனிதனையும் மனவெழுச்சிகளையும் கருதுகின்றார். வடிவகணித முடிவுகள் அவைகளுடைய தற்புல உண்மைகளிலிருந்து தவிர்க்க முடியாதமுறையில் கிடைக்கப் பெறுவதைப்போல தத்துவ அறிஞர் கருதுகின்ற ஒழுக்க, (moral) பௌதிக (physical) உண்மைகள் பொருள்களின் தன்மைகளை அறிவிக்கும் வரையறைகளிலிருந்து முழு உறுதியுடன் பெறப்படுகின்றன. வடிவ கணித அறிஞர் மூன்று கோணங்களின் எண்ணிக்கை இரண்டு நேர் கோணங்களுக்குச் சமமாகின்றது என்பது எந்தமுடிவுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கருதாதது போலவே, தத்துவ அறிஞரும் பொருள்களின் முடிவு நிலையாய காரணம் என்ன என்பதை ஆராய்வதில்லை. கணிதமுறையில் வரையறுக்கப்பட்டது என்னும் அவர்கொள்கைக்கு (mathematical determinism) அவர் கையாண்ட முறைகாரணமன்று, அதற்கு மாறாக அவர் உலகைவடிவகணிதத்தன்மையில் அதாவது வரையறுக்கப்பட்ட நோக்குடன் கருதியதே, அம்முறையை அவர் கையாண்டதின் காரணமாகும். வடிவகணிதத்தில் ஒரு சிக்கலைப் (problem) போலவே ஸ்பினோஸாவின் திட்டம் உலகத்தைக் கருதுகின்றது. வடிவ கணித வாக்கியங்கள், அவைகளின் அளவையியல் முன்னெண்ணங்களிலிருந்து கட்டாயமாகக் கிடைக்கப் பெறுவது போன்று அனைத்தும் பிரபஞ்சத்தின் மூல அடிப்படை அல்லது நிலையிலிருந்து வருவதாகக் கருதப்படுகின்றது. அவ்விளைவுகளும் காலத்தின்பாற்பட்ட விளைவுகளாயிராமல், என்றுமுளதன்மை பெற்றவை. பொருள்கள் மூதற்காரணத்திலிருந்து (first cause) வெளிவருவது, காலத்தில் நிகழும் பரிணமைத்தைப்

போன்றதல்ல. ஆனால் என்றுமுள நிலையில் நிகழ்வதே ஆகும் (sub specie aeternitatis). காலம் சிந்தனையின் ஒருமாறுநிலையே. (Time is a mere mode of thought) (modus cogitandi), முன் பின் என்பவை இல்லை— இருப்பது என்றுமுளதே. (There is no before and after, but only eternity). அறிவு அல்லது அளவையியல் காரணதகிற்கும் உண்மையான காரணத்திற்கும் (rational or logical ground), அடி நிலை (ground) வேறுபாடு இல்லை. சிந்தனையும் இருத்தலும் முற்றொருமை கொண்டவை. உண்மையில், ஒரு பொருள் மற்றொன்றைப் பின்பற்றுகின்றது அல்லது உண்டாக்குகிறது. இப் பிரபஞ்சமே ஒரு காரண காரியத்தொடர் (chain). கணித முறையில் மெய்ப்பிக்கும் போது ஒரு வாக்கியம் வேறொரு வாக்கியத்தின் கட்டாயமான விளைவாவதைப் போன்று, இயற்கையில் ஒவ்வொன்றும் வேறொன்றின் கட்டாயமான விளைவாகும். முழுமையானது, தன்னுள்ளே ஒன்றுக்கொன்று உறவு கொண்ட ஒரு திட்டம். அதில் ஒவ்வொன்றும் அதற்குரிய கட்டாயமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இதனின்றும் ஸ்பினேஸாவின் திட்டம், கண்டிப்பான வரையறைப்பட்ட தன்மை உடையது என்பது புலப்படுகிறது. மேலும் கணிதத்தில் எவ்வித நோக்கமும் (purpose) அல்லது உட்கருத்தும் இல்லாதது போலவே இயற்கையிலும் இல்லை. இக்கருத்தினால் ஸ்பினேஸாவின் தத்துவம் இயற்கையின்கண் நோக்க அமைப்பு உண்டு என்னும் கொளகையை எதிர்க்கின்றது. எண்ணமும் பரப்புடைமையும் அடிப்படைப் பொருளான கடவுளின் மாறுநிலைகளாதலின் அப்பொருளுக்கு முன்பாகவோ காரணமாகவோ ஒரு நோக்கமோ உட்கருத்தோ இருக்க முடியாது. கடவுளுக்கு நோக்கத்தைக் கற்பித்தால், சிந்தனைக்கு முதலிடம் கொடுப்பதாகவே முடியும். சிந்தனை கடவுளின் மாறுநிலை: அல்லது வெளித்தோற்றமாதலின் (manifestation), பரப்புடைமையின் நிலையிலேயே இருக்கின்றது.

ஸ்பினேஸா கையாண்ட வடிவகணித முறை தத்துவத்திற்கு ஏற்றதன்று எனச் சிலர் குறை கூறுகின்றனர். அவருடைய முதன்மையான நூலாகக் கருதப்படும் 'அறவியல்' என்னும் நூலின் யூக்ளிடிய அமைப்பு செயற்கையாக உள்ளதென்றும் அவருடைய

கருத்துக்களின் விளக்கம் எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ற குழூஉக் குறிகளைமட்டும் கொண்டதாக உணர்ச்சியற்று இருக்கின்றது என்று கூறப்படுகின்றது. அவருடைய 'அறநூல்' வடிவ கணிதம் உண்மைகளை மெய்ப்பித்துச் செல்லும் முறையில் செய்யப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் பல வரையறைகளையும் தற்புல உண்மைகளையும் முன்னுரையாகப் பெற்றுள்ளது. ஒவ்வொரு நியாயமும் தொடர்ந்து இணைந்த பல வாக்கியங்கள் உருவில் அமைந்துள்ளது. ஒவ்வொன்றும் முழுமையான விளக்கத்துடன் உள்ளது. ஸ்பினோஸாவின் திட்டத்தின் சிக்கலான அமைப்பு, கணிதத் தன்மையில், தேற்றங்கள், மெய்ப்பித்தல் ஆகியவற்றின் உருவத்தில் அமைந்திருக்கின்றது. இங்கு நாம் கவனிக்க வேண்டியது யாதெனில் வடிவகணிதத் தன்மையில்லாத ஒரு பொருளைப்பற்றி ஆராயும்போது வடிவகணித முறையைக் கையாளக்கூடாது. தத்துவக் கருத்துக்களை அம்முறையில் விளக்கும் முயற்சி முன்னமேயே புலமைக் கொள்கையினரால் செய்யப்பட்டிருக்கிறது. தாமஸ் ஹாப்ஸ் தத்துவப் பொருள்களை கணிதத் தன்மையில் விளக்கினர். ஆகவே அடிப்படைத் தத்துவத்தில் கையாளப்பட்ட வடிவகணித முறை ஸ்பினோஸாவினுல் கண்டு பிடிக்கப்பட்டதன்று.

எனினும் ஸ்பினோஸா இம்முறையைக் கையாண்ட காரணத்தைப்பற்றி நாம் அறிய எண்ணுவது இயற்கையே. அவர் வடிவ கணித முறையைப் பயன்படுத்தியது பொதுவாகத் தரப்பெறும் விளக்க முறையைக் கையாள இயலாததாலன்று - அத்தகைய பொதுமுறை குறைபாடுடையதெனக் கருதியதால்தான் அவர் அதனைப் பயன்படுத்தவில்லை. மக்களின் விருப்பு வெறுப்பு முதலியவற்றைக் கடந்து நிற்கும் உண்மையை அவர்கள் விருப்பு வெறுப்புகளுக்கிடம்தராமல் கூறுவதே தத்துவம் என்பது ஸ்பினோஸாவின் கருத்தாகும். (Philosophy, to him, is an impersonal statement of impersonal truth). கணித நூல்களின் இத்தகைய உண்மையை விளக்க ஏற்றவையாயிருப்பதாலேயே ஸ்பினோஸா தம்முடைய தத்துவ விளக்கத்திற்கும் இந்த நடையையே கையாண்டார். "பொருள்களின் தன்மை தன்னையே வெளிப்படுத்துவது தத்துவ

மாகும். தத்துவ அறிஞர் அதன் குரலாவர்.'' ('Philosophy is the self-articulation of the nature of things, and the philosopher is its voice')* அதன் பொருட்டே, கோடுகளையும் சமதளங்களையும் (planes), பொருள்களையும் கருதும் முறையிலேயே மனித செயல்களையும் விருப்பங்களையும் கருதவேண்டும் என்று ஸ்பினோஸா உரைக்கின்றார். தத்துவம் தனிப்பட்டவர்களின் தேவைகளைக் கடந்து நிற்பதாகும். அது உண்மைகளைப் பிரதிபலிப்பதாகும். திரிபும் மனவெழுச்சிகளுமின்றிப் பிரதிபலிப்பதே அதன் தன்மையாகும். மனவெழுச்சிகள் அல்லது உரு திரிபுகள் (distortion) இல்லாத ஆழ்ந்த சிந்தனையே அதன் சிறப்பாகும். ஆகவே, அவருடைய 'அறவியலின்' வடிவ கணித முறை (geometrical order of Ethics) புறச்சார்புடைய தன்மையை வெளிப்படுத்துவது தெளிவாகின்றது. மனித நடத்தை உள்பட எல்லாத் துறைகளிலும் நடைபெறும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வேண்டிய உண்மைத் தன்மையை வடிவ கணிதமுறை பெற்றிருப்பதாக ஸ்பினோஸா கருதினார்.

தத்துவ உண்மைகளைப்பற்றிக் கருத வெறும் வடிவ கணித முறை ஏற்றதன்று. ஏனெனில் தத்துவம், கணிதம் அல்லது உண்மையைக் கருதும் விஞ்ஞானங்கள் ஆகியவற்றின் அடிப்படையை நாடிச் செல்லுகின்றது. இவ்விஞ்ஞானங்கள் பலவற்றை உண்மையென்று ஏற்றுக்கொண்டே தொடங்குகின்றன. ஆனால் தத்துவம் சோதனைக் குட்படுத்தப்படாத முன் எண்ணங்களை (presuppositions) ஏற்றுக்கொள்வதில்லை. விஞ்ஞானம், அறிவியலில் சில குறிப்பிட்ட பகுதிகளைப் பற்றியதாயிருக்கிறது. முன்னமேயே அவைகளின் உண்மைநிலை அறியப்பட்டதாகக் கருதப்படும் பொருள்களை பற்றியே நடைபெறுகின்றது. அப்பொருள்கள் எவ்வாறு அறியப்படுகின்றன என்று அறியாமலும் பதார்த்தங்களையும் (categories), உருவங்களையும் (forms), முன் எண்ணங்களையும் (presuppositions) பற்றி ஆராயாமலும் விஞ்ஞானம் செயல்படுகிறது. ஆனால் தத்துவம் எவற்றுக்கும் தொடக்க நிலை என்ன என்பதனைத் தேடிச் செல்கிறது. தனிப்பட்ட விஞ்ஞானங்கள், பொருள்களைப்பற்றி தற்

* L. Roth: *Spinoza*, pp. 37-38.

காலிக கருத்துக்களுடன் அமைவு பெற்று, அவைகளின் விளக்கத்தையும் சரிபார்த்தலையும் தத்துவம் நிறைவேற்றுமாறு விட்டுவிடலாம். ஆனால் அவ்வாறே ஒரு தத்துவம் செய்யுமாயின் அதனை சோதிக்கவும் குறைகூறவும் வேறொரு தத்துவம் தேவைப்படுகின்றது.

வடிவகணித முறையை தத்துவத்தில் கையாளுவது தவறு என்பதற்குக் காரணம் என்ன? தத்துவத்தில் அடிப்படையாகக் கொண்டுள்ள பதார்த்தமாகிய ஆன்மீகப் பொருளைக் கருத வடிவ கணித முறை ஏற்றதன்று. இடமும் அளவும் நிலையும் பரப்புடைமை உள்ள பொருள்களுக்கோ அல்லது ஒன்றுக்கு மூன்று வெளியில் இருக்கின்ற பொருள்களுக்கோதான் பயன்படுத்தலாம். ஆனால் தத்துவ சாத்திரம் புற உறவு அல்லது சிறப்பு உறவுகள் சிறிதுமில்லாத, ஆன்மிகத் துறையில் ஈடுபட்டிருக்கின்றது. சுருங்கக் கூறின் இம்முறை, புறச்சார்புள்ள துறைகளிலே கையாளத் தகுந்ததேயன்றி சிந்தனை அல்லது தன் நனவு (self-consciousness) பற்றிய துறைகளில் கையாளத் தகுந்தது அன்று.

மேலும் உயிருள்ள பொருள்களின் பண்புகளைப்பற்றி எண்ணும் பொழுது அளவு முறை பொருத்தமாகத் தோன்றவில்லை. இவை யாவற்றைக் காட்டிலும் ஆன்மீகத் துறையில் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவைப் பற்றியும் அறிவுத்திறன், செயல் உரிமை (freedom), கடமை (duty), அழியாமை (immortality) முதலியவைகளையும் கருதும்போது, அளவிடத்தகுந்த உறவையேபற்றி அமையும் இம்முறை எவ்வாறு தகுதியுள்ளதாகும்?

உயிருள்ள பொருள்கள் இடத்தை நிரப்புவதால், ஓரளவுக்குப் புறத்தொடர்பற்ற பொருள்களைக் குறிக்கும் பதார்த்தத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. ஆனால் சிந்தனை அல்லது தன்நனவு (self-consciousness) என்பது இடத்தில் ஒன்றுக்கொன்று புறம் என்னும் நிலையை அறவே கடந்து நிற்பது. இவ்வாறு கணித முறையின் குறை தெளிவுபடுத்தப்பெறுகிறது.

# கடவுள்

## (GOD)

ஸ்பிநோஸாவின் தத்துவத் திட்டம் அவருடைய 'அறவியல்' என்னும் நூலில் முழு வளர்ச்சியுடன் விளங்குகின்றது. அந்நூல் ஐந்து பிரிவுகள் அடங்கியது. அவையாவன—(1) கடவுள் (God), (2) உள்ளத்தின் தோற்றமும் இயல்பும் (The nature and origin of the mind) (3) மனவெழுச்சிகளின் தோற்றமும் இயல்பும் (The nature and origin of emotions), (4) மனிதர்களின் கட்டு நிலையும் மன வெழுச்சிகளின் வலிமையும் (Human bondage and the power of the emotions), (5) அறிவின் வலிமை அல்லது **மனிதச் செயல் உரிமை** (The power of intellect or human liberty) அல்லது மனிதர்களின் கட்டற்ற நிலை.

ஸ்பிநோஸாவின் திட்டத்தின் அடிப்படையான கருத்துக்கள் (fundamental notions) பொருள் (substance), இயல்பு (attribute), மாறுநிலைகள் (modes) பற்றியனவாகும். பொருள் தானகவே இருப்பது; பிறிதின் சார்பற்று அல்லது அதன் இயல்பினாலேயே அறியப்படுவது அதாவது அதனை அறிய வேறெதனைப்பற்றிய கருத்தும் (எண்ணமும்) தேவையில்லாதது. இயல்பு என்பது பொருளின் இன்றியமையாத தன்மை என்ற அறிவால் அறியப்படு வது. மாறுநிலை என்பது பொருளின் மாறுபட்ட நிலையாகும். அதா வது தனக்கு வேறான ஒன்றில் இருப்பு கொண்டுள்ளது, தனக்கு வேறான ஒன்றினால் அறியப்படுவதாகும் என்று ஸ்பிநோஸா கருது கின்றார்.

பொருளின் (substance) வறையறையிலிருந்து சில விளைவுகள் கிடைக்கப் பெறுகின்றன. பொருள் பிறிதின் சார்பற்று இருப்பதற்கு எல்லையற்றதாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையானல் அதனைப் பிறிதின் சார்பற்ற பொருளாகக் கருத முடியாது. ஆனல் அத்தகைய பொருள் ஒன்றுதான் இருக்கமுடியும் ஏனெனில் வேறொரு பொருள் இருப்பின் ஒன்றுக்கொன்று கட்டுப்பட்ட தாகுமேயன்றி சார்பற்றதாகாது. அப்பொருள் தானே உண்டா

னது. அதற்கு வேருெரு பொருளைக் காரணமாகக் கொண்டால் அது சார்புற்ற பொருளாகிவிடும், தனிப்பட்ட பொருளாகாது. ஆகையால் அத்தகைய பொருள் புறப்பொருளால் வரையறுக்கப் படாத கட்டுப்பாடற்ற ஒன்ருகும். ஒரு முக்கோணத்தின் பண்பு கள் அதன் இயல்பிலிருந்து கட்டாயமாய்க் கிடைக்கப் பெறுவது போல அதன் எல்லாப் பண்புகளும் செயல்களும் அதனுடைய தன்மையிலிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. தனித்தன்மையும் (individuality) அல்லது ஆளுமையும் (personality) அதற்கு இருப்ப தாகக் கூற முடியாது. ஏனெனில் அப்போது அது வரம்புக்கு உட்பட்டதாகவோ வரையறுக்கப்பட்டதாகவோ ஆகிவிடும். வரை யறைவு செய்வதெல்லாம் இன்மை செய்வதாகிவிடும் (All determination is negation). ஆகையால் மானிடத் தன்மைக்குள்ள அறிவோ, இயற்றி நிலையோ அதனைச் சாரவில்லை. அஃது நினைப் பற்று, செயலற்று, தீர்ப்பற்று இருப்பது. அன்றியும் எவ்வித நோக்கமும் கொண்டு செயலாற்றுவதில்லை. அத்தகைய நோக்க அமைப்பு அதற்கு முற்றிலும் மாறுபட்டதும் ஒவ்வாததுமாகும். கடவுள், நன்மையின் பொருட்டாகவே பொருள்களைப் படைக்கின் ருர் என்னும் கொள்கையைக் காட்டிலும் எப்பொருளும் அவரைச் சார்ந்தே உள்ளது என்னும் கொள்கையையே மேலானதாக ஸ்பிநோஸா கருதுகின்ருர். ஏனெனில் முந்திய கருத்துப்படி கடவு ளுக்குப் புறம்பாகவும் தனிப்பட்ட முறையிலும் வேருென்று இருப்பதாகவும் கடவுள் அதனை மாதிரிப் பொருளாக ஏற்க வேண் டியதாகவும் கொள்ள வேண்டியிருக்கின்றது. இது கடவுள் யாவற் றிற்கும் முதற்காரணமும் புறக்கட்டுப்பாடற்ற காரணமுமாவார் என்று முன்னல் விளக்கப்பட்ட கருத்திற்கு முரணுகவும் உள்ளது.

தனிப்பட்டதும் என்றுமுளதும் எல்லையற்றதும் தன்னிருப் புக்குத் தானே காரணமானதும் பொருள்களின் இன்றியமையாத அடிப்படையாகவும் உள்ளதே கடவுள் அல்லது இயற்கை. டேக் கார்ட் உணர்த்தியதுபோல் கடவுளை இவ்வுலகுக்கு அப்பாற்பட் டவராகவும், புறம்பான கடந்த நிலை புறக்காரணமாகவும் புறத்தி லிருந்தே செயலாற்றுபவராகவும் ஸ்பிநோஸா எண்ணவில்லை. ஸ்பிநோஸாவின் கொள்கைப்படி, கடவுள் இவ்வுலகிலேயே இருக்

கின்றார். இப்பிரபஞ்சத்தின் அகனமர்ந்த அடிப்படையாக இருக்கின்றார். எனவே கடவுள் உலகத்திலிருக்கிறார், உலகம் கடவுளை உறைவிடமாகக் கொண்டுள்ளது. இதனை அனைத்திறைக் கொள்கை எனலாம். கடவுளும் உலகமும் ஒன்றே (God and the world are one). காரணமும் காரியமும் (முதலும் விளைவும்) இங்குத் தனிப்பட்டு பிரிந்து நிற்கிற முறையில் இல்லை. கடவுளையன்றி எப்பொருளும் இருக்க முடியாது. அவரையன்றித் தன்னைத்தானே உண்டாக்கிக் கொண்டு அவருக்குப் புறம்பாயிருக்கக்கூடிய பொருள் ஒன்றுமில்லை. கடவுள் அழியாத பொருள், பொருள்களின் சாரமாயுள்ளவர். கடவுளை இவ்வுலகில் செயல்படுத்தும் அடிப்படையாக அல்லது மூலமாகக் கருதும்பொழுது ஸ்பிநோஸா அவரை புலமைக் கொள்கையினரின் சொற்களால் இயற்கையின் இயக்கி (Natura Naturans) என்றும் அவரைப் பல்வேறு பொருள்களாக அல்லது அவ்வடிப்படையின் விளைவாக கருதும்பொழுது அவரை இயற்கையில் இயங்கி (Natura Naturata) என்றும் வழங்குகிறார்.

ஸ்பிநோஸா இருக்கின்ற எல்லாப் பொருள்களையும் சேர்த்து கடவுள் **அல்லது** இயற்கையெனக் கூறுகின்றார். இருக்கின்ற எல்லா பொருளும் கடவுள்; இயற்கையே இருக்கின்ற எல்லாப் பொருளுமாகும். (All-that-which-is, is God; Nature is all-that-which-is.)

இக்கொள்கை வியப்பாகவே இருக்கிறது. ஏனெனில் பொதுவாகக் கடவுளை இயற்கைக்கு எதிராகவும் இயற்கையைப் படைத்தவராகவும் எனவே, இயற்கை கடவுளின் படைப்பு என்றும் கருதுவது வழக்கம். இவ்வாறிருப்பினும் ஸ்பிநோஸா படைப்பைப் பற்றிய கருத்து பல இன்னல்களுக்கு வழிகோலுகின்றது என்றே கருதி, படைப்பு என்னும் சொல்லின் முழுப்பொருளில் அது நிகழ்ந்ததாக எண்ண முடியாது என்று முடிவு கட்டினார். படைப்பு என்பதை முடிவில்லாததாகவும் என்றும் நிகழ்வதாகவும் கருத வேண்டும் கடவுள் இவ்வுலகில் தொடக்கக் காரணம் மட்டுமல்லர். அதனைப் பாதுகாக்கும் அல்லது தாங்கும் ஆற்றலும் அதன் நிலையான இயல்பும் அமைப்பும் ஆவர்.

கடவுளே இவ்வுலகைத்தாங்கும் ஆற்றலாயிருப்பின் அவர் அத்

தையப உலகினின்றும் தனித்து அல்லது பிரிந்து அல்லது அப்பாற்பட்டு இருக்கமுடியாது. "அவர் (அதன்) 'சடத்தின் உருவமாகவும்', அதன் 'உள்ளீட்டின் விதியாகவும்' (law of its content), அதன் 'அடிநிலைப்' 'பொருளின் அமைப்பாகவும்' (structure and its stuff) ஆகின்ருர். சடம் இன்றி உருவமும் உள்ளடங்கிய பொருளன்றி விதியும் அடிநிலைப் பொருளின்றி அமைப்பும் தனித்து இருக்க முடியாதவை. இணையாக வருகின்ற இவை சேர்ந்து, பிரிக்க முடியாத ஒரு முழுமையாகின்றன."*

கடவுளை இவ்வுலகத்திற்குப் புறக்காரணமாகக் கருதுவது தவருகும். அவரை ஒரு குயவனுக்கு ஒப்பாக எண்ணலாகாது. அவர் அனைத்துப் பொருள்களிலும் அகனமர்ந்தவர், உள்ளுறைபவர், உள்ளிருந்தே செயலாற்றுபவர், ஊடுருவி இருப்பவர், வளமாக்குபவர். கடவுளைப் பற்றிய இந்த விளக்கமும் அவர் இப்பிரபஞ்ச முழுதும் பரவியுள்ள ஆன்மா என்னும் கருத்தினை குறிப்பாக உணர்த்துவதால் அது தவருன கருத்தையே சுட்டுவதாகத் தெரிகின்றது. உண்மை யாதெனில்: கடவுளே இப்பிரபஞ்சமாக உள்ளார். "இருக்கின்ற எல்லாப் பொருளும் கடவுளிலேயே இருக்கின்றன, அவரின்றிஎப்பொருளும்இருக்கவோ அழிக்கப்படவோ முடியாது."

கடவுளை அல்லது இயற்கையைப் பற்றிய கருத்து இவ்விரண்டில் எதிலிருந்து தொடங்கினுலும் ஒரே முடிவையே தருகின்றது. இயற்கை தானுகவே (பிறிதின் சார்பற்று) வேறெந்தப் பொருளின் உதவியுமின்றியே அறியப்படுகின்றது. அது எண்ணற்ற இயல்புகளினுல் (infinite attributes) ஆக்கப்பெற்றது. அவைகளில் ஒவ்வொன்றும் அதன் வகையில் எல்லையில்லாதது, முழு நிறைவானது (infinite and perfect in its kind). இருத்தல் (existence) அதனுடைய இன்றியமையாத தன்மையையே சாரும். அதற்குப் புறத்தே வேறு எந்த இன்றியமையாத தன்மையோ அல்லது பொருளோ இருக்க முடியாது. ஆகவே, அது கடவுளின் இன்றியமையாத தன்மையுடன் (essence) முற்றிலும் பொருத்தமாக இருக்கின்றது. கடவுள் ஒருவரே மேன்மையும் பேரின்பமுமானவர்.

* L. Roth : *Spinoza*, p. 60.

கடவுள் அல்லது இயற்கையையே ஸ்பிநோஸா பொருள் (substance) எனக் கருதுகின்றார். கடவுள் = இயற்கை = பொருள். பொருள் என்பது பிறிதின் சார்பற்றுத் தானாகவே இருப்பது, தானாகவே அறியப்படுவது. கடவுள் அல்லது இயற்கையே அவ் வரையறைக்குப் பொருத்தமாகவுள்ளது. "கடவுளுக்கு அப்பாற் பட்டு ஒன்றும் (ஒரு பொருளும்) இல்லை. இருக்கவும் முடியாது, அறியப்படவும் முடியாது." இவை பல கருத்துக்களைக் குறிப்பிட் டாலும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன. அதன் தோற் றத்தைப்பற்றி எண்ணும்போது 'கடவுள்' என்றும், அமைப்பைப் பற்றி எண்ணும் பொழுது 'இயற்கையாகவும்' அடிநிலைப்பற்றி (stuff) எண்ணும்பொழுது 'பொருளாகவும்' பேசப்படுகின்றது.

இம்மூவகை நோக்கம் அடிப்படையானது. கடவுளே இயற் கையாகவும், இயற்கையே பொருளாகவும் கருதப்படுகின்றன. மரபின் வழிவந்த தத்துவம் பிறிதின் சார்பற்றும் தன்னுரிமை யோடும் இருப்பதையே பொருள் என்று கருதினால், உண்மையில் அத்தகைய பொருளை உலகத்தில் காணவில்லை. எல்லாப் பொருள் களும் பிரிக்க முடியாத வகையில் பிணைந்திருக்கின்றன. அவ்வாறு பிறிதின் சார்பற்றுத் தானாகவே இருக்கக்கூடியதே பொருளென் றால், ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியும். அது இப்பிரபஞ்ச முழுவதும் சேர்ந்த அமைப்பாகும். இத்திட்டம் எல்லையற்றும் தன்னியல்பிலேயே முரணற்றும் முழுமையாகவும் இருப்பதால் கடவுளோடு ஒருமைப்பாடுடையதாகத் திகழ்கின்றது.

ஸ்பிநோஸாவுக்குக் கடவுளும் இயற்கையும் ஒன்றே. ஆனால் அவர் கடவுளெனக் கருதும் இயற்கை நாம் அனுபவத்தால் அறி யும் உலகை விட விரிவானது.

தெய்வீக ஆற்றலும் இயற்கையின் ஆற்றலும் ஒன்றே. இயற் கைப் பொருள்களைப் பற்றி அதிகமாக அறிகின்ற பொழுது கடவு ளைப் பற்றியும் அறிகின்றோம். உண்மையில், இயற்கையிலும் அதன் மூலமாகவுமே நாம் கடவுளை அறிய முடிகின்றது. ஆகவே அற்புதங் கள் அல்லது அருஞ்செயல்கள் (miracles) இயற்கைக்கு மாறாக நிகழ்வன என்னும் பொருளில் நிகழக்கூடியனவல்ல. அவ்வாறு நடைபெறுமானால் அவை கடவுள் இருத்தலை வற்புறுத்தாமல்,

இறையியல் கொள்கையையே வற்புறுத்துவனவாகும். கடவுள், மனிதனைப்போல் செயலாற்றுவதற்கு முன்னர் திட்டமிட்டுத் துணிவதில்லை. கடவுளால் துணியப்படும் அல்லது வரையறுக்கப்படும் எதுவும் என்றுமுள கட்டாயப் போக்கையும் உண்மையையும் பெற்றிருக்கின்றது. இயற்கையின் பொது நியதிகள் யாவும் கடவுளின் கட்டளைகளே ஆகும் அவை கட்டாயப் போக்கும் நிறைவும் கொண்ட தெய்வீக இயல்பிலிருந்து பெறப்படுபவை.

ஸ்பிநோஸா தம்முடைய கருத்தினை அறநூலில் (Ethics), "கடவுள் கட்டாயத் தேவையாகவே இருக்கின்றார், அவர் இணையற்றவர். அவர் தன்னியல்பினாலேயே இருப்பவரும் செயலாற்றுபவருமாவர். அவரே எல்லாப் பொருள்களுக்கும் கட்டற்ற காரணமுமாவார். எல்லாப் பொருள்களும் அவரின்றி இருக்கவோ அறியப்படவோ முடியாத வகையில் அவருள்ளும் அவரைச்சார்ந்தும் இருக்கின்றன. முடிவாக எல்லாப் பொருள்களும் இறைவனுடைய எல்லையற்ற ஆற்றலால் முன்னதாகவே வரையறுக்கப்பட்டுள்ளன. அவருடைய இயற்றிநிலையின் கட்டற்ற தன்மையாலோ அல்லது முழு நிறைவான இன்பத்தினாலோ இவ்வாறு நிகழ்வதில்லை" என்று கூறுகின்றார்.

ஸ்பிநோஸாவின் கோட்பாட்டின் கவர்ச்சி அதன் புதுமையினாலன்று; அமைதியாக அது கூறப்பெறும் தன்மையினாலேயே அது கவர்ச்சியுடையதாகிறது.

கடவுளின் தன்மையை நாம் எவ்வாறு வரையறுத்துக் கூறுவது? அவர் இணையற்றவராயிருப்பதாலும் தானே ஓர் இனமாய் இருப்பதாலும் அவரைப்பற்றி பேரினம் (genus), பிரிவுறுத்தும் பண்பு (differentia) என்று இலக்கணம் கூறு முறையில் வரையறுக்க முயல்வது வீணாகும். மேலும் அவரைப்பற்றி நன்மை (goodness), ஞானம் (wisdom), முழு ஆற்றல் (omnipotence) போன்ற பண்புகளைக் கொண்ட அட்டவணை தயாரிப்பதும் பயனற்றதே யாகும். அத்தகைய பண்புகள் உண்மையானவை எனினும் அவை அவருடைய இன்றியமையாத தன்மையைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. நாம் அவரைப் பற்றிய அடைமொழிகளை எல்லையற்ற வகையில் திரட்டலாம். ஆனால் அவையாவும் அவருடைய பண்பு

களைப் பற்றியேயன்றி அவருடைய இன்றியமையாத தன்மையைப் பற்றியாகா. அவ்வாறெனின் கடவுளில் அத்தகைய இன்றியமை யாத தனிமங்கள் உள்ளனவா? அதாவது அவை யிருப்பின் கடவுள் இருப்பதாகவும் அவையின்றேல், கடவுள் இல்லை என்பதாகவும் கருதக்கூடியவை என்பது சிக்கலாகின்றது.

கடவுள் இவ்வுலகிற்கு அப்பாற்பட்டவர் என்று கருதினால் இச் சிக்கலுக்கு விடை காணமுடியாமல் ஒருவகையான அறியொணாக் கொள்கையை (agnosticism) அதாவது எதிர்மறை வழியை (negative way) அடைவதாகிறது. கடவுளுக்கு இயல்புகள் இருப்பன வாகக் கூற முடியாது. ஏனெனில் கடவுள், படைக்கப்பட்ட பொருள்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர், ஆனால் அவரை இத்தகைய வேறுபாட்டு வழியால் அல்லது முறையால் (by way of contrast) விளக்க முடியும். அவர் ஒருவரே என்று கூறுகிறோம். ஆனால் இதன் பொருள் அவர், அனுபவ வாயிலாக அறியும் உலகில் காணும் 'பன்மை' அல்லர் என்பதே. அவர் நன்மை மிக்கவர் என்கிறோம். இதன் பொருள், அவர் தீமையை விளைவிப்பவர் அல்லர் என்பதே. அவர் உயிருள்ளவர் என்னும் பொழுது இறந்த வர் அல்லர் என்பதே பொருள். அவர் பொதுவான சிந்தனையின் மாறு நிலைகளின் (all ordinary modes of thought) முரணாகவும் அல்லது எதிர்கருத்துமாவார். பொதுவான கருத்து வகைகளுக்கு அவர் நேர்மாறானவராகவும் எதிர்நிலையிலும் இருக்கிறார். (He is the antithesis and reversal of all ordinary modes of thought). அவர் எல்லையில் லாதவர். எனவே எல்லையுள்ள நம்மால் அணுக முடியாதவர். இக் கருத்து, ஒரு நிலையே அன்றி, முடிவான கருத்தன்று. எல்லையுள்ள சொற்பொருள் வகைகளின் (categories) வழியாக எல்லையற்றவ ராகிய அவருடைய இயல்பை முழுவதும் கூறமுடியாது. ஆனாலும் சொற்பொருள் வகைகளைக் கையாளுவதையும் அறவே விலக்க முடியாது.

ஆகவே ஸ்பிநோஸாவின் கொள்கையின் வளர்ச்சியில் இரண்டு நிலைகள் இருப்பதை உணர முடிகின்றது. முதலாவதாகக் கடவுளை இவ்வுலகிற்கு அப்பாற்பட்டவராகவும் அல்லது கடந்தவராக (transcendent)வும் கொண்டு அதன் பயனாக எதிர் மறைவழியால்

(negative way) அவரை அறிய முயல்வது, உணர்ச்சியைத் தட்டி எழுப்பாத கடவுள் கொள்கையாக ஸ்பிநோஸாவின் தத்துவத்தில் காணப் பெறுகிறது.

இரண்டாவதாக, கடவுள் இவ்வுலகில் அகனமர்ந்தவர் என்னும் கொள்கை (the doctrine of immanence) ஸ்பிநோஸாவின் முயற்சியைப் பெரிதும் மாற்றியமைத்தது. ஏனெனில் முன்னால் விளக்கப் பட்ட கடந்த நிலைக் கொள்கை, எதிர்மறை வழியில் முடிவதனால், ஸ்பிநோஸா அம்முறையை விடுத்து கடவுள் இவ்வுலகில் அகனமர்ந்த காரணம் என்ற உயர்ந்த கருத்தை ஏற்றுக்கொள்ளுகிறார். அதாவது கடவுளை உள்ளது உள்ளபடியே அறிய முயல்கிறார். கடவுளை இயற்கையுடன் ஒருமைப்பாடுடையவராகக் கருதியதால் இயற்கையின் இன்றியமையாத தன்மையிலேயே கடவுளின் இன்றியமையாத தன்மையைக் கண்டார். அவ்விதம் அடையப்படும் அறிவு முழுமையானதாகக் கருத முடியாது, ஆனால் கிடைக்கக் கூடியது, தேவைக்குப் போதுமானதாக கருதுகின்றார். "நான் கடவுளை முழுமையாக அறிகிறேன் என்று கூறவில்லை. ஆனால் அவருடைய இயல்புகளில் சிலவற்றை (யாவற்றையும் அன்று, பெரும்பகுதியுமன்று) புரிந்து கொள்ளுகிறேன். அவற்றுள் பெரும் பகுதியை நான் உணரவில்லை என்னும் உண்மை, நான் சிலவற்றை அறிந்துகொள்ளத் தடை செய்யவில்லை. நான் யூக்ளிடின் நூலைக் (Euclid's Elements) கற்கத் தொடங்கியபொழுது, முதலில், மூன்று கோணங்களின் எண்ணிக்கை இரண்டு நேர் கோணங்களின் எண்ணிக்கைக்குச் சமமானது என்பதைப் புரிந்துகொண்டேன், முக்கோணத்தின் பல்வேறு பண்புகளைப்பற்றி அறியாவிடினும் மேற்கூறப்பட்ட பண்பினை மிகத் தெளிவாக உணர்கிறேன்." ஸ்பிநோஸா இங்குக் கடவுளைப்பற்றி நாம் முழுமையான அறிவைப் பெறமுடியவில்லை என்று குறிப்பிடுகின்றாரேயன்றி, அறிவே பெற முடியாது என்று கூறவில்லை. ஆகையால் அவர் கருத்தினை அறியொணாக் கொள்கை எனக் கருதுவது தவறாகும். சுருங்கச் சொன்னால் "ஸ்பிநோஸா பிரபஞ்சமில் கொள்கையினரல்லர் (acosmist), இறையில் கொள்கையினருமல்லர், அவர் பிரபஞ்சம், கடவுள் என்பவற்றை ஒப்புக்கொண்டவராவர். வேறு வகையாகச் சொன்னால்

அனைத்திறைக் கொள்கையினரெனலாம். அதாவது பிரபஞ்சமென்பது அவர் கொள்கைப்படி கடவுளே. கடவுள் என்பது பிரபஞ்சப் பொருளே.''*

கடவுள் எண்ணற்ற இயல்புகள் பெற்றிருப்பினும் அவற்றுள் நாம் இரண்டைமட்டுமே அறிகின்றோம். நம் அறிவு எதனைப் பொருள் இருப்பதற்கு இன்றியமையாதது என்று கருதுகின்றதோ அதுவே அப்பொருளின் இயல்பாகும் (attribute). கடவுள் தம்மைச் சிந்தனை, பரப்புடைமை இவற்றின் வழியாக நமக்கு வெளிப்படுத்திக் கொள்கிறார். ஆகையால் அவைகளே கடவுளின் இயல்புகள் (attributes). சிந்தனையும், பரப்புடைமையும் வெவ்வேறானவையாயினும் அவை இரண்டும் ஒரே உள்பொருளின் முழுமையான வெளிப்பாடுகளாகும். யாகொப், இஸ்ரேல் (Jacob and Israel) என்னும் இரண்டும் வெவ்வேறான பெயர்களாயினும் வெவ்வேறு நிலைகளிலிருந்து ஒருவரையே குறிப்பிடுகின்றன. இது பல மொழிகள் ஒரே கருத்தினை வெளியிடுவது போன்றதாகும். ஆனால் ஸ்பிநோஸாவின் கருத்துப்படி ஒவ்வொரு இயல்பும் தனித்தனியே கடவுளை முழுமையாகவும் வெளிப்படுத்த முடியும். எனினும் உள்பொருள் (Reality) முழுமையானதும் (integral) பகுக்க முடியாததுமாகும் (indivisible). அதுபற்றியே ஸ்பிநோஸா இயல்புகளைத் தம்மளவில் எல்லையற்றவைகளாகக் கருதுகின்றார். இயல்புகள் எல்லையற்ற தன்மை உடையன என்னும் கொள்கை அனுபவத்திலும் அறியப்படும் உண்மையேயாகும். அவருடைய கொள்கை அப்பாற்பட்டவையைப்பற்றி மேலும் சிந்திக்கும்படி நம்மை ஊக்குவிக்கிறது.

கடவுள் சிந்தனை வடிவானவர் என்னும் கொள்கை பண்டைக் கால இடைக்கால தத்துவங்கள் ஏற்றுக்கொண்ட கருத்தேயாகும். ஆனால் கடவுள் பரப்புடைமை கொண்டவர் என எவ்வாறு கருத முடியும்? ஸ்பிநோஸா கடவுளே இப்பிரபஞ்சமாக இருப்பதால், அவரைப் பரப்புடைமை உள்ளவராகக் கருத முடியும் என எண்ணுகிறார். ஆனால் அவ்வாறு பரப்புடைமையைப் பற்றிக் குறிப்பிடும்

*Weber and Perry: *History of Philosophy*, p. 262

பொழுது, பல பகுதிகளாக வகுக்கக் கூடிய, பரப்புடைமையுள்ள பொருளாகக் கொள்ளலாகாது. கடவுளே இடம் அனைத்துமாவர். அவருள்ளேயே இவ்வுலகு அடங்கியுள்ளது. ஆனால் அவர் இவ்வுலகினுள் அடங்கியவரல்லர். அவ்வாறே, கடவுள், குறிப்பிட்ட எவருடைய சிந்தனையுமாகாது, முழுச்சிந்தனையாவர், வரம்பற்ற உள்ளமாவர்.

நாம் பிரபஞ்சத்தைப் புலனால் அறியப்படும் உலகம் என்று கருதினால் கடவுள் இப்பிரபஞ்சத்தோடு ஒருமைப் பாடுடையவர் என்னும் ஸ்பினோஸாவின் கருத்து பொருளற்றதாகின்றது. உண்மையில், போலக் (Pollock) என்னும் அறிஞர் கூறுவது போல "கடவுள் இயற்கையின் நிலைக்கு தாழ்த்தப்படவில்லை. ஆனால் இயற்கை கடவுளின் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது." ஸ்பினோஸா கடவுள் உள் பொருளின் முழுநிறைவானவர், யாவற்றிற்கும் மேலான உள்பொருள் என்று கருதுகின்றார். லூகாஸ் (Lucas) என்னும் அறிஞர் "நான் பல தத்துவ அறிஞர்களின் நூல்களைப் படித்திருக்கின்றேன். எனினும் தெய்வத்தைப் பற்றி (Deity) ஸ்பினோஸாவின் கருத்துக்களைவிட எழில் மிக்கக் கருத்துக்கள் யாருமே வெளியிடவில்லை என்பதை உறுதியுடன் கூறுவேன்" என்று எழுதியுள்ளார்.

ஸ்பினோஸா வரையறையற்றதை வெறும் உடன்பாட்டு நிலையுடனும் (purely affirmative), வரையறையுற்றதை எதிர் மறைநிலையுடனும் (negative) ஒருமைப்படுத்துகிறார். பிரபஞ்சத்தை வடிவக் கணித நோக்குடன் காண்பதால் அவர் இவ்வாறு செய்கிறார். வரையற்றதையும் உற்றதையும் இடத்துடனும் (space) அதன் வரையறைகளுடனும் ஒப்புமைப்படுத்திப் பேசுவதால் வரையறை உற்றது வெறும் குறைவுடையது அல்லது இன்மை நிலையுடையது என்றாகி விடுகிறது. இடத்தில் வரையப்பட்ட உருவத்திற்குத் தனியுண்மை நிலை கிடையாது உண்மை நிலையுண்டு என்பது வரையறையற்ற இடத்தின் ஒரு பகுதியை எடுத்து அதன் சுற்றுப் புறத்தை நீக்கிப் பார்க்கும்போது கிடைக்கப் பெறுவதேயாகும். இவ்வாறு தனியுண்மை நிலை எதிர் மறையாகப் பெறப்படுகிறது. இடத்தின் ஒரு பகுதிக்குச் சுற்றுப்புறத்திலுள்ளவற்றையெல்லாம் நீக்கி—இன்மை

செய்து—பெறுவதாகிறது. ஆகையால் அதன் உண்மை, குறைநிலை (privation) அல்லது இன்மை (negation) நிலையாகிறது.

வரையற்ற எல்லாப் பொருள்களையும் இக்கருத்துடனேயே ஸ்பிநோஸா காண்கின்றார். அவைகளுக்குள்ள உண்மை நிலை வரையறையற்றதின் பகுதிகளாக இருப்பதனால் ஏற்படுவதேயாகும். அவைகள் எவ்வாறு இருக்கின்றன என்று பாராமல் எவ்வாறு இல்லையென்றே பார்க்கின்றோம் இடத்தில் உருவங்களிருப்பதாகப் பார்க்கின்றோமென்பது சரியே. ஆயினும் இவைகள், இடத்தில், நாம் கற்பனையாக உண்டாக்குபவையே. இவ்வாறே கற்பனையால் ஆன்மீகப் பொருள்களுக்கோ சடப்பொருள்களுக்கோ நாம் தனி யுண்மை நிலை இருப்பதாகப் பேசுகின்றோம். ஆனால் இத்தனி உண்மை நிலை பொய்யானது—உண்மையன்று. தோற்றங்களைக் காணும்பொழுது அனுபவத்தில்தான் இவ்வாறு உருவமுடையன வாக நினைப்பனவற்றை, உண்மையாகக் கொள்ளும் நிலை ஏற்படு கின்றது. ஆராய்ந்து பார்த்தால் இவை உண்மையல்ல என்பது தெளிவாகும். எனவே வரையறை செய்வதெல்லாம் இன்மை செய்வ தாகும். இக்கருத்தினைப் பயன்படுத்தியே ஸ்பிநோஸா தம் கடவுள் கொள்கையை வகுத்தார்.

## இயல்புகள்
### (ATTRIBUTES)

ஸ்பிநோஸா 'இயல்பு' என்ற சொல்லைப் பொருளில் இருக்கின்ற பண்புகளின் வேறுபாடுகளைக் குறிப்பிடப் பயன்படுத்துகின்றார். 'பொருளின் இன்றியமையாத தன்மை என்று அறிவால் அறியப் படுவதை இயல்பாக நான் கருதுகிறேன்' என்று கூறுகிறார். சில அறிஞர்கள், இயல்புகள் நம்முடைய அறிவின் வகைகள், அவைகள் கடவுளைச் சார்ந்தவையல்ல, மனித சிந்தனையால் கடவுளுக்குச் சாட்டப்பட்டவை என்கின்றனர். மற்றும் சிலர், அவைகளைக் கடவு ளின் உண்மையான வெளிப்பாடுகள், கடவுள் இயற்கையின் உண் மைப் பகுதிகள் என்றும் மனித சிந்தனையால் புனைந்துரைக்கப் பட்டன அல்ல என்றும் கூறுகின்றனர். பின்னவர் கூறுவதே

உண்மையாயிருக்கலாமெனத் தோன்றுகிறது. இருந்த போதிலும் திட்டமான இயல்புகளைப் பொருள்களின் எல்லையற்ற அடிப்படையான கடவுளுக்குப் பொருத்திப் பேச ஸ்பினேஸா தயங்கினர். ஏனெனில் வரையறை செய்வதெல்லாம் இன்மை செய்வதாகு மன்றோ? ஆனல் ஸ்பினேஸா, கடவுளுக்கு எல்லையற்ற பண்புகளை அளிப்பதன் வழியாக அதனைத் தவிர்க்க முயன்றார். கடவுள் எல்லையற்ற பண்புகளை எல்லையற்ற அளவில் பெற்றிருப்பதாகவே கருதப்படுகின்றார்.

டேக்கார்ட் எல்லையற்ற பொருளாகிய கடவுளையும் அத்துடன் எல்லையுற்ற பொருளாகிய சடத்தையும் உள்ளத்தையும் அவைகளின் இயல்புகளாகிய பரப்புடைமையையும் சிந்தனையையும் ஏற்றுக் கொண்டதை அவருடைய திட்டத்தில் கண்டோம். இத்தகைய மாறுன இயல்புகளுடைய சடத்தையும் உள்ளத்தையும் இணைக்கும் முயற்சியில் உள்ள இடர்ப்பாடுகளையும் அவருடைய தத்துவத்தில் நாம் கவனித்தோம். இச்சிக்கலுக்கு ஸ்பினேஸா தம்முடைய திட்டத்தில் முடிவு காண விழைகின்றார். அதில் அவர் பரப்புடைமையும் சிந்தனையுமாகிய இவ்விரு இயல்புகளும் ஒரே பொருளின் இரண்டு தன்மைகள் என்றும் அறிவிக்கின்றார். எனவே, சடமும் உள்ளமும் டேக்கார்ட் கருதியதைப் போல் இரண்டு தனிப்பட்ட பொருள்கள் அல்ல. அவ்விதம் கருதினல், அது தீர்வு காண முடியாத இருமைக் கொள்கையில் முடியும். சடமும் உள்ளமும் ஒரே பொருளைக் கருதும் இரண்டு வேறுபட்ட வழிகளாகும். இவ்விரண்டு இயல்புகளைப் பற்றித் தெளிவாகவும் தனித்தன்மையுடனும் நம் அறிவு உணருகின்றது. ஆனல், உடனடியாக நாம் எல்லையற்ற பொருள் இவ்விரண்டு இயல்புகளை மட்டுமே பெற்றிருப்பதாக எண்ணுவது தவருகும். அவ்விதம் கருதுவோமானல் நாம் எல்லையில்லாப் பொருளாகிய கடவுளை எல்லையுற்றவராகக் கருதுவதுடன், அவர் பெற்றுள்ள, ஆனல் நம் அறிவுக்குத் தெளிவில்லாத, மற்ற இயல்புகளை நீக்குவதாகும். எனவே கடவுளிடம் எல்லையற்ற அளவில் எல்லையில்லா இயல்புகள் இருக்கின்றன. எனினும் நாம் உடலும் உள்ளமும் சேர்ந்து ஆக்கப்பட்டிருப்பவர்களாதலால் பரப்புடைமை, சிந்தனையாகிய இவ்விரு இயல்புகளை

மட்டுமே நாம் அறிய முடிகின்றது. எனவே கடவுள் அல்லது இயற்கை உடலாகவும் உள்ளமாகவும் மட்டுமாவது இருக்கின்றது. இடம் அல்லது சடம் உள்ள இடமெல்லாம் ஆன்மா அல்லது உள்ளம் இருக்கின்றது. ஆன்மா அல்லது உள்ளம் இருக்குமிடமெல்லாம் சடம் இருக்கின்றது. இவ்விரு இயல்புகளும் பொருளுக்கு (substance) இன்றியமையாதவையாகையால், பொருள் காணப்படுகின்றபோது அவைகளும் காணப்படுகின்றன. எனவே அவை எங்கும் நிகழ்கின்றன. பரப்புடைமையும் சிந்தனையும் ஒவ்வொன்றும் அதன் வகையில் எல்லையற்றதாக இருக்கின்றது. ஆனால் முழுமையாக எல்லையற்று இருக்கவில்லை. சிந்தனையோ பரப்புடைமையோ கடவுளின் ஒரே இயல்பாகக் கருதப்படாததே அதற்குக் காரணமாகும். மேலும் கடவுளுக்கு வேறு பல இயல்புகள் இருத்தலால் எந்த ஒரு இயல்பையும் முழுமையாக எல்லையற்றது என்று கூறமுடியாது. இந்த இயல்புகள் ஒன்றுக்கொன்று முழுவதும் சார்பற்று இருக்கின்றன. ஒன்றினை ஒன்று செயல்படுத்த முடியாதிருக்கின்றன. உள்ளம் உடலிலோ அல்லது உடல் உள்ளத்திலோ மாறுபாடுகளை நிகழ்த்த முடியாது. இருபொருள்களுக்குள் பொதுவாக ஒன்றும் இல்லையாதலால் அவைகளைக் காரண காரிய தொடர்பு உள்ளவைகளாகக் கருதமுடியாது. இக்கருத்துடன் ஸ்பினேஸா தறுவாய்க் கொள்கையினருடைய கொள்கையை ஏற்றுக் கொள்கிறார். அதாவது, "ஒரு பொருள் அதே தன்மையுடைய மற்றொரு பொருளையே உண்டாக்க முடியும். உள்ளம் இயக்கத்தையோ, இயக்கம் உள்ளத்தையோ உண்டாக்க முடியாது" என்பதாகும். பரப்புடைமைக்கும் சிந்தனைக்கும் உள்ள உறவைப் பற்றிப் பேசும்போது அவையிரண்டும் ஒரே பொருளின் இயல்புகள் என்பதைத் தவிர ஸ்பினேஸா வேறு ஒன்றும் கூறவில்லை. ஆனால் அவ்விரண்டு எதிரான இயல்புகள் எவ்வாறு ஒரே பொருளைச் சாருகின்றன வென்றோ அல்லது எவ்வாறு ஒரே பொருள் இவ்விரண்டு வகையாக வெளிப்படுகின்றது என்பதையோ விளக்கவில்லை. இச்சிக்கலே டேக்கார்ட்டின் உள்ளத்தை வாட்டியது. இப்போது மீண்டும் அதே வேகத்துடன் எழுகின்றது. அதுவே 'ஒன்றும் பலவும்' என்பது பற்றிய சிக்கலாகும். அதாவது, எவ்வாறு தனிப்பட்ட பொருள் பலவாகின்றது

என்பதாகும். பரப்புடைமையும் சிந்தனையும் ஒரே பொருளின் இயல்புகளாக இருப்பினும், டேக்கார்ட்டைப் போலவே, ஸ்பினோஸாவும் அவற்றை வேறுபட்ட தன்மையுடையனவாகவே கருதுகின்றார். இவைகள் ஒன்றினை ஒன்று செயல்படுத்த முடியாது, உள்ளம் உடலையோ, உடல் உள்ளத்தையோ செயல்படுத்தாது.

இத்தகைய விளக்கம், நமக்கு, டேக்கார்ட்டின் இருமைக் கொள்கையை நினைவுபடுத்துகின்றது. சடத்தையும் உள்ளத்தையும் வேறாகப் பிரித்து அவையிரண்டும் ஒன்றினையொன்று செயற்படுத்த முடியாமையே மீண்டும் இங்கு வற்புறுத்தப்படுகின்றது. டேக்கார்ட்டினால் உள்ளமும் சடமும் ஒன்றினையொன்று செயற்படுத்துவதை விளக்க முடியாமற் போயிற்று. ஸ்பினோஸா இச்சிக்கலுக்குப் பொருளைப் பற்றிய கருத்தில் விடைகாண முற்படுகின்றனர். சடக்கொள்கை உள்ள நிகழ்ச்சிகளையும் பௌதிக நிகழ்ச்சிகளாக விளக்குவது போலவோ, அல்லது ஆன்மிகக் கொள்கை பௌதிக நிகழ்ச்சிகளையும் உள்ள நிகழ்ச்சிகளாக விளக்குவது போலவோ நாம் விளக்க முடியாது. ஏனெனில் இவைகள் ஒன்றினை யொன்று செயல்படுத்தவில்லை; ஆனால் இவை ஒரே காரணத்தின் விளைவுகளாகும். இவை ஒரே பொருளின் இரு வெளிப்பாடுகள்; ஒரே தகுதியைப் பெற்றவை, ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாகவோ விளைவாகவோ அமையாதது. வகுக்க முடியாத ஒன்றாகிய இயற்கை அல்லது கடவுள் இடத்தை நிரப்பும் தன்மையும் இயக்கமும் பெற்ற ஒரு பொருளாகவும் எண்ணத்தால் அமைந்த உலகமாகவும் தோன்றுகிறது. இவைகள் இரண்டும் ஒரே பொருளைச் சார்ந்தவையாதலாலும் ஒரு பொருளிலிருந்து வெளிப்படுவதாலும் அவைகளில் ஒன்றில் நிகழும் ஒழுங்கும் உறவும் மற்றொன்றில் நிகழ்வதைப் போலவே இருத்தலால் நாம் பொதுவாக ஒன்றினை யொன்று செயல்படுத்துவதாக எண்ணுகிறோம். டேக்கார்ட்டின் தத்துவத் திட்டத்தில் வெவ்வேறாக உறவு இன்றி பிரிக்கப்பட்ட இவ்விரண்டும் அதாவது சடமும் உள்ளமும் எல்லையற்ற பொருளின் இரண்டு வெளிப்பாடுகள் என்ற ஸ்பினோஸாவின் கருத்தில் ஒன்று சேர்வதாகத் தோன்றுகின்றன. அவை இரண்டும் பொருளில் ஒன்றினை யொன்று அடுத்து இருப்பதுடன், இசைவுடன் செயலாற்றுகின்றன,

ஒன்றினுக்கொன்று இணையாக நிற்கின்றன. ஆனால் ஒன்றினை யொன்று செயற்படுத்துவதில்லை.

உடல் உள்ளத்தையோ உள்ளம் உடலையோ செயல்படுத்தாமல் உடலில் மாறுதல் நிகழும் பொழுதெல்லாம் உள்ளத்திலும் உள்ளத்தில் மாறுதல் நிகழும் பொழுதெல்லாம் உடலிலும் இணையான மாறுதல் நிகழ்கின்றது. இதுவே இக்காலத்தில் உள்ள உடல் ஒரு போக்குக் கொள்கை (psycho-physical parallelism) என்று வழங்கப்படுகிறது. வட்டத்தைப்பற்றி என் கருத்து அல்லது எண்ணத்திற்கேற்ப உண்மையான வட்டம் புறஉலகில் இருக்கின்றது. வகுக்க முடியாத ஒன்றாகிய கடவுள் அல்லது இயற்கை, இடத்தை நிறப்பும் தன்மையும் இயக்கமும் பெற்ற ஒரு பொருளாகவும் எண்ணத்தால் அமைந்த உலகமாகவும் (ideal world) தோன்றுகிறது. இவ்வகையில் ஸ்பிநோஸா உடலையும் உள்ளத்தையும் பற்றிய இணை நிலைக் கொள்கையை விளக்கும் பொழுது சிந்தனையை முதன்மையானதாகக் கருதுகின்றார். சிந்தனை மற்றெல்லா இயல்புகளின் தன்மையையும் தன்னிடத்தே பெற்றிருப்பதாலும் பிறவற்றையெல்லாம் விளங்கக் காட்டுவதாலும் மற்றவைகளைவிட மேலானதாகக் கருதி, ஸ்பிநோஸா, அதற்கு இயல்புகளுள் தனிச் சிறப்பை (unique status) அளிக்கின்றார்.

## மாறு நிலைகள்

## (MODES)

இப்பிரபஞ்சம் பல்வேறு தனிப்பட்ட பொருள்களால் (particular things) ஆக்கப்பட்டது. அவைகளை ஸ்பிநோஸா "மாறுநிலைகள்" (modes) என குறிப்பிடுகின்றார். நாம் வழக்கமாக 'பொருள்கள்' (things) என்று குறிப்பிடுபவைகள் எல்லையற்ற பொருளின் துண்டுகள் அல்லது பகுதிகளாகும். அவைகள் ஒவ்வொன்றினையும் பொருள் (substance) எனக் கருத முடியாது. அவைகள் யாவும் ஒரே பொருளின் மாறுபட்ட நிலைகள் (modifications) அல்லது நிலைகளே (states).

இயற்கையே இரண்டு கூறுகளாக—இயற்கையை இயக்குவதாகவும் (natura naturans), இயற்கையில் இயங்குவதாகவும் (natura naturata) தோற்றமளிக்கின்றது. இயற்கையை இயக்கி (natura naturata) தானே நிலைத்திருந்து பிறிதின் சார்பின்றித் தன்னாலேயே உணரப்படுவதான (அல்லது பொருளின் என்றுமுள, வரம்பற்ற சத்துநிலையை உணர்த்தும் பண்புகள் உள்ள) தன்னுரிமையுள்ள காரணமாகும். இயற்கையில் இயங்கி (natura naturata) என்பது கடவுளின் கட்டாயமான தன்மையிலிருந்து அல்லது அவருடைய இயல்புகள்யாதேனும் ஒன்றிலிருந்து, பெறக்கூடிய எவையுமாம். அதாவது கடவுளிடம் இருப்பனவாகவும் அவரின்றி இருக்கவோ உணரவோ முடியாதனவுமான இயல்புகளின் மாறுநிலைகள் அனைத்துமாம். ஒன்ருகவும் தனிச்சிறப்புடனும் உள்ள பொருளில் (இயற்கையை இயக்கி அல்லது கடவுளிடத்தில்) பலவாகவுள்ள மாறுநிலைகள் (இயற்கையில் இயங்கி) அனைத்தும் அடங்கி உள்ளன. அளவைமுறையாலன்றி அவை வேறுபட்டன அல்ல. அவை ஒன்ருகவே உள்ள வரம்பற்ற முழுமையாவன; இம்முழுமையைச் சில வேளைகளில் செயல் முறையாகக் கருதுகிறோம். (process). சில வேளைகளில் அதன் விளைவாகக் காண்கின்றோம் (result). ஆகவே கடவுளைக் காரணமாக உணரும்பொழுது இயற்கையை இயக்கியாகவும் (natura naturans) கடவுளை விளைவாக (காரியமாக) உணரும்பொழுது இயற்கையில் இயங்கியாகவும் (natura naturata) ஸ்பினேஸா குறிப்பிடுகின்றார். ஸ்பினேஸா பொருளின் (substance) பண்பு பற்றிய வேறுபாடுகளை (qualitative differences), இயல்புகள் என்ற தலைப்பில் விளக்கியது போல் இங்கு அளவு நிலை பற்றிய வேறுபாடுகளையும் மாறுநிலைகளைப்பற்றியும் விளக்க முற்படுகின்றார். எல்லையுற்ற தனிப்பட்ட பொருளை (finite particular) மாறுநிலை (mode) எனக் கருதுகின்றார். எல்லையுற்ற தனிப்பட்ட பொருள் தன் இருத்தலுக்குத் தன்னைவிட உயர்ந்த நிலையிலுள்ளதைச் சார்ந்திருப்பதாலும் அதன் மாறுபட்ட நிலையாக இருத்தலாலும் ஸ்பினேஸா அதனை 'மாறுநிலை' என்று குறிப்பிடுகின்றார். "தனக்கு வேருன ஒன்றில் இருப்பு கொண்டும் வேருன ஒன்றினுல் அறியப்படுவதையுமே பொருளின் மாறுநிலை என்று கருதுகின்றேன்" என்று கூறுகின்றார்.

ஸ்பிநோஸா மாறுநிலையை இவ்வாறு வரையறுத்துக் கூறுவதால் அது, தன்னிருத்தலுக்கும், அறியப்படுவதற்கும் தன்னையே சார்ந்துள்ள பொருளுக்கு (substance) நேர் எதிரான பண்பைப் பெற்றிருக்கின்றது. எனவே மாறுநிலை அல்லது மாறுபட்ட நிலை மற்றொன்றின் மாறுபட்ட நிலையேயாகும். அதனை வேறுவகையாக அறிய முடியாது. பரப்புடைமையாகிய இயல்பு பல தனிப்பட்ட உருவமுள்ள பொருள்களாகவும் (particular figured bodies), சிந்தனையாகிய இயல்பு தனிப்பட்ட எண்ணங்களாகவும் இயற்றி நிலையில் செயல்களாகவும் (particular ideas and acts of will) வெளிப்படுகின்றன. நாம் வெற்றுநிலை எண்ணங்களையோ (abstract thought) அல்லது அருவமான வெற்றுநிலை பரப்புடைமையையோ அறியாமல், தனிப்பட்ட எண்ணங்களைப்பற்றியும் பொருள்களைப்பற்றியுமே அறிகின்றோம். ஆனால் இவைகளை இயல்புகளிலிருந்து பிரித்தறிய முடியாது. பரப்புடைமையின்றி இயக்கம் அல்லது இயக்கமின்மையையும், உள்ளம் இன்றி அறிவு அல்லது இயற்றி நிலையையும் உணர முடியாது.

ஆனால், மாறுநிலை தனக்கு வேறான பொருளில் இருப்புகொண்டுள்ளது, தனக்கு வேறான ஒன்றினால் அறியப்படுவது என்று ஸ்பிநோஸா கூறுவதனால் அது பிறிதின் சார்பின்றி உள்ள பொருளுக்கு (substance) நேர் எதிரான பண்பைப் பெற்றிருக்கின்றது. அவ்வாறெனின், மாறுநிலைகள் பொருளிலிருந்து எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றன? பொருள் தன் இயல்புக்கு முரணான இயல்புகள் உள்ளவற்றை எவ்வாறு தன்னுள்ளே அடக்கியதாகக் கருதமுடியும்? மேலும் ஒரு பொருள் எவ்வாறு பலவாக வேறுபாடு அடைகின்றது? இத்தகைய பல சிக்கல்கள் எழுகின்றன.

இவைகளைத் தீர்க்க ஸ்பிநோஸா 'எல்லையற்ற மாறுநிலைகள்' என்னும் ஒரு கொள்கையை (doctrine of infinite modes) வகுக்கின்றார். எதிரான பண்புகளுடைய எல்லையற்ற பொருளையும் (infinite substance), எல்லையுள்ள மாறுநிலைகளையும் (finite modes) இணைப்பதற்கே ஸ்பிநோஸா எல்லையற்ற மாறுநிலைகளைப் (infinite modes) பற்றிப் பேசுகிறார். அவைகள் எல்லையற்றிருப்பதினால் சில பண்புகளில் பொருளை (substance) ஒத்திருக்கின்றன. ஆனால் பொருளின்

மாறுபட்ட நிலையாதலின் மாறு நிலைகளின் (modes) பண்புகளையும் பெற்றிருக்கின்றன.

ஒரே தன்மையுள்ள, எல்லையுள்ள மாறுநிலைகளின் தொகுப்பையே (sum total) எல்லையற்ற மாறுநிலை என ஸ்பினேஸா கருதுகின்றார். அது ஒரு அளவுக்குரிய முழுமையானது. (It is a quantitative whole). அது தன்னுள் ஒரே தன்மையுள்ள மாறுநிலைகளை அடக்கியது. பொதுமையான அறிவு (universal intellect) எல்லையற்ற மாறு நிலையென்று கருதப்பட்டால், எல்லையுள்ள, தனிப்பட்டவர்களின் அறிவு அதன் மாறுபட்ட நிலைகளாகும். பரப்புடைமையாகிய இயல்பின் எல்லையற்ற மாறுநிலை, இயக்கமும், இயக்கமின்மையுமாம். எல்லையும் பரப்புடைமையுமுள்ள மற்ற எல்லாப் பொருள்களும் அதன் மாறுநிலைகளாகும். எல்லையற்ற மாறுநிலை எல்லையில்லாப் பொருளின் (infinite substance) நேர்முகமான(direct) மாறுநிலையாகும். எல்லையுள்ள மாறுநிலைகள் எல்லையற்ற மாறுநிலைகளின் பின்னெழுந்த தனிநிலைகளேயாகும். அவை எல்லையற்ற மாறுநிலைகளை நேர்முகமாகவும் (directly) எல்லையற்ற பொருளை மறைமுகமாகவும்(indirectly)சார்ந்துள்ளன. ஆகவே எல்லையுற்ற மாறுநிலைகள் பொருளின்(substance) மறைமுகமான மாறுநிலைகளாகும். இயக்கம்—இயக்கமின்மை(motion and-rest)என்பதனை ஸ்பினேஸா முதல்வரிசை எல்லையற்ற மாறுநிலை (infinite mode of the first order) என வழங்குகிறார். இரண்டாவது வரிசை எல்லையற்ற மாறுநிலையாக "முழுப்பிரபஞ்சத்தின் முகத்தை(face of the whole universe)க்" குறிப்பிடுகிறார். (முகத்திலுள்ள உறுப்புக்கள் வெவ்வேறாயிருப்பினும் முகம் ஒரே வகையாக இருப்பது போல) பிரபஞ்சத்திலுள்ள தனிப்பொருள்கள் வேறுபடினும் 'முழுப்பிரபஞ்சத்தின் முகம்' ஒரே வகையாக உள்ளது. ஸ்பினேஸா மாறுதல் பற்றிய சிக்கலை விளக்குகின்றார். இருப்பதெல்லாவற்றையும் ஒரே பொருளாகக் கொண்டால் மாறுதல் நிகழ்வதை எவ்வாறு விளக்கமுடியும்? ஸ்பினேஸா மாறுதலை திரிபுக் காட்சி என விளக்கவில்லை. மாறுதல் நிகழ்வது உண்மையே, ஆனால் அது பிரபஞ்சத்தின் உள்ளேயே நிகழ்வதாகுமேயன்றி, பிரபஞ்சம் முழுவதும் மாறுதலுக்கு உட்படவில்லை. மாறுதல் இல்லாத முழுமையினுள் மாறுதல் எவ்வாறு நிகழமுடியும் என்பதை

பிரபஞ்சத்தின் முகம் என்னும் உவமை வழியாக ஸ்பிநோஸா விளக்குகின்றார். இப்பிரபஞ்சத்தின் முழு அமைப்பு மாறாத தன்மை யுடையதாயிருப்பினும் அதன் பகுதிகள் பல மாறுதல்களுக்கு உட்பட்டே இருக்கின்றன. கடந்த நிலைக் கொள்கைத் தத்துவ அறிஞர் (transcendentalist) சடம் தன்னியல்பில் செயலற்றதாகவும் உலகம் இயங்குவதற்குப் புறத்திலிருந்தே செயலாற்றப்படவேண்டும் எனக் கருதலாம். ஆனால் அகணமந்த கொள்கையினரான (immanentalist) ஸ்பிநோஸாவிற்கு உயிரற்ற சடம் என்று ஒன்றும் இல்லை. இயற்கையை இயக்கியும் (natura naturans), இயற்கையில் இயங்கியும் (natura naturata) ஒருமைப்பாடுடையவை. செயலாற்றும் தன்மை அதன் அகத்திலிருந்தே எழுகின்றது. "கடவுள் இல்லை யென்று எவ்வாறு எண்ணமுடியாதோ அவ்வாறே கடவுள் செய லாற்றவில்லை என்றும் எண்ணமுடியாது. கடவுள் யாவற்றுக்கும் அகக் காரணமானவர் (internal cause):"

ஸ்பிநோஸா சடத்தை உயிரற்ற திரட்சியாகக் கருதவில்லை. இயக்கம் அதனுட் புகுத்தப்பட்டதன்று. அதுவே முடிவற்ற இயக் கத்தின் உயிருள்ள மூலமாகும். புறக்காரணம் அதனை செயலாற் றும் வரை 'அடங்கு நிலையில்' (quiescent) அது காத்திருப்பதில்லை. அது உலகத்தின் உயிரைக் கருத்தரித்திருக்கின்றது. பொருள்களைப் (things) பொறி இயல் தன்மை வாய்ந்தவையாக விளக்குவது தவறன் றெனினும் முழுவிளக்கமாகக் கொள்ள முடியாது என்றே ஸ்பி நோஸா கருதுகின்றார். அது முழுமையானதைப் பற்றிய உண்மையு மாகாது. இப்பிரபஞ்சம் பரப்புடைமை மட்டுமன்றிச் சிந்தனையும் பெற்றது, சடம் மட்டுமன்றி, உள்ளத்தையும் பெற்றது. உள்ளமும் இப்பிரபஞ்சத்தின் இன்றியமையாக்கூறாகும். மேலும் உள்பொரு ளின் தன்மையை முற்றிலும் சடத்தினாலேயே விளக்க முடியாத தினால் சடக் கொள்கையை இறுதி அல்லது முடிவான தத்துவமாகக் கருத முடியாது என்று ஸ்பிநோஸா அறிவிக்கின்றார். எல்லையற்ற மாறுநிலைகளுக்கும் (infinite modes) எல்லையுற்ற மாறு நிலைகளுக்கும் உள்ள உறவை எர்ட்மான் (Erdmann) பின்வருமாறு விளக்கு கின்றார் : ஒன்றினுள் ஒன்று அடங்கும் பல சதுரங்களை (squares) உற்று நோக்கும் பொழுது ஒவ்வொரு சதுரமும் அதனை உள் அடக்கி

யுள்ள சதுரத்தால் வரையறுக்கப்பட்டிருப்பதை அல்லது உண்டாக்கப்பட்டிருப்பதை அறிகின்றோம். இவ்வாறு, ஒவ்வொரு சதுரமும் தன்னை உள்ளடக்கிய சதுரத்தால் வரையறுக்கப்படுவதை அல்லது உண்டாக்கப்படுவதையும் தன்னுள் அடக்கும் சதுரத்தை வரையறை செய்வதை அல்லது உண்டாக்குவதையும் உணர்கின்றோம். இம்முறையில் மற்ற சதுரங்களையெல்லாம் தன்னுள் அடக்கிய பெரிய சதுரத்தை அடைகின்றோம். எண்ணற்ற சதுரங்களைத் தன்னுள் அடக்கிய இச்சதுரம் தன்னுள் அடங்கிய சதுரங்களின் இறுதியான காரணமாகும். இதுவே எல்லையற்ற மாறுநிலையைக் குறிப்பிடுகின்றது. ஆனால் இச்சதுரத்தை உண்டாக்குவது எது என்று சிந்திக்கும் போது எல்லையின்றி, இவ்வடிவத்திற்கு உட்படாதிருக்கிற இடமே (infinte, unfigured space) அதன் காரணம் என்று அறிகின்றோம். மேலும் அதுவே எல்லாச் சதுரங்களுக்கும் காரணமாகும். ஆகவே அது பொருளை (substance)க் குறிக்கின்றது. எல்லையற்ற மாறுநிலையை நேர்முகமாக உண்டாக்குவதே பொருள். நேர்முகமாக எல்லையுள்ள மாறுநிலைகளை உண்டாக்குவதே எல்லையற்ற மாறுநிலையாகும். ஆகவே, எர்ட்மான் குறிப்பிடுவது போல மூன்று இறங்குநிலைகளை (descending stages) காண்கின்றோம். (1) முழுமுதல் அல்லது எல்லையற்ற பொருள் (All originate or infinite substance) (2) பொருள்கள் அனைத்தும் அல்லது எல்லையற்ற மாறுநிலை (every things or the infinite mode), (3) தனிப்பட்ட பொருள்கள் அல்லது எல்லையுள்ள மாறுநிலை (each or individual thing or finite mode). இவ்வேறுபாட்டினை ஏற்றுக் கொண்டால் எல்லையுள்ள பொருள்கள் கடவுளிலிருந்து விளைவதில்லை என்றும் எல்லாப் பொருளும் கடவுளிலிருந்து விளைவதாகவும் கூறுவதில் முரண் ஒன்றுமில்லை என்று ஸ்பினோஸா கூறுகிறார். எல்லையுள்ள எல்லாப் பொருள்களும் தேவையானவை என்பதிலும் அவைகள் ஒவ்வொன்றும் மாறுதலுக்குட்பட்டவை என்பதிலும் முரண்பாடிருப்பதாகக் கருதமுடியாது.

இவ்வாறு எல்லையில்லா மாறு நிலைகள் என்றும் எல்லையுள்ள மாறுநிலைகள் என்றும் பாகுபாடு செய்வதிலுள்ள நன்மைகளைக் கருதுவோம். முதலாவதாக இவ்வேறுபாடு, பொருள்களின் (things)

மாறுதலையும் (change), பன்மையையும் (diversity) விளக்க உதவுகின்றது. ஸ்பினேஸா எல்லையுற்ற மாறுநிலைகளை எல்லையில்லாப் பொருளிலிருந்தே நேர்முகமாகக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்தால் எல்லையுள்ள பொருள்களின் பண்புகளாகிய மாறுதலையும் பன்மையையும் மறுக்க வேண்டியதாகும். எல்லையுற்ற மாறுநிலைகள் எல்லையற்ற பொருளால் நேராக உண்டாக்கப்பட்டவை என்று கொண்டால் அவைகளும் எல்லையற்ற பொருளைப் போலவே மாறுதலில்லாது நிலையான பண்பைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு நிகழின் ஒரு முக்கோணத்தின் தன்மைகள் என்றும் மாறாது இருப்பது போல மாறுநிலைகளும் என்றும் ஒரே நிலையில் இருக்கும்.

இதற்கு மாறாக, எல்லையற்றமாறுநிலைகளே எல்லையற்றபொருளிலிருந்து நேர்முகமாக வெளிப்படுவதாகக் கொண்டால் அவைகள் மட்டுமே என்றும் ஒரே தன்மை அடைகின்றன. எல்லையுள்ள மாறுநிலைகள், எல்லையற்ற பொருளினால் நேர்முகமாக (direct) உண்டாக்கப்படுவதில்லை. அவைகள் மாறாது, நிலையாக இருக்க வேண்டிய தேவை இல்லை. அவைகள் மாறுதலுக்குட்பட்டவை.

எல்லையுற்றதும் எல்லையற்றதுமான மாறுநிலைகளை வேறுபடுத்தியதில் ஸ்பினேஸா இன்னுமொரு நன்மையைக் காண்கின்றார். இவ்வேறுபாட்டினால் ஸ்பினேஸா, ஒன்றாயுள்ள பொருளிலிருந்து (unitary substance) அளவு நிலையுள்ள பலவற்றை அடையமுடிகின்றது. ஏனெனில் அவர் கருத்துப்படி எல்லையற்றமாறுநிலை, ஒரே தன்மையுடைய பல எல்லையுற்ற மாறு நிலைகளை உள்ளடக்கிய, அளவு நிலை பெற்றதாகும். எல்லையற்ற மாறுநிலை (infinite modes) பொருளிலிருந்து (substance) நேர்முகமாக கிடைக்கப் பெறுவதனால் பொருளே ஒன்றாகவும் பலவாகவும் ஆகின்றது. (it is both one and many). எல்லையற்றமாறுநிலை இவ்வாறு கருதப்படுவதால் ஸ்பினேஸா 'ஒன்றும் பலவும்' என்னும் சிக்கலுக்கு ஏதோ ஒரு வகையாக விடை காண முடிகின்றது. இதனால் ஸ்பினேஸாவுக்கு ஒன்றிலிருந்து பலவற்றையும் பலவற்றிலிருந்து ஒன்றினையும் விளக்க இயலுகின்றது.

எல்லையுள்ள மாறுநிலைகள் (finite modes) மூன்று முதன்மையான பண்புகளைப் பெற்றுள்ளன. அவை (1) எல்லையுள்ள மாறுநிலைகள்

திட்டவட்டமாக அமைகின்றன (they form a closed system). (2) அவைகள் ஒவ்வொரு இயல்பிலும் மீண்டும் தோன்றுகின்றன. (they are reproduced within each attribute). (3) தங்களுடைய இன்றியமையாத தன்மையில் அவை யாவும் செயல் முறையில் நிலவுகின்றன (they all actively persist in their own essence). இம்மூன்று பண்புகளும் அவைகள் சார்ந்துள்ள முழுமையின் பண்புகளோடு உறவு கொண்டவை.

(1) இயற்கையை இயக்கி என்பது தன்னாலே ஆவது. ஆகையால் இயற்கையில் இயங்குவது உண்டாக்கப்படுகிறது (natura naturans is self-determining: therefore natura naturans is determined). அத்திட்டத்திலுள்ள பகுதிகள் எல்லாம் நிலையுறுத்தப்பட்டவை. மாறுநிலைகள் யாவும் காரணகாரியத் தொடர்புக்குட்பட்டவை. முக்கோணத்தின் அமைப்பிலிருந்து அதன் பண்புகள் காலச் சார்பின்றி வெளியாவதைப் போன்று உலகமும் கடவுளிலிருந்து எழுகின்றது.

என்றுமுளதில் 'எப்போது', 'முன்', 'பின்' என்பன கிடையா. இவ்வுலகம் காலத் தொடர்பின்றிக் கடவுளிடத்தினின்றும் வெளிப்பட்டாலும் நமக்கு காலச்சார்புடையதாகவே தோன்றுகின்றது. ஏனெனில் மனிதவுள்ளம் யாவற்றையும் ஒரே சமயத்தில் காணவோ, புரிந்து கொள்ளவோ முடியாது. ஆகவே சிறிது சிறிதாகவே உணருகின்றது. இவ்வாறு தொடர்ந்து நிகழ்வன காலமும் காரண காரிய உறவுமாகும். காரணகாரிய, கால முற்பிற்பாடுகள் (causal and temporal sequences) எல்லாப் பொருள்களையும் கட்டுப்படுத்துகின்றன. அவைகளின் ஆற்றல் கடவுளின் ஆற்றலாகின்றது. செயலாற்ற உண்டாக்கப்பட்ட பொருள்களெல்லாம் கடவுளால் வரையறுக்கப்பட்டவையே. கடவுளால் வரையறுக்கப்படாதது தானாகவே தோன்ற முடியாதது. இவ்வாறு ஸ்பினோஸாவின் தத்துவம் ஒரு முழுமையான 'வரையறைப்பட்டது' என்னும் கொள்கைக்கு வழிகோலுகின்றது. இது உலகம் ஒழுங்கு முறையுடனும் இசைவுடனும் உள்ளது என்னும் அவருடைய கருத்தின் விளைவாகும். ஆனால் இசைவு (harmony) ஒழுங்குமுறை என்று பேசும் போது இவற்றை நமக்குப் பழக்கமான முறையில் கொள்ளக் கூடாது. (முழுமையான) இயற்கையில் உள்ள ஒழுங்கு முறையை

யும் இயந்த பொருத்தத்தின் (coherence) பெரும் பகுதியையும்பற்றி நாம் அறியாமலிருக்கின்ரேம். ஒழுங்குமுறை பொருள்களின் முடிவான அமைப்பு; அவ்வகையிலேயே அவை கடவுளின் எல்லையற்ற அறிவில் பொருந்தி அமைகின்றன. எனவே ஸ்பினேஸா சமயத்தை விஞ்ஞானக் கட்டாயப் போக்குக் கொள்கை (scientific necessitaria-nism) முறையில் அமைக்கின்ருர்.

மாறுநிலைகளின் இரண்டாவது பண்பு அவைகள் ஒவ்வொரு இயல்பிலும் மீண்டும் தோற்றமளிக்கின்றன என்பதாகும். உள்பொருள் தன் இயல்புகளின் வாயிலாக வெளிப்படுவது, நாம் முன்னர் அறிந்த உண்மையே. ஒவ்வொரு இயல்பும் உள்பொருளின் முழுமையையும் தன்போக்கிலேயே வெளியிடுவதால், ஒவ்வொரு மாறுநிலையும் இயல்புகள்ஒவ்வொன்றிலும்தன்னுரிமையில் தோன்றுகிறது. உள்பொருளும் அதன் மாறுபட்ட நிலைகளும் பரப்புடைமை உள்ளதாகவோ அல்லது சிந்தனையுள்ளதாகவோ தோற்றமளிக்கின்றன. இவ்விரண்டும் (சிந்தனையும் பரப்புடைமையும்) ஒன்றினை ஒன்று பற்றி நிற்பவையல்ல. அவைகள் ஒன்றினையொன்று விலக்குவதாக இருக்கின்றன. மேலும் மாறுநிலைகளைப் பௌதிக நிலையிலோ அல்லது உள்ள நிலையிலோ அறியலாம். ஆனல் ஒரு நிலையிலிருந்து மற்ருென்றுக்கு மாறமுடியாது. சிந்தனையும் பரப்புடைமையும் தனிப்பட்ட பொருள்களின் இயல்புகள் அல்ல, ஆனல் அவைகள் தனிப்பட்டதும் தன்னுரிமையும் பெற்றுள்ள ஒரே பொருளின் (substance) இயல்புகளாகும். கடவுள் ஒருவரே சிந்தனையும் பரப்புடைமையும் ஒருங்கே பெற்றுள்ள ஒரே பொருளாவர். இவ்வாறு பொருள்களின் இருமைக் கொள்கை மறைகின்றது. ஆனல் இயல்புகளின் இருமைக் கொள்கை எஞ்சி நிற்கின்றது. (The dualism of substance disappears, but the dualism of attributes remains). சிந்தனையும் பரப்புடைமையும் ஆகிய இவ்விரு இயல்புகள் ஒன்றினை ஒன்று செயல்படுத்த முடியாது. அதாவது பௌதிக நிகழ்ச்சிகளும் உள்ள நிகழ்ச்சிகளும் ஒன்றினை ஒன்று செயல்படுத்த முடியாது. இவ்விரு தொடர்களும் ஒன்றுக்கொன்று இணைந்து இருப்பதுமட்டுமன்றி, ஒரு பொழுதும் குறிக்கிடாமலும் இருக்கின்றன. ஆனல் உள்ள நிகழ்ச்சிகள் நிகழும் பொழுது பௌதிக நிகழ்ச்சிகளும், பௌதிக நிகழ்ச்சிகள் நடை

பெறும் பொழுது உள்ள நிகழ்ச்சிகளும் நடை பெறுகின்றன. இவ்வாறாக இருமைக் கொள்கை ஒருமைக்கொள்கைக்கும் அனைத்திறைக் கொள்கை கடவுட் கொள்கைக்கும் ஒன்றினை ஒன்று செயல்படுத்துவது இணைநிலைக்கொள்கைக்கும் வழி வகுக்கின்றன.

எண்ணங்களின் ஒழுங்கு முறையும் உறவும் பொருள்களின் ஒழுங்கு முறையும் உறவும் ஒரே தன்மையுமுடையன. மனிதர்களாகிய நாம், நமக்கே உள்ளம் இருப்பதாக எண்ணுகின்றோம். ஆனால் ஸ்பிநோஸா உள்ளங்களும் உருவங்களும் உள்பொருளின் இணைநிலை வெளிப்பாடுகள் என்று கூறுகிறார். அளவில் வேறுபாடிருப்பினும் எல்லாப் பொருள்களும் உயிருள்ளவை என்று ஸ்பிநோஸா கருதுகின்றார்.

(3) மூன்றாவது பண்பு, மாறுநிலைகள் தங்களுடைய இன்றியமையாத தன்மையில் செயல் முறையில் நிலவுதலாகும். அவைகளின் அடிப்படைத்தன்மையும், இருத்தலும் (essence and existence) தெய்வீக ஆற்றலிலிருந்து வெளியாகின்றவையாகும். கடவுள் சாமானிய திருஉளமாகக் கருதப்படுகின்றார். (God is the general providence). தனிப்பொருள்களும், இயற்கை முழுவதிலும் தம் இருத்தலுக்கும் வாழ்விற்கும் முனைந்து நிற்பதைக் காண்கின்றோம். ஒவ்வொரு பொருளும் தன் நிலையைப் பாதுகாக்கவும், முன்னேற்றமடையும் ஒரு போராட்டத்தை அல்லது முயற்சியை (striving)த் தன்னுள் கொண்டுள்ளது. இத்தகைய போராட்டத்தை ஸ்பிநோஸா சிறப்பான திருஉளம் (special providence) என்று கருதுகின்றார். மேலும் ஸ்பிநோஸா தனிப்பட்ட பொருள்கள் எல்லாம் மாறுநிலைகள், அவைகளின் மூலமாகவே கடவுளின் இயல்புகள் திட்டவட்டமாக வெளிப்படுகின்றன, அதாவது அவைகளே கடவுள் திட்டவட்டமாக இருக்கவும் செயலாற்றவும் பெற்றுள்ள ஆற்றலை வெளிப்படுத்துகின்றவை என்று கூறுகின்றார்.

## மனிதர்கள் இயற்கையின் பகுதிகள்
## (HUMAN BEINGS AS PARTS OF NATURE)

மனிதர்களும் இயற்கையின் மாறுநிலைகளாவர். மற்றப் பொருள்களைப் போலவே இவர்கள் இயற்கையின் பண்புகளைப் பெற்றும் இயற்கையின் திட்டத்தினுள் அடங்கியும் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே மாறுநிலைகள் பெற்றுள்ள தன்மைகள் யாவும் மனிதர்களுக்கும்உரியனவாகும்.அவர்கள் ஒருவருக்கொருவர் உறவு கொண்டும் வரையறைக்கு உட்பட்டுமிருக்கின்றனர்: அவர்களுடைய ஒருமைப்பாடு பலவகையான இயல்புகள் மூலம் வெளியாகின்றது. மேலும் அவர்கள் தங்கள் தன்மையில் நிலைத்திருக்க முயலுகின்றனர். பரப்புடைமையும் சிந்தனையும் ஆகிய இரு இயல்புகள் உடலாகவும், உள்ளமாகவும் வெளிப்படுகின்றன.

## மனித உடல்
## (HUMAN BODY)

உடலைப் பொறுத்த வகையில் மனிதன் மற்ற பொருள்களின் தன்மையையே பெற்றுள்ளான். அவைகளைப் போலவே, மனித உடலும், இயக்கம் ஓய்வு ஆகியவற்றின் சமநிலையில் அமைக்கப் பெற்றிருக்கும் எளிய தனிமங்களின் திட்டமாகிறது. மற்றவைகளைப் போலவே மனித உடலும், முழுமையான இயற்கைத் திட்டத்தினுள் அடங்கிய ஒரு பகுதியேயாகும்:

இயற்கையில், எல்லாப் பொருள்களும் ஒன்றாக இணைந்திருக்கின்றன. ஆனல் நாம் இவ்வுலகை அரைகுறையாகவும் தவறான நோக்குடனும் காணும் பொழுது, சில பொருள்கள் பயனற்றும் முறையற்றும் பொருளற்றும் தோற்றமளிக்கின்றன. முதலில் நாம் நம்முடைய ஒழுங்குமுறை, மதிப்பு முதலியவைகளைப் பற்றிய குறைபாடுள்ள கருத்துக்களை அவைகளின் மேல் சுமத்தி பிறகு அவைகளில் பொருத்தமில்லாதவைகளைக் கண்டிக்கிறோம். நம்முடைய கற்பனையே பொருள்கள் அழகுள்ளவை அல்லது அருவருப்பானவை,

முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டவை (well ordered) அல்லது குழப்பமானவை என்று வேறுபடுத்துகின்றது. இருந்தபோதிலும் எங்கும் பரவியுள்ள ஒரு ஒழுங்கு எவ்வித நோக்க அமைப்பும் இல்லாமல் பொருள்களில் காணப்படுகின்றது. எல்லாப் பொருள்களும் தம்முடைய இயல்பினுக்குள் ஒரு தனிப்பட்ட திட்டத்தை வகுக்க மாறுநிலைகளாகப் பொருந்தி இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பொருளும் முழுமையான இப்பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகவும், அதனுடன் முற்றிலும் ஒற்றுமை கொண்டும் மற்றபகுதிகளோடு பொருந்தியும் இருக்கின்றது.

## மனித உள்ளம்

## (HUMAN MIND)

மனித உள்ளமும் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியே ஆகும். பிளேட்டோ மனித உடல் ஒரு சிறைச்சாலையைப் போன்றது என்றும் இறத்தலினால் அது அழிகின்றது என்றும் கருதுகின்றார். அரிஸ்டாட்டில், அவ்வாறின்றி, ஆன்மா அல்லது உள்ளமும் உடலும், உருவமும் உருவத்தைப் பெற்றுள்ள பொருளும் போன்றவை என்றும் ஆகவே அவைகள் ஒன்றாகவே இருந்து ஒன்றாகவே அழிகின்றன என்றும் எண்ணுகின்றார். ஒவ்வொரு பொருளும் உள்ளத்தைப் பெற்றிருக்கின்றது என்றும் உடலும உள்ளமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை என்னும் ஸ்பினோஸாவின் கருத்துக்கள் அரிஸ்டாட்டிலினுடைய கருத்துக்களை ஒத்திருக்கின்றன. எனினும் ஸ்பினோஸா ஆன்மா பிறிதின் சார்பற்றது என்றும் எண்ணங்களின் ஒழுங்கும் உறவும் புறப்பொருள்களின் ஒழுங்கும் உறவும் ஒரே தன்மை பெற்றிருப்பினும் அவை வெவ்வேறாகவும் சார்பற்றும் இருக்கின்றன என்றும் கூறுவதால், ஓரளவுக்குப் பிளேட்டோவின் கருத்துக்களை இதில் காண்கின்றோம்.

உடலும் ஆன்மாவும் (body and soul), உள்ளமும் சடமும் (mind and matter) ஸ்பினோஸாவின் கருத்துப்படி ஒன்றுக்கொன்று செயல் படுத்த இயலாமலிருப்பவை. ஆனால், இதனை நாம், அவைகள் ஒவ்

வொன்றும் தம் போக்கிலேயே செல்லுவதாகக் கொள்ளலாகாது. இங்கு, ஸ்பிநோஸா உணர்த்துவது யாதெனில் ஆன்மா ஒரு பொருளின் வெளிப்பாடு என்று கருதினால் அப்பொருளின் மற்றொரு வெளிப்பாடு உடலேயாகும். அதாவது ஆன்மாவும் உடலும் ஒரே பொருளின் இருவித தோற்றங்கள் அல்லதுவெளிப்பாடுகள் ஆகும். பொருளின் உள்ளத்தன்மை (mental aspect) ஆன்மாவாகவும் பரப்புடைமையியல்பு உடலாகவும் தோற்றமளிக்கின்றன. ஆகவே ஒரே பொருளை அதன் சிந்தனை யியல்பில் நோக்கும் பொழுது ஆன்மாவாகவும் பரப்புடைமையிலியல்பில் நோக்கும்பொழுது உடலாகவும் அது அறியப் படுகின்றது, இக்காரணத்தினாலேயே, இயற்கையை எந்த இயல்பில் நோக்கினும், அதன் ஒழுங்கு முறை, ஒரே தன்மையாக உள்ளது. இதன் விளைவாகவே உடலில் நிகழும் செயல்கள் வல்லுணர்ச்சிகள், முதலியவைகளின் ஒழுங்கும் உள்ளத்தில் நிகழும் செயல்களும் மனவெழுச்சிகளும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன. ஆகையால் உடல் உள்ளத்தையோ, உள்ளம் உடலையோ செயல்படுத்தவில்லை. இவை இரண்டும் காரண காரிய விதிகளுக்குட்பட்டும் வரையறைக்குட்பட்டும் கோவையாக ஒத்தியங்குகின்ற இரு தோற்றங்கள். ஆகவே உடலில் மாறுபாடு நிகழின் அத்துடன் உள்ளத்திலும் நிகழ்கின்றது. இவ்விதம் உள்ளத்தில் நிகழும் மாறுபாட்டினை அறிவு (knowledge) என்று ஸ்பிநோஸா கருதுகின்றார். மேலும் நாம் நம் உடல் நிலைகளைப் பற்றியே உடனடியாக அறிவைப் பெறுகின்றோம். ஏனெனில், இங்கு நிகழும் மாறுதல்களை நேர்முகமாகவே உணர்கின்றோம். ஆனால் மற்றவர்களைப் பற்றி மறைமுகமாகத்தான் அறிகின்றோம்.

ஸ்பிநோஸா, அறிவுக்கும் நடத்தைக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாகவே எண்ணுகின்றார். அறிவு நமக்குப் புறம்பானதன்று. புறத்தேயிருந்து உட்சேர்க்கப்பட்டதுமன்று. தன் உள்ளடங்கிய பொருள்களைப் பற்றி பராமுகமாயுள்ள ஒரு 'வெற்றுப் பெட்டியை போன்று' அதனைப் பலதிறப்பட்ட செய்திகளின் தொகுதியாகக் கருதவும் முடியாது. அறிவு ஒரு ஆன்மீக நிலையாகும். நாம் இருக்கின்ற நிலை நம் அறிவைப் பொருத்தே இருக்கின்றது. நாம் எவ்வாறு செயலாற்றுகின்றோம் எனபது நம் நிலையைப் பொருத்தே இருப்

பதனல் நம் அறிவும் நடத்தையும் ஒன்ருேடொன்று பிணைந்தே நிற்கின்றன. நம் அறிவு எவ்வளவு உயர்கின்றதோ அவ்வளவு நம் வாழ்க்கையும் மேன்மை பொருந்தியதாகின்றது. நன்மையும் உண்மையும் ஒன்ருக இணைந்தே முன்னேறுகின்றன. ஸ்பிநோஸா எழுதிய அறநூல் 'ஒழுக்க முரண்நிலை ஆய்வாகவே' (a kind of moral dialectic) ஒருவகையில் தோற்றமளிக்கின்றது.

## மனித நடத்தை

### (HUMAN BEHAVIOUR)

மனிதனும், மற்றப் பொருள்களைப்போலவே, தன்னுடைய இன்றியமையாத தன்மையை நிலைநிறுத்தவே முயல்கின்ருன். இயற்றித் திறனையே மனிதன் அடிப்படையாகக் கொண்டவன். ஆனல் அவனுடைய முயற்சிகள் முன்னதாகவே தீர்மானிக்கப் பட்டவை. நாம் நம்முடைய செயல்களைப்பற்றி அறிந்துள்ளோம்: ஆனல் அவைகளின் காரணத்தை யுணரவில்லை. செயல் உரிமை ஒரு திரிபுக்காட்சியேயாகும். ஒரு பொருள் தன் இருத்தலுக்கும் செயலுக்கும் பிறிதன் சார்பற்றுத்தானே காரணமாயின், அதனைத் தன்னுரிமை பெற்றது அல்லது கட்டுப்பாடற்றது என்று ஸ்பிநோஸா கருதுகின்ருர். கடவுள் கட்டாயத் தேவையாக இருக்கின்ருர். எனினும் அவர் பிறிதின் சார்பற்று, தன் இயல்பினலேயே இருப்பதனல் கட்டுப்பாடற்று அல்லது தன்னுரிமையில் இருப்பவர். கட்டற்ற நிலையென்பது எதையும் தேர்ந்தெடுக்கக் கூடிய செயல் உரிமை என்று ஸ்பிநோஸா கருதவில்லை. அதைக் கட்டாயத்திற்குட் பட்ட செயல் உரிமையாகவே அவர் கருதுகின்ருர். (For Spinoza freedom lies not in free choice but in free necessity). இப்பொருளில் கடவுள், முழுமையான கட்டுப்பாடற்றவர் அல்லது தன்னுரிமை பெற்றவர். ஆனல் படைக்கப்பட்ட பொருள்கள் புறக்காரணங்களால் வரையறுக்கப்பட்டிருப்பதனல் அவைகளைக் கட்டுப் பாடற்றவைகளாகக் கருத முடியாது. உயரத்திலிருந்து, கீழே விழுகின்ற ஒரு கல், நனவு நிலை அல்லது சிந்திக்கும் தன்மை பெற்றிருக்கு

மாலும் அது தன் இயற்றித்திறனாலேயே அவ்வாறு செய்வதாக எண்ணலாம். ஸ்பிநோஸா இதனையே மேற்கோளாகக் காட்டி மனிதனுடைய தன்னுரிமை நிலையை விளக்குகின்றார். மனிதன் தனக்குத் தன்னுரிமை இருப்பதாகத் தவறாக எண்ணுவதின் காரணம் யாதெனில் அவன் தன் விருப்பங்களையே அறிகின்றான், ஆனால் அவைகளை வரையறுக்கும் காரணங்களைப் பற்றி அறிவதில்லை என்பதுவே. மனிதன் தன் நனவு (self-consciousness) பெற்றிருப்பினும் மற்றவைகளைப் போலவே புறக்காரணங்களால் வரையறுக்கப்பட்டுள்ளான்.

"ஒரு பொருள் நல்லதென்பதற்காக நாம் அதனை விரும்புவதோ பெற முயல்வதோ இல்லை. நாம் அதனை விரும்புவதாலோ பெற முயல்வதாலோ, அதனை நல்லதென்கிறோம்."*

## அறிவின் நிலைகளும் அறவியல் நிலைகளும்

### (THE GRADES OF KNOWLEDGE AND CONDUCT)

ஸ்பிநோஸா பெரிதும் அறவியலைப்பற்றியே ஊக்கங் கொண்டவர் என்பது முன்னமேயே நாம் அறிந்த உண்மையாகும். அவர் மனிதனுக்கு யாவற்றிலும் மேலான அல்லது உயர்ந்த நன்மையைக் கண்டறிவதில் விஞ்ஞானம், தத்துவம் முதலியன எந்த அளவில் உதவியளித்தனவோ அவ்வளவிலேயே அவைகளைப் பற்றி அக்கறை கொண்டார். பௌதிக சாத்திரம், உளவியல், அளவையியல், சடம், உள்ளம், அறிவு பற்றிய கொள்கைகள் யாவும் நடத்தை பற்றிய கொள்கையில் ஒன்று சேர்ந்து முடிவடைகின்றன. மேலும் ஸ்பிநோஸா அறிவும் நடத்தையும் நெருங்கிய தொடர்புடையவை என்று கூறியதை நாம் முன்னமேயே பார்த்தோம். உடல் வளர்ச்சியுறும் பொழுது உள்ளமும் வளர்ச்சியடைகின்றது, உள்ளத்திலிருந்து அறிவு எழுகின்றது என்று ஸ்பிநோஸா கருதுகின்றார். ஸ்பிநோஸா அறிவை மூன்று பெரும் நிலைகளாகவும் (அல்லது படி

---

* L. Roth: Spinoza, p. 114.

ளாகவும்) அவைகளுக்கு நேராக நடத்தையையும் மூன்று படிகளாக வகுத்துக் கூறுகின்றார்.

(1) அறிவில் முதல் படி அல்லது நிலையாகக் கூறப்படுவதை உண்மையில், அறிவாகவே கருத முடியாது. ஆகவே அதனை ஸ்பினோஸா " கருத்து அல்லது கற்பனை " (opinion or imagination) என்று குறிப்பிடுகின்றார். அது குழப்பமான புலனறிவையும், பழைய நினைவுகளையும் ஒழுங்கற்ற வகையில் அளிக்கும் தன்மை பெற்றுள்ளது. எனவே இந்நிலை தெளிவற்ற அனுபவத்தையே தருகின்றது.

இவ்வறிவு நிலைக்கேற்ப ஒழுக்கத்திலும் முதல் நிலை குழப்பமாகவே உள்ளது. இந்த நிலையில் ஒவ்வொருவரும் தானே தன் உள வெழுச்சிகளுக் கேற்ப நன்மை, தீமைகளைத் தீர்மானிக்கவும் அல்லது சீர்தூக்கிப் பார்க்கவும் முற்படுகின்றனர். மேலும் ஒருவருக்கொருவர் தன்மை வேறுபடுவது போல மகிழ்ச்சியிலும் வேறுபாடு இருக்கின்றதைக் காண்கின்றோம். இவ்வித (அறவியல்) குழப்ப நிலையில் உண்மையான சமூகமோ தனிமனிதனோ இருக்க முடியாது. ஏனெனில் இந்நிலையில் நம்முள் தெளிவான சிந்தனையோ செயலோ நிகழவில்லை. ஆகவே நாம் காற்றில் அகப்பட்ட பஞ்சைப் போல் இருக்கின்றோம். இந்நிலையில் நாம் 'அடிமைகள்' ஆகின்றோம் என்று ஸ்பினோஸா கூறுகிறார்.

2. அறிவில் இரண்டாவது நிலையை ஸ்பினோஸா அறிவு நிலை (stage of ratio) அல்லது விஞ்ஞானப் போக்கில் நிகழும் அறிவு முறை என்று குறிப்பிடுகின்றார். அது உடல், உள்ளம் இவற்றின் பரந்த அனுபவத்தால் எழுகின்றது. இந்நிலையில் பொருள்களைப் பற்றிப் போதிய எண்ணங்கள் (adequate ideas) கிடைக்கப் பெறுவதால், பொருள்களைத் தெளிவற்ற நிலையில் கருதாது, திட்டங்களின் இன்றியமையாத அல்லது நிறைவுக்குத் தேவையான பகுதிகளாகவே அறிகின்றோம். அவைகள் ஒன்றுக்கொன்று " இணைந்தோ அல்லது வேறுபட்டோ காணப்படுகின்றன ". அறிவின் தன்மை பொருள்களை என்றுமுள தின் குறிப்பிட்ட ஒரு உருவத்தின் மூலமாகக் காண்பதும் மனித உள்ளம் கடவுளின் என்றுமுள, இன்றியமையாத தன்மையைப் பற்றி போதிய உணர்வு பெற்றுள்ளது

என்று அறிவதுமாகும். ஆனால், இந்நிலையில் கடவுளின் அல்லது பொருள்களின் என்றுமுள, இன்றியமையாத தன்மையைப் பற்றிய அறிவு போதியதாக இருப்பினும் முழுமையானதாகக் கருத முடியாது. ஏனெனில் இங்கு நாம் அறிவது சட்டம் அல்லது ஒழுங்கைப் பற்றியே அன்றி, தனித்தன்மையைப் பற்றியல்ல. பொருள்களின் இன்றியமையாத தன்மை விஞ்ஞானிகள் அறிவதுபோல் அவைகளின் பொதுவான தன்மையில் புரிந்து கொள்ளாமல் கடவுள் அறிவது போல் அறிய வேண்டும்.

இதனை ஒத்தநிலை அறவியலிலும் காண்கின்றோம். இந்நிலையில் மனிதன் தன் விருப்பு வெறுப்புகளை மற்றவர்கள் மீது அல்லது உலகத்தின் மீது சுமத்துவதில்லை. மேலும், நன்மை, தீமை பற்றிய தன்னுடைய தீர்மானங்கள் பிரபஞ்சத்திற்கும் பொருந்துமென கருதலாகாது என்று மனிதன் உணருகின்றான். அவைகளின் எல்லைக்குள் அவை ஏற்புடையனவே. ஆனால் அதற்கு அப்பால் அவைகள் ஏற்புடையனவாகக் கருத முடியாதவையே. ஒழுக்கக் கோட்பாடுகளின் குறிக்கோளை உண்மையை மறுப்பவர்களுக்கும் ஒழுக்கக் கோட்பாடுகள் அல்லது குறிக்கோள்களே யாவற்றிற்கும் திறவு கோல் என்று கருதுபவர்களுக்கும் இடையே ஸ்பினோஸா இவ்வாறாக ஒரு நடுவான பாதையை வகுக்கின்றார்.

முன்னர் அறிந்த அறிவு நிலையில் (தெளிவில்லாத உணர்ச்சி நிலையில்) மனிதர்களுக்குள் பொதுவானதாக ஒன்றுமில்லை. அறியாமை பிரிக்கின்றது. (Ignorance divides). ஆனால் இரண்டாவது நிலையில் (அறிவு நிலையில்) மனிதன் அறிவையும் (reason) அதன் ஆற்றலையும் காண்கின்றான். அறிவு ஒன்று படுத்துகின்றது. ஆகவே நாம் நன்மையானது என்று கருதுவது தனிப்பட்டவர்களின் உடைமை அன்று என்பதை உணருகின்றோம். அது யாவருக்கும் பொதுவானது, எல்லோராலும் அனுபவிக்கத் தக்கது. அற நெறியைப் பின்பற்றும் ஒவ்வொருவனும் தனக்காக விரும்பும் நன்மையை பிறருக்குகாகவும் விரும்புகின்றான். அவன் கடவுளைப் பற்றிய அறிவு மிகுதியாகப் பெற்று இருந்தால் அவனுடைய பிறர் நல விருப்பமும் மிகுதியாகின்றது. அத்தகைய உயர்ந்த நோக்கத்தில் பங்கு கொள்ளுவதே சமுகத்தின் நோக்கமாகும். மேலும் மனிதன் தன்னுரிமையை

அதாவது பிறர் தொடர்பற்ற தனித்த துறவு வாழ்க்கையில் அல்லாமல் பிறருடன் நட்புமுறையிலுள்ள வாழ்க்கையிலேயே காண்கின்றான்.

3. அடுத்த படியாக, மூன்றாவது அறிவு நிலையில் காண்பான், காணப்படு பொருள் எனப் பகுத்தாராயும் சிந்தனையையும் கடந்து தத்துவ ஞானத்தை உள்ளுணர்வால் பெறும் நிலையை அடைகின்றான். இந்நிலையில் இயற்கையை ஒருமைப்பாடு (unity) உடையதாக முன்னர் அறிந்ததுபோல் புறத்திலிருந்து அறியாமல் தன்னிருத்தல் நிலையிலிருந்து உணர்கின்றான். மேலும், இயற்கை பல பொதுவிதிகளைக் கொண்ட கருத்தியலான முழுமைக்கு (abstract whole) மேம்பட்ட, தானேநெறிப்படுத்தும் தனியன்கள் அடங்கிய ஒரு காட்சிப் பொருண்மையான திட்டம் (concrete system) என அறிகின்றான்.

இந்த அறிவியல் நிலையில் ஒழுக்கம் அன்பாக வெளிப்படுகின்றது. இவ்வன்பு அறிவின் மூலமாக எழுந்ததினால், இதனை, அறிவுத் தன்மையுள்ளதாகக் கருதலாம். அதன் குறிக்கோள் இப்பிரபஞ்சம் அல்லது இயற்கை அல்லது கடவுளேயாகும். ஆகையால் அதனை அறிவிலெழு இறையன்பு (intellectual love of God) என்று ஸ்பினோஸா கூறுகின்றார். இத்தகைய அன்பில் ஸ்பினோஸாவின் தத்துவத்தின் அடிப்படையான நோக்கங்கள் அடங்கி இருக்கின்றன. அவையாவன-அறிவோடு அமைந்தவாழ்க்கை, மனவெழுச்சிகளுள்ள செயல், இயற்கை உயிரற்றதாயிராது, வாழும் கடவுளாகவே இருப்பது (a nature which is not dead but the very living God.) இத்தகைய இறையன்பினால் தான் நாம் கட்டுபாடற்றவர்களாக இருக்கவும் நம்மையே உணரவும் (நாம் நாமேயாக) முடிகின்றது.

நம் உள்ளம் தன்னையே உணரும் பொழுதும் கடவுளைப் பற்றியும், பொருள்களைப் பற்றியும் உணரும்பொழுதும் விஞ்ஞானத் தன்மைபெற்ற அறிவு நிலையைக் கடந்து சென்று எப்பொருளையும் என்றுமுளதாகவே காண்கிறோம். இந்த உள்ளுணர்வு அறிவு நிலையில் தன்னுடைய உண்மையான தன்மையை உணருகின்றான். அறிவே ஒரு செயலாக இருத்தலால் யாவற்றிலும் உயர்வான அறிவு உயர்வான மகிழ்ச்சியை அளிக்கின்றது. காரணத்தை அடிப்படையாகக் கொண்ட மகிழ்ச்சியே அன்பு, ஆகவே, இவ்வறிவுடன் அன்

பும் எழுகின்றது. மேலும் இது கடவுளுக்கும் மனிதனுக்கும் உரியதாகையினால், கடவுள் இத்தகைய மேலான செயலில் மகிழ்ச்சி கொள்வதோடு, இம்மகிழ்ச்சிக்குத் தானே காரணம் என்று உணரும் பொழுது தன்னிடமே அன்பு கொள்ளுகிறார். மனிதன் தன்னுடைய சிந்தனையிலும் மகிழ்ச்சியிலும் கடவுளே இம்மகிழ்ச்சிக்குக் காரணம் என்று அறிவதால், கடவுளிடம் அன்பு செலுத்துகின்றான். ஆனால் மனிதனுடைய அறிவு கடவுளின் அறிவில் ஒரு பகுதியேயாகும். எனவே மனிதனின் இறையன்பு கடவுள் தன்னிடமே கொள்ளும் அன்பில் ஒரு பகுதியே யாகும். ஆகையால் "கடவுள் தம்மிடமே அன்பு செலுத்துவதினால் தம்முள் அடங்கிய மனிதனிடமும் அன்பு செலுத்துகின்றார். அதன் விளைவாகக் கடவுள் மனிதனிடமும் மனிதன் கடவுளிடமும் செலுத்தும் அன்பும் ஒன்றேதான், அதாவது ஒன்றாகவே இருக்கின்றது, ஒரே தன்மையுள்ளது"* எனவே நாம் பேரின்பம் அடைவது நிலையான என்றுமுள இறையன்பினை அல்லது இறைவன் மனிதனிடம் கொள்ளும் அன்பினைச் சார்ந்ததாகின்றது. இந்த நிலையில் இறப்பதைப் பற்றிய அச்சம் ஏற்படுவதில்லை. உள்ளம் என்றுமுள அறிவாற்றலைப் பெற்றிருப்பதும் அறிவாற்றல் தன் செயலை நிலைநிறுத்துவதுமே அதன் காரணங்களாகும்.

## அறவியல்

## (ETHICS)

ஸ்பிநோஸாவின் அறவியல் திட்டத்தின் சில பண்புகளை இங்கு ஆராய்வோம். ஸ்பிநோஸா அறவியலிலும் நோக்க அமைப்பை ஏற்கவில்லை. எனவே அவருடைய அறவியல் நோக்க அமைப்பை எதிர்த்தே (anti-teleological) அமைந்துள்ளது. மனிதனும் ஒரு மாறுநிலை (mode)யாதலின் அவன் செயல்கள் யாவும் இடைவிடா காரண காரியத் தொடர்பால் வரையறுக்கப்பட்டுள்ளன. அவன் தன் செயல்கள் வரையறுக்கப்பட்டவை என்று உணராததினால், தன்னுரிமை பெற்றுள்ளதாக நினைக்கின்றான். தன்னுடைய செயல்

* L. Roth: Spinoza, p. 156.

ஒவ்வொன்றும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குட்படாத புற ஆற்றல்களால் வரையறுக்கப்படுகின்றது என்பதை உணர்ந்தால், தானும் மற்றைய மாறுநிலைகளைப் போலவே கட்டாயத்தினால் செயலாற்றுவதையும் தனக்கு உண்மையில் செயலுரிமை இல்லை என்பதையும் உணர்வான்.

டேக்கார்ட்டின் அறவியல் கொள்கையில் கட்டாயத்தின் உணர்வு ஒரு பகுதியாக மட்டும் இருக்கிறது. ஆனால் ஸ்பினோஸாவின் அறவியலில் அது மையமாகத் திகழ்கின்றது. "பிறவற்றில்போல இங்கேயும் ஸ்பினோஸாவின் கொள்கை கார்டீசிய கொள்கையை அளவை முறைக்கேற்ப அமைக்கிறது, எளிதாக்குகிறது, ஆனால் வளமற்றதாக்குகிறது*." ஆக செயல் உரிமை நம்பிக்கை ஒரு திரிபுக் காட்சி, அல்லது கற்பனையாகவே முடிகின்றது.

நன்மை, தீமைகளைப்பற்றி நாம் கொள்ளும் கருத்துக்கள் பிழையானவையே. ஏனெனில் நாம் நன்மை தீமை என்று கொள்ளுவது உண்மையில் நன்மை தீமை என்று திட்டமாகப் பாகுபாடு செய்ய முடியாதவையே. நன்மை, தீமை என்று குறிப்பிடுவது அவைகளைச் சார்ந்தே உள்ளது. கடவுளுக்கு நன்மை, தீமை என்னும் பாகுபாடில்லை. அவைகள் நாமாகவே ஏற்படுத்தும் கற்பனை வேறுபாடுகளாகும். நன்மை தீமை என்று பாகுபாடு செய்ய ஒரு திட்டமான அடிப்படை இல்லாததினால் ஒருவர் நன்மை என்று கருதுவது மற்றொருவருக்குத் தீமையாகப் புலப்படுகின்றது. எனவே இவ்வேறுபாடுகள் சார்புற்றவையே. ஆனபடியால் எதையும் அதன் இயல்பினாலேயே நன்மை என்றோ தீமை என்றோ வரையறுக்க முடியவில்லை.

மேலும் இவ்வேறுபாடு நாம் அடையும் இன்பத்தைச் சார்ந்தே உள்ளது. நாம் இன்புற உதவுவதை நன்மை என்றும் உதவியளிக்காததை தீமை என்றும் குறிப்பிடுகின்றோம். நாம் பொருள்களை நன்மை தீமை என்று குறிப்பிடுவது அவைகளின் விளைவைச் சார்ந்தே உள்ளது. ஸ்பினோஸா படிப்படியாக மதிப்பில் உயர்கின்ற பல நன்மைகளின் தொகுதியை வகுக்க முயல்கின்றார். எந்த அளவுக்கு மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு பொருள் உதவு

* Janet and Sailles, p. 61.

கின்றதோ, அதனைப் பொறுத்தே அப் பொருளின் நன்மையின் அளவையும் தீர்மானிக்க முடிகின்றது.

ஸ்பிநோஸா தன்னுடைய இன்பத்தைப் பற்றிய கொள்கையை அமைக்கும் வகை அவருடைய அறவியலைத் தன் முனைப்பான (egoistic) போக்குடையதாகத் தோன்றச் செய்கின்றது. மனிதன் எந்த அளவுக்குத் தற்காப்பு செய்துகொள்கின்றானோ அதற்குத் தகுந்த அளவில் நன்மை பெறுகின்றான் என்று ஸ்பிநோஸா கருதுகின்றார். அவருடைய அறவியல், கட்டுப்பாட்டினின்றும் தன்னுரிமை அடைவதையே வற்புறுத்துகின்றது. எந்த அளவுக்கு வல்லுணர்ச்சிகளை ஒருவன் வெல்லுகின்றானோ அந்த அளவில் அவன் நிறைவு உடையவனாகின்றான். இது மனிதனிடம் பழமையான இயல்பூக்கமாயமைந்துள்ள தற்காப்பை மீண்டும் வலியுறுத்துவதாகும். ஆனால் ஸ்பிநோஸா மேலும் அவருடைய அறவியல் கருத்துக்களை விளக்கும்பொழுது தற்காப்பு இயல்புணர்ச்சியை வற்புறுத்துவது சிறிது குறைந்தே காணப்படுகின்றது.

மனிதன் அறிவு பெற்றிருப்பதால் தற்காப்பு நோக்கத்தை எந்த அளவில் நிறைவேற்றுவது என்பதனை அறிவான். சமூகத்தில் தானும் ஒருவனாகவே இருப்பதால் மற்றவர்கள் நன்மைக்கு உதவியாக இருப்பது தனக்கும் நல்லது என்று அவன் உணர்கின்றான். மேலும்தான் இன்பமடைய விரும்பினால் மற்றவர்களுக்கு எதிராகப் போகமுடியாது. எனவே ஸ்பிநோஸா சமூகத்தைப்பற்றி விளக்குவதில் அவருடைய தன்முனைப்புக் கருத்துக்கள் சிறிது சிறிதாகப் பிறர் நலக்கொள்கைத் (altruism) தன்மை பெறுவதைக் காண்கிறோம். அது அவருடைய தனிநிலைக் கொள்கையை (individualism) உணர்த்துகிறது.

ஸ்பிநோஸாவின் கருத்துப்படி, எது உண்மையில் பயனுள்ளதாக இருக்கின்றதோ அதனையே மனிதன் தேடவேண்டும். அவனுடைய இன்பத்திற்கு எது துணையாக இருக்கின்றதோ அதுவே பயனுள்ளதாகக் கருதக்கூடியது. எதிர்மறையாகப் பார்க்கும் போது ஸ்பிநோஸாவின் கருத்து மனிதன் துன்பங்களையும் துயரத்தைத் தரும் வல்லுணர்ச்சிகளையும் தவறான பாதையில் செலுத்தும் பிழையான, நிறைவற்ற எண்ணங்களையும் தவிர்க்க வேண்டும்

என்பதாகும். உடன்பாட்டு முறையில் பேசும்போது, மனிதனுடைய துன்பத்திற்கு வழிகோலாமல் ஆனால் தூய அன்புக்கு உறைவிடமான கடவுளை அடைய எவை உதவுகின்றனவோ அத்தகைய மனவெழுச்சிகளையே பயிலுவதுடன், கடவுளைப் பற்றியும் அவரைச் சார்ந்தும் உள்ளுறைந்தும் விளங்கும் பொருள்களைப் பற்றிய உண்மையான அறிவும் பெறவேண்டும் என்று உரைக்கின்றனர். ஆகவே மனிதனுக்கு யாவற்றிலும் மேலான அறம், கடவுளைப்பற்றிய அறிவையும் அவருடைய அன்பையும் பெறுவதேயாகும். அம் முயற்சியில் உதவியளிப்பதைக்கொண்டு, பொருள்களின் தன்மையைத் தீயவை அல்லாதவை என்று வரையறுக்கலாம். இவ்வுலகினைப்பற்றி மனநிறைவு கொள்ளாதவருக்கு, 'அறிவிலெழு இறையன்பை' ஏற்றதாகக் கொள்ளுமாறு கூறுகின்றார். ஏனெனில் அது மனவெழுச்சிகளையும் வல்லுணர்ச்சிகளை அடக்குவதையும் துறவின் குறிக்கோளாகிய பற்றற்ற மனஅமைதியை அடையப் பயிலுவதையும் அடிப்படையாகக்கொண்டிருக்கின்றது. ஸ்பினோஸா அறிவின் வாயிலாகக் கடவுளை அறிவதில் துறவு மனப்பான்மையும் அமைதியும் குறிக்கோளாக அமைகின்றன என்று குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு பொருளும் கடவுளிடம் இருக்கின்றது, அவரிடமிருந்தே வெளிப்படுகின்றது என்னும் அறிவு, இவ்வுலகத்தைப் பற்றிய அறிவினால் உண்டாகாது. தனக்கும் உண்மைக்கும் இடையே உள்ள திரையைக் கிழித்தெரிந்து உள்பொருளை அறியும் பொழுது, தான் அவரோடு ஒன்றாக இருப்பதையும் அவரை அறிவதில் நிலையான மகிழ்ச்சியையும் அமைதியையும் அடைவதையும் மனிதன் உணருகிறான் என்று ஸ்பினோஸா உரைக்கின்றார்.

ஸ்பினோஸா ஒரு பயன்முதற்கொள்கையினராகவும் (utilitarian) அனுபூதிமானாகவும் சிலரால் கருதப்படுகின்றார். ஏனெனில் அவர் ஒவ்வொருவரும் இன்பத்தை பெறவேண்டும் என்றும் அதனுடன் ஒவ்வொருவரும் கடவுளையும் அவருக்கும் தமக்குமுள்ள உறவையும் அறிய முற்படவேண்டும் என்றும் அவர் கூறியதே மேற்கூறப்பட்ட கருத்தினை வலுப்படுத்துகின்றது. மனிதன் தன் மெய்யுணர்வால் முடிவில், கடவுள் வேறுபட்டவரல்லர் என்று உணர்வதால் கடவுளிடம் அன்பு செலுத்துவது தன்னிடமே அன்புசெலுத்துவதா

கின்றது. எனவே இது ஒரு உயர்நிலைப் பயன்வழிக் கொள்கை யாகும். மனிதன் தன்னுடைய இயற்கையின் விதிகளுக்குக் கீழ்ப் படிந்து நடப்பதே கடவுளையடையும் வழியாகும். அனைவரையும் அறிவு ஒன்றுபடுத்துகின்றது. வல்லுணர்ச்சி அவர்களைப் பிரிக் கின்றது. கடவுளிடம் நாம் செலுத்தும் அன்பு அனைவரையும் சமூகத் தில் கட்டுப்படுத்தும் ஆற்றலாகும். முழுமையான ஒழுக்கம் கடவுளிடம் அன்பு செலுத்தப்படுவதையே சார்ந்துள்ளது.

## திறனாய்வு
### CRITICAL ESTIMATE

ஸ்பினேஸா டேக்கார்டைப் போலவே தம்முடைய தத்துவத் தில் கணித முறையையே கையாண்டார். என்றும் அழியாத மகிழ்ச்சியையும் அமைதியையும் எல்லையற்ற ஒன்றினாலே (Infinite) அளிக்க முடியும் என்று கருதினர். ஆனால் அதனை அறியவும் அடைய வும் இம்முறையைக் கையாண்டது வருந்தத்தக்கது; தத்துவத்தின் வரலாற்றிலேயே துன்பமுடிவுக்குச்செலுத்துவதாயிருந்தது(tragedy) என்பதாகக் கருதப்படுகின்றது. இந்த முறை எல்லையற்ற ஒன்றினை அறிவதில் பயனற்றதாயுள்ளது. ஏனெனில் நம்முடைய சமய உணர் வுக்குக் கடவுள் எல்லா நற்பண்புகளையும் பெற்றவராகவே தோன்று கிறார். ஆனால் கணித முறை அவரைப் பண்புகளற்ற ஒரு வெற்று நிலைப் பொருளாக ஆக்கிவிடுகின்றது என்ற முடிவு தவிர்க்க முடி யாததாகின்றது. ஆனால் ஸ்பினேஸா ஆழ்ந்த சமயப் பற்றுடையவ ராதலின் இத்தகைய வெற்று நிலைப் பொருளில் (உள்ளீடில்லா பொருளில்) ஆறுதல் கொள்ள முடியவில்லை. எனவே சமய நோக்கு டன் கடவுளைப் பார்ப்பது ஒரு கோடியிலும் கணிதத்தின் குறிக் கோளாக எது உச்ச நிலை உண்மையாக உள்ளதோ அது மற்றொரு கோடியிலும் கொண்டு அவர் கொள்கை ஊசலாடுகிறது.

இவ்வாறு அவர் தம்முடைய சமய நோக்கத்திற்கும் (religious view) அறிவு முதற்கொள்கை நோக்கிற்கும் (rationalistic view) இடையே ஊசலாடுவதினால் அவருடைய தத்துவத் திட்டம் பல முரண்பாடுகளுக்குள்ளாகிறது.

ஸ்பினோஸா கடவுளைப் பற்றி விளக்கும் பொழுது இருக்கின்ற எல்லாவற்றின் முழுமையாகக் கடவுளைக் (totality of all-that-which-is) குறிப்பிடுகிறார். ஆனால் இடத்திலும் காலத்திலும் இருக்கின்ற எல்லையுள்ள பொருள்களும் அவ்வரையறைகளற்ற (இடம், காலம்) எல்லையில்லாப் பொருளும் எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும் என்பதை ஐயமறப் போதிய அளவு விளக்கவில்லை. அது பற்றியே ஹெகல் ஸ்பினோஸாவின் எல்லையற்ற பொருளைப் பின்வருமாறு குறிப்பிட்டார். அது எல்லாப் பாதைகளும் சென்றடைகிற சிங்கக் குகையைப் போன்றுளது. ஆனால் அக்குகையினின்றும் ஒரு பாதையுமே திரும்புவதில்லை. (The Infinite of Spinoza, is as Hegel remarked, a lion's den to which all tracks lead but from which none return).

ஸ்பினோஸா இயல்புகளைப் பற்றி (attribute) அளிக்கும் விளக்கம் சிலரால் குறைகூறப்படுகின்றது. இயல்புகள் பொருளிலிருந்து (substance) கிடைக்கப் பெறுமல் (derived from substance) ஹெகல் கூறுவது போல புறத்திலிருந்து அடையப் பெறுவதாகத் தோன்றுகின்றன. ஸ்பினோஸாவின் வரையறைவுப்படி, பொருளைப்பற்றிய எண்ணமே வரையறுப்பதை விளக்குகின்றது. மேலும் அவ்வரையறைவு, எண்ணத்தைப் பற்றியும் பரப்புடைமை பற்றியும் ஒன்றும் கூறவில்லை. வெறும் பொருளாக உள்ளதனை ஒரே மூச்சில் உள்ளீடுள்ளதாகச் செய்கிறார்,—ஆனால் எவ்வாறு என்று விளக்கவில்லை. வரையறை செய்ய முடியாதது எனப்படுவதை இயல்புகள் நிறைந்தனவாகச் செய்து விடுகிறார்.

மேலும் இயல்புகள், காரணமின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவைகளின் எண்ணிக்கையைப் பற்றியோ, ஒன்றுக்கொன்று அவைகளுக்கிடையே உள்ள உறவைப் பற்றியோ விளக்கம் காணப்படவில்லை. கடவுள் ஏன் வேறுவகையில் அல்லாமல் இவ்வுருவங்களில் மட்டும் வெளிப்பட வேண்டும் என்பதின் கட்டாயப் போக்கையும் தெளிவுறுத்தவில்லை. பல இயல்புகள் ஒரு பொருளில் இயைந்த பொருத்தத்துடன் இருக்கின்றன என்று கூறுவது அவைகளின் ஒருமைப் பாட்டையோ அல்லது கட்டாயப் போக்கையோ விளக்குவதாகாது.

கடைசியாக, ஸபினோஸா சிந்தனையையும் பரப்புடைமையும்

பொருளின் இரண்டு சமமான வெளிப்பாடுகள் என்று கூறினும் சிந்தனைக்கு முதன்மையளிக்கின்றார். சிந்தனையின் மூலமாகவே இரண்டு இயல்புகளையும் உணர்கின்றோம். மேலும் சிந்தனை, தன்னைப் பற்றி மட்டுமல்லாமல் பரப்புடைமையையும் அறிய உதவுகின்றது. நாம் பொருளைப் பற்றியோ அல்லது இயல்பைப் பற்றியோ கருதும் ஒவ்வொன்றும் அதன் மூலமாகவே நிகழ்கின்றது. எனவே அது ஒரு இயல்பு மட்டுமல்லாமல், கடவுளைப் பற்றியும் உலகத்தைப் பற்றிய நம் அறிவில் பொதுமையான ஏதுவாகிறது.(universal factor).

மாறுநிலைகளைப் பற்றி விளக்கும் பொழுது, எல்லையற்ற மாறுநிலை நேர்முகமாக எல்லையற்ற பொருளிலிருந்து கிடைக்கப் பெறுவதால், அது ஒன்றாகவும் பலவற்றுள் ஒன்றாகவும் (both one and one in many) இருக்கிறது என்றும் அதுவே ஒன்றும் பலவும் என்னும் சிக்கலுக்கும் விடையளிக்கிறது என்றும் கருதினர். ஆனால் இது ஒரு முடிவில்லாத மேற்போக்கான கொள்கையாக இருக்கின்றது. எவ்வாறு, அளவு நிலையற்றும் (non-quantitative) சிக்கலில்லாததும் பாகுபாடற்றதுமான ஒரே பொருள் அளவு நிலையுள்ளதும் வகுக்கக் கூடியதுமான எல்லையுள்ள பலவற்றை விளக்க முடியும் என்னும் சிக்கல் தீர்க்கப் பெறவில்லை. ஸ்பினோஸா சொல்லளவில் நிற்கும் விளக்கத்தினால் தம்மை ஏமாற்றிக் கொண்டார் என்று தோன்றுகிறது. அவர் எல்லையுற்ற மாறுநிலைக்கும் எல்லையற்ற மாறுநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கிய பொழுதே, பலவான எல்லையுற்ற மாறுநிலைக்கும் ஒன்றான எல்லையில்லாப் பொருளுக்கும் உறவு இருக்க முடியாதென்பதை உணர்ந்திருக்க வேண்டும். தோற்றப் பிரபஞ்சத்தின் அளவு நிலையை அவர் ஏற்றபடி விளக்க வில்லை.

மேலும் ஸ்பினோஸா கடவுளை இயற்கையை இயக்கியாகவும் இயற்கையில் இயங்கியாகவும் கருதும் பொழுது அவர் சொல்லளவில் வேறுபாடு செய்வதாகவே தோன்றுகிறது. ஸ்பினோஸா ஒன்றுக்கும் பலவிற்கும் அளவு நிலையாக உள்ள உறவை விளக்குவது போதிய அளவு மனநிறைவு அளிக்கவில்லை. (அவருடைய முயற்சி முடிவில் தோல்வியையே அடைகின்றது). அவருடைய முயற்சியில், டேக்கார்ட்டின் அறிவு முறையின் (rationalistic method) தோல்

வியைக் காண்கிறோம். ஏனெனில் அது ஒரு உள்ளீடில்லாப் பொருளை அளிக்கின்றது. அதன் பயனுகச் சமயப் பற்றுள்ளவர்களுக்கும் மனநிறைவு உண்டாக வில்லை.

ஸ்பிளேஸாவின் அறவியல் மேம்பாடுடையதாய்க் கற்போரை உயர்நிலைக்குக் கொண்டு செல்வதாய் இருக்கின்றது. எனினும் நம்முள் அதைப்பற்றிய ஓர் ஐயம் எழுகின்றது. அதாவது ஸ்பிளேஸா தம் தத்துவக் கொள்கைப்படி அறவியலை ஏற்றுக் கொள்ள முடியுமா என்னும் ஐயமே ஏற்படுகின்றது. அவர் ஒழுக்கத்தின் குறிக்கோளை அடைவதற்குக் காட்டும் வழி மிகக் கவர்ச்சியுள்ளதாகவும் விழுமியதாகவும் (sublime) இருக்கின்றது. அவர் செயலுரிமை மனிதனுக்கு இல்லையென்று முன்னமேயே விளக்கியுள்ளதால் எவ்வாறு அதனையடைய முடியும்? ஒரு குறிக்கோளை அடைய மனிதனின் இயற்றி நிலை தன்னுரிமை பெற்றிருக்க வேண்டும். ஆனல் ஸ்பிளேஸாவின் கொள்கை,முன் கூறியபடி மனிதனுக்குத் தன்னுரிமை ஒரு சிறிதும் தரவில்லை. அவ்வாறு இருப்பின் மனிதன் எல்வாறு வல்லுணர்ச்சி, விருப்பு வெறுப்புகளிலிருந்தும் தப்பி ஒரு குறிக்கோளை அடையமுடியும்?

மேலும் உயர்ந்ததைப் பற்றி ஆழ்ந்து நினைக்கும் உரிமையுமில்லை, ஏனெனில் மனிதன் உள்ளத்தில் எழும் ஒவ்வொரு உட்துடிப்பும் அவாவும் புற ஆற்றல்களால் எழுவனவே அன்றி அவனுலேயே அல்ல. மனிதன் தேர்ந்தெடுப்பதாகக் கருதுவன (choices) கண்டிப்பாக வரையறுக்கப்பட்டுள்ளன. நாம் கட்டற்ற நிலையை அடைய முடியவில்லை. கடவுளைப்பற்றி அறிவால் எழும் உள்ளுணர்வு பெறவேண்டும் என்று ஸ்பிளேஸா அறிவுறுத்துகின்ருர். ஆனல் மனிதனின் தன்னுரிமையைப் பற்றி அவர் கொண்டுள்ள கருத்துக்களின்படி அது நிகழமுடியாத ஒன்ருகும்.

ஸ்பிளேஸாவின் அறவியலின் குறைபாடு அது கையாண்ட முறையினல் எழுந்ததாகும். அது கட்டாயப் போக்கையும் வரையறுத்தலையும் தவிர வேறு எதற்கும் இடமளிக்கவில்லை. அவருடைய கட்டாயப் போக்கும் தன்னுரிமை மறுத்தலும் பொதுவான நம்முடைய அனுபவத்தை விளக்கமுடியவில்லை. மேலும் நல்லொழுக்கத்தைப் பற்றிய விவரங்களை அவர் தரவில்லை.

டேக்கார்ட், ஸ்பினேஸா இருவரும் பொருள் (things) பரப்புடைமை உடையது என்னும் கருத்தினை ஏற்றுக்கொண்டனர். ஸ்பினேஸா உலகத்தின் ஒருமைப்பாட்டையே வற்புறுத்திக் கூறுகின்றார். ஆனால் அது உலகத்தின் தனிப்பொருள்களின் உண்மையை இழந்து விட்ட வெற்றுநிலை ஒருமைப்பாடாகிறது. வரையறைவு செய்வதெல்லாம் இன்மை செய்வதாகும் என்னும் கருத்தை மையக் கொள்கையாகக் கொண்ட ஸ்பினேஸாவின் தத்துவம் தனிப் பொருள்களின் உண்மையை மறுத்து ஒருமைப்பாட்டினையும் தொடர் நிலையையும் வற்புறுத்துவதாகிறது. வரம்பு கடந்த பொதுமைக் கொள்கையெனச் சிலர் அதனைக் குறிப்பிடுகின்றனர். எல்லாவற்றையும் தன்னுள் விழுங்கும் முழுமையில் வரையறைவு உள்ளவற்றின் தன்னிலைமை மறைந்துவிடுகிறது.

# 4

# லைப்னிட்ஸ்

## (LEIBNIZ)

## (1646-1716)

### தோற்றுவாய்

### (INTRODUCTION)

சமயச் சீர்திருத்தத்திற்கும் (Reformation) பின் எழுந்த பலவித இறையியல் தொடர்புள்ள விவாதங்கள் ஒருவித நற்பயனையும் விளைவிக்கவில்லை. எனவே விஞ்ஞானம், தத்துவம் இவை வளர்ச்சி அடையக்கூடிய சூழ்நிலை அமையவில்லை. ஆகையால் 18வது நூற்றுண்டுக்கு முந்திய நூற்றுண்டுகளில், ஜெர்மானிய நாட்டில் தத்துவம் செழிப்புற்று விளங்குவதாகக் கருதுவதற்கில்லை. ஜெர்மானிய மொழியும் சிறிது சிறிதாகப் பல துறைகளிலும் தன்னுடைய செல்வாக்கை இழக்கும் நிலையையடைந்தது. ஏனெனில் உயர் வகுப்பினர் ஜெர்மானிய மொழியை ஒதுக்கி, பிரெஞ்சு மொழியில் பேசலுற்றனர். அறிவாளிகளும் ஜர்மானிய மொழியை இலக்கியக் கருவியாகக் பயன்படுத்தாமல், லத்தீன் மொழியிலேயே தங்கள் நூல்களை எழுத முற்பட்டனர். எனவே பொது மக்கள் மட்டுமே தங்கள் தாய் மொழியைக் கையாண்டனர்.

ஜெர்மானிய நாடு தனிப்பட்ட, பல பிரிவுகளாக வகுக்கப்பட்ட பின்னர் நாட்டுப்பற்றும், மக்களிடையே குறையலாயிற்று. பல்கலைக் கழகங்களும் விஞ்ஞானம், தத்துவம் முதலிய துறைகளில் எழுந்த புதிய கருத்துக்களைப் பரப்பும் நோக்கத்தை மேற்கொள்ளவில்லை. புதிய விஞ்ஞானம், தத்துவம் முதலியவை, பல்கலைக்கழகங்களுக்கு வெளியிலே தனிப்பட்ட முறையில், கற்றவர்களால் போற்றப்பட்டு வந்தன.



லைப்னிட்ஸ்

புதிய பண்பாட்டினை ஜெர்மன் நாட்டில் தழைக்கச் செய்தவர்களுள் முதன்மையாகப் பின் வருவோர் கருதப்படுவர்: இயற்கை நியதியை (natural law) முதல் முதலில் ஜெர்மெனியில் புகுத்திய சாமுவேல் பூவெண்டார்ப் (Samuel Pufendorf) (1632-1694), ஜெர்மானிய மொழியில் முதல் கட்டுரை இதழ் (periodical) வெளியிட்டவரும் அம்மொழியில் முதலாவதாக லைப்ஸிக் பல்கலைக்கழகத்தில் (University of Leipzig) சொற்பொழிவாற்றியவருமான கிறிஸ்தியன் தொமானியஸ் (Christian Thomanius), (1655-1728), கணிதம்,சட்டத் துறை, தத்துவம் முதலியவைகளில் புகழடைந்த லைப்னிட்ஸ்.

## வாழ்க்கை வரலாறு

காட்பிரீட் வில்ஹெல்ம் லைப்னிட்ஸ் Gottfried Wilhelm Leibniz) (1646-1716) கொள்கை ஸ்பினேஸாவின் கொள்கைக்கு நேர் மாருக இருப்பது போலவே அவ்விருவருடைய வாழ்க்கையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தது. வாழ்நாள் இறுதிவரையில் ஸ்பினேஸா, வறுமையால் வாடியும் மக்களால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டும் துன்பத்தையே கண்டிருந்தார். ஆனால் லைப்னிட்ஸ் வாழ்க்கையில் இன்பமே கண்டார்; உலகியல் நல்வாழ்வுக்கான எல்லா வசதிகளும் அவருக்கு இயல்பாக அமைந்திருந்தன.

லைப்னிட்ஸ் லைப்ஸிக் (Leipzig) என்னும் ஊரில் 1646-ம் ஆண்டு ஜூன் மாதம் 21ந் தேதி பிறந்தார். சட்ட வல்லுனராகவும் (jurist) லைப்ஸிக் பல்கலைக் கழகத்தில் அறவியல் தத்துவப் பேராசிரியராகவும் இருந்த அவருடைய தந்தை ப்ரீட்ரிக் லைப்னிட்ஸ் (Friedrich Leibniz) லைப்னிட்ஸின் ஆறுவது வயதிலேயே இறந்தார். லைப்னிட்ஸ் கல்லூரிப் படிப்பை முடிப்பதற்குள் அவர் தாயார் இறந்துவிட்டார்: லைப்னிட்ஸ் தம் வாழ் நாள் முழுவதும் தனித்து வாழக்கூடிய செல்வ நிலையுடையவ்ராயிருந்ததால் அவர் தந்தையார் குடும்பத்திற்கு வேண்டிய பணவசதிகளைச் செய்து வைத்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. எனவே அவருக்குத் தம் வாழ்க்கையை நடத்த ஸ்பினேஸாவைப் போன்று ஒரு கைத்தொழிலை மேற்கொள்ள

வேண்டிய தேவை ஏற்படவில்லை. லைப்னிட்ஸ் தம் விருப்பப்படியே வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடிந்தது.

லைப்னிட்ஸ் பிறப்புரிமையாகப் பெற்றவற்றுள் முதன்மையானது அவருடைய தந்தையின் நூல் நிலையமாகும். சிறு வயதிலேயே லைப்னிட்ஸ் தம்முடைய நேரத்தில் பெரும் பகுதியை நூல் நிலையத்திலேயே கழிக்கத் தீர்மானித்தார். அவருக்குப் பத்து வயது நிரம்பிய பொழுது அவருடைய அன்னை பிறர் உதவியின்றித் தாமே கல்வி பெறும் முயற்சியில் லைப்னிட்ஸ் ஈடுபடுவதற்கு இசைந்தனர். இதன் பயனாக அவர் லத்தின், கிரேக்க மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றதுடன், சிசிரோ (Cicero), குவிண்டிலியன் (Quintilian), ஹெரொடொடஸ் (Herodotus), பிளேட்டோ (Plato), திருச்சபையைச் சேர்ந்த அறிஞர்கள் (Church fathers), முதலியவர்களின் நூல்களைக் கற்பதில் இன்பங்கண்டார்.

அவருடைய பதினைந்தாம் வயதில், அவர் லைப்ஸிக் பல்கலைக் கழகத்தில் மாணவராகச் சேர்ந்து சட்டம், தத்துவம் முதலியவற்றில் பயிற்சி பெற்றார். அங்குத் தனித்தன்மையின் அடிப்படையைப் பற்றி (principle of individuation) லத்தீன் மொழியில் ஒரு கட்டுரை எழுதினார். இந்தப் பொருள் பற்றி அவர் வாழ்நாள் முழுவதும் ஊக்கங் கொள்ளச் செய்ததுடன் பிற்காலத்தில், அவர் தத்துவ அறிஞர் என்ற புகழ் பெறுவதற்குக் காரணமாக இருந்த கொள்கைக்குத் துவக்கம் செய்யும் வகையில் இக்கட்டுரை அமைந்திருந்தது. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றபின் அவர் மூன்று ஆண்டுகள் சட்ட கல்வி பயின்றார். அவருடைய இருபதாவது வயதில் (1666), அவர் சட்டத்தில் டாக்டர் பட்டம் (Doctor of Law-juris doctor) பெற முயன்றார். அப்பட்டத்திற்கு வேண்டிய எல்லாத் தகுதிகளையும் அவர் பெற்றிருந்த போதிலும் அவருடைய இளவயதின் காரணமாக லைப்ஸிக் பல்கலைக்கழகம் அப்பட்டத்தை அவருக்கு வழங்க மறுத்தது. ஆனால் ஆல்டார்ப் பல்கலைக்கழகம் (University of Altdorf) அவருக்கு அப்பட்டத்தை வழங்கியதுடன், தத்துவப் பேராசிரியப் பதவியையும் அளிக்க முன் வந்தது. பிறருக்குக் கைகட்டி வாழ்வதை லைப்னிஸ் விரும்ப வில்லையாதலால் அப்பதவியை ஏற்க மறுத்தார். இதற்குள் அவர் டி அர்டெ கம்பினடோரியா

(De arte combinatoria) என்னும் நூலை எழுதி முடித்திருந்தார். இதனுடன் அவர் செய்த பிற ஆராய்ச்சிகளும் குறியீட்டு அளவை யியலை (Symbolic Logic) தோற்றுவித்தவர்களுள் ஒருவராக, அவர் புகழ் பெறுவதற்குக் காரணமாயிருந்தன. பிறகு 1667-ல் மெயின்ஸ் (Mainz) என்னும பகுதியை ஆண்டு வந்தவரிடம் (Elector of Mainz) முதலில் அவர் சட்ட சீர்திருத்தத்திலும் பிறகு அரசியல் துறையி லும் உதவி புரிந்து வந்தார்.

மெயின்ஸில் பணியாற்றிய காலத்தில் பாரிஸ், லண்டன் முதலிய நாடுகளுக்குச் சென்று வரும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதன் பயனாக அவர் பெரிய தத்துவ அறிஞர்களையும் விஞ்ஞானி களையும் நேரில் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் அறிவியலின் பலதுறைகளிலும் அக்கரை கொள்ள முடிந்தது." அளவையியல், பௌதிகம், கணிதம், சட்டம், இறையியல் முதலிய பல துறைகளில் லைப்னிட்ஸ் முதன்மையான கருத்துக்களை உருவாக்கித் தந்தார். கணக்கிடும் பொறி ஒன்றையும் (calculating machine) அவர் உண்டு பண்ணினார்."* அவர் லண்டன் நகரத்து 'ராயல் ஸொஸைடியிலும் (Royal Society) பாரிஸ் நகரத்து கல்விக்கழகத்திலும் (Academy of Paris) அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1673-ம் ஆண்டில் லைப்னிட்ஸ் புருன்ஸ்விக்கில் (Brunswick of Hanover) வேலைக்கு அமர்ந்தார். அவருடைய வாழ்நாள் முழுவதும் இங்கேயே பணியாற்றினார். அக்காலத்தில் அவர் ஹனோவரில் (Hanover) வசித்தாரெனினும் பல நகரங்களுக்குச் சென்று பல அறிஞர்களுடன் பழகும் வாய்ப்பையும் பெற்றார். ஒருமுறை ஸ்பினோ ஸாவை ஹேக் (Hague) என்னும் ஊரில் கண்டு அவருடைய தத்து வத்தை ஊன்றிப் படித்தார். அவர் ஹனோவரில் (House of Hanover) தொடர்ச்சியாக மேற்கொண்ட பணி அரச குடும்ப நூல் நிலையத் தைப் பாதுகாப்பதுடன், ஹனோவர் குடும்பத்தின் மரபையும் வரலாற்றையும் (geneological and historical) முறையாக எழுதுவது மாகும். இத்துடன், அவ்வப்போது இன்றியமையாத அரசியல் அலுவல்களிலும் உதவிபுரிந்து வந்தார். இதனால் ஹனோவரை

* W. K. Wright : *A History of Philosophy*, p. 116.

ஆட்சி புரிந்தவர்களுள் ஒருவர் பின்னர் இங்கிலாந்தின் மன்னராக முடிந்தது. இக்குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களை விடப் பெண் மக்களே தத்துவத்தில் ஆர்வங்கொண்டிருந்தனர். ஹனேவரில் ஆட்சிபுரிந்த ஸொபியா அம்மையாரும் (Electress Sophia of Hanover), பிரஷ்ய நாட்டு அரசியாக இருந்த அவர் மகளும் (ஸோபீ சார்லட் Sophie Charlotte) லைப்ட்னிஸ் தத்துவ ஆராய்ச்சி செய்வதற்குப் பெரிதும் ஊக்கமளித்தனர்.

லைப்ட்னிஸ் தத்துவம், கணித அளவையியல் (Mathematical Logic) இவற்றின் வளர்ச்சிக்கு உதவியதுடன், தொகைக்கலனம் (Integral calculus) நுண்வகைக் கலனம் (Differential calculus) பற்றிய கணித முறையையும் கண்டு பிடித்தார். நியூடனும் (Newton) இக்கணித முறையைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டிருந்த போதிலும் லைப்னிட்ஸ் தாமாகவே இதனைக் கண்டு பிடித்தார். இயற்கை விஞ் ஞானம், வரலாறு, மொழிநூல், சட்டம், இறையியல் ஆகிய பல துறைகளில் அவர் புகழ் பெற்றார். 1700-ம் ஆண்டில் லைப்னிட்ஸ், பெர்லின் கல்விக்கழகத்தை (Berlin-Academy) நிறுவினர். மற்ற நக ரங்களிலும் அத்தகைய கழகங்களை நிறுவ முயன்றார். அவருடைய பரந்த அறிவைக் கண்ட சிலர் அவரையே ஒரு கல்விக் கழகமாகக் கருதினர். 1712-ம் ஆண்டில் பேரரசு ஆட்சிக்குழு உறுப்பினர் பதவி (Imperial Councillorship) அவருக்கு அளிக்கப்பட்டது; பேரரசின் பிரபுக்களுள் ஒருவராகவும் ஆக்கப் பெற்றார்.

முதலாவது ஜார்ஜ் தம்முடைய முடிசூட்டு விழாவுக்காக இங்கி லாந்துக்குச் சென்றபொழுது, லைப்னிட்ஸ் வியன்னா (Vienna) நகரத் தில் இருந்தார். அவருடன் லண்டன் சென்று விழாவைக் காண விரும்பினர். ஆனல் அவர் ஹனேவருக்குச் சென்று, நூல் நிலையத் தில் தம்முடைய வேலையைத் தொடர்ந்து செய்யும்படி கண்டிப்பான உத்தரவு பிறந்ததினல் அவர் மீண்டும் ஹனேவருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. 1716-ம் ஆண்டு நவம்பர் 14-ந்தேதி ஹனேவரில் அவர் காலமானர். அவர் பெருமைக்கேற்ற முறையில் அவர் இறந்த தைக் குறித்து மக்கள் அக்கறை காட்டாதது வியப்பை அளிக் கிறது. அவர் இறந்த செய்தி லண்டனிலோ அல்லது பெர்லினிலோ பரபரப்பை உண்டுபண்ணியதாகத் தெரியவில்லை. “ அவருடைய

செயலாளராயிருந்த எக்கார்ட் (Eckhard) ஒருவர் மட்டுமே சவச் சடங்கின் போது உடனிருந்தார். பாரிஸ் மக்கள் அவருடைய பேரறிவையும் கல்வித் திறனையும் பாராட்டினர். அவர் இறந்த முதல் ஆண்டுவிழாவில் பிரெஞ்சு கல்விக் கழகத்தில் பாண்டனெல்லே (Fontenelle) என்பவர் லைப்னிட்ஸைப் பாராட்டி புகழ்மாலை சூட்டினார். இப்புகழ் உரை கல்விக் கழகத்தின் நடவடிக்கை பற்றிய அறிக்கைகளில் பதிப்பிக்கப்பட்டது.',

லைப்னிட்ஸ் இயற்றிய நூல்களில் முதன்மையானவை பின் வருவன. தியோடிஸி (Theodicy)

மனித அறிவு பற்றிய புதிய கட்டுரைகள். (New Esssays concerning the Human Understanding)

மொனடு பற்றிய நூல். (Monadology)

இயற்கை, அருள் ஆகியவற்றின் அடிப்படைகள். (Principles of Nature and Grace)

அடிப்படைத் தத்துவம் பற்றிய உரை. (Discourse on Metaphysics)

## நோக்கமும் முறையும்

### (AIM AND METHOD)

ஹாப்ஸ், இவ்வுலகத்தைப் பற்றி விளக்கும் போது, பொறித் தன்மை நோக்கையே வற்புறுத்தி, சடக்கொள்கைத் தத்துவத்தை மேற்கொண்டார். ஆனால் டேக்கார்ட் பொறித்தன்மை நோக்கை ஏற்றுக்கொண்டபோதிலும் சடக்கொள்கையின் குறைபாட்டையும் உணர்ந்தார். சடக்கொள்கை இவ்வுலகின் எல்லா நிகழ்ச்சிகளையும் விளக்க முடியாது. எனவே அவற்றை விளக்கச் சடத்தையும் உள்ளத்தையும் ஏற்றுக்கொண்டார். இவை இரண்டும் சார்புற்ற பொருள்கள் என்றும் ஒன்றுக்கொன்று முரணாகவும் ஆனால் இரண்டும் சார்பற்ற பொருளாகிய கடவுளைச் சார்ந்துள்ளவை என்றும் மனித உடலில் மட்டும் ஒன்றினை ஒன்று செயல் படுத்தக் கூடியவை என்றும் கூறினர். இவருக்குப் பின் வந்த தறுவாய்க் கொள்கையினர் உடலும் உள்ளமும் ஒன்றினை ஒன்று செயல் படுத்துவதற்குக்

கடவுளின் முழுவல்லமையே காரணம் என்று நம்பினர். ஸ்பினோஸா கடவுள் ஒருவரே உண்மையான பொருள் என்றும் சிந்தனையும் (உள்ளம்), பரப்புடைமையும் (உடல்) அவருடைய இயல்புகள் என்றும் உடலும் உள்ளமும் இணையாகவே செயலாற்றுகின்றன என்னும் முடிவுக்கு வந்தார்.

ஸ்பினோஸா பொருள்களின் அடிப்படையான ஒருமைப் பாட்டினை நிலை நாட்டினாரேயன்றி (saved the fundamental unity of all things) நாம் அனுபவத்தில் காணும் பல பொருள்கள் (many things of the world of experience) எவ்வாறு தனித்துவம் அடை கின்றன (become individuated) அல்லது அடிப்படையாக உள்ள ஒருமைப்பாட்டிலிருந்து எவ்வாறு பலவாக வேறுபாடு அடைகின் றன என்பதை விளக்குவதில் வெற்றி பெறவில்லை. மேலும் அவர் இவ்வுலகத்தில் எத்தகைய நோக்க அமைப்பும் இல்லையென்று கருதியதோடு, நம்முடைய அனுபவத்திற்கு முரணாக மனிதனுக்குத் தனித்தன்மையும் (individuality) தன்னுரிமையும் இல்லை என்று மறுத்தார். இவ்வாறெல்லாம் ஸ்பினோஸா கூறிய விளக்கம் லைப்னிட்ஸுக்கு குறைபாடுடையதாகவே தோன்றியது. லைப்னிட் ஸுக்கு முன் இருந்த தத்துவ அறிஞர்களில் ஒருவரும் தனிப்பட்ட ஒருவருக்கும் மற்றொருவருக்கும் உள்ள உறவையோ அல்லது மனித உள்ளத்திற்கும் உடலுக்கும் உள்ள உறவையோ சரியாக விளக் கியதாகத் தோன்றவில்லை. எனவே லைப்னிட்ஸ் அச்சிகல்களுக்கு விடைகாண வேண்டுமென எண்ணினர்.

லைப்னிட்ஸ் அடிப்படையாகத்தத்துவத்திலும் பரந்த நோக்கத் தைக் காண விழைந்தார். அதில் ஒவ்வொரு தத்துவத்தின் உண்மை களும் இடம் பெறவேண்டும் என்று கருதினர். மேலும் அவர் மற்றைய தத்துவங்களில் காணப்பட்ட சிறந்த உண்மைகளை ஏற்றுக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். எனினும் அவர் தமக்கான ஒரு தனித்தத்துவ திட்டத்தை அமைக்கும் அளவு தன்னுரிமையையும் பெற்றிருந்தார். அவர் காலத்தின் விஞ்ஞான முன்னேற்றங்கள், இயற்கை நியதிகளின் (natural laws) பொதுமை யையும் இயற்கையைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட பொறித் தன்மை நோக்கையையும் வற்புறுத்துவனவாக இருந்தன. ஆனல்

அவர் அதே தெளிவுடன் தனிப்பட்டவைகளின் தனிச்சிறப்பு நிலையையும் தன்னுரிமையையும் இயற்கையின் நோக்க அமைப்பை யும் சமயத்தின் தேவையையும் உணர்ந்திருந்தார். உள்பொருளின் இப்பண்புகளையெல்லாம் கருதி அவர் அவைகளை இணைக்க முற் பட்டார். சுருங்கக் கூறின், "அவர் பொறித்தன்மையை நோக்கையும் (mechanism) நோக்க அமைப்புக் கொள்கையையும், (teleology), இயற்கை விஞ்ஞானத்தையும் (natural science) இறையியலையும் (theology) இக்காலத் தத்துவத்தையும் (modern philosophy), பண் டைக் காலத் தத்துவத்தையும் இணைக்கக் கூடிய ஒரு திட்டத்தை அமைக்க முயன்றார்."* அவருடைய ஆசிரியரான வைகல் (Weigel) என்னும் கணித அறிஞர் பிரபஞ்சத்தின் இசைவைப் பற்றிய பித கொரஸ்-பிளேட்டோ ஆகியோரின் கொள்கையை (Pythagorean-Platonic notion of the harmony of the universe) லைப்னிட்ஸின் மனத் தில் பதியுமாறு செய்திருந்தார். இக்கருத்தையே அவர் ஒரு பிர பஞ்சக்கொள்கையை (a world-view) அமைக்கும் முயற்சியில் அடிப் படையாகக் கொண்டார்.

மேலும் லைப்னிட்ஸ் இப்பிரபஞ்சம் இசைவுள்ள முழுமை யானது (harmonious whole) என்று உறுதியாக நம்பினார். பிரபஞ் சம், கணித அளவையியல் சட்டங்களுக்கு உட்பட்டது என்றும் ஆகையால், கணிதமும் அடிப்படைத் தத்துவமும் எவற்றிற்கும் அடிப்படையானவை என்றும் கணித முறையில் மெய்பிக்கும் முறையே தத்துவத்திற்குப் பொருத்தமானதென்றும் அவர் உறுதி கொண்டிருந்தார்.

## முழுமையும் பகுதியும்
### (WHOLE AND PART)

பொருள் என்பது தொடர்ச்சியானது என்னும் கருத்தையும் அதற்கு எதிராகப் பொருள் பல வகுக்கமுடியாத தனிமங்களால் (indivisible elements) ஆக்கப்பட்டது என்னும் கருத்தையும் லைப்னிட்ஸ் தம்முடைய தத்துவநூலில் இணைக்க முயன்றார். பொரு ளைப் பற்றிய நிறைவிலாத கருத்தே இவ்வெதிர்ப்புக்குக் காரண

* F. Thilly: *History of Philosophy*, p. 366.

மாகும். வேறுவகையாகக் கூறின், இச்சிக்கல் என்ன வென்றால் முழுமையின் தொடர்ச்சி அல்லது ஒருமைப்பாட்டுடன் (unity), பகுதிகளின் வரையறை அல்லது பலவாந்தன்மை முரண்படாமல், முழுமைக்கும் பகுதிகளுக்கும் உள்ள உறவை எவ்வாறு விளக்குவது என்பதேயாகும்.

முழுமையானது உண்மையில் தொடர்ச்சியுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டால், அதற்குள் நிலையானவரையறைகள் இருப்பன வாகக் கூறமுடியாது. காரணம் கூற இயலாத பகுதிகளே உள்ளன என்று சொல்லவேண்டியதாகும். இதற்கு மாறாக, உண்மையான பகுதிகளால், முழுமையானது ஆக்கப் பெற்றது என்று ஏற்றுக் கொண்டால், அவ்வாறு பகுதிகளால் இயற்றப்பட்ட முழுமை உண்மையான தொடர்ச்சியுள்ள ஒருமைப்பாடு ஆகாது. அது வெறும் தொகுதி அல்லது காரணமற்ற ஒருமைப்பாடு ஆகும். எனி னும் நாம் முழுமையே உண்மையானது, எனவே பகுதிகள் உண்மையல்லாதவை என்றோ அல்லது பகுதிகளே உண்மை, எனவே முழுமை உண்மையல்லாதது என்றோ கொள்ள முடியாது

டேக்கார்ட், ஸ்பினோஸா இருவரும், பொருள் அளவு நிலை அல் லது பரப்புடைமைச் சுட்டுவது (quantitative or extensive notion of substance) என்னும் கருத்தையே நம்பினர்கள். டேக்கார்ட் பொருள் பரப்புடைமை உள்ளது, தொடர்ச்சியானது என்று கருதியதால், அவர் கருத்தின்படி பொருளில் உண்மையான பகுதிகள் இல்லை. ஸ்பினோஸாவின் திட்டம் உலகத்தின் ஒருமைப்பாட்டையே வற் புறுத்துகின்றது. ஆனல்அந்த ஒருமைப்பாடு, தனிப்பட்டவைகளைத் தன்னுள் ஒடுக்குவதான உள்ளீடற்ற, வெற்று ஒருமைப்பாடா கின்றது. இத்தகைய முடிவு லைப்னிட்ஸுக்கு மனநிறைவு அளிக்க வில்லை. ஏனெனில் ஸ்பினோஸாவின் தத்துவம் அதனுடைய இன்றி யமையாத (வரையறை செய்வது இன்மை செய்வதாகும் என்னும்) அடிப்படையைக் கொண்டு, பகுதிகளின் உண்மையை அழித்து முழுமையின் ஒருமைப்பாட்டையும் தொடர்ச்சியையும் நிலைநாட்டுவ தாகவே உள்ளது.

வெறும்பாழும் அணுக்களும் என்னும் கொள்கை (the theory of the atoms and the void) இதற்கு நேர்மாறாக உள்ளது. வகுக்க

முடியாத சடத்தன்மையுள்ள அணுக்களின் இருப்பே உண்மை யென்று கருதுவது சடம் எல்லையற்ற வகுப்புக்குரியது என்பதை மறுப்பதாகின்றது. ஆகவே, அணுக்களே முடிவான உண்மைப் பொருள்கள் என்று கருதினல், முழுமை அழிக்கப்படுகின்றது, அதன் தொடர்ச்சியும் திரிபுக்காட்சி ஆகின்றது. எண்ணற்ற அணுக்கள் இருப்பினும் அவைகள் ஒன்று சேர்ந்து ஒரு தொகுதியை அல்லது பல பகுதிகளின் தொகுப்பையே உண்டாக்கக் கூடும்; உண்மையான ஒருமைப்பாட்டை யுண்டாக்க முடியாது. எனவே அணுக்கொள்கை,முழுமையை அழித்துப் பகுதிகளின் உண்மையை நிலைநாட்ட முயலுகின்றது. மேலும் கார்ட்டீஸிய திட்டங்கள், முழு மையும் பகுதிகளும் அளவு நிலையான உறவே கொண்டுள்ளன என் பதை முதலில் ஏற்றுக் கொண்டே தொடங்குகின்றன. இதுவே, வேறு வகையில் அணுக்கொள்கையின் தத்துவத்தின் அடிப்படை யாக உள்ளது. ஆனல் லைப்னிட்ஸ் முழுமையும் பகுதிகளும் அளவு நிலை உறவு கொண்டிருக்கின்றன என்னும் கொள்கை, பொருள் களைப் பற்றிய போதிய விளக்கம் தரவில்லை என்றே கருதினர்.

லைப்னிட்ஸ், இத்தகைய இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதற்காகப் பொருளைப்பற்றி அளவுநிலையைக் குறிப்பிடாத கருத்தை (non-quantitative) அல்லதுபொருள் சுட்டுடைய கருத்தை (intensive notion of subsance) தருகின்ருர். "பொருளின் இன்றியமையாத தன்மை (essence) அளவு நிலையைக் குறிப்பிடவில்லை. எனவே முழுமைக்கும் பகுதிகளுக்கும் உள்ள உறவைப் பொருள்சுட்டாக (extensive) கருதுவதைவிடப் பண்புச் சுட்டாகவே கருதவேண்டும். ஆகை யால் தனிப்பொருள் (simple substance) என்பது பகுதிகளைப் பெற்றிருப்பதன்று; எனவே அளவு நிலைபெற்றுள்ள தனிமங்கள் இல்லை. எனினும் தனிப்பொருள் பலவற்றை ஒருமைப்பாட்டு வகை யில் அடக்கியுள்ளதாக இருக்க வேண்டும்; அதாவது, அது உண்மையாக இருக்கவேண்டும்; குறிப்பிட்ட ஒன்ருக இருக்க வேண்டும்; பண்பு நிலையுள்ளதாகவும் (qualitative) திட்ட வட்டமான வரையறையுள்ளதாகவும் இருக்கவேண்டும்."* இந்தப் பண்புகளி லிருந்து லைப்னிட்ஸ் பொருளின் கூறு அல்லது அலகு (unit) என்ன

* R Latta; Leibnitz. The Monadology, p. 27.

என்று வரையறுக்க முயன்றார். பொருளின் கூறு உண்மையான தாகவும் பகுக்கமுடியாததாகவும் இருக்கவேண்டும். மேலும்அதன் உண்மை (இருப்பு) பகுக்க முடியாத அதன் தன்மையுடன் முரண் கொள்ளாத வகையில் அமையவேண்டும். அதன் பகுபடாத தன்மை முழுமையின் தொடர்ச்சியோடு இயைந்துள்ள வகையில் இருத்தல் வேண்டும். எனவே உண்மைப் பொருளின் அடிப்படை அளவு நிலை யுள்ளதாயிருக்க முடியாது. அளவு நிலை பகுக்கமுடியாததன்று. (பகுப்புக்குட்பட்டது). மேலும் பகாநிலை (indivisibility) என்பது இடத்தாலோ காலத்தாலோ தனித்திருப்பதன்று. ஏனெனில் இடத் திலோ காலத்திலோ பகாநிலைப் புள்ளிகள் கும்பலாகச் சேரலாம், ஆனால் தொடர்புடையனவாக மாட்டா. எனவே பொருளின் கூறு பொருள் சுட்டாக (extensive) இருப்பதைக் காட்டிலும் பண்புச் சுட்டாக (intensive) இருக்கவேண்டும். முழுமையின் தொடர்ச்சி யானது ஒரே தன்மையை உடைய வெற்றுநிலைப் பொருளாக (a mere empty homogeneity) இருப்பதைக் காட்டிலும் முடிவற்ற பல அளவுகளில் பண்பைச் சுட்டுகிற தொடர்ச்சியாக இருக்கவேண் டும். (a continuity through infinite degrees of intension).

பொருள், அளவைப் பற்றியது அல்லது பொருட்சுட்டுடையது (quantitative or extensive view of substance) என்று கொண்டால் முழுமையானது பகுதிகளுக்கு முற்பட்டதா அல்லது பகுதிகள் முழுமைக்கு முற்பட்டதா என்னும் சிக்கல் எழும். அது, ஸ்பினோஸா கருதுவதுபோல், தானே தெளிவுடன் விளங்குகின்ற (self-evidently given) முழுமையிலிருந்து பகுமுறையில் (analytic way) பகுதிகள் உய்த்துணரப் படுகின்றனவா அல்லது அணுக்கொள்கையைப் போல், முதல் நிலைப் பகுதிகளிலிருந்து (primary parts) தொகுமுறை யில் (synthetic method) முழுமையானது வழிநிலை அமைப்பாக (secondary construction) உணரப்படுகின்றதா என்னும் சிக்கலாகும். இதற்குமாறாக, பொருளைப்பற்றிய கருத்து பண்பைச் சுட்டும் வகை யில் உள்ளது என்னும் கொள்கை (அடிப்படை) வரையறை செய் வதையே முதல்நிலை அல்லது இன்றியமையாததாகக் கருதுவதால் முழுமையும் பகுதிகளும் பிரிக்க முடியாதவை என்று அறிவிக் கின்றது. இக்கருத்துப்படி, முழுமையைப் பற்றிக் கருதாமல் பகுதி

களைப் பற்றி வரையறுப்பதோ அல்லது அவைகளின் பண்புகளை நிர்ணயிப்பதோ நிகழவில்லை. மேலும் முழுமையானது பிறிதின் சார்பற்ற பகுதிகளின் தெளிவற்ற திரட்சியன்று. எவ்வகையிலாவது ஒவ்வொரு பகுதியும் முழுமையைத் தன்னுள் பெற்றிருக்கவேண்டும், ஒவ்வொரு கூறும் அளவற்ற பலவற்றைத் தன்னுள் பெற்றிருக்க வேண்டும். முழுமையானது தன் பகுதிகளுடன் பொறித்தன்மையுள்ள உறவோடில்லாமல் இயக்கப் போக்குள்ள (dynamic) உறவைக் கொண்டிருக்கின்றது. மேலும் அது பகுதிகளினின்றும் வேறுபட்டிருப்பதோடன்றி, எவ்வகையிலாவது அதனுட்புகுகின்றது, அதன் வழியாகவே வெளிட்படுகின்றது (passes into it and expresses itself into it) பொருள் பண்புச் சுட்டுடையது என்பதனை இவ்விளக்கமே தெளிவுறுத்துகின்றது.

லேப்னிட்ஸின் அடிப்படை யாதெனில், உண்மையான பகுதிகளின்றி உண்மையான முழுமை இருக்க முடியாது.ஒவ்வொரு பகுதியிலும் தன்னை வெளிப்படுத்தும் முழுமையின் தன்மை எவ்வாறு இருக்கவேண்டும் என்பது சரியான கேள்வி அன்று முழுமையைத் தன்னுள் ஏதோ ஒரு வகையில் கொண்டுள்ள அல்லது வெளிப்படுத்தும் பகுதி அல்லது கூறின் தன்மை எவ்வாறு இருக்கவேண்டும் எனபதே சரியான கேள்வி என்று லேப்னிட்ஸ் கருதுகிறார்.

ஆனால் பகுதி, முழுமையைத் தன்னுள் உண்மையாகவும், நிறைவாகவும் முழு வெளிப்பாட்டுடன் கொள்ளமுடியாது. ஏனெனில், அவ்வாறு முடியுமானால் முழுமைக்கும் பகுதிக்கும் வேற்றுமையே இல்லாமல்போகும். எனவே பகுதி, முழுமையைத்தன்னுள் ஒடுங்கிய நிலையாக அல்லது கருத்து நிலையாக அல்லது பிரதி செய்யும் வகையில் கொள்ளவேண்டும். "எனவே முழுமைக்கும் பகுதிக்கும் உள்ள உறவு, மிகுந்த அளவு குறைந்த அளவு என்பதைப் போன்றதன்று; உள்ளீடாகக் கொண்ட பொருள், உள்ளீடாக்கப்பட்ட பொருள் என்பதைப் போன்றதுமன்று. குறிக்கப்பட்ட பொருளுக்கும் குறியாகக் கூறப்பட்டதற்கும் (symbolised and symbols) அடையாளத்திற்கும் அடையாளம் விளக்குகின்ற பொருளுக்கும் (sign and thing sißnified) உள்ள உறவைப் போன்றதாகும். இதனை வேறுவகையாகச் சொல்லலாம்: அதாவது குறிப்பிட்ட ஒரு நோக்கிலிருந்து

பகுதி, முழுமையைப் பிரதி செய்வதாகும். முழுமையின் அடையாளமாக அல்லது வெளிப்பாடாக அமைவதாகும். முழுமையைத் தன்னுள்ளிருந்தே விரித்துச் செல்வதாகப் பகுதி, முழுமையைத் தன்னுள் கொள்ளவேண்டும்.''* எனவே பகுதி தன்னியல்பில் இயங்கும்போக்கு அல்லது தானாகவே செயலாற்றும் திறன் பெற்றிருக்க வேண்டும். இத்தன்மை பெற்றிருப்பதனாலேயே, தனிப்பட்ட பொருளானது (individual substance) அளவை நிலையைவிட ஆற்றலையே (force) தன் தன்மையாகக் கொண்டது என்று லைப்னிட்ஸ் கூறுகின்றார். முழுமையைப் பிரதி செய்யும் முறையில் அல்லது அதற்குக் குறியாக உள்ள முறையில், பகுதி, புலனறிவு (perception) உடையதாக லைப்னிட்ஸ் கூறுகிறார். ஒடுக்க நிலையிலுள்ள முழுமையைத் தன்னுள் வெளிப்படுத்தும் முறையில், பகுதி, தன்னிலெழு உள்மாற்றம் (appetition) உடையதாகக் கருதுகிறார். இவ்விரு பண்புகளையும் (புலனறிவு, தன்னிலெழு உள்மாற்றம்) பகுதி, பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் அது புலனறிவு மட்டும் பெற்றிருந்தால், மாறுபாடு இல்லாத ஒரு படத்தைப்போல (like an unchanging picture) பகுதியானது முழுமையின் ஒரு நிலையையே பிரதி செய்வதாகும். அது தன்னிலெழு உள்மாற்றத்தையும் பெற்றிருப்பதால், முழுமையைத் தானே அடையவும் பிரதி செய்யும் எல்லா மாறுபாடுகளையும் தன்னுள்ளிருந்தே இயல்பாக வெளிப்படுத்தவும் முடியும். புலனறிவும் தன்னிலெழு உள்மாற்றமும் பெற்ற ஆற்றலின் கூறுபாட்டினையே லைப்னிட்ஸ் மொனடு என்று புதிய முறையில் வழங்குகின்றார்.

லைப்னிட்ஸின் மொனடு கருத்து, இரு வழிகளில் சென்ற சிந்தனையின் முடிவாகப் பெறப்படுகின்றது. முதலாவதாக, அவர் கார்ட்டீஸிய பௌதிகத்தை ஆராய்ந்து அது குறைபாடுடையதாகக் கருதியதால் பொருள் என்பது பரப்புடைமை உடையது என்பதைவிட ஆற்றல் (force) உடையது என்பதே பொருத்தமானதென முடிவு செய்தார். இரண்டாவதாக, முழுமையும் பகுதிகளும் தொடர்ச்சியாகவும் பிரிக்க முடியாதவையாகவும் இருப்பதால், பொருள் பண்புச் சுட்டுடையது என்று முடிவு செய்தார். இயக்கப் போக்கும் (dynamic), ஆன்மீகத்தன்மையும் (spiritual) உடையது

* R Latta: Leibnitz: The Monadology etc., pp. 32, 33;

மொனடு என்பது லைப்னிட்ஸின் கொள்கையாகும். இக்கொள் கையை மோனடாலஜி (Monadology), மொனடு பற்றிய நூல் என் பதில் விளக்குகின்றார்.

'மொனடு' என்னும் சொல் புதிதானதன்று. அது ஐரோப் பிய தத்துவம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமை யானது, ஆனால் பல்வேறு பொருளிலும் வகையிலும் கையாளப் பட்டு வந்துள்ளது. லைப்னிட்ஸுக்குச் சிறிது காலத்திற்கு முன் வாழ்ந்த கியார்டானோ புருனோ (Giordano Bruno) என்பவராலும் அது கையாளப்பட்டது. ஆனால் அவர் மொனடுகளைக் கோளப் புள்ளிகள் (spherical points) எனவும் அவை சடத்தன்மையும் ஆன் மியத் தன்மையும் உடையவை என்றும் கருதினர். லைப்னிட்ஸின் தத்துவக் கருத்துக்கள் சில புருனோவின் கருத்துக்களைப் போன்றி ருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு பொருள் மிகச் சிறிய அள வினதாக இருக்கலாம்; மதிப்பின்றி இருக்கலாம்; ஆனால் அது ஆன்மா அல்லது உயிரற்றிருப்பதில்லை; உயிருடனேயே இருக் கிறது என்று புருனோ கூறுகின்றார். இக் கருத்தினையே லைப்னிட்ஸின் தத்துவத்தில் காண்கின்றோம். என்றாலும் புருனோ கூறும் 'உலக ஆன்மா' (World-soul) என்னும் கொள்கையை லைப்னிட்ஸ் பல முறை தாக்குகின்றார். ஆகையால் மொனடு என்னும் பெயரளவி லேயே இவ்விருவர் கொள்கைகளுக்குமுள்ள ஒப்புமை அடங்கி விடுகின்றது என்றும் சொல்லலாம்.

## மொனடுக் கொள்கை
## (THEORY OF MONADS)

டேக்கார்ட்டின் பௌதிகக் கருத்துக்களையும் பொருள்பற்றி டேக்கார்ட், ஸ்பினோஸாவின் கருத்துக்களையும் குறைபாடுள்ளவை யாகவே லைப்னிட்ஸ் கருதினர். அக்குறைகளை நீக்கி, அவர் தம் மொனடு கொள்கையை வகுக்க முற்பட்டார்.

டேக்கார்ட், இயக்கமே பௌதிகவுலகத்தில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படை என்றும் இயக்கத்தின் அளவு

நிலையாக (constant) உள்ளது என்றும் கருதினர். ஆனல் பொருள் கள் அசையும் தன்மையும் அசைவின்மையும் பெற்றுள்ளன. எனவே இயக்கம் குறைவதும் மிகுதியாவதும்போல் தோன்றுகிறது. இது தொடர்நிலை அடிப்படையை மீறுவதாகும். ஏனெனில், இயற்கையில் எத்தகைய தாவுதலும் இன்றித் தொடர்ச்சியே காணப்படுகின்றது. எனவே இயக்கம் முடிவுறும்போதும் தொடர்ந்து நிகழக்கூடிய ஒன்று இருக்கவேண்டும். இதுவே ஆற்றல் (force) அல்லது இயற்றி நிலை (conatus), அல்லது அசைவதற்கோ, இயக்கத்தில் நீடித்திருப் பதற்கோ பொருளுக்கு உள்ள போக்கு, ஆற்றல் அளவில் ஒரே நிலையாயுள்ளது.

எனவே செயலாற்றுத பொருளோ ஆற்றலில்லா பொருளோ கிடையாது. செயலாற்றுத ஒன்றை இருப்பதாகக்கொள்ள முடியாது. எனவே லைப்னிட்ஸ், பொருளின் இன்றியமையாத பண்பு பரப்புடைமை அன்று, ஆற்றலேயாகும் என்றும் இயக்கத்தின் அழிவின்மை நியதிக்கு வழி வகுக்கின்றது என்றும் விளக்கினர்.

மேலும் பரப்புடைமையையே பொருளின் இன்றியமையாத பண்பாகக் கருத முடியாததற்கு மற்ருெரு காரணம் உள்ளது. பரப் புடைமை பகுதிநிலை கொண்டது. பகுதிகளால் ஆக்கப்பட்ட எதனையும் முதல் நிலை அடிப்படையாகக் கருதமுடியாது. பரப் புடைமை உடையது முடிவற்ற பகுப்புக்குட்பட்டிருக்கின்றது. எனவே பகுக்கக்கூடாத ஒன்று வேண்டற்பாலதாகிறது. ஆற்றல் அத்தன்மையைப் பெற்றிருக்கின்றது, அதாவது ஆற்றலே பகுக்கக் கூடா உள்பொருளாகும்.

மேலும் டேக்கார்ட் பொருளின் உண்மை அல்லது இருத்தல், பரப்புடைமையை முன்னெண்ணமாகக் கொள்ளுகின்றது என்று கருதினர். ஆனல் லைப்னிட்ஸ் பரப்புடைமையே பொருளின் அல்லது ஆற்றலின் உண்மையை, முன்னெண்ணமாகக் கொண்டுள்ளது என்று குறிப்பிடுகின்ருர். பரப்புடைமை இருப்பதினலேயே பொருள் கள் இருப்பனவாகக் கருதாமல் பொருள்கள் (ஆற்றல்கள்) இருப்ப தினலேயே பரப்புடைமை இருக்கின்றது என்று உணரவேண்டும். ஆற்றலே யாவற்றிற்கும் பிறப்பிடம்; அல்லது பொறித்தன்மையுள்ள உலகு உண்டாவதற்கான நிலக்களம் அல்லது ஊற்றினைப்போன்ற

தாகும். அவ்வுலகம் ஆற்றலைப் புலனால் அறிய உதவும் ஆற்றலின் தோற்றமாகும். பொருளின் பரப்புடைமை, தானே பிரிந்தும் பரவியும் நீடித்துமுள்ள ஒரு பண்பை முன்பாகவே பெற்றிருக்கின்றது. பொருளின் பரப்புடைமைக்கு முன்னதாகவே ஆற்றல் இருக்கின்றது. பொருளில் அத்தகைய எதிர்க்கும் ஆற்றல் (force of resistance) இருப்பதனாலேயே எதுவும் உட்புக முடியாமலும் எல்லையுற்றும் (limited) அல்லது சடமாகவும் உள்ளது. சிறந்த மதிநலத்துடன் லைப்னிட்ஸ் சடத்தையும் இயக்கத்தையும் ஒரு ஆற்றலின் நிலைக்கும் கொண்டு வந்ததுடன், ஆற்றலின் அளவே நிலையானது என்றும் கூறினார். பொருள்களுடன் தொடர்புற்ற நிலையில்லாமல் தனித்தமுறையில் இடத்தையும் காலத்தையும்பற்றிக் கருதமுடியாது. இடம் என்பது உடனிருக்கும் பொருள்களின் வரிசை அமைப்பாகும். காலம் என்பது முற்பிற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும். எனவே இடமும் காலமும் பொருள்களுடன் சார்புற்றவையே அன்றி, அவைகளே தற்சார்புடைய பொருள்களல்ல. சடப்பொருள்கள் இடத்திலும் காலத்திலும் காணப்படுகின்றன. அவை திரிபுக் காட்சிகளோ கனவுகளோ அல்லது, கற்பனை உருவங்களோ அல்ல. பொருள்களின் அடிப்படையாக உள்ளது ஆற்றலேயன்றி வேறில்லை.

லைப்னிட்ஸ் பொருளைப்பற்றிய (சடம், உள்ளம்) கருத்தினையே மாற்றியமைக்க முயன்றார். டேக்கார்ட் சடத்தைப் பரப்புடைமையுள்ள பொருள் என்று வரையறுத்துக் கூறினார். அவ்வாறெனின் சடம் செயலற்றதாகவும் (passive) இயங்காத்தன்மை (inert) பெற்றதாகவும் இயக்கத்தை வெளியிலிருந்து பெறுவதாகவும் ஆகின்றது. லைப்னிட்ஸ் மேற்கூறப்பட்ட காரணங்களைக் கருதி ஆற்றல் (force) அல்லது எதிர்க்கும் திறன் (power of resistance) பொருளின் இன்றியமையாத பண்பாகவும் பரப்புடைமை அதற்கு உள்ளடங்கியே உள்ளதாகவும் குறிப்பிட்டார். லைப்னிட்ஸ் இவ்வகையில் பொருள் செயலற்ற தன்மையுள்ளது என்னும் கருத்தினை இக்கால விஞ்ஞானக்கருத்திற்கு (அதாவது பொருள் சக்தி அல்லது ஆற்றல், உடையது) ஒத்தவகையில் மாற்றினர். எனவே பொருள் செயலாற்றும் தன்மையுடையது என்று லைப்னிட்ஸ் கருதினார். இதுமட்டு மல்லாமல், சடத்திற்கு இன்றியமை

யாதுள்ள ஆற்றல் பரப்புடைமைக்கும் அடிப்படையாக உள்ளது. ஆதலின் சடம் என்பது அதன் அடிப்படையில் சடமல்லாத நிலையிலுள்ளது; பரப்புடைமையற்றிருக்கும் கூறுகளால் (units) ஆக்கப் பெற்றது. எனவே லைப்னிட்ஸ் இயற்கையைப் பற்றிய வடிவ கணித அல்லது இயங்கா நிலைக் (geometric or static) கருத்திற்குப் பதிலாக இயங்கு நிலை அல்லது ஆற்றல் (dynamic or energetic) கருத்தினை அளிக்கின்றார்.

இப்புதிய விளக்கம், சடத்திற்கும் உள்ளத்திற்கும் டேக்கார்ட் கற்பித்த முழுமையான வேறுபாடுகளை நீக்குவதாகின்றது. மேலும் பரப்புடைமையையே பொருளின் சத்தாகக் கருதினால் (essence), அது உள்ளத்தோடு தொடர்புகொள்ள முடியாதிருப்பதோடு, சிந்தனைக்கு (mental life) முற்றிலும் எதிரானதாகவும் ஆகிவிடுகின்றது. உடலையும் உள்ளத்தையும் பற்றிய இருமைக் கொள்கையைத் தவிர்ப்பதற்காக ஸ்பினோஸா அவற்றைக் கடவுளின் இரு இயல்புகளாகக் கருதினார். ஆனால் அவ்விளக்கம் ஒரே பொருள் சிந்தனையாகவும்; பரப்புடைமையாகவும் இருக்கின்றது என்னும் முரண்கருத்தாகத் தோன்றுகிறது. பரப்புடைமைக்குப் பதிலாக ஆற்றலையே பொருளின் இன்றியமையாத பண்பாகக் கருதினால் சடத்திற்கும் உள்ளத்திற்கும் தொடர்பு நிகழ வழி ஏற்படுகின்றது. நனவு நிலையில் ஆற்றலுக்கு ஒப்புமை காணலாம். சடத்தின் செயல் முறைக்கு நனவுச் செயல் அல்லது இயற்றிநிலை ஒப்பாக அமைகிறது.

எனவே பொருளைப்பற்றிய கருத்து முழுவதுமே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சடம் என்பது செயலற்ற, பரப்புடைமையுள்ள திரள் அன்று. பரப்புடமை என்பது சடத்தின் தோற்றநிலையே; பரப்புடைமையற்ற ஆற்றலின் தொகுப்பே சடம் என்று வழங்கப்படுகிறது. சடத்தின் அடிப்படைச் செயல் ஆன்மீகச் செயல் அல்லது புலக்காட்சிச் செயலாக உள்ளது. எனவே உலகத்தின் உண்மை நிலை சடமன்று, மொனடுகளே. மொனடு என்பது இயக்கமுடைய, ஆன்மீக ஆற்றற் கூறுகும்.

'ஒன்றும் பலவும்' (One and Many) என்னும் சிக்கலை ஆராய்ந்த லைப்னிட்ஸ் மொனடு கொள்கையை (Theory of monads) வகுத்தார்.

அவர் ஒரு பன்மைக் கொள்கையினர். மொனடுகள் பல உண்டு என்பதை அவர் தம் கொள்கையின் தொடக்க நிலையாகக் கொண்டார். மொனடுகள் பௌதிகத் தனிப்பொருள்கள் அல்ல (not physical points). அவைகள் பரப்புடைமை அற்ற ஆன்மிய ஆற்றல்கள் (spiritual forces). எனவே லைப்னிட்ஸ் ஆன்மீகக் கொள்கையினர். அவருடைய கொள்கையை ஆன்மீகப் பன்மைக் கொள்கை (spiritualistic pluralism) என்று கருதலாம். இக்காலத்தில் சிலர் அதனை 'அனைத்துயிர்க் கொள்கை (pan-psychism) என வழங்குகின்றனர். இக்கொள்கையை ஜேம்ஸ் வார்ட் (James Ward) என்பவர் இக்காலத்தில் விளக்கியராவர். அவருடைய நூல் 'உயிர்களின் உலகம்' (Realm of Ends), ஆன்மிய பன்மைக்கொள்கையின் உயர்தர விளக்கமாகும்.

மொனடுகள் என்று முள்ளவை; அவைகள் அழிக்க முடியாதவை; அவைகளை ஒரு அருஞ்செயல் அல்லது அற்புதத்தால்தான் அழிக்க முடியும். அவைகளை உண்டாக்கவோ அழிக்கவோ முடியாது. "புலமைக் கொள்கையினர் முதல் முதலாகக் கற்பித்த கொள்கை ஒன்று, பல்கலைக் கழகத்தில் படித்து வந்த காலத்தில் லைப்னிட்ஸின் கருத்தைக் கவர்ந்தது. இக்கொள்கை தனிப்பட்ட இயக்க நிலையுடைய பொருள்களைப் பற்றியதாகும். இதனைத் தனி ஆற்றல்கள் என்று தம் கொள்கையாக லைப்னிட்ஸ் மாற்றியமைக்கிறார்" என்று தில்லி (Thilly) கூறுகிறார்.

நம்முடைய நனவுநிலை அனுபவத்தை ஒப்புமையாகக்கொண்டு மொனடுகளின் தன்மையை அறிய வேண்டும். அடிப்படைத் தத்துவப் புள்ளிகளே (metaphysical points) மெய்மையானவை, உண்மையானவை, இருப்பவை; அவைகளின்றி ஒன்றும் உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் தனிப்பொருள் அல்லது கூறு (unit) இல்லாமல் பலவாந்தன்மை (manifoldness) எவ்வாறு இருக்க முடியும்? எனவே, லைப்னிட்ஸ் மொனடு ஆன்மிய அல்லது உள்ளத்தன்மை பெற்றுள்ள பொருள் (spiritual or psychic substance) என்று விளக்குகின்றார். நம்முடைய புலனுணர்வு, முயற்சி, இயற்றி நிலை, இவை போலவே மொனடுகளிலும் இருக்கின்றன. அவைகள் புலனறிவும் (perception), தன்னிலெழு உள்

மாற்றமும் (appetition) உடையவை. மொனுடு புலனறிவு பெற்றிருப்பினும் நாம் நனவு நிலை என்று கருதும் பொருளில் அன்று. ஏனெனில் நனவு நிலை (consciousness) புலனறிவின் தன்மை உடையதன்று. நனவு நிலைப்புலனறிவை (conscious perception) உட்புலனறிவு (apperception) என்று லைப்னிட்ஸ் வழங்குகிருர். மொனுடு நனவிலெழு உள்மாற்றம் பெற்றிருப்பினும் நாம் நனவு நிலையிலுள்ள விருப்பம் அல்லது இயற்றி நிலை (conscious desire or will) என்று கருதும் பொருளில் அன்று. லைப்னிட்ஸ், அகத்தே உள்ள அடிப்படையின் (internal principle) செயலையே தன்னிலெழு உள்மாற்றம் என்றும் அது மாறுதல்களை உண்டாக்குகிறது என்றும் கூறுகிருர்.

எனவே, மனித உள்ளத்தில் தானே வெளிப்படும் அதே அடிப்படை உடலிலும் செடிகொடியிலும் விலங்கிலும் செயலாற்றுகின்றது. எல்லா இடத்திலும் ஆற்றல் (force) இருப்பதால், எங்குமே வெற்றிடம் (vacuum) என்பது இல்லை. எல்லா சடப்பொருள்களும் உயிர்த்தன்மை (animate) பெற்றிருக்கின்றன. மிகச் சிறிய பகுதியும் அதனைப் பெற்றிருக்கின்றது. சடப் பொருளின் ஒவ்வொரு பகுதியும தாவரங்கள் நிறைந்த ஒரு தோட்டத்தை அல்லது மீன்கள் நிறைந்த ஒரு குட்டையைப் போன்றிருக்கின்றது. எனவே இப்பிரபஞ்சத்தில் எதுவும் வளமற்ருே, பயனற்ருே உயிரற்ருே இருக்கவில்லை.

ஆனல் கல், செடிகொடி இவைகளில் உள்ளம் அல்லது ஆன்மா உள்ளதாக எவ்வாறு கருத முடியும்? கல், செடிகொடி இவையாவற்றிலும் ஒரே நிலையில் அல்லது அளவில் உள்ளம் இருப்பதாக லைப்னிட்ஸ் கூறவில்லை. பொருளும் பரப்புடைமையும் உள்ளமும் நனவு நிலையும் முற்ருெருமை உள்ளவையாகக் கருதமுடியாது. உள்ளம் புலனறிவு போன்றவற்ருல் ஆக்கப்பெற்றது. இப்புலனறிவு மொனுடுகளில் தெளிவு, தனித்தன்மை (distinctness) ஆகியவற்றின் அளவில் வேறுபடுகின்றது. மனித உள்ளமே பல்வேறு அளவில் புலனறிவை வெளிப்படுத்துகின்றது. நாம் மிக்க கவனத்துடன் ஒரு பொருளை உற்று நோக்கும் பொழுது நாம் கவனிக்கின்ற பகுதிகள் தெளிவாகவும் தனிப் பண்புடனும் தோன்று

கின்றன. ஆனால் அவற்றின் சுற்றுப்புறத்திலுள்ள பகுதிகள் படிப் படியாகத் தனிப்பண்பு குறைந்தும் தெளிவின்றியும் பாகுபாடு செய்யமுடியாத நிலையை அடைகின்றன. பொருள் நம்முடைய கவனத்தின் குவிமுனைக்குத் தொலைவில் இருப்பின், அது சிறியதாகவும் மங்கலாகவும் தோன்றுகின்றது. எனவே, தெளிவான புலனறிவுகள் (clear perceptions), தெளிவற்ற புலனறிவுகள் (obscure perceptions) என இருவகைகள் உள்ளன. பின்னது, புன்காட்சி (small perceptions, perceptions petites) என வழங்கப்படுகின்றது. கடல் இரைச்சலைக் கேட்கும்போது அலைகளின் தனி ஓசைகளைப் பிரித்தறிய முடிவதில்லை என்றாலும் நாம் கேட்கும் இரைச்சலில் இத்தனி ஓசைகள் அனைத்தும் அடங்கியுள்ளன.

மொனடுகளின் நனவு நிலையில் (consciousness) பல வேறுபாடுகள் அல்லது பல் வேறு நிலைகள் (different degress of conscioersness) இருக்கின்றன. உள்ளம் புலக்காட்சிகளாலும் அல்லது புல அறிவுகளாலும்-(perceptions) முயற்சி அல்லது செயற்படுநிலைகளாலும் (conatus) ஆக்கப்பெற்றது. இவ்விதம் எழும் புலனறிவு தெளிவிலும் (clearness), தனித்தன்மையிலும் (distinctness) வேறுபடுகின்றது. மொனடுகளின் தெளிவு அவைகளின் புலனறிவுத் தெளிவைப் பொருத்திருக்கின்றது (1) யாவற்றிலும் கீழான மொனடு தெளிவற்றும் குழப்பமாகவும் உறக்கத்தை ஒத்த நிலையிலும் இருக்கின்றது. அத்தகைய வாழ்க்கையைத் தாவரங்களில் காண்கின்றோம். (2) விலங்குகளில் புலனறிவுடன் (perception) நினைவும் (memory) சேர்ந்திருக்கின்றது. அதாவது, நனவு நிலை காணப்படுகின்றது. (3) மனிதனில் இந்த நனவு நிலை மேலும் தெளிவுடன் விளங்குகின்றது. அது அகநிலையில் ஆழ்ந்த சிந்தனை (reflective knowledge of the inner state) யாவதால் அது உட்புலனறிவு (apperception) என்று வழங்கப்படுகின்றது.

எனவே லைப்னிட்ஸ் மொனடுகளை அவைகளின் நிலைக்கு ஏற்ப மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்தார். அவையாவன (1) நனவிலி நிலையிலுள்ள (unconscious) அல்லது (bare) வெற்றுநிலை மொனடுகள்; (2) நனவு நிலையிலுள்ள (conscious) மொனடுகள்; (3) தன் நனவு உள்ள (self-conscious) மொனடுகள் அல்லது . அறிவுள்ள

மொனடுகள். ஒவ்வொரு மொனடும் ஓரளவு நிறைவு பெற்றுள்ளது, இந்நிறைவு, மொனடு தன்னுள் முழுமையைக் கருத்தளவில் அல்லது ஒடுக்க நிலையில் (ideally or potentially) பெற்றுள்ள அளவைப் பொருத்திருக்கின்றது. எனவே அரிஸ்டாட்டில் வழங்கிய என்டிலக்கிஸ் (Entelechies) என்னும் பெயரை எல்லா மொனடுகளுக்கும் வழங்கலாம். ஏனெனில் மொனடுகள் ஒவ்வொன்றும் ஒருவகையான நிறைவுடைமையையும் அகத்தே நிகழும் செயல்களை உண்டாக்கும் தன் நிறைவையும் பெற்றிருக்கின்றது. ஒவ்வொன்றும் அதன் போக்கிலே பிரபஞ்சத்தைப் பிரதி செய்வதாலும் செயலாற்றும் உயிருள்ள பொருள் அல்லது ஆற்றலாகவும் இருப்பதினாலும் தன்னளவிலே முழுமையுடையது என்று கருதலாம்.

பொதுவாக ஒவ்வொரு மொனடும் புலனறிவும் (perception) தன்னிலெழு உள்மாற்றமும் (appetition) பெற்றிருப்பதால் அதனை ஆன்மா என்று கூறலாம். எனினும் அவைகளுள் மூன்று பெரும் பிரிவுகள் காண முடியும். அவையாவன—(1) நனவிலி அல்லது குழப்பமான புலனறிவு மட்டும் பெற்ற என்டிலக்கிஸ் அல்லது மொனடுகள் (2) நனவு நிலையிலுள்ள புலனறிவு அல்லது நினைவோடு கூடிய உணர்ச்சிபெற்ற மொனடுகள், ஆன்மாக்கள் (souls)—விலங்குகளின் நிலை (3) தன் நனவையும் அறிவையும் பெற்ற மொனடுகள்—அறிவுள்ள ஆன்மாக்கள்—ஆவிகள் (spirits): இவையெல்லாம் படைக்கப்பட்ட மொனடுகள் (created monads). கடவுள் படைக்கப்படாத மொனடு (uncreated monad), மொனடுகளுக்கெல்லாம் மொனடு (Monad of monads-Monas Monadum). எனவே படைக்கப்பட்ட மொனடுகளில் காணப்பெறும் தன்னிலெழு உள்மாற்றங்களில் (appetitions) உள்ள வேறுபாடுகளை அவைகளின் இயல்புகளைக் குறிக்கும் புலனறிவு நிலைகளுக்கு ஏற்ப பின்வருமாறு குறிப்பிடலாம். (1) வெறும் உள்தூண்டல் (mere impulse) (2) விலங்கு நிலை இயல்பூக்கம் (animal instinct), அல்லது உணர்ச்சியின் பாற்பட்ட தெளிவற்ற விருப்பங்கள் (blind desire governed by mere feeling) (3) தன் நனவு நிலையிலுள்ள விருப்பம் (self-conscious desire) அல்லது இயற்றி நிலை (will) என்று கூறலாம்.

ஒவ்வொரு மொனடும் புலனறிவு (perception) அல்லது பிரதி

செய்யும் திறன் பெற்றுள்ளது. அது இந்தப் பிரபஞ்சம் முழுவதை யும் புலனால் அறிகின்றது அல்லது பிரதிபலித்து வெளியிடுகின்றது. இப்பொருளில் அது ஒரு சிறிய அளவில் உலகம் ஆகிறது. எனவே அதனைப் பிண்டம் எனலாம் (microcosm). அது பிரபஞ்சத்தைக் காட்டும் உயிருள்ள கண்ணாடியைப் போன்றது; பிரபஞ்சத்தன் மையை ஒருங்கியைந்த நிலையில் பெற்றிருப்பது (a concentrated world); தனக்காக உள்ளது (a world for itself). ஒவ்வொரு மொனடும் தன் போக்கிலேயே ஆனால் வேறுபட்ட அளவில் தெளிவைக் கொண்டு உலகைப் பிரதி செய்கின்றது; அது வரம்புக் குட்பட்டது; தனிப்பட்டது; மற்றவைகளைப் புறத்தே கொண்டது. மோனடுகளின் உயர்வு, தாழ்வு என்னும் தன்மைக்கேற்ப, அவை தெளிவுடனும் தனிப்பட்ட தன்மையுடனும் உலகை அறிகின்றன அல்லது வெளிப்படுத்துகின்றன. தனக்கு மிக அருகில் உள்ளவை களை அல்லது தன் உடலையே யாவற்றிலும் தெளிவாக மோனடு பிரதி செய்கின்றது.

மிகத் தாழ்ந்ததிலிருந்து (lowest) உயர்ந்தது வரை உள்ள மொனடுகள் அளவுடன் முன்னேறும் வரிசையில் அமைகின்றன. இப்பிரபஞ்சம், தெளிவில் படிப்படியாக உயரும் எண்ணற்ற மொனடு களால் ஆக்கப் பெற்றது. ஒன்றைப்போல மற்றொன்று இரு மொனடுகள் இருக்க முடியாது. அவைகள் பண்பில் வேறுபாடு டையன. அவ்வாறு வேற்றுமையே இல்லாத இரு மொனடுகள் இருக்க முடியாது. இதுவே வழக்கமாக, பிரித்தறியவாராதவை யின் முற்றொருமை (identity of indiscernibles) என்று கூறப்படும் லைப்னிட்ஸின் கோட்பாடு. இது எதிர்மறை முறையில் உள்ள தொடர் நிலை நியதி ஆகும். (It is the law of continuity in negative form). மேலும் மொனடுகளின் எண்ணிக்கை முடிவற்றதாக இருக்க வேண்டும். இல்லையேல் இப்பிரபஞ்சம் ஒவ்வொரு நோக்கத்திலும் பிரதி செய்யப்பட்டதாகாது, குறையுள்ளதாகி விடும். ஆகையால் மொனடுகளின் எண்ணிக்கை முடிவற்றும் ஒவ்வொரு மொனடும் மற்றவைகளிலிருந்த பண்பு வேறுபட்டும் ஆனால், ஒரு தொடராகக் கருதக் கூடிய நிலையிலும் இருக்க வேண்டும். அதில் ஒவ்வொன்றும் தனக்கு அடுத்த மொனடிலிருந்து மிகச் சிறிய அளவிலாவது பண்பு

வேறு பாடு பெற்றிருக்கின்றது. எனவே பிரித்தறிய வாராத இரண்டு தனிப்பட்ட மொனடுகள் இல்லை. இக்கருத்து அணுக் களைப் பற்றிய கருத்துக்கு எதிராக இருக்கின்றது. இரண்டு துளி தண்ணீரையோ அல்லது பாலையோ நுண்பெருக்கி (microscope) யின் மூலம் கண்டால் அவைகள் பிரித்தறியக் கூடியவை என்பதை அறியலாம். பிரித்தறிய முடியாதவை இரண்டு இருக்கின்றன என்று கூறுவது ஒரே பொருளை இரண்டு பெயர்கள் கொண்டு வழங்குவதை ஒத்திருக்கின்றது.

லைப்னிட்ஸின் தத்துவத்தில் முதன்மையானது பன்மைக் கொள்கை. ஆனால் அது சடத்தைப் பற்றிய பன்மைக் கொள்கை யன்று. அவருடைய ஆன்மீய பன்மைக் கொள்கைப் படி, மொனடு களின் தன்மையே பண்புச் சுட்டாக (intensive) இருப்பதால் இரண்டு மொனடுகள் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. தனித்தன்மை பற்றிய அடிப்படை (the principle of individuality) மொனடுகளுக்குப் பொருந்துவதாகும். இதனால் முழுமை என்பது பொறித்தன்மை யுள்ளதாக அல்லது பல பகுதிகளின் சேர்க்கையாக உள்ள ஒன்று என்னும் அளவு பற்றிய கருத்தினைக் கைவிட வேண்டும். ஒவ்வொரு மொனடும் வேறெதனுடனும் சேர்த்தெண்ண முடியாது தனித்திருப் பது—தனக்கே உரிய இயல்புடையது. .(every monad is sui generis, of its own peculiar nature) எனினும் மொனடுகள் ஒரு குழப்பமான திரட்சியைச் சேர்ந்தவையல்ல. இயற்கையில் தொடர்பின்றித் தாவிச் செல்லும் முறை இல்லை. மிகக் கீழ் நிலையிலிருந்து மிக மேல் நிலை வரை இடையீடுகள் இல்லை. மிகக் கீழ் நிலையிலுள்ள தெளிவற்ற ஒன்றிலிருந்து கடவுள் வரை, மிகச்சிறிய அளவிலாவது தொடர்ச்சி யான வேறுபாடு இருக்கின்றது. இப்பிரபஞ்சத்தில் உள்ளீடில்லா ததும் பயனற்றதும் உயிரற்றதுமாக ஒன்றுமே இல்லை. கடவுள் யாவற்றிற்கும் உயர்ந்ததும் நிறைவு பெற்றதும் படைக்கப்படாத தும் ஆகிய மூல மொனடும் (orginal monad) மொனடுகளுக்கெல் லாம் மொனடும் (monad of monads-monas monadum) ஆவர். தொடர் நிலை நியதி அத்தகைய மொனடின் தேவையைச் சுட்டுகின்றது.

ஒவ்வொரு மொனடும் பரிணாம நிகழ்ச்சி முறையில் (process of evolution) அமைந்துள்ளதுமன்றித் தன்னுடைய இயல்பின் ஓர்

அகக் கட்டாயத்தால் அடைவதாகிறது: மொனுடு புறத்திலிருந்து வரையறுக்கப்படவில்லை. மேலும் மொனுடுக்குப் பலகணிகள் இல்லாததனுல் (windowless) எதுவும் அதனுள் நுழைய முடியாது. அதன் வளர்ச்சியின் இயல்பு அதனுள்ளேயே ஒடுங்கி அல்லது பொதிந்து கிடக்கின்றது. இவ்வளர்ச்சி, தொடர்நிலை நியதியிலிருந்து கட்டாயமாகப் பெறப்படுகின்றது. மொனுடில் இதற்கு முன் இல்லாத எதுவும் இருக்க முடியாது. இப்பொழுது இல்லாத எதுவும் அதனுட்புகவும் முடியாது. ஒவ்வொரு மொனுடும் அதனுள் முன் அமைக்கப்பட்டதை—முன் உருக்கொண்டுள்ளபடி—தொடர்ச்சியாகப்பரிணும நிலைகள் வழியாக விரித்துச் செல்கின்றது. " ஆதாம், ஏவாள் என்னும் இருவரிடத்தும் பின் தோன்றிய மக்கள் இனம் முழுவதுமே முன்னதாக அமைக்கப் பெற்றிருந்தது." (The entire human race was preformed in the seed of Adam and in the ovaries of Eve). முழுவளர்ச்சியடைகின்றவை கருவாயிருக்கின்ற போதே பின் அடையப்போகும் உருவத்தைச் சிறிய அளவில் பெற்றிருக்கின்றன. மொனுடு தன்னுள் உள்ள எதனையும் இழந்துவிட முடியாது. யாவும் பின் வரும் நிலைகளில் பாதுகாக்கப்படுகின்றன. பின் வரும் நிலைகள், முன்னுள்ள நிலைகளில் வரையறுக்கப்படுகின்றன. எனவே ஒவ்வொரு மொனுடும் சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர் காலத்தின் சிறப்பும் இழந்து விடாமல் தன்னகத்தே வாய்க்கப் பெற்றுள்ளது. ("charged with the past and big with future"). லைப்னிட்ஸ் காலத்தில் உயிரியல் அறிஞர்களால் இந்த 'முன் உருக்கோட்பாடு' (doctrine of pre-formation)* பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனல் இது பின்தோற்ற வளர்ச்சிக் கொள்கைக்கு எதிராக உள்ளது (theory of epigenesis). முதன்முதல் ஒரே தன்மையுடைய கருவிலிருந்து படிப்படியாக உறுப்பு அமைப்பும் வேறுபாடும் உண்டாகின்றன என்று விளக்கம் தருவது பின் தோற்ற வளர்ச்சிக் கொள்கையாகும்.

உறுப்புள்ள உயிருளிக்கும் (organic) உறுப்பற்ற உயிருளிக்கும் (inorganic) உள்ள வேற்றுமை யாதெனில் இரண்டும் மொனுடு

---

* இதனை உள்ளிட்டுக்கொள்கை (incasement theory) எனவும் குறிப்பிடலாம்.

களால் ஆக்கப் பெறினும் உறுப்புள்ள உயிருளி தன்னுள் ஒரு மையமான (a central monad) மொனடைப் பெற்றிருக்கின்றது. இது அரசி மொனடு (queen monad) அல்லது ஆன்மா என்று வழங்கப் படுகின்றது. அரசி மொனடு மற்ற மொனடுகளை நன்கு அறிந்ததா கின்றது. எனவே அது மற்ற மொனடுகளுக்கு வழிகாட்டும் அடிப் படையாய்த் திகழ்கின்றது. உறுப்பற்ற உயிருளிகளில் இத்தகைய அடிப்படையில்லை. அவை மொனடுகளின் திரட்சியேயாகும்.

ஸ்பினோஸா பொதுமையான பொருள் (universal substance) ஒன்றுதான் உள்ளது என்று கருதுகின்றார். ஆனால் லைப்னிட்ஸ் எண்ணிறந்த பொருள்கள் உளவென்கிறார். டேக்கார்டும் பல பொருள்கள் உள்ளதாகக் கருதுகின்றார். ஆனால் அவை ஒன்றுக் கொன்று, உள்ளமும் சடமும், முற்றிலும் முரணான இயல்புகளை பெற்றுள்ளவைகள் என்பதாக நினைத்தார். லைப்னிட்ஸ் அடிப் படைத்தன்மையில் பொருள்கள் ஒன்றாயிருப்பதாகக் கூறுகின்றார். அணுக்கொள்கையினரும் ஒரே தன்மையுள்ள பல பொருள்கள் இருப்பதாகவே கருதினார்கள். ஆனால் அவை சடத்தன்மை வாய்ந் தவை என முடிவு செய்தனர். லைப்னிட்ஸின் கொள்கைப்படி, பொருள்கள் ஆன்மீகத் தன்மையுள்ளவை. பிளேட்டோவின் 'எண் ணங்கள்' அல்லது கருத்துக்களுக்கு('ideas') ஒப்பானவை. லைப்னிட் ஸின் அடிப்படைகள் என்றுமுள நோக்கங்களாகும் (eternal pur-poses). ஆனால் அவை, அரிஸ்டாட்டில் கூறியதுபோல் தாமே நிற் பவை, என்டிலக்கிஸ் போல, பொருள்களிலேயே இருப்பவை யாகும். "என்னைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் டெமாக்ரிட்டஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் இவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று லைப்னிட்ஸ் அறிவிக்கின்றார். அவ ருடைய இளவயதில், அவர் தனிப்பட்ட பொருள்களே உண்மை யானவை என்றும் கடவுளின் உள்ளத்தில் இருப்பதைத் தவிர, பொதுமையானவை பிறயாவும் தனிப்பட்ட பொருள்களுக்கு அப் பாற்பட்டில்லாமல் அவைகளையே உண்மையான அடிப்படையாகக் கொண்டுள்ளன என்றும் எண்ணியதுண்டு. இந்தத் தனித்தன்மை, பலவாந்தன்மை (individualistic and pluralistic) பற்றிய கருத்துக் களை அவர் என்றுமே கைவிட்டதில்லை. எனவே, லைப்னிட்ஸ் இப்

பிரபஞ்சத்தையே எண்ணிறந்த பல தனியன்களாகப் பிரித்தது மன்றி அவை ஒவ்வொன்றினையும் ஆன்மீகத் தன்மையுள்ளனவாகவே ஆக்கினர். மொனடுகளுக்கும் அணுக்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வது நலம். அணுக்கொள்கையினர் பொருள்கள் யாவும் அணுக்களாலே ஆக்கப் பட்டவை என்றும் அணுக்கள் அழிக்க முடியாதவை என்றும் பகுக்க முடியாதவை என்றும் கருதினர். லைப்னிட்ஸ் பொருள்கள் யாவும் மொனடுகளால் ஆக்கப் பெற்றவையென்றும் அவைகள் அழிவுக்குட்படாதவை என்றும் பகுக்கக்கூடாதவை என்றும் கருதினர்.

எனவே, அணு சடத்தன்மையுள்ளது; மொனடு ஆன்மிகத் தன்மை பெற்றது: அணு இயங்காநிலையுடையது (static). மொனடு இயங்கும் தன்மை பெற்றது. அணு அளவு நிலைக்குட்பட்டது அல்லது பொருட் சுட்டுள்ளது (quantitative or extensive). மொனடு பண்பு நிலையுள்ளது அல்லது பண்புச் சுட்டுடையது (qualitative or intensive). அணுக்கள் ஒன்றினை ஒன்று செயல்படுத்த முடியும். ஆனல் மொனடுகள் பலகணியற்றவை, தனித்தன்மையுள்ளவை. ஆகையால் ஒன்றினை ஒன்று செயல்படுத்துவதில்லை. அணுக்களில் பல நிலைகள் இல்லை. ஆனல் மொனடுகள் தம் தெளிவிற்கேற்ப பல நிலைகளில் கருதப்படுகின்றன.

## முன்னமைத்த பொருத்தம்
## (PRE-ESTABLISHED HARMONY)

முன்னமைத்த பொருத்தக் கொள்கை லைப்னிட்ஸின் திட்டத்திற்கு மிகவும் வேண்டற்பாலதாகின்றது. இக்கொள்கை, லைப்னிட்ஸின் பன்மைக் கொள்கையின் பயனுக எழும் இடர்ப்பாட்டினைத் தீர்க்க முயலுகின்றது. இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றும் பிறிதின் சார்பற்றுளது; எதனுலும் ஊடுருவப்படாததாயுளது: மற்றவைகளால் தாக்குருதிருக்கிறது; நிகழ்கின்ற மாறுதல்களின் அடிப்படையை ஒவ்வொரு மொனடும் தன்னுள் பெற்றிருக்கின்றது.

இத்தகைய எண்ணற்ற மொனுடுகளினுல் ஒவ்வொரு பொருளும் ஆக்கப்பட்டால், இந்த மொனுடுகளின் ஒழுங்கை அழிக்காமல் அவைகளில் மாறுதல் எவ்வாறு நிகழ முடியும் என்னும் கேள்வி எழுகின்றது. மொனுடுகள், ஒரு தொடர்ச்சியான வரிசையை அமைக்கின்றன. ஒவ்வொரு மொனுடும் தன் நோக்கிலிருந்தே இப் பிரபஞ்சத்தை எடுத்துக் காட்டுகின்றது. மொனுடின் உள் நிகழும் எந்த மாறுதலும் மற்ற மொனுடுகளில் மாறுதலை உண்டாக்கவோ அல்லது எதிரிணையான மாறுதல்களை நிகழ்த்தவோ இல்லையானுல் இந்தத் தொடர்ச்சியான வரிசை அல்லது மொனுடுகளின் திட்டம் அழிந்துவிடும். அதாவது அத்திட்டத்திலுள்ள வேறுபட்ட பல தனிமங்கள் ஒன்றினை ஒன்று செயல்படுத்த வேண்டும்; செயல் எதிர்ச்செயல் போன்ற நிகழ்ச்சிகள் உண்டாக வேண்டும். ஆனுல் மொனுடுகள் ஒரு பகுதி மற்றொரு பகுதியுடன் செயலாற்ற முடியாத, பண்பு நிலையான தொடர்ச்சியை (a qualitative continuum) அமைப்பதால் இக்கொள்கையை நிறைவுபெறச்செய்ய வேருெரு விளக்கம் தேவையாக இருக்கின்றது.

அவ்விளக்கமே பொருள்களின் முன்னமைத்த பொருத்தம் என்னும் லைப்னிட்ஸின் கொள்கையாகும். உண்மையான எப் பொருளும் ஒன்றினை ஒன்று செயலுறுத்தாவிடினும் அத்தகைய கலப்பு அவைகளுக்குள் உண்மையில் நிகழ்வதைப் போலே இப் பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றும் நடைபெறுகின்றது. பொருள்களுக்குள் ஏற்படும் உறவு பௌதிக வகையினுல் அமைவதன்று. இசைவினுல் அல்லது பொருள்களுக்குள் ஏற்படும் இயைபினுல் அமைவதாகும். இவ்வகைப் படைப்பில், மொனுடில் நடைபெறும் எல்லா மாறுதல்களுக்கும் அவைகளுக்குப் பொருத்தமான மாறுதல்கள் மற்ற மொனுடுகளில் நிகழும் வகையில் முன்பாகவே அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வமைப்பு ஒவ்வொரு மொனுடின் உள் வளர்ச்சியுடன் (inner development) இணைந்துள்ளது. ஒவ்வொரு மொனுடிலும் நிகழும் மாறுதல்களின் தொடர்ச்சி மற்ற மொனுடுகளில் நிகழ்பவைகளிலிருந்து வேறுபட்டிருக்கின்றது. அவ்வாறு இருந்த போதிலும் எல்லா மொனுடுகளும் இசைவுடன் இருக்கின்றன. எவ்வாறெனின் ஒன்றின் நிறைவுடைமை மற்றவைகளின் குறைகளால் சமன் செய்வ

தாயிருக்கிறது. ஒரு மொனடு மற்றொன்றினைக் கருத்தளவில் செயலுறுத்துகின்றது. அதாவது, புறத்திலிருந்து அல்லாமல் அகத்தேயுள்ள முன்னமைத்த பொருத்தத்தினால் எல்லா மொனடுகளும் உறுப்புள்ள உயிருள்ளிகளின் (organic) பகுதிகளைப் போலவே செயலாற்றுகின்றன. ஒவ்வொன்றிற்கும் செயல் உள்ளது. ஒவ்வொன்றும் காரண காரியத் தொடர்பால் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இங்குக் காரண காரியத் தொடர்பு (causation) என்று கூறுவது கடவுளால் முன்னதாக வரையறுக்கப்பட்ட உடன் நிகழ் மாறுதல்கள், பகுதிகளின் இசைவுள்ள செயல், ஆகிய இவற்றைக் குறிக்கின்றது. கடவுள் இப்பிரபஞ்சத்தைத் தாம் தலையிடாமலே இயங்குமாறு அமைத்துள்ளார். ஒவ்வொரு மொனடிலுமுள்ள ஒவ்வொரு நிலையும் அதன் முன்னைய நிலையின் விளைவாகப் பெறப்படுவதோடன்றி, அது மற்றெல்லா மொனடுகளின் நிலைகளுடன் இயைந்து செயலாற்றுகின்றது. இப்பிரபஞ்சத்திலுள்ள இசைவு முழுமையானது. இயற்கையிலுள்ள நியதி, ஒழுங்கு, முறை, அமைப்பு இவையாவும், கடவுளே எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முடிவான காரணமாவார், என்பதைச் சுட்டுகின்றன.

• லைப்னிட்ஸ் உள்ளமும் உடலும் கொண்டுள்ள உறவு பற்றிய சிக்கலைத் தீர்க்க முன்னமைத்த பொருத்தக் கொள்கையைத் தருகின்றார். மையமானதாகக் கருதப்படும் மொனடு (ஆன்மா) எவ்வாறு அதன் உடலை இயக்க முடியும்? லைப்னிட்ஸ் முன்பே மொனடுகளுக்குப் பலகணி இல்லை என்றும் அவைகள் புறத்திலிருந்து இயக்கப்படவோ அல்லது செயலுறுத்தப்படவோ முடியாது என்றும் கூறியிருப்பதால், அவைகள் ஒன்றினை ஒன்று செயல்படுத்துவதாகக் கருத முடியாது. லைப்னிட்ஸின் விளக்கம் என்னவென்றால் கடவுள் உள்ளங்களையும் உடல்களையும் படைக்கும் பொழுது, தொடக்க நிலையிலிருந்தே அவ்விரண்டும் சேர்ந்து இயங்குமாறு அமைத்துள்ளார். எனவே உள்ளத்திற்கும் உடலுக்கும் உள்ள உறவு, அதாவது இசைவு, கடவுளால் முன் அமைத்த பொருத்தமாகும். உள்ள நிலைகளும் உடல் நிலைகளும் இணைநிலையாக (parallelism) அல்லது உடன் நிகழ்வனவாக நடைபெறுகின்றன.

இக்கருத்தின்படி, உடல் உள்ளத்தின் (ஆன்மாவின்) சடத்தன்

மையுள்ள வெளிப்பாடு ஆகும். எனினும் உடலே எண்ணிறந்த மொனடுகள் அல்லது உளத்தன்மை பெற்ற ஆற்றல்களால் ஆக்கப் பட்டது; அவை ஒவ்வொன்றும் உயிருள்ளதும் இயற்கையினுல் முன்னரே உறுதிசெய்யப்பட்ட விதிகளுக்கு ஏற்ப செயலாற்றுவது மாகும். ஆன்மாக்கள் முடிவு நிலைக்காரண விதிகளுக்கேற்ப விருப்பங்கள் (desires), நோக்கங்கள், கருவிகள் அல்லது சாதனங் கள் (means) வழியாகச் செயலாற்றுகின்றன. உடல்கள் நிமித்த காரண விதிகளுக்கு அல்லது இயக்கத்திற்கேற்ப செயலாற்றுகின் றன. உயிருள்ள உடலும் (organic body) அதன் நுண்ணிய பகுதி களும் கடவுளால் முன் உருவாக்கப்பட்டவையே யாகும். அவை தெய்வீகக் தன்மையுள்ள தான் இயங்கிகள் (divine automata) அல் லது தெய்விகத் தன்மையுள்ள பொறிகள் (divine machines).

இக்கொள்கை இதற்கு முன்னதாகவே இருந்தவற்றின் குறை பாடுகளை நீக்கவே அமைத்ததாகும். இது ஆன்மாவுக்கும் உடலுக் கும் உள்ள உறவு பற்றிய சிக்கலைத் தக்கவாறு தீர்ப்பதாக லைப் னிட்ஸ் கருதினர். கார்ட்டீஸியக் கொள்கைக்கு முன்னர் (pre-Cartesian) இச்சிக்கலுக்குப் பௌதிக உட்செலவுக் கொள்கை (The theory of an influxus physicus) அல்லது தனிமங்கள் (elements) உண்மையிலே ஒரு பொருளிலிருந்து மற்றென்றுக்குப் போகின் றன என்னும் விளக்கமே வழக்கமாகத் தரப்பட்டது. ஆனல் டேக் கார்ட் உள்ளத்திலிருந்து உடலை (அல்லது சிந்தனையுள்ள பொருளி லிருந்து பரப்புடைமையுள்ள பொருளை) வேருகப் பிரித்தது முன் கூறப்பட்ட கொள்கைக்கு முற்றிலும் மாருயிருக்கின்றது. புலமைக் கொள்கையினர் ஆன்மாவையும் உடலையும் உறவுபடுத்திய முறை, இறுதியில் அவைகளை வேருகப்பிரிக்க முடியாமல் அவர்களையே திகைப்புறச் செய்தது. இதற்கு மாருக கார்ட்டீஸியக் கொள்கை அல்லது தறுவாய்க் கொள்கை, தக்க காரணம் ஏதுமின்றி அவ்வி ரண்டினையும் வெவ்வேருகப் பிரித்தது. புலமைக் கொள்கையினர் அவைகளின் உறவு உண்மையானது என்றும் அது அவைகளின் தன்மைகளையே அடிப்படையாகக் கொண்டது என்றும் கருதியது சரியானது என்று லைப்னிட்ஸுக்கு தோன்றியது. ஆனல் கார்ட்டீ ஸியக் கொள்கையினர் (Cartesians) பொருள்கள் தமக்குள் ஒன்றுக்

கொன்று மாறுபட்டவை யெனக் கருதியதும் அவருக்குச் சரியா னதே என்று தோன்றியது. இந்த முரண்பாட்டினை லைப்னிட்ஸ் பின் வருமாறு நீக்க முயலுகிறார். கருத்துவகையில் தனித்து இயங் கும் பல்வேறு மொனடுகளுக்கிடையில் காட்சி செய்வது அல்லது பிரதிக் காட்சி செய்வது என்று கூறத் தக்க உறவு உள்ளது. இந்த மொனடுகளின் இசைவான உள்வளர்ச்சி அவைகளின் படைப்புக்கு முன்னிருந்தே அமைக்கப்பட்டுளது.

லைப்னிட்ஸ் தம்முடைய புதுத் திட்டத்தை விளக்க ஒரு உவ மையைக் கையாளுகின்றார்—இரண்டு கடியாரங்கள் ஒரே நேரத் தைக் காட்டுகின்றன எனின் இதற்கு மூவகையாக விளக்கம் காண லாம். அவையாவன : (1) இரண்டு கடியாரங்களையும் ஒரு மரத் துண்டு அல்லது வேறுவகையான பொறியமைப்பினல் ஒன்றுகப் பிணைப்பது. (2) அவைகள் இரண்டும் ஒரே மணியைக் காட்டுமாறு அவ்வப்போது ஒரு திறமை மிக்க தொழிலாளி அல்லது பொறிக்கம் மியன் (mechanic) சரி பார்ப்பது. (3) அவைகளுக்குள் ஒன்றுக் கொன்று எவ்வித உறவோ, உதவியோ இன்றி அவைகளே சரி யான மணியை ஒருங்கே காட்டுமாறு தவறில்லா முறையில் அமைக் கப்படுவது.

நாம், ஆன்மாவையும் உடலையும் இவ்விரு கடியாரங்களுக்கு ஒப்பிடுவோமானல், முதலாகக்கூறப்பட்டவகை பௌதிக உட்செல வுக் கொள்கை (influxus physicus) அதாவது புலமைக் கொள்கை யையும் இரண்டாவது தறுவாய்க்கொள்கையையும் மூன்றுவது முன்னமைத்த பொருத்தக்கொள்கையையும் குறிப்பிடுவதாகக் கரு தலாம். எனினும் லைப்னிட்ஸ் தம்கொள்கையை விளக்க இந்த உவமையையே சிறப்பாகக் கருதுவதாக எண்ணலாகாது. ஏனெ னில் அவர் அவ்வுவமையைக் கையாளுவது தம்முடைய கொள் கையை விளக்குவதற்காக அன்று. ஆனல் தம் கொள்கை முன் கூறப்பட்ட கொள்கையுடன் கொண்டுள்ள தொடர்பைத் தெளிவு படுத்தவே யாகும்.

முன் கூறப்பட்ட உவமையைக் காட்டிலும் பொருத்தமான ஒன்றை லைப்னிட்ஸ் தருகின்றார். அதில் அவர் ஒவ்வொரு மொன டையும் இசைக் குழுவைச் சேர்ந்த இசைஞர்களுக்கு ஒப்பிடுகின்

ரூர். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவோ கேட்கவோ முடியா மல் வீற்றிருந்தாலும் ஓர் இசைநிகழ்ச்சியில் அவரவர்கள் தங்க ளுக்குரிய பகுதிகளை முறையாகக் குறிப்பிட்ட நேரங்களில் இசைப் பதால், இசையைக் கேட்பவருக்கு, வியப்புறும் வகையில் அது ஒரு தொடர்ச்சியான நிகழ்ச்சியாகவே தோன்றுகின்றது. இவ்வாறே ஒவ்வொரு மொனுடின் செயலையும் அவைகளைப் படைக்கும்போதே கடவுள் வரையறை செய்வதால், மொனுடுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடு இன்றி இயங்குவதையும் அதன் விளைவாக இவ்வுலகில் இசைவு நிலவுவதையும் காண்கின்றோம். இந்த உவமையை முற் றொருமையாகக் கொள்ளக்கூடாது. இது முன் கூறிய கடியாரங் களின் உவமையைக் காட்டிலும் சிறந்ததாகவே விளங்குகின்றது. ஏனெனில் கடியாரங்கள் ஒன்றினையொன்று பெரிதும் ஒத்திருப்ப தால் மொனுடுகளுக்கு அவை யொப்பாகா. அவற்றின் இயக்கத் தின் இசைவு பொருத்தமற்றும் பொருளற்றும் உளது. ஆனல் இசைக்குழுவில் காணப்படும் இசைவு உண்மையாக நிகழ்வது. ஏனெனில் தனித்தியங்கும் பலருடைய கூட்டுழைப்பால் அது நிகழ் கிறது.

லைப்னிட்ஸ் தறுவாய்க் கொள்கையைக் குறைகூறுகிறார். ஆயி னும் அவருடைய முன்னமைத்த பொருத்தக் கொள்கையே தறு வாய்க் கொள்கையின் மற்றொரு வகைதான் எனச் சிலர் கருதுகின் றனர். தறுவாய்க்கொள்கையினரான கெலிங்க்ஸ் என்பவர் கையாண்ட இரு கடியாரங்களைப்பற்றிய உவமையையே லைப்னிட் ஸும் கையாளுகின்றார் என்பதாலும் இரண்டு கொள்கைகளும் கடவுளையே ஆதாரமாகக் கொண்டுள்ளது என்பதாலும் இவர்கள் அவ்வாறு கருதுகின்றனர். ஆனல் டாக்டர் எட்மண்ட் ஃப்ளைட்ரர் (Edmund Pfleiderer) என்னும் அறிஞர், லைப்னிட்ஸ் தம் நூல்கள் எதிலுமே கெலிங்ஸின் பெயரைக் குறிப்பிடாததினல், கெலிங்ஸ் அந்த உவமையைக் கையாண்டுள்ளார் என்பதைப்பற்றி அவர் அறியாமலே இருந்திருக்கவேண்டும் என்று தெளிவு படுத்துகின் றூர். இது மட்டுமல்லாமல், இவ்விரண்டு கொள்கைகளும் கட வுளையே ஆதாரமாகக்கொண்டிருப்பினும் அவைகளில் கடவுளுக்கு அளிக்கப்பட்டுள்ள நிலை வெவ்வேருக இருக்கின்றது.

மேலும் தறுவாய்க் கொள்கைக்கும் முன்னமைத்த பொருத்தக் கொள்கைக்கும் உண்மையான வேறுபாடு உள்ளது. முன்னையது, எல்லையுற்ற பொருள், கடவுளால் உடனடியாகச் செலுத்தப்படுவதைத் தவிர வேறுவகையில் சிறிதும் செயலற்று இருப்பதாகக் கூறுகிறது. பின்னையது, எல்லையுள்ள பொருள்கள், உண்மையில் தாமே இயங்கும் ஆற்றல் உள்ள மொனடுகள் என்று கருதுகின்றது. எனவே முன்னமைத்த பொருத்தக் கொள்கை தறுவாய்க் கொள்கையின் ஒருவகையாகவோ அல்லது சிறிது மாற்றியமைக்கப் பட்டதாகவோ இருந்தால் எல்லையுற்ற பொருளைப்பற்றிய இவ்வடிப் படைக் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

லைப்னிட்ஸ், மேலும், தறுவாய்க் கொள்கை ஒரு முடிவில்லாத அருஞ்செயலை (perpetual miracle) ஏற்றுக் கொள்ளுவதாகக் குறிப் பிடுகின்றார். அது உண்மையானால் ஆன்மாவுக்கும் உடலுக்கும் உள்ள உறவு காரணமற்றதாக இருக்கவேண்டும். ஏனெனில் ஓர் ஆன்ம நிகழ்ச்சியுடன் குறிப்பிட்ட ஓர் உடல் நிகழ்ச்சியே ஏன் நடைபெறுகின்றது என்பதை விளக்கத்தக்க காரணம், அவற்றின் தன்மைகள் எதிலும்காணப்படவில்லை என்று லைப்னிட்ஸ் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் முன்னமைத்தப் பொருத்தக்கொள்கை காரணமற்றதன்று; அறிவுக்குப் பொருத்தமானதேயாகும். இது வேறு வகையில் விளக்க முடியாதவற்றை விளக்குவதற்காக வேண்டிய சமயத்தில் கடவுளை வலியப் புகுத்துவதன்று (no deus ex machina). மாறுபட்ட கொள்கைகளாகிய புலமைக் கொள்கையையும் கார்ட்டீஸியக் கொள்கையையும் இணைக்கின்றது என்னும் பொருளிலன்றி லைப்னிட்ஸின் கொள்கையைத் தறுவாய்க் கொள்கையை நிறைவு செய்வதாகக் கருத முடியாது.

## அளவையியல் நியதிகள்
## (LOGICAL PRINCIPLES)

லைப்னிட்ஸ், நம் அறிவு (knowledge) உள்ளத்திலிருந்தே எழுவதாக கூறுகின்றார். அவர் இரண்டு வகையான முடிவுகள் (conclusions) அல்லது தீர்ப்புகள் (judgments) உள்ளதெனப்பாகுபாடு

செய்து முன்னையது அறிவின் வாயிலாகக் கிடைக்கப் பெறுவது (drawn from reason) என்றும் பின்னையது அனுபவத்தினின்று உய்த்துணரப்படுவது என்றும் கருதுகின்றார்.

இவற்றிற்கு நேராக இரண்டு வகையான உண்மைகள் உளவென்று லைப்னிஸ்ட் கூறுகின்றார். அவையாவன: (1) என்றுமுள அல்லது கட்டாயமான (eternal or necessary) உண்மைகள்—அறிவினால் எழும் உண்மைகள் (truths of reasoning), (2) மாறுதலுக்குட்பட்ட (contingent) உண்மைகள்—அனுபவம் அல்லது நிகழ்ச்சிகளிலிருந்து எழும் உண்மைகள் (truths of facts).

அறிவினால் எழும் உண்மைகள் தனிப்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்தோ அல்லது புலச்சான்றிலிருந்தோ பெறப்படாமல், உள்ளத்திலுள்ள உடன்பிறந்த அடிப்படைகளிலிருந்து நேராகக் கிடைக்கப் பெறுபவையாகும். இத்தகைய உண்மைகள் கணிதம், அளவையியல், அடிப்படைத்தத்துவம் முதலிய துறைகளிலும் தங்களுடைய சான்றுகளை உடன்கொண்டுள்ள இன்ன பிற அறிவுத் துறைகளிலும் காணப்படுகின்றன. அவை பேசும் நியதிகள், தாமே தெளிவாய் விளங்குபவை (self-evident), கட்டாயத் தன்மை (necessary) வாய்ந்தவை. ஏனெனில் அவற்றின் மறுப்பு முரணைக முடியும். கட்டாய உண்மைகளுக்கு அளவைஇயல் அறுதித் தன்மை உண்டு. அவை என்றுமுள்ளவை, மாறாத்தன்மை வாய்ந்தவை. அவற்றின் தன்மையைக் கடவுளாலும் மாற்ற முடியாது. அவை அளவைஇயலில் காணப்பெறும் முரணாமை நியதிக்குட்பட்டவை. அவற்றிற்கு மாறான உண்மைகளை நினைத்துப்பார்க்கவும் முடியாது. ஆனால் இத்தகைய வெற்றுநிலை உண்மைகளே (abstract truths) கட்டாயத்தன்மை வாய்ந்தவையாகும்.

மாறுதலுக்குட்பட்ட உண்மைகள் (contingent truths) நடைமுறையில் உண்மையென ஏற்றுக்கொள்ளப்பட்டவை, அவற்றிக்கு எதிரான நிகழ்ச்சிகளைக் கருதுவது முரண்பாட்டில் முடிவதில்லை. அவை இப்போது காணுகின்றவாறு இருக்கின்றன என்பதைத் தவிர, வேறு வகையில் இல்லாமல் இவ்வாறேதான் கட்டாயமாய் இருக்கவேண்டும் என்பதற்குக்காரணம் ஒன்றும் கூறுவதற்கில்லை.

அறிவால் எழும் உண்மைகள் (truths of reasoning) முடிவானவை,

தாமே விளங்கும் அடிப்படைகள் (ultimate self-evident principles) அல்லது அளவையியல் பகுமுறையால் மூல அடிப்படைகளின் நிலைக்கு வரக்கூடிய உண்மைகள். நடைமுறை உண்மைகளின் (truths of facts) அடிப்படைகளைக் காண்பதற்காகச் செய்யும் முயற்சி வரம்பின்றிச் செல்வதாகும். இறுதியில் அவை கடவுளிடமிருந்து தோன்றுவனவாகக் கொள்ளவேண்டியிருக்கும். இவ்விரு வகை உண்மைகளுக்கு நேராக மனிதஉள்ளத்தில் இரு நியதிகள் இருக்கின்றன. அவையாவன (1) முற்றொருமை நியதி அல்லது முரணுமை நியதி (The law of identity or contradiction). (2) போதிய காரண நியதி (The law of sufficient reason). முதலாவது நியதி அறிவினால் எழுபவைகளுக்கும் (rational knowledge) இருக்கக் கூடியவற்றிற்கும் (the possible) பயன்படுகின்றது. இரண்டாவது நியதி மாறுதலுக்குட்பட்ட உண்மைகளுக்கும் (contingent truths) அல்லது நடைமுறை நிகழ்ச்சிகளுக்கும் (actual events) பொருந்துவது. ஏன்? எவ்வாறு? என்பவற்றின் காரணங்களை அறியும் பொழுது அவை தெரிந்து கொள்ளக் கூடியவையாகவும் காரணத்தோடு விளங்குபவையாகவும் தோன்றுகின்றன.

## முற்றொருமை நியதி அல்லது முரணுமைநியதி

## (PRINCIPLE OF IDENTITY OR CONTRADICTION)

டேக்கார்ட், ஸ்பினோஸா இவர்களின் தத்துவதிட்டங்கள் வெறும் தற்பொருத்த அளவையியலையே (logic of abstract self-consistency) அடிப்படையாகக் கொண்டவையாகும். அவர்கள் கருத்துப்படி உண்மையான அறிவெல்லாம் இறுதியில் ஒரே வகையாக இருத்தல் வேண்டும். இவ்வாறு இல்லாத அறிவு என்று சொல்லப்படுவன எல்லாம் (apparent knowledge) முற்றிலும் உண்மையற்றவையாகவும் திரிபுக் காட்சியாகவும் கருதப்படல் வேண்டும். மேலும் எல்லாப் பொருள்களும் இறுதியில் ஒரே அடிப்படை அல்லது காரணத்திலிருந்தெழுவனவாகவும் எனவே எல்லா எண்ணங்களும் அல்லது கருத்துக்களும் (ideas) ஒரே குறிக்கோளை (standard) உடை

யனவாகவும் இருக்கவேண்டும். அக்குறிக்கோள் எண்ணங்களில் தானே விளங்குவது (self-evident) அல்லது தன்முரணுமை (absence of self-contradiction) யாகும். அது, நனவுநிலை உடனடியாக அறிவதை, வேறு வகையாகக் கூறுவதாகும். உண்மையான எண்ணங்கள் அல்லது கருத்துக்கள் தெளிவுள்ளனவாகவும் முரணின்றியும் இருக்க வேண்டும். எல்லா அறிவும் என்றுமுள அல்லது கட்டாயமான உண்மைகளைப்போல உடனடியாக உணரக் கூடியனவாக இருக்கவேண்டும்; அல்லது அத்தகைய உண்மைகளிலிருந்து கணித முறையில் முடிவாக உய்த்துணரக்கூடியனவாகவாவது இருக்கவேண்டும். எனவே, டேக்கார்ட், ஸ்பினேஸா முதலியோரின் தத்துவங்கள் முரணுமை நியதியினுல் ஆளப்பெற்றவை அதாவது 'ஏ' என்பது ஒரேசமயத்தில் 'ஏ' ஆகவும் அல்லாமலும் இருக்க முடியாது. ஒரே சமயத்தில் ஒன்று, அதுவேயாகவும் அதற்கு எதிராகவும் இருக்க முடியாது. அல்லது கட்டாயமான உண்மைகள் முற்றொருமையுள்ள வாக்கியங்கள். (அதாவது: கட்டாயமான உண்மைகளுக்கு எதிரானவைகள் வெளிப்படையான முரணில் முடிவன). வேறு வகையாகக்கூறின், தன் நனவு தற்பொருத்த முடையது என்றும் முற்றிலும் தன் முரண் அற்றது என்றும் லைப்னிட்ஸ் கருதினர். இந்த அளவில் இது மிகவும் பொருத்தமாகத் தான் இருக்கிறது. ஆனால் இது இன்னும் விரிவாக அமையவில்லை என்பதே இதன் குறையாகும். தன் நனவு வெறும் தற்பொருத்தத்தை விட உயர்வானது. அதனுடைய தற்பொருத்தம் உடனடியாகவும் மேற்போக்காகவும் இல்லை. முரணுமை நியதிப்படி, உண்மையான தற்பொருத்தம் வழியளவையாகவும் தகுந்த அடிப்படையுடனும் இருக்கவேண்டும். அது தற்பொருத்தமுள்ள பொருளின் தெளிவாகக் குறிப்பிடுள்ள தன்மையிலிருந்து எழவேண்டும். எனவே, லைப்னிட்ஸ் கருதுவதுபோல், தற்புல உண்மைகளுக்கும் சான்றுகள் தேவைப்படலாம். தாமே விளங்கும் அவற்றின் தன்மைக்கும் விளக்கம் தேவைப்படுகின்றது. அதாவது அதன் அடிப்படையை வெளிப்படையாக்க வேண்டும். தன் நனவு உண்மையான பொருத்தத்தோடு இருக்கின்றது. ஏனெனில் தற்பொருத்தத்திற்கும் இருத்தலுக்குமான அடிப்படையை அல்லது

காரணத்தை அது தன்னுள் கொண்ட தீர்மானமான திட்டமாக உளது; அது தானே வெளிப்படும் முறை அல்லது வளர்ச்சியாக இருக்கிறது. எனவே அதனை மேற்போக்கான தற்பொருத்த முடையது என்று கருதுவது பொருளற்ற முடிவாகும்.

லைப்னிட்ஸ் முரணாமை நியதியின் குறைபாட்டை உணர்ந்தாரெனினும் அக்குறைபாட்டின் காரணத்தைப் போதிய தெளிவுடன் அறியவில்லை. முரணாமை நியதி, எல்லா உண்மைகளுக்கும் அடிப்படையான ஒரே அடிப்படையின் குறைபாடுள்ள விளக்கம் என்றும் அதனை வேறொரு வரையறையின் மூலம் நிறைவு செய்ய வேண்டும் என்றும் லைப்னிட்ஸ் கருதவில்லை. அதனைத் தனித்து நிற்கக்கூடிய (independent) ஒரு வகையான உண்மைக்குப் போதிய அடிப்படையாகவே கருதினார். இருந்தபோதிலும் இதற்குத் துணையாகவும் இணையாகவும் வேறொருவகையான உண்மைக்கு மேல் வரிச்சட்டமாகவுள்ள ஓர் அடிப்படையையும் குறிப்பிடுகிறார்.

முரணாமை நியதியை அறிவிற்கு அடிப்படையாகக் கருதினால் தன் முரண் இல்லாதது உண்மை என்பது தெளிவாகிறது. ஆனால் நாம் எவ்வாறு தன் முரண் உள்ளது அல்லது இல்லாதது என்று முடிவு செய்வது? கார்ட்டீஸியக் கருத்துப்படி, ஐயத்திற்குட்பட்ட கூற்றினைப் பகுமுறை வழியாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தாமே தெளிவுள்ள வாக்கியங்களாக அமைக்கவேண்டும். ஆனால் லைப்னிட்ஸ் இம்முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் பல கூற்றுக்கள் (statements) இம்முறைக்கு உட்படக் கூடியவை அல்ல. அவற்றை விளக்கப் பகுமுறையை வரம்பின்றிக் கையாளவேண்டும். இதனால் அவை தன்முரண் உள்ளவையா அல்லது இல்லாதவையா என்று முடிவு செய்யஇயலாது போகும் என்றும் லைப்னிட்ஸ் கருதினார். எடுத்துக்காட்டாக, 'நேற்று தொலைவாக நான் உலாவச் சென்றேன்' என்பது முழுமையான உண்மையாக இருக்கலாம். ஆனால் அதனைத் தானே தெளிவுறும் நிலைக்கு கொண்டு வந்து அதன் உண்மையைப் பகுமுறையால் நிலைநிறுத்த முடியாது. அது கட்டாயமான உண்மை அன்று; மாறுதலுக்குட்பட்ட உண்மையேயாகும். அதன் உண்மை பொருள்களின் என்றுமுள தன்மையை அடிப்படையாகக் கொண்டு எழாமல், ஒவ்வொன்றும் எல்லையற்ற பகுப்பை

வேண்டிநிற்கும் வேறு பல உண்மைகளால் வரையறுக்கப்பட்டெழுந்ததாகும். மாறுதலுக்குட்பட்ட (contingent) இந்த உண்மைகளுக்கு அடிப்படை அல்லது காரணம் இருக்கவேண்டும். அவற்றின் முழுமையான என்றுமுள காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமற் போயினும் அவை ஏன் வேறுவகையாகாமல் இல்லாது அவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்காகவாவது மனநிறைவு அளிக்கின்ற அல்லது போதிய காரணம் இருக்கவேண்டும்.

## போதிய காரண நியதி
## (PRINCIPLE OF SUFFICIENT REASON)

லைப்னிட்ஸ் முரணமை நியதியின் குறையைப் போதிய காரண நியதியை அதற்குத் துணையாகச் சேர்ப்பதின் மூலம் தீர்க்கின்றார். இந்த இரண்டாவது நியதி "முழுமையான காரணத்தை அறிய முடியாத தருணத்தில், போதிய காரணத்துடன் மனநிறைவு கொள்ள வேண்டும்" என்று கூறுவதுபோல் தற்காலிக விளக்கமாக அமைந்துளது.

லைப்னிட்ஸ் அதனை அவ்வாறு தற்காலிக விளக்கமாகக் கருதவில்லை. இந்த அடிப்படை அவருடைய திட்டத்திற்கு இன்றியமையாததாகவும் அதன் மதிப்பிற்குப்பெரிதும் காரணமாகவும் உள்ளது. லைப்னிட்ஸ் தம்முடைய மொனடு பற்றிய நூலில் (Monadology) இந்நியதியைப் பின்வருமாறு விளக்குகிறார்: "ஒரு நிகழ்ச்சி உண்மையானது—ஒரு கூற்று மெய்யானது என்று சொல்லும்போது அவை வேறுவகையாகவின்றி அவ்வாறிருக்கப் போதிய காரணம் இருக்கவேண்டும்" (போதிய காரணம் இல்லையேல் நாம் இவ்வாறு சொல்ல முடியாது) "இத்தகைய காரணங்களைத் தெரிந்து கொள்வது அருமையாக இருக்கலாம்" (எனினும் காரணங்கள் உளவென்பது உண்மை).

போதிய காரணநியதி அனுபவத்துறையில் உண்மையை அளக்கும் கருவியாக உள்ளது. அது அளவையியல் பொருள்மட்டிலும் பெற்றதன்று, அதாவது ஒவ்வொரு தீர்ப்பும் (judgment) அதன்

உண்மையைமெய்ப்பிக்கத்தக்க காரணத்தையும்பெற்றிருக்கவேண்டும்; அது ஒரு அடிப்படைத் தத்துவ நியதியுமாகும் அதாவது ஒவ்வொரு பொருளும் தன் இருத்தலுக்குப் போதிய காரணம் உடையதாக இருக்கவேண்டும். எனவே இந்த நியதி அளவையியல் அடிப்படையையும், (logical ground) உண்மையான அடிப்படையையும் (real ground) குறிப்பாக உணர்த்துகின்றது; பௌதிகம், அறவியல், அடிப்படைத் தத்துவம், இறையியல் இவை இந்த நியதியையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. "அதனை ஏற்றுக்கொண்டாலொழிய, கடவுளைப்பற்றியும் மற்ற தத்துவக் கொள்கைகளைப் பற்றியும் மெய்ப்பிக்கச்செய்யும் முயற்சி பொருளற்றுப் போய்விடும்." ஏனெனில் இப்பிரபஞ்சமே ஒரு அறிவுத்தன்மைக்குட்பட்ட திட்டம் (a rational system). அதில் எதுவும் போதிய காரணமின்றி நடைபெறுவதில்லை. மேலும் இப்பிரபஞ்சம், ஒன்றுக்கொன்று அறிவு முறையால் உறவு கொண்டுள்ள வாக்கியங்களைக் கொண்டெழுந்த ஓர் அளவையியல் திட்டத்தைப் போன்றது. அளவையியல் திட்டத்தில் கட்டாயத் தன்மை எவ்வாறு உள்ளதோ, அவ்வகையிலேயே உண்மை பிரபஞ்சத்திலும் உள்ளது. போதிய காரண நியதி ஒரு வகையில் முரணாமை நியதியைக் காட்டிலும் உயர்ந்தும் மற்றொரு வகையில் தாழ்ந்தும் இருக்கின்றது. போதிய காரண நியதி முரணாமை நியதியைத் தன்னுள் கொண்டுள்ளது. எவ்வாறெனின் தற்பொருத்தம் அல்லது தன்முரணாமை இன்மையே போதிய காரணத்திற்கு ஒரு சான்றாகும். எனவே போதிய காரண நியதி முரணாமை நியதியைத் தன்னுள் கொண்டிருக்கவேண்டிய விரிவுடையது. ஆனாலும் முரணாமை நியதி தனிச்சிறப்பையும் உயர்வையும் உடையது. ஏனெனில் கட்டாயத் தன்மையுள்ள உண்மைகள் தெளிவான காரணத்துடன் எழுவதோடு, அக்காரணத்தை வெளிப்படையாக்கவும் அவற்றால் முடிகின்றது. ஆனால் மாறுதலுக்குட்பட்ட உண்மைகளின் காரணத்தை முழுமையாக அறிய முடியாததினால், அவைகளுக்குப் போதிய காரணம் இருக்க வேண்டும் என்று மட்டுந்தான் கூறமுடிகின்றது.

இவ்விரண்டு நியதிகளும் லெப்னிட்ஸின் தத்துவத்தில் இணையாகவே உள்ளன. ஒவ்வொன்றும் தனிப்பட்ட தொழிலுக்காகத்

தேவைப்படுவதுடன் ஒன்றிலிருந்து மற்ருென்றின் நிலைக்கு மாற்ற முடியாத வகையிலும் உள்ளது. இவ்விரண்டு நியதிகளையும் தன்னுள் அடக்கக் கூடிய விரிவான ஒரு அடிப்படையைக்கண்டு பிடிக்க லைப்னிட்ஸ் முயற்சி செய்யவில்லை. ஏனெனில் ஒவ்வொரு நியதியும் ஒருவகையான கட்டாயப் போக்கை வெளிப்படுத்துகின்றது. ஆனல் இவ்விரண்டின் கட்டாயப் போக்கு, தன்மையால் வேறுபட்டுள்ளது. முன்னையது சார்பற்றதும் (absolute) வலியுடையதும் அல்லது அடிப்படைத் தத்துவக்கட்டாயப் போக்கை உடையதும் தனக்கு எதிரானது முரணில் முடிவதாகவும் உள்ளது. பின்னையது சார்புள்ளதும் மெல்லத்தூண்டுவதாகவும் அல்லது ஒழுக்கக் கட்டாயப்போக்கை உடையதாகவும் தனக்கு எதிரானது முடியாதது தன்று ஆனல் உடன் முடியாததெனவும் உள்ளது.

லைப்னிட்ஸின் அளவையியல் அவருடைய தத்துவத்தில் பெரிதும் இடம் பெற்றுள்ளதைப்போல தத்துவமும் அவருடைய அளவைஇயலில் இடம் பெற்றுள்ளது. அறிவு (knowledge) உள்ளத்தில் உள்ளார்ந்துள்ள அடிப்படைகளிலிருந்து எழுகின்றது என்னும் கருத்து மொனடுகளைப்பற்றிய கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனல் அவருடைய தனிநிலைக்கொள்கை பிரபஞ்சத்தைப்பற்றிய அவருடைய அளவையியலான கருத்திலிருந்து கட்டாயமாய்ப் பெறப் படுவதன்று. தனிப்பட்டவைகளின் தனி நிலை அளவையியல் அறிவுக்குப் பொருந்தாதது ஆகும். எனினும் லைப்னிட்ஸ், தனிப்பட்டவைகளின் உண்மையை நோக்கஅமைப்பு விளக்கத்தால் (teleological explanation) தெளிவுபடுத்துகின்ருர். தனிப்பட்டவைகளை உணடாக்கவேண்டுமென்பது இறைவன் திருவுளமாகும். எனவே அவை உலக அடிப்படையின் (world ground) தொடக்கத்திலிருந்தே இருந்திருக்கவேண்டும். இங்கே பிரபஞ்சத்தின் அளவை இயல் அடிப்படைக்கு மக்கள் நிலை மதிப்பு அல்லது உயர்வு ஏற்றிக் கூறப்பெறுகிறது.

# அறிவளவை இயல்

## (EPISTEMOLOGY)

லைப்னிட்ஸின் அறிவளவை இயல் (epistemology) அவருடைய அடிப்படைத் தத்துவக் கருத்துக்களையே அடிப்படையாகக்கொண்டெழுகின்றது. அவர் உண்மையான அறிவு (genuine knowledge) பொதுமையானதாகவும் (universal), கட்டாயத் தன்மை வாய்ந்ததாகவும் அனுபவத்தால் எழுவதன்று எனவும் கருதினார். இப்பிரபஞ்சமே ஒரு கணித-அளவையியல் திட்டம் (mathematical-logical system), அதனை அறிவே விளக்கமுடியும் என்று கூறினார். மொனடு புறச்சார்பின்றி இருப்பதாலும் புறக்காரணம் எதுவும் அதனைச்செயல்படுத்த முடியாதாகையாலும் அறிவு வெளியிலிருந்து அடையப்பெறுவதன்று. அது தன்னுள்ளிருந்தே (ஆன்மாவிலிருந்தே) எழுவதாகும். புலன்வழிக்கொள்கையைப் பின்பற்றிய லாக் (Locke) என்னும் அறிஞர் ஆன்மா எழுதாப் பலகை போன்றது (empty tablet) என்று கருதினார். ஆனால் லைப்னிட்ஸ் அக்கருத்தினை ஏற்க மறுத்தார். நம்முடைய அறிவு (புலனுணர்ச்சியும் புரிந்துகொள்ளலும்—sensation and understanding)— உள்ளத்தில் ஒடுங்கி நிற்கிறது. அனுபவம் அறிவை உண்டாக்கவில்லை. ஆனால் அறிவு அனுபவத்தால் வெளியாக்கப்படுகிறது; தெளிவுபடுத்தப்படுகிறது; வெளிப்படையாக்கவும் பெறுகிறது. புலனுணர்ச்சியில் முன்னமேயே இல்லாத எதுவும் உள்ளத்தில் இல்லை என்று புலன்வழிக்கொள்கையினர்கூறுவதை லைப்னிட்ஸ் ஏற்றுக்கொண்டு, "ஆனால், உள்ளத்தைத் தவிர" என்னும் சொற்களைச்சேர்த்து அவர்கள் கூற்றினை நிறைவு செய்கிறார். மொனடு கொள்கையைக் கைவிடினும் அறிவு புலன்கள் வாயிலாக எழுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என லைப்னிட்ஸ் கூறுகின்றார். ஏனெனில், அவ்வாறு நிகழ்வது உண்மையானால், நாம் பொதுமையான அறிவை (universal knowledge) அடையவே முடியாது. அனுபவத்தினால் அடையப்பெற்ற உண்மைகள் என வழங்கப்படுபவை கட்

டாயத் தன்மையை இழந்துவிடும். அவை எப்பொழுதுமென்பதின்றி எப்பொழுதாவது (accidental) உண்மையாயிருக்கும் வாக்கியங்களே ஆகிவிடும். ஒரு நிகழ்ச்சி இவ்வாறு நடைபெற்றது. ஆகையால் அது எப்பொழுதும் அவ்வாறே நடைபெறவேண்டும் என்று உறுதியுடன் கூறமுடியாது. எனவே பொதுமையையும் கட்டாயப்போக்கையும் பெற்ற வாக்கியங்களைப் புலன்களின் வாயிலாக அடைய முடியாது. அவற்றின் இருப்பிடமும் பிறப்பிடமும் உள்ளமேயாகும்.

உடன் பிறந்த அல்லது புலனுக்கு முன் எழும் (புலச்சார்பற்ற) அறிவு இருக்க முடியாது; ஏனெனில் நாம் அத்தகைய அறிவை நனவு நிலையில் எப்போதும் அறிந்திருக்கவில்லை என்றே லாக் கருதினர். ஆனல் லைப்னிட்ஸ் இதனை மறுத்து, உள்ளம் எப்பொழுதுமே தன்னுள் உறையும் எண்ணங்களைப்பற்றி உணர்ந்திருப்பதில்லை. எண்ணங்களும் அடிப்படைகளும் உள்ளத்தின் நனவு நிலைக்கு வராமலே இருக்கலாம் என்று குறிப்பிடுகின்ருர்.

மேலும், அனுபவத்தினல் அல்லது தொகுமுறையினல் அடையப்பெறும் உண்மைகள் பொதுமையிலும் கட்டாயப் போக்கிலும் குறைபாடுடையவைகளாகவே இருக்கின்றன. அவை உறுதியான அறிவைத்தருவதில்லை. எடுத்துக்காட்டுகள் பல கூறினும் அவை ஒரு நிகழ்ச்சி கட்டாயமாய் எப்போதும் நடைபெறவேண்டும் என்று மெய்ப்பிக்க முடியாது. மேலும் நாம் புலச்சான்றினையே அடிப்படையாகக் கொள்ளாத அறிவையும் பெற்றுள்ளோம். எடுத்துக்காட்டாக, கணித இயலில் காணப்படும் உண்மைகள் பொதுமையும் கட்டாயத் தன்மையும் பெற்றுள்ளன. ஆனல் அவை புலச்சார்பற்று இருக்கின்றன. அத்தகைய உண்மைகள் அளவையியல், அடிப்படைத்தத்துவம், அறவியல், இறையியல், சட்டத்துறை (jurisprudence) முதலியவற்றில் நிறைந்துள்ளதையும், அவை உள்ளத்தையே மூலமாகக்கொண்டிருப்பதையும் அறிகின்ருேம். ஆனல் புலன் உணர்ச்சியில்லாமல் அவ்வடிப்படைகள் நனவு நிலைக்கு வரமுடியா. நம் புலன்கள் அவற்றை உணரத்தறுவாயை அளிக்கின்றன; ஆனல் புலன்களே அவற்றை வெளிப்படுத்தவோ அல்லது படைக்கவோ முடியாது. இவற்றின் உதவியின்றிப் பல விவ

ரங்களைத் திரட்டலாம்; ஆனால் விஞ்ஞானம் இருக்கமுடியாது. "கட்டாயத் தன்மையுள்ள உண்மைகள் அறிவிலிருந்துதான் (from understanding alone) எழுகின்றன. மற்ற உண்மைகள் அனுபவ வாயிலாக அல்லது புலன்களின் மூலமாகவே (observation of the senses) பெறப்படுகின்றன." புலன்கள் இத்தகைய உண்மைகள் எழத் தூண்டலாம்; அவை சரியெனக்காட்டலாம். ஆனால் அவை எக்காலத் திற்கும் பொருந்தியவை என அறுதியிட்டுக் காட்டமுடியாதவை. எனவே ஆன்மா கிளர்ச்சியுறுவதற்கு அனுபவம் தேவையாகிறது; ஆனால் எண்ணங்களை உண்டாக்க அனுபவத்தால் முடியாது. ஆன்மா, உட்பதிவுகள் பொறிக்கக்கூடிய மெழுகைப் போன்றதன்று; ஆன்மாவை அவ்வாறு கருதினால் நாம் அதனை ஒரு சடப் பொருளாக ஆக்கிவிடுகிறோம். புலன் வழிக்கொள்கையினர் புலனுணர்ச்சியில் முன்னதாகவே இல்லாத எதுவும் அறிவாற்றலில் இல்லை என்று கூறின், லைப்னிட்ஸ் அதற்கு "உண்மையே, ஆனால் அறிவாற்றலைத் தவிர" என்று கூறுகின்றார், என்று முன்னர் பார்த்தோம். ஆன்மா, பொருள் (substance), ஒருமைப்பாடு (unity), முற்றொருமை (identity), காரணம் (cause) புலனறிவு (perception), அறிவுமுறை (reasoning) அளவுநிலை (quantity) இவற்றைத் தன்னுள் கொண்டுள்ளது. இத்தகைய கருத்துக்கள் புலன்களின் வாயிலாகப் பெறமுடியாதவையாகும்.

மேல் கூறப்பட்ட விளக்கத்திலிருந்து உடன் பிறந்த எண்ணங்களைப் பற்றி லைப்னிட்ஸ் கொண்டுள்ள கருத்தையும் தெளிவாக அறிய முடிகின்றது. அறிவு முதற்கொள்கையரான டேக்கார்ட் உடன் பிறந்த எண்ணங்களை ஏற்றுக்கொண்டார். அவை நம்முள் தெளிவாகவுள்ளனவென்றும் தாமே விளங்குபவை என்றும் கடவுளைப் பற்றிய எண்ணமும் அத்தகைய எண்ணங்களில் ஒன்று என்றும் கருதினர். புலன்வழிக்கொள்கையினர் உடன் பிறந்த எண்ணங்களே உள்ளத்தில் இருக்கமுடியாதென்றும் அனுபவத்திலே தான் எண்ணங்களைப் பெற முடியும் என்றும் முடிவு கூறினர். லைப்னிட்ஸ் இவ்விரு கருத்துக்களுக்கும் இடையே, உடன்பிறந்த எண்ணங்கள் உள்ளத்தில் ஒடுங்கி நிற்கின்றன: ஆனால் அவை அனுபவத்தினாலேயே தெளிவடைவதுடன் வெளிப்படையாக்கவும் பெறு

கின்றன என்று உணர்கின்றார். (இங்கு நாம் நினைவு கொள்ள வேண்டியது யாதெனில் புலன்வழிக்கொள்கையினர் அனுபவமே எண்ணங்களுக்கு மூலம் என்று கருதினர். ஆனால் லைப்னிட்ஸ் அனுபவத்திற்கு அத்தகு நிலையைத் தராமல், அனுபவம் எண்ணங்களைத் தெளிவு படுத்தவும் வெளிப்படையாக்கவுமே பயன் படுகின்றது என்று கருதுகின்றார்.)

நம்முடைய அனுபவம் அகத்திலிருந்தே எழுவதாக இருப்பினும் புறப்பொருளைச் சுட்டும் உண்மை நிலையுடையது. எவ்வாறெனில் பொருள்களுக்குள் நிலவும் முன் அமைத்தப் பொருத்தத்தின்படி அனுபவம் பிரபஞ்சம் முழுவதையுமே பிரதி செய்வதாக உள்ளது. எனவே, புலனுக்கு முன்னெழுவதாகவும் பின்னெழுவதாகவும் உடன் பிறந்ததாகவும் அனுபவத்தை யொட்டியதாகவும் மனித அறிவு ஒருங்கே அமைந்துள்ளது.

## "இவ்வுலகமே இருக்கக்கூடிய அனைத்திலும் மிகச் சிறந்தது"

### ("THIS IS THE BEST OF ALL POSSIBLE WORLDS")

"இவ்வுலகமே இருக்கக் கூடிய அனைத்திலும் மிகச் சிறந்தது" என்று லைப்னிட்ஸ் கருதுகின்றார். கடவுளின் உள்ளத்தில் நிகழக் கூடியவை எண்ணற்றவை இருப்பனவாக நாம் கற்பனை செய்யலாம். எனினும் அவையாவும் உண்மையில் நிகழ்வதில்லை. மிகச் சிறந்தது அல்லது மிகப் பொருத்தமானதையே கடவுள் தேர்ந்தெடுக்கின்றார். ஒவ்வொரு பொருளும் தனிப்பட்ட நிலையில் சிறந்ததாகா விடினும் முழுமையைச் சார்ந்ததாகக் கருதும் பொழுது அது மிகச் சிறந்ததாக அல்லது பொருத்தமானதாக ஆகின்றது. எனவே 'இருக்கக் கூடியவற்றில் சிறந்தது' என்னும் நியதி போதியகாரண நியதியின் தனிவகையேயாகும். இந்த அடிப்படை, நடைமுறை உலகம் முழுவதிலும் ஆட்சிபுரிவதுடன் அதுவே எல்லாப் படைக்கப் பட்ட பொருள்களின் விளக்கமாகவும் ஆகின்றது. உலகம் இப்

போது இருக்கின்ற நிலையே யாவற்றிலும் மிகச் சிறந்ததாகும். ஏனெனில் அது கடவுளின் உள்ளத்தையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. தனித்தமுறையில் பலவற்றை இருக்கக் கூடியவை எனலாம். ஆயினும் அவை உடன் இருக்கக் கூடியவை அல்லது ஒத்து இருக்கக்கூடியவை அல்ல. பொருள் களின் நிகழ் நிலைக்கு ஒத்து இருக்கக்கூடிய பண்பே குறிப்பிட்ட ஒரு பொருளின் உண்மை நிலைக்குச் சான்ருகலாம் அல்லது போதிய காரணமாகலாம். இருக்கக்கூடிய (possible) எவற்றிற்கும் பொருள் உண்டு (meaning, essence); ஆனால் ஒத்து இருக்கக்கூடியதற்கே (compossible) உண்மை நிலையும் (existence) உண்டு. எனவே கட வுள் இவ்வுலகைத் தேர்ந்தெடுத்தார்.

மேலும், இப்போதுள்ள உலகத்தைக் காட்டிலும் நன்மை மிகுந் தது ஒன்று இருப்பின், கடவுளின் மெய்யறிவு அதனைத் தெளிவாக அறிவதுடன், அவருடைய திறனும் நற்பண்பும் அதனையே இயற்றி யிருக்கும். இதுவே நன்னம்பிக்கைக் கொள்கை (theory of optimism) என்று வழங்கப் படுகின்றது. இக்கொள்கையைப் பின்பற்றுபவருள் லைப்னிட்ஸ் தலைசிறந்தவராகக் கருதப்படுகின்ருர். "கடவுள் யாவற் றிற்கும் முதற்காரணம் ஆவர். எல்லையற்ற நற்பண்புடன் தலை சிறந்த மெய்யறிவும் கடவுளிடத்தில் இருப்பதால் அவர் மிகச் சிறந் ததைத் தேர்ந்தெடுப்பதில் தவறிழைக்க முடியாது. திறமையிலும் மெய்யறிவிலும் நற்பண்பிலும் கடவுள் குறைவிலா நிறைவுடையவர். இவ்வுலகம் இருக்கக் கூடியனவற்றுள், மிகச் சிறந்ததன்று எனின் கடவுள் இதனைத தேர்ந்தெடுத்திருக்க மாட்டார். ஏனெனில் அவர் தலைசிறந்த அறிவோடன்றி வேறு வகையில் செயலாற்ற மாட்டார். லைப்னிட்ஸின் திட்டத்தில் மிகவும் இன்றியமையாத இடம் பெற்ற போதிய காரண நியதியை ஆதாரமாகக் கொண்டு இந்த நன்னம் பிக்கை கொள்கை அமைந்துள்ளது.

கடவுள் தகுந்த காரணமின்றிச் செயலாற்றுபவரல்லர். மேலும் அவர் நிறைவுடையவராதலின், அவருடைய அறிவு மிகச்சிறந்த தையே தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லையானல் அவரால் படைக்கப்பட்டதை மேலும் நாம் செம்மையாக்க முடியும் என்னும் கருத்திற்கு இடம் உண்டாகிறது. எதைத் தேர்ந்தெடுக்க

வும் கடவுளுக்கு முழு உரிமை உண்டெனினும் அவர் காரணமின்றி எதையும் தேர்ந்தெடுப்பதில்லை. அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது காரணமற்றதன்று, அது நன்மையைப் பற்றிய அடிப்படையில் வரையறுக்கப்பட்டது. அதாவது ஒழுக்கத்தின் கட்டாயப்போக்கினுல் வரையறுக்கப்பட்டது. கடவுளும் அளவையியல் கட்டாயப்போக்குக்கு உட்பட்டு நடப்பவர். அதாவது, அடிப்படை எண்ணவியதிகள் (the fundamental laws of thought) அவரையும் கட்டுப் படுத்துகின்றன. பல்வேறுவகைப் பொருள்களும், இசைவும் எவ்வளவு அதிக அளவில் இருக்க முடியுமோ அவ்வளவில், அவை இவ்வுலகில் காணப்படுவதால், இதுவே யாவற்றிலும் மிகச் சிறந்ததான உலகம் என்று லைப்னிட்ஸ் முடிவு கட்டுகின்றுர்.

ஹெகல் (Hegel) லைப்னிட்ஸின் கொள்கையைக் குறைபாடுடையதாகவே கருதுகின்றுர். இவர் கருத்துப்படி லைப்னிட்ஸ் தம் கொள்கையைக் கூறிச்சென்றுரேயன்றி, அதனைத் தகுந்த முறையில் மெய்ப்பிக்கவில்லை. ஒருவன் கடைவீதிக்குச் சென்று ஒரு பொருளை வாங்குகிருன். அவன் வாங்குவது யாவற்றிலுமே சிறந்தது எனக்கொள்ள முடியாது. ஆனல் அது அங்குக் கிடைப்பனவற்றுள் சிறந்ததாக இருக்கலாம். கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சியுற அது போதிய காரணமாக இருக்கலாம். ஆனல் அப்பொருளே யாவற்றிலும் சிறந்தது எனக் கருதுவதற்குத் தகுந்த காரணமாகாது. இவ்வுலகம் நன்மையைப் பெற்றுள்ளது என்பதைத் தவிர வேறென்றும் கூறப்படவில்லை. ஆனல் உலகில் தீமையும் காணப்படுகின்றது. எனவே லைப்னிட்ஸின் கொள்கை தகுந்த காரணமின்றி உருவாகியுள்ளது. ஏனெனில் நிறைவுள்ளதிலிருந்து எல்லையுள்ள பொருள் எவ்வாறு எழுகின்றது, ஏன் எழுகின்றது என்பனவற்றைத் தெளிவுற விளக்க லைப்னிட்ஸ் முயலவில்லை என்பது குறையாகக் கருதப்படுகிறது.

இவ்வுலகில் தீமையும் இருக்கின்றது என்னும் கருத்து மேற்போக்காகக் காணும்போது தம் கொள்கையையே மறுப்பதாகத் தோன்றும் என்று லைப்னிட்ஸ் ஏற்றுக் கொள்ளுகின்றுர். ஆனல் பாவமும் துன்பமும் (pain) இவ்வுலகிலிருந்து நீக்கப்பட்டால், இவ்வுலகமே, இருக்கக்கூடிய உலகம் யாவற்றிலும் சிறந்ததாகக் கருத முடியாது என்றுஅவர் கருதுகிருர். எல்லாப்பொருள்களும் ஒன்றுக்

கொன்று உறவு கொண்டுள்ளன. மிகப்பல சமயங்களில் தீமையே நன்மைக்குக் காரணமாகின்றது. இனிப்பைவிடச் சிறிது கசப்பே பல சமயங்களில் மகிழ்ச்சி தருகிறது. நாம் தீமை என்று கருதுகின்ற எதனையும் தனிப்படத் தீமையானது என்று கூறிவிட முடியாது. மேலும் பெரிய தீமைகள் நிகழ்வதை அது தவிர்க்கக் கூடியதாக இருக்கலாம். அல்லது, ஒரு படைத்தலைவன காயமுமில்லை, வெற்றியுமில்லை என்பதை விடச் சிறிது காயமுற்றேனும் வெற்றியை விரும்புவது போலத் தீமையை அழிக்கக்கூடிய ஒரு நேரான நன்மையை அடைய அது காரணமாக இருக்கலாம்.

தீமையின் தலையாய காரணம் (primary cause) படைக்கப்பட்ட பொருள்களின் எல்லையுற்ற தன்மையே ஆகும். சடத் தன்மையுடன் கூடிய உயிர் வாழ்க்கையின் குறைபாடாக உள்ள இயக்கமற்ற நிலையை மாற்ற ஒவ்வொரு மொனடிலும் முயற்சி இருக்கிறது. இம் முயற்சி தன்னிலெழு உள்மாற்றத்தின் (appetition) விளைவாக இருக்கிறது. எனவே தீமை என்பது குறைநிலை (privation), குறைபாடு (deficiency) ஆகும். அதற்கு எத்தகைய நிமித்த காரணமும் இல்லை (efficient cause). உயர்ந்த நன்மை அடையும் பொருட்டே தீமை இடம் பெறுகிறது.

லைப்னிட்ஸ் தம்முடைய முழுமையான நன்னம்பிக்கைக் கொள்கையையும் இருக்கக் கூடிய யாவற்றிலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படும் இவ்வுலகில் இருக்கின்ற தீமையையும் இணைக்க முற்பட்டார். இவ்வுலகம் நிறைவுடையதன்று, குறைபாடுடையதேயாகும். மேலும் கடவுள் தம்முடைய இயல்புகளைக் குறைகளும் தடைகளும் இன்றி எல்லையுற்ற உருவங்களில்(finite forms) வெளிப்படுத்த முடியாது. அத்தகைய குறைபாடுகள் அடிப்படைத் தத்துவத் தீமைகளாகும் (metaphysical evils); அவை துன்பத்தையும் (pain), நோக்காட்டையும் (suffering)–பௌதிக நிலைத்தீமையையும் (physical evil ; பாவத்தையும் (sin)—அறநிலைத் தீமையையும் (moral evil) விளைவிக்கின்றன.

இந்த நோக்கில் லைப்னிட்ஸ் தீமைகளை மூவகையாகப் பாகுபடுத்திக் கூறுகின்றார். அவையாவன (1) அடிப்படைத் தத்துவத் தீமை அல்லது நிறைவின்மை (imperfection). இது படைக்கப்பட்ட

பொருள்களுக்கு இன்றியமையாததாகக்கடவுளால் சார்பின்றி இயற்றப்பட்டதாகும் (unconditionally willed). (2) பௌதிகத்தீமை, துன்பம் (pain) போன்றது. இது தண்டனை அல்லது மேலும் மிகுந்த நன்மை அடைவதற்குக் கருவியாகக் கடவுளால் சார்புடன் இயற்றப்பட்டதாகும் (conditionally willed). (3) அறநிலைத் தீமை, (இதனை விளக்க லைப்னிட்ஸ் பலவாறு முயன்றார்) இது கடவுளுடைய திருவுளம் அன்று. ஆனால் அவர் விலக்கியதுமன்று (permitted not willed by God). மேலும், இதனை பின்வருமாறு லைப்னிட்ஸ் விளக்கலுற்றார். (நன்மையுடன்) தீமையையும் கொண்ட உலகம் இருக்கக் கூடிய மற்ற உலகங்களைவிட மேலானது என்று முன்பாகவே கடவுளுக்குத் தெரியுமாதலால் இது அனுமதிக்கப்பட்ட தீமையாகும். ஆனால் இது போதிய விளக்கமாகாது என்பதை லைப்னிட்ஸ் உணர்ந்தார். ஆகையால் தீமையுடன் கூடிய உலகம் இருக்கக் கூடிய பிற உலகங்களைவிட மேலானது என்பது முன்னரே கடவுளுக்குத் தெரியுமாதலால் தீமைக்கு அவர் இடம் கொடுக்கிறார் என்று லைப்னிட்ஸ் வற்புறுத்திக் கூறுகிறார். தீமைக்குப் பிற வகைளிலும் அவர் விளக்கம் கூறுகிறார். அவையாவன :—

(1) நன்மைக்கு எதிர்ப்புலமாகத் தீமை அமைவதால் அது நன்மையைப் பெருக்கிக் காட்டுகிறது.

(2) தம் நூல்களின் சில இடங்களில் அவர், அறநிலைத் தீமையை வெறும் எதிர் மறை நிலையாகக் கொண்டு அதனை அடிப்படைத் தத்துவத் தீமையோடு இணைத்துப் பேசுகிறார்.

(3) தீச்செயல்கள் மனிதர்களால் ஏற்படுவன. செயல் ஆற்றல் இறைவனிடத்தினின்றும் எழுவது. செயல் ஆற்றல் நன்மையானது நன்மைக்குப் பின்னணி எதிர்ப்பண்பாகத் தீமை அமைகிறது. படங்களில் காணப்பெறும் நிழற்பகுதிகள் ஒளிப்பகுதிகளை மிகைப்படுத்திக் காட்டுகின்றன. மேல்நாட்டு இசையில் முரண் போக்கான சில கூறுகளும் (elements of discord) இசையின் தரத்தை உயர்த்துகின்றன.

இவ்வாறே நன்மையின் தரத்தை மிகுதியாக்கவும் உயர்த்தவும் தீமை உதவுகின்றது. மேலும் தீமையுடன் நன்மை போராடுவதனால் உரம் பெறுகின்றது. தீமை நம்மை நற்செயலுக்கு உந்துகின்ற

தூண்டுகோலாகும். பல்வேறு வகைகள் இல்லாமல் ஒரே தன்மை வாய்ந்த உலகம் முரண்பாடுகளையும் வேறுபாடுகளையும் இசைவுறப் பெற்றுள்ள உலகைவிடக் குறைந்த நிறைவுடையதாகும். கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்திலும்உள்ள நேர்நிலைப் பண்புகளுக்கும் அவரே காரணமானவர். ஆனால் அவற்றின் குறைபாடுகளுக்குக் கடவுளைக் காரணமாகக் கருதமுடியாது. தீமையை விளக்குவதற்கு லைப்னிட்ஸ் உவமைகள் கூறுவதுடன் அமைந்து விடுகிறார். கடவுளின் மெய்யறிவுக்கேற்ப இயற்கை நியதிகள் மேலான சிறப்புடையவை என்பதை நாம் ஒத்துக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் அவைகளை அவ்வாறு கருதுவதற்குக் காரணம் தரப்படவில்லை. கடவுள் அவ்வாறே அமைத்தார் என்று கூறுவது கடவுளிடம் கொண்டுள்ள பற்றைவெளிப்படுத்துகின்றதேயன்றித் தத்துவ விளக்கமாகக் கருதக் கூடியதன்று.

## கடவுள்

## (GOD)

மொனடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து உறுப்புள்ள உயிருளியின் பகுதிகளைப் போன்று இயங்குகின்றன. எனவே இப்பிரபஞ்சத்திலுள்ள இசைவு முழுமையானது, கடவுளால் முன்னதாகவே அமைக்கப்பட்டது.

இயற்கையில் நியதி, ஒழுங்கு, ஒரேமாதிரி இயங்குதல் (uniformity) இவை இருப்பதனால் ஒவ்வொன்றையும் பொறித் தன்மையுள்ளதை விளக்குவதைப்போன்று விளக்கலாம். ஆனால் இயற்கையின் முழுமையின் அமைப்பு (the plan of the whole) ஓர் உயர்ந்த அறிவைச் சுட்டுகின்றது. கடவுளே எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முடிவான காரணமாவர் (ultimate cause). "பொறி இயலின் பிறப்பிடத்தை அடிப்படைத் தத்துவத்தில் காணவேண்டும்" என்பதை லைப்னிட்ஸ் தம் திட்டத்தின் குறிக்கோளாக வைத்துக் கொண்டார்.

இயற்கையின் நியதிகள், இயக்கத்தின் நியதிகள் இவைகளின் கட்டாயத் தன்மையை நாம் சான்றுகொண்டு மெய்ப்பிக்க இயலாது.

அவை அளவைஇயல், கணித, வடிவக் கணித நியதிகளைப் போன்றவையல்ல. அவை கடவுளின் மெய்யறிவையே அடிப்படையாகக் கொண்டவை. கடவுளின் திருவுளப்படி அவை தேர்ந்தெடுக்கப்பட்டவையாகும். எனவே இவ்வுலகத்தின் உண்மை கடவுளின் திருவுளத்தைக் சார்ந்துள்ளது. கடவுள், நிமித்த காரணங்களைக் கருவிகளாகப் பயன்படுத்தும் முடிவான காரணமானவர். (God is the final cause who uses efficient causes as means).

இயற்கையைப் பற்றி இவ்வாறு விளக்கியதனல் பொறி நோக்கையும் (mechanism) நோக்க அமைப்புக் கொள்கையையும் ஒன்ருக இணைக்க முடிகின்றது. எத்தகைய நோக்க அமைப்பும் இன்றி இயற்கையை விளக்க முடியும். ஆனல், அத்தகைய பொறி நோக்கு விளக்கம் கடவுளுக்கே வழிகோலுகின்றது. ஏனெனில் பௌதிகம், பொறி இயல், முதலியவைகளின் பொதுமையான அடிப்படைகளைக் கடவுளின் திருவுளத்தைக் கொள்ளாமல் விளக்க முடியாது. இவ்வாறு சமயமும் அறிவும் இசைவுபடுத்தப் படுகின்றன. மேலும் இயற்கை உலகிற்கும் (physical kingdom of nature) அருள் உலகிற்கும் (moral kingdom of grace), அதாவது அறிவுள்ள எல்லா ஆன்மாக்களுக்கும் கடவுளுக்கும் இடையே இசைவு உள்ளது. ஆன்மாக்கள் தத்தமளவில் கடவுளின் சாயல்களாக உள்ளன. தன்மையில் மனித அறிவு கடவுளின் அறிவைப்போல் இருப்பினும் அளவில் வேறுபடுகின்றது. மனிதனின் நோக்கம் (குறிக்கோள்) கடவுளின் நோக்கத்துடன் ஒத்திருக்கின்றது. எனவே உயிர்களின் அரசு அல்லது ஆன்மாக்களின் இணக்கம் இருக்கக் காண்கிருேம். இயற்கையுலகிற்கு மாருக அறஉலகு (இதனை லைப்னிட்ஸ் அருள் உலகு என்று வழங்குகிருர்) உள்ளது. ஆயினும் பொறி இயல் அமைப்பு உடைய இயற்கை உலகைப் படைத்த கடவுளுக்கும் ஆன்மாக்களின் மன்னராக விளங்கும் கடவுளுக்கும் இசைவு உண்டு (அதாவது, கடவுள் ஒருவரே இரண்டு உலகிற்கும் காரணமாவர்.)

கடவுள் உண்மை பலவகையாக மெய்ப்பிக்கப்படுகின்றது. (1) மொனடுகள் மிகத் தாழ்ந்த நிலையிலிருந்து படிப்படியாக மிக உயர்ந்த நிலை வரை உள்ளதாகக் கண்டோம். இங்கே தொடர்நிலை நியதி உளது. எனவே இந்நியதியின் முடிவில் யாவற்றிற்கும்

உயர்ந்த மொனடு வேண்டற்பாலதாகிறது. அத்தகைய மொனடு கடவுளேயாகும். (2) லைப்னிட்ஸ் போதிய காரண நியதியை ஏற்றுக் கொண்டதோடு, அதனை இன்றியமையாததாகவும் கருதினர். அக் கருத்துப்படி, மொனடுகளின் உண்மைக்குப் போதிய காரணம் இருக்க வேண்டும். கடவுளே அக்காரணமானவர். இதுவே லைப்னிட்ஸ் தரும் காரண காரிய அல்லது பிரபஞ்ச இயல் காரண மென்று கருதப்படுகின்றது. (3) இயற்கையில் நாம் ஒழுங்கையும் இசைவையும் காண்கின்றோம். இவ்வமைப்புக்குக் காரணமானவர் அல்லது இவ்விசைவினை அமைத்தவர் ஒருவர் இருக்கவேண்டும். அவரே கடவுள். இது பௌதிக—இறையியல் சான்று (physico-theological proof) என்று வழங்கப்படுகின்றது. அளவையியல், வடிவ கணிதம் முதலியவைகளில் காணப்படும் என்றுமுள கட்டாயத் தன்மையுள்ள உண்மைகள் அவைகளின் இருப்பிடமாக என்றுமுள அறிவாற்றலை முன்னதாக வேண்டி நிற்கின்றன.

கடவுள் யாவற்றிற்கும் உயர்ந்த மொனடு, மொனடுகளுக்கெல்லாம் மொனடு (monas monadum). மொனடு என்ற வகையில் கடவுள் ஒரு தனி ஆள் ஆவர் (God as a monad is an individual person) ஆனல் அவர் எல்லா மொனடுகளையும் கடந்து நிற்பவர். அவர் இயற்கை யிகந்தவர் (super-natural) அறிவுக்குமேற்பட்ட (super-rational) நிறைவான (most perfect) உண்மையான (most real) பொருள் (being) ஆவர். மனிதனல் அவரைப்பற்றி முழுமையான தெளிவான எண்ணம்பெறமுடியாது. ஏனெனில் கடவுள் யாவற்றிலும் உயர்ந்த மொனடு ஆக இருக்க, மனிதன் குறைபாடு அல்லது எல்லையுற்ற மொனடு ஆக உளன். ஒரு முழுமையான உள்ளமே மற்றொரு முழுமையான உள்ளத்தை உணர முடியும். மொனடுகள் ஓரளவில் பெற்றிருக்கும் பண்புகளை மிக உயர்ந்த நிலையில் வைத்துப்பெருக்கி எல்லா வல்லமையும் எங்கும் உளதாம் தன்மையும் முழுமையான நன்மையும்—இன்ன பிற பண்புகளையும் கடவுளிடம் இருப்பனவாக மக்கள் காண்கின்றனர்கள். இவ்வகையிலேயே நாம் கடவுளைப் பற்றிய எண்ணத்தை அடைகின்றோம். அவர் அறிவுக்கு மேற்பட்டவர் (super-rational) ஆனல் அறிவுக்கு எதிரானவர் (contra-rational) அல்லர். மேலும் மனிதன் கடவுளைப்பற்றித் தெளிவற்ற, குழப்ப

மான எண்ணங்களையும் கடவுளை அடைய ஒரு வகையான அவா அல்லது முயற்சியும் (a kind of longing or striving for God) உடையவனுயிருக்கிறான். எனவே கடவுளைப்பற்றிய அறிவின் தெளிவில் பல நிலைகள் இருப்பதற்கேற்ப சமயத்திலும் பல நிலைகள் உள்ளன. கடவுள் நிறைவுடையவராதலின், மற்ற மொனடுகள் மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் உட்படுவதுபோல, அவர் உட்படுவதில்லை. அவருடைய அறிவும் முழுமையானது. அவர் யாவற்றையும் முழுமையாக ஒரே பார்வையில் காணவல்லவர் (at a glance). அவர் ஒரு திட்டத்திற்கேற்ப இதனையே இருக்கக் கூடிய யாவற்றிலும் மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துப் படைத்திருக்கிறார்.

## திறனாய்வு
## CRITICAL ESTIMATE

லைப்னிட்ஸின் தத்துவத் திட்டத்திலுள்ள சில கருத்துக்கள் குறைபாடுடையனவாகக் கருதப்பட்டன. அவற்றில் குறிப்பாகச் சிலவற்றை இங்கு ஆராய்வோம்.

லைப்னிட்ஸுக்கும பின் தோன்றிய சில தத்துவஅறிஞர்கள்*, அவருடைய மொனடு பற்றிய கொள்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்றே கருதினர். அவருடைய மொனடு பற்றிய கருத்தும் முன்னமைத்த பொருத்தக் கொள்கையும் பொருத்தமாக இல்லை. ஒவ்வொரு மொனடும் புலனறிவு பெற்றிருப்பது உண்மையாயின், உயிர்களுக்கிடையே இசைவு இருந்தாக வேண்டும் என்று லைப்னிட்ஸ் கருதியிருக்கவேண்டாம். ஆனால் அதற்கு மாறாக, ஒவ்வொரு ஆன்மாவும் உலகம் முழுவதையும் கடவுளையும் பிரதி செய்கின்றது என்னும் கருத்தைத் தெளிவாக உணர்ந்து அதனை விரிவாக்கியிருப்பாராயின் அவர் தம்முடைய மொனடுக் கொள்கையை கைவிட்டிருப்பார். ஸ்பினோஸாவின் கொள்கை அல்லது பிற்காலத்தில் பிக்டே (Fichte) உருவாக்கிய கொள்கை போன்ற ஒன்றாக அவருடைய மொனடு கொள்கை மாறுதல் அடைந்து நிறைவுற்றிருக்கும்.

லைப்னிட்ஸினுடைய முன்னமைத்த பொருத்த கொள்கையும் குறையுடையதாகக் கருதப்படுகின்றது. மொனடுகள் பல்கணி

அற்றவையாயின் எவ்வாறு இசைவுடன் அவை செயலாற்ற முடியும்? மேலும் அவர் உடனிருத்தல் (co-existence), ஒன்றினை ஒன்று செயல் படுத்தல் என்பவற்றை முதலிலேயே ஏற்றுக் கொள்கிறார். அவர் எதிரான கொள்கைகளை இணைப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டு கின்றார். ஆனால் அம்முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. தம் மதிநுட்பத்தைப் புலப்படுத்தும் பாகுபாடுகள் செய்வதில் அவர் திளைக்கின்றாரேயன்றி, அப்பாகுபாடுகள் ஒடுங்கக்கூடிய மேலான ஒருமைப்பாட்டினை (a higher unity) அவரால் அடைய முடியவில்லை உண்மை நிலையையும் கருத்து நிலையையும் எல்லையற்றதையும் எல்லையுற்றதையும் நிமித்த காரணத்தையும் முடிவான காரணத்தை யும் முற்றொருமை நியதியையும் போதிய காரணநியதியையும் எங்குமே அவரால் இணைக்க முடியவில்லை.

லைப்னிட்ஸினுடைய திட்டத்தில் கடவுளின் நிலை தெளிவாகக் கூறப்பட வில்லை என்று சிலர் கருதுகின்றனர். ஏனெனில் அவர் கடவுளைத் தூய புலனறிவும் எனவே தூய செயலாற்றலும் (pure perception and hence pure actvity) உள்ள மொனடு என்றும் மொனடு களுக்கெல்லாம் மொனடு என்றும் (monas monadum) கடவுளே முன்னமைத்த பொருத்தத்திற்குக் காரணமானவர் என்றும் கூறு கின்றார். கடவுளையே இவ்வுலகத்திற்கும் அதிலுள்ள இசைவுக்கும் காரணமாகக் கருதினால், அவரையும் ஒரு மொனடாகக் கருத முடி யாது. ஏனெனில் அவரே மற்ற மொனடுகளைப் படைத்தவராகின் றார். மேலும் மற்ற மொனடுகள் புலனறிவும் தன்னிலெழு உள் மாற்றமும் பெற்றுள்ளவையேயன்றி படைக்கும் திறன் பெற்றிருக்க வில்லை. எனவே லைப்னிட்ஸின் திட்டத்தில் கடவுளின் நிலை முரணின் றித் தெளிவாகக் கூறப்படவில்லை. இதில் நாம் லைப்னிட்ஸின் உள்ளத்தில், தத்துவத்திற்கும் இறைஇயலுக்குமிடையே எழும் போராட்டத்தையும் முடிவில் இறையியலே வெற்றி பெறுவதினால் அவர் கடவுளுக்குத் தனிச்சிறப்பையும் தொழிலையும் அளிப்பதை யும் காண்கின்றோம். லைப்னிட்ஸின் கொள்கையின் தனிச்சிறப்புக்கள் அதன் சமய உயர் நோக்கமும் பரம்பொருள்கொள்கைக்கு மாறா யிருத்தலுமாகும்.

மனிதனுடைய தனித்தன்மை ஸ்பினோஸாவின் திட்டத்தில்

பொதுமையில் மறைந்துவிடுவதால் இத்தனித்தன்மையைப் பாது காக்கும் உறுதியுடனே லைப்னிட்ஸ் தம் திட்டத்தைத் தொடங்கி ஞர். தனிப்பட்ட பொருள்கள் (particular things) அல்லது புறநிலைத் தோற்றப் பொருள்கள் தெளிவான அறிவு எழும்பொழுது மறை கின்றன. உண்மையான பொருள் அல்லது பொருள்களே இறுதி யானவை. ஆனல் லைப்னிட்ஸ் அடிப்படையான உள்பொருள் ஒன்றன்று, பல, என்று கருதுவதனுலேயே, அவர் உலகிலுள்ள வேறுபாடுகளுக்குத் தகுந்த விளக்கம் தந்தார் எனபது பெறப்பட வில்லை. எனவே வேறுபாடுகள் உள்ளீடற்ற ஒன்றில் அல்லது பல வற்றில் விழுங்கப் படுகின்றன. லைப்னிட்ஸ் மொனடுகளைப்பற்றி, அவை ஓயாது செயலாற்றுபவை என்று கூறுவதையே ஸ்பினேஸா தாம் பேசும் ஒரே பொருளைப்பற்றிக் கூறுகிருர். லைப்னிட்ஸ் ஸ்பினேஸாவின் பொதுமைக் கொள்கையை (universalism) எதிர்த் தார் எனினும் அவரால் தனித்தன்மைக் கொள்கையைக் கடக்க இயலவில்லை.

ஸ்பினேஸா இவ்வுலகை, தனியன்களே இல்லாதவாறு கருதி ஞல், லைப்னிட்ஸ் இவ்வுலகில் பொதுமையே இல்லாதவாறு கருது கின்ருர். பொதுமையை வரம்பின்றி ஸ்பினேஸா தம் திட்டத்தில் வற்புறுத்துகிருரெனின் லைப்னிட்ஸ் தனிமையை வரம்பின்றித் தம் திட்டத்தில் வற்புறுத்துகின்ருர். " ஸ்பினேஸா பன்மையை ஒருமை யில் ஒடுக்குகிருர். லைப்னிட்ஸ் பன்மையை உயர்த்துகிருர். ஆனல் ஒருமையை இழந்துவிடுகிருர்."

லைப்னிட்ஸ் ஒன்றுக்கொன்று எதிராக உள்ள நோக்கங்களைத் தம்முடைய தத்துவத்திட்டத்தில் இணைக்க முயன்ருர். அதுபற்றியே அவர் 'நன்மை திரட்டுங்கொள்கையினர்' (eclectic) என்று வழங்கப் பட்டார்.

அவருடைய நன்மை திரட்டும் கொள்கை அடிப்படைத்தத்து வத்தில் காணப்படுகின்றது. எவ்வாறெனின், அவர் மொனடுகளைப் பற்றி விளக்கும்போது, அவை எண்ணிறந்தவை என்றும் தனித் தன்மை பெற்றவை என்றும் கூறுவதால் பன்மைக்கொள்கையே பின்பற்றுகிருர் எனலாம். எனினும் இத்தனித்தன்மை பெற்ற மொனடுகளனைத்தையும் இணைக்கும் அவாவும் அவர் உள்ளத்தில்

இருந்திருக்கவேண்டும் என்பது, அவருடைய முன்னமைத்தப் பொருத்தக் கொள்கையாலும் அதற்குக் கடவுளே காரணம் என்று கருதுவதாலும் தெளிவாகின்றது. எனவே ஒருமைக்கொள்கையையும் பன்மைக் கொள்கையையும் இணைக்க லைப்னிட்ஸ் முயன்றார் என்பது பெறப்படும்.

இயற்கையைப் பற்றி விளக்கும் போதும் அவருடைய நன்மை திரட்டும் நோக்கம் காணப்படுகின்றது. இயற்கையைப் பற்றி வழங்கப் படுகின்ற பொறிநோக்கத் தன்மையுள்ள (mechanical) விளக்கத்தையும் நோக்க அமைப்பு (teleological) விளக்கத்தையும் லைப்னிட்ஸ் இணைக்க முயன்றார். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாகவோ அல்லது போட்டியிடுவதாகவோ அவர் கருதாமல் அவற்றை ஒரே பொருளின் இருதன்மைகளை விளக்குவதாகவே கருதினார். விஞ்ஞான அடிப்படைகள், விஞ்ஞானத்துறையில் முற்றிலும் உண்மையானவையே. எனினும் அவை முழுமையானவையல்ல ஏனெனில், உலக அமைப்பு ஒரு மேலான அறிவைச் சுட்டுகின்றது. அத்தகைய அறிவு கடவுளே என்று லைப்னிட்ஸ் இறைஇயல் விளக்கத்தை அளிக்கின்றார். எனவே இவ்விளக்கத்தில் லைப்னிட்ஸ் விஞ்ஞானத்தையும் இறைஇயலையும் இணைக்கமுயல்வதையும் காண்கின்றோம்.

அவருடைய அறிவளவை இயலிலும் எதிரான கொள்கைகளை இணைக்கும் நோக்கத்தைக் காண்கின்றோம். லைப்னிட்ஸ் உடன் பிறந்த எண்ணங்களை ஏற்றுக்கொள்வதுடன், உண்மையான அறிவு உள்ளத்திலிருந்தே எழுகின்றது என்றும் அத்தகைய அறிவு புறத்திலிருந்து எழுகின்றது என்பது ஒரு கட்டுக்கதையே என்றும் எண்ணினார். எனினும் அவர், அனுபவத்தின் தேவையையும் குறிப்பிடுகின்றார். அனுபவம் எண்ணங்களை உண்டாக்க முடியாவிடினும் உள்ளத்தில் உறையும் எண்ணங்களையும் அடிப்படைகளையும் தெளிவுபடுத்தவும் வெளிப்படையாக்கவும் வேண்டற்பாலது என்று தெளிவுபடுத்துகின்றார். லைப்னிட்ஸ் அறிவு முதற்கொள்கையினராயிருந்தும் அனுபவத்தின் தேவையையும் வற்புறுத்துவதால் அவர் அறிவு முதற்கொள்கையையும் புலன்வழிக் கொள்கையையும் இணைக்க முயல்வதாகக் கருதலாம்.

மேலும் லைப்னிட்ஸ் தத்துவத்தில் மட்டிலும் இத்தகைய நோக்கங்கொண்டிராமல் சமயத்திலும் இதனை மேற்கொண்டார். கத்தோலிக்கக் கொள்கைக்கும் பிராடஸ்டண்ட் கொள்கைக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை நீக்கி அவற்றை இசைவுபடுத்த முயன்றார். அரசியல் வாழ்க்கையிலும் அவர் இந்நோக்கத்தையே மேற்கொண்டார். எனவே அவரை 'நன்மை திரட்டுங்கொள்கையினர்' என்று வழங்குவது சாலப்பொருந்தும்.

லைப்னிட்ஸின் தத்துவத் திட்டத்தில் பல குறைகள் உள என்று சிலர் கருதினாலும் அது, தத்துவ வளர்ச்சிக்குப் பல முதன்மையான கருத்துக்களையும் வழங்கிஉள்ளது. பின்வந்த பல பன்மைக் கொள்கைகளுக்கு ஒரு வழிகாட்டியாக அது அமைந்துள்ளது. இயற்கை உயிர்த்தன்மை பெற்றுள்ளது; சடத்திற்கும் இயக்கத்திற்கும் ஆற்றலே (force) அடிப்படையானது என்னும் கருத்துக்கள், இக்காலப் பௌதிகவியலில் சிறப்புடன் விளங்கும் 'ஆற்றலின் அழிவின்மை நியதி' (law of conservation and indestructibiity of energy) என்னும் கொள்கையின் கருவூலமாக விளங்குகின்றன. குறிப்பிடத்தக்க வகையில் பின்னெழுந்த கருத்துக்கொள்கைகளுக்கு அடிகோலியதாக லைப்னிட்ஸின் தத்துவத்தைக் கொள்ளலாம். சிறப்பாக இம்மானுவெல் காண்ட் (Immanuel Kant) என்னும் தத்துவ அறிஞர் உருவாக்கிய திட்டத்தில் லைப்னிட்ஸின் அடிப்படைக் கருத்துக்கள் சில நிழலிடுவதைக் காணலாம். எனவே, ஜெர்மானியக் கருத்துக்கொள்கையின் தந்தை (Father of German Idealism) என்று லைப்னிட்ஸ் கருதப்பெறுகிறார்.

# கலைச்சொற்கள் அகராதி

## ஆங்கிலம் — தமிழ்

### A

Absolute ... பரம்பொருள், பூரணமான, சார்பற்ற
Absolute Idealism ... பரம கருத்துக் கொள்கை
Absolutism ... பரம்பொருள் கொள்கை
Abstract ... அருவமான, நுட்பமான கருத்துப் பொருள்
Abstract Ideas ... வெற்று நிலைக் கருத்துக்கள்
Acosmist ... பிரபஞ்சமில் கொள்கையினர்
Active ... செய்நிலை, செயலுள்ள
Actual ... நிகழ்நிலை
Age-Ancient ... பண்டைக்காலம்
Age-Mediaeval ... இடைக்காலம்
Age-Modern ... இக்காலம்
Agnostic ... அறியொணாக் கொள்கையினர்
Agnosticism ... அறியொணாக் கொள்கை
Algebra ... இயற்கணிதம்
Almighty ... எல்லாம் வல்லவர்
"All determination is negation" ... "வரையறவு செய்வதெல்லாம் இன்மை செய்வதாகும்"
Altruism ... பிறர் நலக்கொள்கை
Analogy ... ஒப்பு, உவமை
Analytic method ... பகுமுறை
A priori ... புலன் சார்பற்ற, புலனுக்கு முன் எழு
A priori knowledge ... புலனுக்கு முன்னெழு அறிவு, புலன் சார்பற்ற அறிவு
A priori truths ... புலன் சார்பற்ற உண்மைகள்
A posteriori ... புலன் சார்வு
A posteriori knowledge ... புலன் சார்வறிவு
A posteriori truths ... புலன் சார் உண்மைகள்
Appearance ... தோற்றம்
Appearance and reality ... தோற்றமும் உள்பொருளும்
Apperception ... உட்புலனுணர்ச்சி, உட்புலனறிவு
Appetition ... தன்னிலெழு உள்மாற்றம்
Arbitrary ... தற்போக்கான
Archetypes ... மூலமாதிரிகள், மூலஉரு
Atheism ... இறையில் கொள்கை
Atheist ... இறையில் கொள்கையினர்
Atom ... அணு
Atomism ... அணுக் கொள்கை

| | | |
|---|---|---|
| Atomist | ... | அணுக் கொள்கையினர் |
| Attraction | ... | கவர்ச்சி |
| Attribute | ... | இயல்பு, தன்மை |
| Automata | ... | தானியங்கிகள் |
| Axiom | ... | தற்புல உண்மை |

## B

| | | |
|---|---|---|
| Beauty | ... | அழகு, எழில் |
| Becoming | ... | ஆக்கநிலை, மாறுதலுறுதல் |
| Being | ... | இருந்தபடி இருத்தல் |
| Biology | ... | உயிரியல் |
| Body and mind | ... | உடலும் உள்ளமும் |

## C

| | | |
|---|---|---|
| Calculus | ... | கலனம் |
| Canons | ... | நியதிகள் |
| Category | .... | பதார்த்தம் |
| Cause | ... | காரணம் |
| Cause, efficient | ... | நிமித்த காரணம் |
| Cause, final | ... | முடிவு நிலையாய காரணம் |
| Cause, first | ... | தொடக்கநிலை காரணம், ஆதி காரணம் |
| Causal relation | ... | காரண காரியத் தொடர்பு |
| Causal and temporal sequence | ... | காரண காரிய முற்பிற்பாடுகள் |
| Certitude | ... | உறுதித் தன்மை |
| Church | ... | கிருத்தவத் திருச்சபை |
| "Cogito Ergo Sum" | ... | "உள்ளுகின்றேன் ஆதலால் உள்ளேன்" |
| Cognition | ... | அறிவு நிலை |
| Coherence | ... | இயைந்த பொருத்தம் |
| Coherence theory | ... | இயைந்த பொருத்தக் கொள்கை |
| Common sense view | ... | பொது அறிவு நோக்கு |
| Concept | ... | கருத்துப் பொருள் |
| Conception | ... | கருத்து நிலை |
| Concrete | ... | காட்சிப் பொருள் |
| Concrete system | ... | காட்சிப் பொருண்மையான திட்டம் |
| Consciousness | .. | நனவு நிலை |
| Consciousness, self | ... | தன் நனவு |
| Consistency | ... | முரணின்மை |
| Consistency (logical) | ... | அளவை நிலை முரணின்மை |
| Constancy | ... | மாறுநிலை, நிலைபேறு |
| Contiguity | ... | அண்மை |
| Corporeal | ... | உடல்சார்ந்த பொருள் |
| Corpuscles | ... | கார்பஸில்ஸ் |
| Cosmology | ... | பிரபஞ்ச இயல் |

Cosmological proof ... பிரபஞ்ச இயல் காரணம்
Creation ... படைப்பு

## D

Deduce ... உய்த்துணர்
Deductive method ... பகுமுறை
Deductive reason ... உயத்துணர்வறிவு
Definite ... திட்டமான
Definition ... வரை யறைவு
Degree of belief ... நம்பிக்கை அளவு
Deity ... தெய்வம்
Demonstrative method ... அளவை நெறிமுறை
Destiny ... ஊழ்
Detachment ... பற்றின்மை
Determination ... வரையறைவு
•Determinism .... வரையறை பட்டது என்னும் கொள்கை
Dialectic ... முரண்நிலை ஆய்வு
Differentia ... பிரிவுறுத்தும் பண்பு
Differential calculus ... நுண்வகைக் கலனம்
Discursive ... காண்பான் காணப்படுபொருள் எனப் பகுத்தாராய்வு
Distinct ... தனித்தன்மையுள்ள
Distortion ... உரு திரிபு
Divine Revelation ... இறைவழி வெளிப்பாடு
Doubt ... ஐயம்
Doubter ... ஐயுறுவான்
Doctrine ... கோட்பாடு, கொள்கை
Dogma ... மதம்
Duality ... இருமை
Dualism ... இருமைக் கொள்கை
Dynamic ... இயங்கு, இயக்கப் போக்கு

## E

Electic ... நன்மை திரட்டும்
Electicism ... நன்மை திரட்டுக் கொள்கை
Ego ... அகம், நான்
Egoism ... தன் முனைப்புக் கொள்கை
Egoistic ... தன் முனைப்பான
Elements ... தனிமங்கள், மூலப் பொருள்கள்
Empiricism ... புலன் நுகர்ச்சிக் கொள்கை, புலன் வழிக் கொள்கை, அனுபவ வழிக் கொள்கை
Empiricists ... புலன் நுகர்ச்சிக் கொள்கையினர், புலன் வழிக் கொள்கையினர், அனுபவ வழிக் கொள்கையினர்

Energy ... ஆற்றல்
Energy (conservation of)... ஆற்றலின் அழிவின்மை
Epicureans ... எபிக்யூரஸ் கொள்கையினர்
Epigenesis ... பிற்தோற்ற வளர்ச்சி
Epistemology ... அறிவளவை இயல்
Essence ... சத்து, சாறு
Eternal ... என்றுமுள
Eternal form ... என்றுமுள உருவம்
Eternity ... என்று முண்மை
Ethics ... அற இயல்
Evil ... தீமை
Evil, metaphysical ... அடிப்படைத் தத்துவ நிலைத்தீமை
Evil, moral ... அறநிலைத் தீமை
Evil, physical ... பௌதிக நிலைத்தீமை
Evolution ... பரிணமம்
Existence ... இருத்தல்
Experience ... அனுபவம்
Experience, sense ... புலனனுபவம், புலனுணர்ச்சி
Experience, intuitive ... உள்ளுணர்வனுபவம்
Experiment ... செய்க்காட்சி
Experimental method ... செய்க்காட்சி முறை
External world ... புற உலகம்
Extension ... பரப்புடைமை
Extensive ... பொருட்சுட்டு

## F

Faith ... நம்பிக்கை
Fallacy ... போலி
Fate ... ஊழ்
Feelings ... உணர்ச்சிகள்
Finite ... எல்லையுள்ள, வரம்புள்ள
First principles ... மூல தத்துவங்கள், மூல அடிப்படைகள்
Force ... ஆற்றல்
Freedom ... சுதந்திரப் பான்மை
Free thought ... தடையிலா எண்ணம்
Free will ... செயல் உரிமை
Function ... செயல் பண்பு

## G

General ... சாமானிய
Genus ... பேரினம், முதல் இனம்
Geometry ... வடிவ கணிதம்
Goodness ... நன்மை
Grace ... திருவருள்

## H

| | | |
|---|---|---|
| Harmony | ... | இசைவு |
| Harmony (Pre-established) | ... | முன்னமைத்த பொருத்தம் |
| Hedonism | ... | மகிழ்ச்சிக் கொள்கை |
| Homogeneous | ... | ஒரே தன்மை |
| Humanism | ... | மக்கண்மைக் கொள்கை |
| Hylozoism | ... | சடஆவி ஒருநிலைக் கொள்கை |

## I

| | | |
|---|---|---|
| Idea | ... | கருத்து |
| Ideal | ... | குறிக்கோள் |
| Idealism | ... | கருத்துக் கொள்கை |
| Idealist | ... | கருத்துக் கொள்கையினர் |
| Identity | ... | முற்றொருமை |
| Illusion | ... | திரிபுக்காட்சி |
| Imagination | ... | கற்பனை |
| Immanence | ... | அகனமர்ந்த |
| Immanentist | ... | அகனமர்ந்த கொள்கையினர் |
| Immanent principles | ... | அகனமர்ந்த அடிப்படைகள் |
| Immaterial | ... | சடநிலையல்லா |
| Immediate | ... | உடனடியான |
| Immediate, experience | ... | உடனடி அனுபவம் |
| Immediate, knowledge | ... | உடனடி அறிவு |
| Immediate, awareness | ... | உடனடி நனவு |
| Immortal | ... | அழியா |
| Immortality | ... | அழியாமை |
| Immutable | ... | மாறுதலற்றது |
| Impression | ... | (புறப்பொருள்) உட்பதிவு |
| Incasement theory | ... | உள்ளீட்டுக் கொள்கை |
| Inconceivable | ... | கருதொணு |
| Independent | ... | புறச்சார்பற்ற, தன்னுரிமை, தற்சார்பு |
| Indiscernibles | ... | பிரித்தரியவாராதவை |
| Individual | ... | தனி நிலையான, தனியன் |
| Individualism | ... | தனிநிலைக் கொள்கை |
| Individuality | ... | தனித்தன்மை |
| Indivisible | ... | பிரிவொணு |
| Induction | ... | தொகுப்பு வழியளவை |
| Inductive method | ... | தொகுப்பு வழிமுறை |
| Inert | ... | இயங்காத் தன்மை |
| Infallible | ... | தவறிலா |
| Infinite | ... | வரம்பற்ற, எல்லையற்ற |
| Infinity | ... | எல்லையிலாமை |
| Influxus physicus | ... | பௌதிக உட்செலவுக் கொள்கை |

| | | |
|---|---|---|
| Inherent | ... | உள்ளார்ந்த, உள்ளியைந்த |
| Innate | ... | உடன் பிறந்த |
| Innate Ideas | ... | உடன் பிறந்த எண்ணங்கள், உட் பிறந்த எண்ணங்கள் |
| Innate truths | ... | உடன் பிறந்த மெய்மைகள், உட் பிறந்த மெய்மைகள் |
| Inspiration | ... | வந்தூக்கல் |
| Integral calculus | ... | தொகைக் கலனம் |
| Integration | ... | இணைந்தொன்றுதல் |
| Intellect | ... | அறிவாற்றல் |
| Intellectual love of God | ... | அறிவிலெழு பக்தி, இறையன்பு |
| Intensive | ... | பண்புச்சுட்டு |
| Interaction | ... | ஒன்றினை ஒன்று செயல்படுத்தல் |
| Interactionism | ... | ஒன்றினை ஒன்று செயல்படுத்தும் கொள்கை |
| Internal | ... | அக |
| Introspection | ... | அகக் காட்சி |
| Introspective evidence | ... | அகக் காட்சி சான்று |
| Intuition | ... | உள்ளுணர்வு |
| Intuitionism | ... | உள்ளுணர்வுக் கொள்கை |

## J

| | | |
|---|---|---|
| Judgment | ... | தீர்ப்பு |
| Judgment. analytical | ... | பகுப்புவழித் தீர்மானம் |
| Jurisprudence | ... | சட்டத்துறை |

## K

| | | |
|---|---|---|
| Knower | ... | அறிவான் |
| Knowledge | ... | அறிவு |
| Known object | ... | அறிபொருள் |

## L

| | | |
|---|---|---|
| Law | ... | சட்டம், நியதி |
| Law of continuity | ... | தொடர் நிலைநியதி |
| Law of contradiction | ... | முரணுமை நியதி |
| Law of Identity | ... | முற்றொருமை நியத |
| Law of Sufficient Reason | ... | போதிய காரண நியதி |
| Logic | ... | அளவை இயல் |
| Logic, Deductive | ... | பகுப்புவழி அளவை இயல் |
| Logic, Inductive | .... | தொகுப்புவழி அளவை இயல் |
| Logic, Symbolic | ... | குறிநிலை அளவை இயல் |

## M

Macrocosm ... அண்டம்
Major premise ... தொடக்கக் கூற்று
Mass .... பொருண்மை, திரட்சி
Matter ... சடப்பொருள்
Materialism ... சடக் கொள்கை
Materialists ... சடக் கொள்கையினர்
Mechanism ... சட அமைப்பு, பொறி அமைப்பு
Metaphysics ... அடிப்படைத் தத்துவம், அப்பாலைத் தத்துவம்
Methodology ... முறையியல்
Microcosm ... பிண்டம்
Mind ... உள்ளம்
Miracle ... அற்புதங்கள், அருஞ்செயல்கள்
Mode ... மாறு நிலை
Model ... முன் மாதிரி
Modification ... மாற்றம், திருத்தம்
Monad ... மொனடு
Monas Monadum ... மொனடுகளுக்கெல்லாம் மொனடு, தலைமை மொனடு
Monism ... ஒருமைக் கொள்கை
Monist ... ஒருமைக் கொள்கையினர்
Moral ... அறநெறி
Morality ... அறம், நன்னெறி, தருமம்
Motion ... இயக்கம்
Motion and Rest ... இயக்கமும் இயக்கமின்மையும்
Multiplicity ... பலவாந்தன்மை
Mystic ... அநுபூதிமான், ஒருமையாளர்
Mysticism ... அநுபூதி நெறி, ஒருமை ஆட்சி நெறி

## N

Natura Naturans ... இயற்கையை இயக்கி
Natura Naturata ... இயற்கையில் இயங்கி
Naturalism ... இயற்கைக் கொள்கை
Natural Science ... இயற்கை விஞ்ஞானம்
Necessary ideas ... இன்றியமையாத கருத்துக்கள்
Necessary principles ... இன்றியமையா அடிப்படைகள்
Necessity ... இன்றிமையாமை, கட்டாயத தன்மை, சட்டாயப் போக்கு
Negate ... எதிர்மறு, இல்லையென்
Negation ... எதிர்மறையானது. இன்மை செய்தல்
Negative ... எதிர்மறை, மறுதலை
Nominalism ... பெயருண்மைக் கொள்கை
Non-Being ... இல்பொருள்
Noun ... உயர்நிலை, மேல்வரிச் சட்டம்
Nous ... அறிவு

## O

| | | |
|---|---|---|
| Object | ... | காணப்படு பொருள் |
| Object consciousness | ... | பொருள் அறி நனவு |
| Occasion | ... | தறுவாய் |
| Occasionalism | ... | தறுவாய்க் கொள்கை |
| Occult | ... | அறிவுக் கெட்டா |
| Occultism | ... | அறிவுக் கெட்டாமைக் கொள்கை |
| Ommipotent | ... | எல்லாம் வல்ல |
| Ommipresent | ... | எங்கும் நிறைந்த |
| Omniscient | ... | எல்லாம் அறிந்த |
| Ontology | ... | உண்மையியல் |
| Ontological proof | ... | உண்மையியல் காரணம் |
| Opposites | ... | எதிர் நிலைகள் |
| Optimism | ... | நன்னம்பிக்கைக் கொள்கை |
| Organic | ... | உறுப்புள்ள உயிருளி |

## P

| | | |
|---|---|---|
| Pantheism | ... | அனைத்திறைக் கொள்கை |
| Panpsychism | ... | அனைத்துயிர்க் கொள்கை |
| Paradox | .... | முரண்பாடு |
| Parallelism | ... | இணைநிலைக் கொள்கை |
| Passion | ... | வல்லுணர்ச்சி |
| Passive | ... | செயப்பாட்டு நிலை |
| Percept | ... | காட்சிப் பொருள் |
| Perception | ... | புலக்காட்சி |
| Perfect | ... | நிறைவான, பூரணமான |
| Pessimism | ... | துன்பக் கொள்கை |
| Petitio principii | ... | ஒன்றினை ஒன்று பற்றல் (என்னும் போலி) |
| Phenomena | .... | புறநிலைத் தோற்றப் பொருள் |
| Physical | ... | பௌதிக |
| Physical object | ... | பௌதிகப் பொருள் |
| Philosopher | ... | தத்துவ அறிஞர், மெய்ப்பொருளறிஞர் |
| Philosophy | ... | தத்துவம், மெய்யியல் |
| Pineal gland | ... | பினியல் சுரப்பி, மேற்றலைச் சுரப்பி |
| Pleasure | ... | மகிழ்ச்சி |
| Pluralism | ... | பன்மைக் கொள்கை |
| Positive | ... | நேர்நிலையான, உடன்பாட்டுநிலை |
| Postulate | ... | அடிப்படை விதிகள், முற்கோள்கள் |
| Potential | ... | ஒடுங்கி |
| Practical | ... | செயல்முறை |
| Pragmatism | ... | பயன்வழி உண்மைக் கொள்கை |
| Pragmatist | ... | பயன்வழி உண்மைக் கொள்கையினர் |
| Pre-formation theory | ... | முன் உருக்கொள்கை |
| Pre-supposition | ... | முன் எண்ணங்கள் |

| | | |
|---|---|---|
| Principle | ... | அடிப்படை, நியதி, கொள்கை |
| Privation | ... | குறைநிலை |
| Problem | ... | சிக்கல் |
| Problem of knowledge | ... | அறிவு முறைச் சிக்கல் |
| Proof | ... | காரணம், சான்று, மெய்ப்பித்தல் |
| Providence | ... | திருவருள் |
| Psycho-physical parallelism | ... | உள உடல் ஒரு போக்குக் கொள்கை |
| Psychologist | ... | உள இயல் அறிஞர் |
| Purpose | ... | நோக்குடைய |
| Purposive activity | ... | நோக்குடைய தொழிற்பாடு |

## Q

| | | |
|---|---|---|
| Quality | ... | பண்பு |
| Qualities, primary | ... | முதல் நிலை பண்புகள் |
| Qualities, secondary | ... | வழி நிலை பண்புகள் |
| Qualities, superficial | ... | மேற்போக்கான பண்புகள் |
| Qualitative | ... | பண்பு நிலை |
| Quantitative | ... | அளவு நிலை |
| Quantum | ... | அளவு |
| Quiescent | ... | அடங்கு நிலை |

## R

| | | |
|---|---|---|
| Radical | .... | அடிப்படை மாற்றம், அதிதீவிரம் |
| Rationalism | ... | அறிவு முதற் கொள்கை |
| Rationalist | ... | அறிவு முதற் கொள்கையினர் |
| Real | ... | காட்சிப் பொருள் சார்ந்த |
| Realism | ... | காட்சிப் பொருள் கொள்கை |
| Realist | .... | காட்சிப் பொருள் கொள்கையினர் |
| Reality | ... | உள்பொருள், சத்தை |
| Reason | ... | அறிவு, ஆய்வு, காரணம் |
| Redemption | ... | மீட்சி |
| Reflect | ... | ஆழ்ந்து எண்ணல் |
| Reformation | ... | சமயச் சீர்திருத்தம் |
| Religion | .... | சமயம் |
| Religious view | ... | சமய நோக்கு |
| Renaissance | .... | மறுமலர்ச்சி இயக்கம் |
| Regulative | ... | ஒழுங்கு படுத்து |
| Represent | ... | பிரதி செய் |
| Representationist view of perception | ... | காட்சியில் புறப்பொருள்கள் பிரதி செய்யப் படுகின்றன என்னும் கொள்கை |
| Romanticism | ... | புதுமை உணர்வூட்டும் கொள்கை |
| Romantic Movement | ... | புதுமை உணர்வூட்டும் இயக்கம் |

## S

| | | |
|---|---|---|
| Salvation | ... | வீடுபேறு, முக்தி |
| Sceptics | ... | ஐயக் கொள்கையினர் |
| Scepticism | ... | ஐயக் கொள்கை |
| Scholasticism | ... | புலமைக்கொள்கை, ஸ்கொலாஸ்டிக்கொள்கை |
| Scholastics | ... | புலமைக் கொள்கையினர், ஸ்கொலாஸ்டிக் கொள்கையினர் |
| Science | .... | விஞ்ஞானம் |
| Science of Soul | ... | ஆன்ம இயல் |
| Scientific proof | ... | விஞ்ஞானச் சான்று |
| Self | ... | தான், ஆன்மா, தன்மை |
| Self-consistency | ... | தற்பொருத்தம் |
| Self-contradictory | ... | தன் முரண் |
| Self-dependent | ... | தற்சார்பு |
| Self-evident | ... | தானே விளங்கும் |
| Self-realization | ... | தன்னையுணர்தல் |
| Self-sufficient | .... | தன்னிறைவுள்ள |
| Sensation | .... | புலனுணர்ச்சி |
| Solidity | ... | திண்மை |
| Spirit | ... | ஆன்மா, ஆவி |
| Spiritualism | ... | ஆன்மீகக் கொள்கை |
| Spiritualistic pluralism | ... | ஆன்மிகப் பன்மைக் கொள்கை |
| Spontaneous evolution | ... | தன்னியல் பரிணாமம் |
| Static | ... | இயங்கா நிலை |
| Stoic | ... | ஸ்டாயிக் |
| Stoicism | ... | ஸ்டாயிக் கொள்கை |
| Subject | ... | அறிவான் |
| Subjective | ... | அகநிலை |
| Suljectivism | ... | அகநிலைக் கொள்கை |
| Substance | ... | பொருள் |
| Substance. Absolute or independent | ... | சார்பற்ற பொருள் |
| Substance, relative or dependent | .... | சார்புற்ற பொருள் |
| Substantiality | ... | பொருட்டன்மை |
| Super natural | ... | இயற்கையிகந்த |
| Super naturalism | ... | இயற்கையிகந்த கொள்கை |
| Supreme | ... | தலைசிறந்த, மேலான |
| Syllogism | ... | முக்கூற்று முறை |
| Syllogistic method | ... | முக்கூற்று முடிவு |
| Synthetic activity | ... | தொகுப்புமுறைச் செயல் |
| Synthesis | .. | தொகுத்துக் காணல் |
| Synagogue | ... | யூத சமயக்குழு |

## T

Teleology ... நோக்க அமைப்பு
Teleological argument ... நோக்கக் கொள்கை வாதம்
Theism .. கடவுட் கொள்கை
Theist .. கடவுட் கொள்கையினர்
Theology .. இறையியல்
Theoretical .. கொள்கை முறை
Theory .. கொள்கை
Thing-in-itself .. அடிநிலை உண்மைப் பொருள்
Tradition .. மரபு
Traditional logic .. மரபுவழி அளவை இயல், பண்டைய அளவை இயல்
Transcendent ... கடந்த
Transcendental ... கடந்த நிலை
Transcendentalist ... கடந்த நிலைத் தத்துவ அறிஞர்
Transformation ... உருமாற்றம்
Transitory .. நிலையில்லாத
Truth and error .. உண்மையும் பிழையும்
Truth and falsity .. உண்மையும் பொய்யும்

## U

Ultimate ... முடிவான
Unit .. கூறு, அலகு
Unity .. ஒற்றுமை, ஒருமைப்பாடு
Universal .. பொதுமை
Universe .. பிரபஞ்சம்
Utilitarianism .. பயன்முதற் கொள்கை
Utopia .. கற்பனை உலகு

## V

Vacuum ... வெற்றிடம்
Values .. பயன் மதிப்பு
Vice .. மறம், பழிச்செயல்
View ... நோக்கு
Virtue .. அறம், ஒழுக்கம்
Volition .. இயற்றி நிலை
Voluntarism .. இயற்றி நிலைக் கொள்கை
Vow .. நேர்த்திக்கடன், நேர்ந்து கொள்ளல்

## W

| | | |
|---|---|---|
| Western philosophy. | ... | மேனாட்டுத் தத்துவம் |
| Whole | ... | முழுமை, முழு, முழுநிலை |
| Whole (abstract) | ... | கருத்தியலான முழுமை |
| Whole and parts | ... | முழுமையும் பகுதிகளும் |
| **Will** | .. | இயற்றி நிலை |
| Wisdom | .. | மெய்யறிவு, ஞானம் |
| Worldly | .. | இம்மை நோக்குடைய |
| Worldly (Other) | .. | மறுமை நோக்குடைய |

# அ

அக ... Internal
அகக்காட்சி ... Introspection
அகச்சான்று ... Introspective evidence
அகநிலை ... Subjective
அகநிலைக் கொள்கை ... Subjectivism
அகம் ... Ego
அகனமர்ந்த ... Immanence
அகனமர்ந்த கொள்கையினர் ... Immanentist
அடங்கு நிலை ... Quiescent
அடிப்படைத்தத்துவம் ... Metaphysics
அண்டம் ... Macrocosm
அண்மை ... Contiguity
அணு ... Atom
அணுக் கொள்கை .... Atomism
அநுபூதி நெறி, ஒருமை ஆட்சி நெறி ... Mysticism
அநுபூதிமான், ஒருமையாளர் ... Mystic
அருவமான, நுட்பமான
கருத்துப் பொருள் ... Abstract
அழகு Beauty
அழியா ... Immortal
அழியாமை ... Immortality
அளவு ... Quantity
அளவு நிலை ... Quantitative
அளவை இயல் ... Logic
அளவை நிலை முரணாமை ... Logical consistency
அளவை நெறி முறை ... Demonstrative method
அற்புதங்கள், அருஞ் செயல்கள் ... Miracles
அறஇயல் ... Ethics
அறநெறி ... Morals
அறம், ஒழுக்கம் ... Virtue
அறியொணாக்கொள்கை ... Agnosticism
அறியொணாக் கொள்கையினர் ... Agnostic
அறிவர் .... Prophets
அறிவளவை இயல் ... Epistemology
அறிவாற்றல் ... Intellect
அறிவான் ... Knower
அறிவிலெழு இறையன்பு ... Intellectual love of God
அறிவு, ஆய்வு, காரணம் ... Reason
அறிவுக் கெட்டா ... Occult
அறிவு நிலை .... Cognition
அறிவு முதற்கொள்கை ... Rationalism
அறிவு முதற் கொள்கையினர் ... Rationalist
அறிவு முறைச்சிக்கல் ... Problem of knowledge

| | | |
|---|---|---|
| அனுபவம் | ... | Experience |
| அனைத்திறைக்கொள்கை | ... | Pantheism |
| அனைத்துயிர்க் கொள்கை | ... | Pan-psychism |

ஆ

| | | |
|---|---|---|
| ஆக்கநிலை | ... | Becoming |
| ஆற்றலின் அழிவின்மை | ... | Conservation of Energy |
| ஆன்ம இயல் | ... | Science of soul |
| ஆன்மப்பொருள் | .... | Soul substance |
| ஆன்மா, ஆவி | ... | Spirit |
| ஆன்மீகக் கொள்கை | ... | Spiritualism |
| ஆற்றல் | ... | Force |

இ

| | | |
|---|---|---|
| இக்காலம் | ... | Modern Age |
| இசைவு | ... | Harmony |
| இடைக்காலம் | ... | Mediaeval Age |
| இணைக்கருத்து | ... | Synthesis |
| இணைந்தோன்றுதல் | ... | Integration |
| இணைநிலைக் கொள்கை | ... | Parallelism |
| இம்மை நோக்குடைய | ... | Worldly |
| இயக்கம் | ... | Motion |
| இயக்கமும் இயக்கமின்மையும் | ... | Motion and Rest |
| இயங்காநிலை | ... | Static |
| இயங்கு, இயக்கப்போக்கு | ... | Dynamic |
| இயல்பு | ... | Attribute |
| இயற்கணிதம் | ... | Algebra |
| இயற்கையிகந்த | ... | Supernatural |
| இயற்கையில் இயங்கி | ... | Natura Naturata |
| இயற்கையை இயக்கி | ... | Natura Naturans |
| இயற்கை விஞ்ஞானம் | ... | Natural Science |
| இயற்றிநிலை | ... | Will |
| இயைந்த பொருத்தம் | ... | Coherence |
| இயைந்த பொருத்தக் கோள்கை | ... | Coherence theory |
| இருத்தல் | ... | Existence |
| இருந்தபடி இருத்தல் | ... | Being |
| இருமைக் கொள்கை | ... | Dualism |
| இல்பொருள் | ... | Non-being |
| இறையியல் | ... | Theology |
| இன்றியமையாத அடிப்படைகள் | ... | Necessary principles |

உ

| | | |
|---|---|---|
| உட்புலனறிவு | ... | Apperception |
| உடலும் உள்ளமும் | ... | Body and Mind |

| | | |
|---|---|---|
| உடன் பிறந்த | ... | Innate |
| உடன் பிறந்த எண்ணங்கள் | ... | Innate ideas |
| உண்மையியல் | ... | Ontology |
| உண்மையும் பிழையும் | ... | Truth and error |
| உண்மையும் பொய்யும் | ... | Truth and falsity |
| உயிரியல் | ... | Biology |
| உருதிரிபு | ... | Distortion |
| உள்ளார்ந்த, உள்ளியைந்த | ... | Inherent |
| உள்ளீட்டுக் கொள்கை | ... | Incasement theory |
| உள்ளுகிறேன் ஆதலால் உள்ளேன் | ... | Cogito ergo sum |
| உள்ளுணர்வு | ... | Intuition |
| உள்ளுணர்வனுபவம் | ... | Intuitive experience |
| உள இயலறிஞர் | ... | Psychologist |
| உளஉடல் ஒருபோக்குக் கொள்கை | ... | Psycho physical parallelism |
| உறுப்புள்ள உயிருளி | ... | Organic |

ஊ

| | | |
|---|---|---|
| ஊழ் | ... | Fate, Destiny |
| ஊழ்க்கொள்கை | ... | Fatalism |

எ

| | | |
|---|---|---|
| எதிர்மறு (இல்லையென்) | ... | Negate |
| எதிமறை (மறுதலை) | ... | Negative |
| எதிர்மறைமுறை | ... | Negative method |
| எபிக்யூரஸ் கொள்கையினர் | ... | Epicureans |
| எல்லாம் வல்லவர் | ... | Almighty |
| எல்லையில், வரம்பற்ற | ... | Infinite |
| எல்லையிலாமை | ... | Infinity |
| எல்லையுள்ள | ... | Finite |
| என்றுமுண்மை | ... | Eternity |
| என்றுமுள | ... | Eternal |
| என்றுமுள உருவம் | ... | Eternal form |

ஐ

| | | |
|---|---|---|
| ஐயம் | ... | Doubt |
| ஐயக் கொள்கை | ... | Scepticism |
| ஐயக்கொள்கையினர் | ... | Sceptic |
| ஐயுறுவான் | ... | Doubter |

### ஒ

ஒடுங்கி ... Potential
ஒப்பு, உவமை, ஒப்புமை ... Analogy
ஒருமைக் கொள்கை ... Monism
ஒரே தன்மை .... Homogeneous
ஒழுங்குபடுத்து ... Regulative
ஒன்றினை ஒன்று செயல்படுத்தும் கொள்கை ... Interactionism
ஒன்றினை ஒன்று பற்றுதல் ... Petitio principii
ஒற்றுமை, ஒருமைப்பாடு ... Unity

### க

கட்டாயமான, கட்டாயப்போக்கு ... Neccessary
கடந்த ... Transcendent
கடந்த நிலை ... Transcendental
கடவுட்கொள்கை ... Theism
கருத்து ... Idea
கருத்துக்கொள்கை ... Idealism
கருத்துக் கொள்கையினர் ... Idealist
கருத்து நிலை ... Conception
கருத்துப்பொருள் ... Concept
கருதொணு ... Inconceivable
கலனம் .... Calculus
கற்பனை ... Imagination
காட்சிப்பொருண்மையான திட்டம் ... Concrete system
காட்சிப் பொருள் ... Concrete
காட்சிப்பொருள் கொள்கை .... Realism
காட்சியில் புறப்பொருள் பிரதி செய்யப்படுகின்றது என்னும் கொள்கை ... Representationist view of perception
காண்பான் காணப்படுபொருள் எனப் பகுத்தாராய்வு ... Discursive
காணப்படுபொருள் ... Object
கார்ப்பஸில்ஸ் ... Corpuscles
காரணகாரியத் தொடர்பு ... Causal relation
காரணகாரிய முற்பிற்பாடுகள் ... Causal and temporal sequence
காரணம் ... Cause
காரணம், தொடக்க, ஆதி ... Cause, First
காரணம், நிமித்த ... Cause, Efficient
காரணம், முடிவு நிலையாய ... Cause, Final
கிருத்துவ திருச்சபை ... Church
குறிக்கோள், மேல்வரிச்சட்டம் ... Ideal
குறிநிலை அளவை இயல் ... Symbolic Logic
குறைநிலை ... Privation
கோட்பாடு .... Doctrine

## ச

| | | |
|---|---|---|
| சட்டம், நியதி | .... | Law |
| சட அமைப்பு, பொறி அமைப்பு | ... | Mechanism |
| சட ஆவி ஒரு நிலைக் கொள்கை | ... | Hylozoism |
| சடப்பொருள் | ... | Matter |
| சத்தை, உள்பொருள் | ... | Reality |
| சமயச் சீர்திருத்தம் | ... | Reformation |
| சமயம் | ... | Religion |
| சாமானிய | ... | General |
| சாறு, சத்து | ... | Essence |
| சுதந்திரப் பான்மை | .... | Freedom |
| செய்க்காட்சி | ... | Experiment |
| செய்க்காட்சி முறை | ... | Experimental method |
| செய்நிலை, செயலுள்ள | ... | Active |
| செயப்பாட்டு நிலை | ... | Passive |
| செயல் உரிமை | ... | Free-will |

## த

| | | |
|---|---|---|
| தத்துவ அறிஞர், மெய்ப்பொருள் அறிஞர் | .... | Philosopher |
| தத்துவம், மெய்யியல் | .... | Philosophy |
| தலை சிறந்த | ... | Supreme |
| தற்சார்பு | ... | Self-dependence |
| தற்பொருத்தம் | ... | Self-consistency |
| தற்போக்கான | ... | Arbitrary |
| தறுவாய் | ... | Occasion |
| தறுவாய்க் கொள்கை | ... | Occasionalism |
| தவறிலா | ... | Infallible |
| தன் நனவு | ... | Self-consciousness |
| தன் முரண் | ... | Self-contradictory |
| தன் இயக்கம் | ... | Spontaniety of action |
| தன்னியல் பரிணமம் | ... | Spontaneous evolution |
| தனித்தன்மை | ... | Individuality |
| தனி நிலையான | .... | Individual |
| தனியன்கள் | ... | Particulars |
| தான், ஆன்மா, தன்மை | ... | Self |
| திண்மை | ... | Solidity |
| திரிபுக் காட்சி | ... | Illusion |
| திருத்தம், மாற்றம் | ... | Modification |
| திருவருள் | ... | Grace |
| தீமை | ... | Evil |
| தீமை, அடிப்படைத் தத்துவ நிலை | ... | Evil, metaphysical |
| தீமை, அறநிலை | ... | Evil, moral |
| தீமை, பௌதிக | ... | Evil, physical |
| தீர்ப்பு | ... | Judgment |

| | |
|---|---|
| துன்பக் கொள்கை | Pessimism |
| தெய்வம் | Deity |
| தொகுப்பு வழி அளவை | Induction |
| தொகுப்பு வழி அளவை இயல் | Inductive Logic |
| தொகுப்பு வழி முறை | Inductive method |
| தொகைக் கலனம் | Integral calculus |
| தொடக்கக் கூற்று | Major premise |
| தொடர்நிலை நியதி | Law of continuity |
| தோற்றம் | Appearance |
| தோற்றமும் உள்பொருளும் | Appearance and Reality |

### ந

| | |
|---|---|
| நன்னெறி, அறம் | Morality |
| நன்னம்பிக்கைக் கொள்கை | Optimism |
| நன்மை | Goodness |
| நன்மை திரட்டும் | Eclectic |
| நன்மை திரட்டும் கொள்கை | Eclecticism |
| நான், அகம் | Ego |
| நிகழ் நிலை | Actual |
| நிகழ் நிலை இயல்புகள் | Actual nature |
| நியதி, சட்டம் | Law |
| நிலைபேறு, மாறுநிலை | Constancy |
| நிலையிலாத | Transitory |
| நேர்த்திக் கடன் | Vow |
| நேர்நிலையான, உடன்பாடு | Positive |
| நுட்பமான கருத்துப் பொருள், அருவமான | Abstract |
| நுண்வகைக் கலனம் | Differential Calculus |
| நோக்க அமைப்பு | Teleology |
| நோக்கு | View |
| நோக்குடைய | Purposive |

### ப

| | |
|---|---|
| பகுமுறை | Analytic method |
| பகுமுறைத் தீர்ப்பு | Analytic Judgment |
| படைப்பு | Creation |
| பண்டைக்காலம் | Ancient Age |
| பண்டைய அளவை இயல், மரபு வழி அளவை இயல் | Traditional logic |
| பண்பு | Quality |
| பண்பு, முதல்நிலை | Quality, primary |
| பண்பு, வழி நிலை | Quality, secondary |
| பண்புச் சுட்டு | Intensive |
| பண்பு நிலை | Qualitative |
| பதார்த்தம் | Category |

| | |
|---|---|
| பயன், மதிப்பு | Value |
| பயன் முதற் கொள்கை | Utilitarianism |
| பயன் முதற் கொள்கையினர் | Utilitarians |
| பயன் வழி | Pragmatic |
| பயன் வழி உண்மைக் கொள்கை | Pragmatism |
| பயன் வழி உண்மைக் கொள்கையினர் | Pragmatist |
| பரப்புடைமை | Extension |
| பரம்பொருள், பூரணமான | Absolute |
| பரம்பொருள் கொள்கை | Absolutism |
| பரம கருத்துக் கொள்கை | Absolute Idealism |
| பரமான்மா | Absolute Spirit |
| பரிணாமக் கொள்கை | Evolutionism |
| பரிணாமம் | Evolution |
| பழிச்செயல், மறம் | Vice |
| பலவாந்தன்மை | Multiplicity |
| பற்றின்மை | Detachment |
| பன்மைக் கொள்கை | Pluralism |
| பிரதி செய் | Represent |
| பிரபஞ்ச இயல் | Cosmology |
| பிரபஞ்சம் | Cosmos |
| பிரபஞ்சமில் கொள்கையினர் | Acosmist |
| பிற்தோற்ற வளர்ச்சி | Epigenesis |
| பிறர் நலக் கொள்கை | Altruism |
| புதுமை உணர்வூட்டும் கொள்கை | Romanticism |
| புலச்சார்பற்ற அடிப்படைகள் | Apriori principles |
| புலச்சார்பற்ற முறை | A priori method |
| புலச்சார்வு | A posteriori |
| புலமைக்கொள்கை, ஸ்கொலாஸ்டிஸிஸம் | Scholasticism |
| புலன் உணர்ச்சிக் கொள்கை, புலன் வழிக் கொள்கை, அனுபவ வழிக் கொள்கை | Empiricism |
| புலன் சார் அடிப்படைகள் | A posteriori principles |
| புலன் சார் முறை | A posteriori method |
| புலனறிவு | Perception |
| புலனுக்கு முன்னெழு அறிவு | Apriori knowledge |
| புற உலகம் | External world |
| புறநிலைக் காரணம் | Objective Reason |
| புறநிலைத் தோற்றம் பொருள்கள் | Phenomena |
| பெயருண்மைக் கொள்கை | Nominalism |
| பேரினம், முதலினம் | Genus |
| பொது அறிவு நோக்கு | Common sense view |
| பொதுமை | Universal |
| பொருள் | Substance |
| பொருள், சார்பற்ற | Substance, Absolute or Independent |
| பொருள், சார்புற்ற | Substance, relative or dependent |

பொருள் சுட்டு ... Extensive
பொருள் தன்மை ... Substantiality
பௌதிக ... Physical
பௌதிக உட்செலவுக் கொள்கை ... Influxus physicus
பௌதிகப் பொருள் ... Physical object

ம

மக்கண்மைக் கொள்கை ... Humanism
மகிழ்ச்சிக் கொள்கை ... Hedonism
மதம் ... Dogma
மரபு ... Tradition
மறுதலை, எதிர்மறை ... Negative
மறுமலர்ச்சி இயக்கம் ... Renaissance
மறுமை நோக்குடைய ... Other worldly
மாறுதலற்ற ... Immutable
மாறு நிலைகள் ... Mode
முக்கூற்று முறை ... Syllogism
முக்தி, வீடுபேறு ... Salvation
முடிவான ... Ultimate
முரண்நிலை ஆய்வு ... Dialectic
முரண்பாடு ... Paradise
முரணாமை ... Consistency
முரணாமை நியதி ... Law of contradiction
முற்கோள்கள், அடிப்படை விதிகள் ... Postulates
முற்றொருமை ... Identity
முற்றொருமை நியதி ... Law of identity
முறை இயல் ... Methodology
முன் உருக் கொள்கை ... Pre-formation theory
முன்னமைத்த பொருத்தம் ... Pre-established harmony
மூலக்கூறு ... Molecule
மூலமாதிரிகள், மூலஉரு ... Archetypes
மெய்யறிவு, ஞானம் ... Wisdom
மேற்போக்கான பண்புகள் ... Superficial qualities
மேனாட்டுத் தத்துவ அறிஞர் ... Western philosopher
மேனாட்டுத் தத்துவம் ... Western philosophy
மொனாடு ... Monad
மொனாடுகளுக்கெல்லாம் மொனாடு, தலைமை மொனாடு ... Monas Monadum

வ

வடிவ கணிதம் ... Geometry
வந்தூக்கல் ... Inspiration
வரம்பற்ற, எல்லையில் ... Infinite
வரையறவு ... Determinism

| | | |
|---|---|---|
| "வரையறைவு செய்வதெல்லாம் இன்மை செய்வதாகும்" | ... | All determination is negation |
| வல்லுணர்ச்சி | .... | Passion |
| விஞ்ஞானம் | ... | Science |
| விஞ்ஞானச் சான்று | ... | Scientific proof |
| வெளிப்பாடு (இறைவழி) | ... | Revelation (Divine) |
| வெற்றுநிலைக் கருத்துக்கள் | ... | Abstract Ideas |

ஸ

| | | |
|---|---|---|
| ஸ்டாயிக் கொள்கை | ... | Stoicism |

## இந்நூல் எழுத உதவியாயிருந்த ஆங்கில நூல்கள்


*Caird, J.*: Spinoza

*Carr, H. W.*: Leibniz

*Descartes, R.*: Discourse on Method

*Falckenberg*: History of Modern Philosophy

*Janet and Seailles*: A History of the Problems of Philosophy Vol. II

*Keeling, S. V.*: Descartes

*Latta, R.*: Leibniz - The Monadology, etc.

*Radhakrishnan, S.*: The Reign of Religion in Contemporary Philosophy

*Rogers, A. K.*: A Student's History of Philosophy

*Roth, L.*: Spinoza

*Smith, N. K.*: Studies in Cartesian Philosophy

*Thilly, F*: A History of Philosophy

*Thomas and Thomas*: Living Biographies of Great Philosophers

*Weber*: History of Philosophy

*Weber and Perry*. History of Philosophy

*Wright, W. K.*: A History of Modern Philosophy.

98